# நாமடந்தை



# நாமடந்தை

பதிப்பாசிரியர்கள்
திரு.சு.சுதர்சன்
திரு.க.மயில்வாகனம்

கற்றல்-கற்பித்தல் வளநிலையம்
சே. இல........................
வ. இல........................
... மகா வித்தியாலயம்

அதிபர் வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களின்
கல்விச் சேவை நிறைவு விழா மலர் - 2015

| | | |
|---|---|---|
| **நூல்** | : | "நாமடந்தை<br>அதிபர் திருவாட்டி வசந்தாதேவி மேகலிங்கம் நிறைபணி மலர் |
| **பதிப்பு** | : | 22.11.2015 |
| **பக்கங்கள்** | : | xxxiii + 95 |
| **வெளியீடு** | : | திருவாட்டி வசந்தாதேவி மேகலிங்கம் நிறைபணி விழா குழு<br>நாமடந்தை மலர்க்காய் நிதிவள்ளண்மை<br>கந்தையா கனகம்மா நிதியம் |
| **அச்சுப்பதிப்பு** | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்<br>முருகேசர் லேன்,<br>நல்லூர்.<br>**021 2229285** |

# நூலாசிரியர் மனப்பதிவுகள்

மிக வேகமாக மாற்றமுற்றுவரும் சமூக இயங்கியல் மனிதனுக்கு பல தேவைகளை தோற்றுவிக்கின்றது. தேவைகளை நிவர்த்திக்கப் பல அனுபவங்களை நாம் தாண்ட வேண்டியுள்ளது. இவ்வனுபவங்கள் கற்றலாக மாற்றமடைகின்றன. கற்றல் சீரானதாகவும் சீர்மியம் மிக்கதாகவும் அமையவேண்டும் எனும் சிந்தனையடிப்படையில் தோற்றுவிக்கப்பட்டதே பாடசாலைகளாகும்.

நாளைய பெருந்தலைவர்களை உருவாக்குவதற்காக **"யாவர்க்கும் கல்வி"** எனும் கோட்பாடு உலகளாவிய ரீதியில் **"யுனெஸ்கோவினால்"** நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் இயங்குதளம் பாடசாலைகளேயாகும். பாடசாலைகளின் அங்கத்தவர்களின் இயலுமைகளை இயங்கியலாக்கும் வல்லமை அதிபர்களைச் சார்ந்ததேயாகும்.

அதிபர்களின் வகிபாகத்திலே பல நேரெதிர் கணியங்களைச் சீராக்கம் செய்ய வேண்டிய சூழ்நிலையேற்படுகின்றது. மாறுபட்ட குணவியல்புடைய சமூக அங்கத்தவர்களுடனான இடை வினையுறவு, "தர மேம்பாடு" எனும் கல்வியின் மகுடவாசகம் நோக்கிய நகர்வு, தனிமனித போராட்டங்களோடு கூடிய ஆசிரியர்களை முகாமை செய்தல், மாற்றங்களால் அள்ளுண்டு செல்லும் மாணவர்களை மாண்புடையவராக்கல், கலைத்திட்டங்களின் கனதி, கலைத்திட்ட பரவலாக்கத்திற்காக தேடவேண்டிய வளங்கள் என அனைத்தினையும் ஒன்றிணைக்கும் மாற்ற முகவராகவும் செயற்பட வேண்டியுள்ளது. ஒருவரிடம் சிறந்த குணங்களும் சீரிய சிந்தனைகளும் இருந்தால் மட்டும் போதுமென்றாகிவிடாது. அவற்றை நிர்வகிக்கவும் ஆளுமைக்குட்படுத்தவும் தெரிந்திருக்க வேண்டும். அவ்வாறன இலட்சியப்பற்றுள்ள ஒருவர் நா.ம. வித்தியாலயத்தின் அதிபராகத் தொழிற்பட்டது இந்த மண்செய்த மாதவமே.

தோன்றில் புகழொடு தோன்றுக என்பது உலகப் பொதுமறை கூறும் நெறியாகும். இங்கு 'புகழென்பது இன்றய உலகில் புகழ் எனக் கருதப்படும் பாராட்டுக்கள், மாலை மரியாதைகள், பொன்னாடை கௌரவிப்புகள், கைதட்டல்கள், முகமன்கள் அல்ல நல்லொழுக்கம், கட்டுப்பாடு, செழுமை, சொல்லாண்மை, கடும் உழைப்பு, இலக்கு நோக்கிய பயணம், நேரந்தவறாமை போன்ற விழுமியங்களைக் கைக்கொள்வதால் விளையும் பயன்களாகும். அவ்வாறான புகழ் பூத்த குடும்பமொன்றில் அனேக பெண் சகோதரங்களுடன் பிறந்தவர்தான் எமது அதிபர் என எல்லோராலும் போற்றப்படும் திருமதி. வசந்தாதேவி மேகலிங்கம் அம்மையார் அவர்கள்.

வறுமையும், ஏழ்மையும் பிள்ளைகளை வளர்த்தெடுக்கப் பல வகைகளிலும் நெருக்கடிகளும் தடைகளாயுமிருந்த போதிலும், தனது பிள்ளைகளனைவரையும் கற்கவைக்க வேண்டும் என்ற திடசங்கற்பம் கொண்ட குடும்பத்து பிள்ளைகளனைவரும் கற்றுயர்ந்து சான்றோர்களாகி யுள்ளனர். என்றும் உலகின் சாதனையாளர்கள் எனப் போற்றப்படும் அறிஞர்கள், விஞ்ஞானிகள், தலைவர்கள் அனைவரும் ஏழ்மைமிகு குடும்பங்களிலிருந்து முகிழ்த்து வந்ததாகவே வரலாறு எமக்குக் கற்றுத்தந்து கொண்டிருக்கின்றது. அவ்வறான சூழலிலிருந்து எழுந்து வருவதுதான் சாதனையும் ஆகும். ஏழ்மையும் நெருக்கடிகளும் இலக்கை அடைய முயல்பவர்களுக்குத் தடைகளேயல்ல எனச் சாதித்துக்காட்டியவர் வசந்தாதேவி அம்மையார்.

நாவற்குழி மகாவித்தியாலயத்தில் கற்றுயர்ந்து பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று வந்து, அதே பாடசாலையில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக கடமையேற்று கல்வி மட்டுமல்ல ஒழுக்கமும் ஒவ்வொருவருக்கும் அவசியம் எனக்கருதி இப்பிரதேச மாணவர்கள் அனைவரையும் நல்லொழுக்கமுள்ள மனிதர்களாக்கி விட்டவர் இவராவார். அம்மா அவர்களின் ஆளுமை தற்துணிவு, முடிவெடுக்கும்திறன் சரியான வழிகளைத் தேர்ந்தெடுத்துச் சாதித்துக் காட்டும் பாங்கு ஏனைய ஆசிரியர்களிடமும் பற்றிக்கொள்ளவே கல்விக்கூடமாக மட்டுமல்ல மாணவர்களை நெறிப்படுத்தும் ஒரு பர்ண சாலையாக நாவற்குழி மகா வித்தியாலயம் வளர்ந்து மிளிர்கின்றது. பாடசாலையின் விளையாட்டுத்திடலை நிரப்ப மணல் ஏற்றுவதற்கான அனுமதியை அன்றய இரும்பு நிர்வாகத்திடம் பெற்று, ஏற்றி இறக்குவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டு மணல் ஏற்றவிருந்த இடத்துக்குச் சென்றவேளை மணல் ஏற்ற அனுமதிக்கவில்லை. அனுமதிவழங்கிய பின்னர் அதை மறுத்துத் தடைபோடவே சினம் கொண்ட இவர் காந்திய வழியில், வெயிலுக்காகத் தலையில் முக்காடு போட்டபடி அமர்ந்துவிடவே இரும்பு நிர்வாகம் ஒருவாறு இசைந்தது. தேவையான மணல் அவ்வளவையும் ஏற்றி இறக்கிவிட்டு காய்ந்து, களைத்துக் கறுத்து நின்றவேளை தற்செயலாக அவ்வழியே சென்ற நான் இவரது நிலைகண்டு ஒருகணம் திகைத்துவிட்டேன். மறுகணம் பெருமையடைந்தேன். அவ்வாறான ஒரு செயல் வீரர் இவர். இவ்வாறான ஒரு செயல் வீரரை இப்பிரதேசம் கிட்டத்தட்ட 40 - 45 வருடங்களுக்குப் பின்னர்தான் பெற்றுக் கொண்டது.

உலகம் போற்றும் சான்றோர்களுக்குக்கூட சொந்தப் பிரதேசத்தில் அவ்வளவாக மதிப்பிருந்ததில்லை. அந்த விதிமுறையையும் முறியடித்துச் சொந்தப் பிரதேசத்து மாணவர்கள், மக்கள் சான்றோர் அனைவராலும் எங்கள் அதிபர் எனப் பாராட்டப்பட்டு வரும் இவர் இப்பிரதேச எழுச்சிக்காக ஆற்றிய பணிகள் அளப்பரியவை. சமூக விடுதலை, சமூக மேம்பாடு, சமூக அபிவிருத்தி கருதி எடுக்கப்படும் எந்த முயற்சிகளிலும் மனம்

களையாது பங்குபற்றி இவர் வழங்கி வருகின்ற ஆலோசனைகள் வழிகாட்டல்கள் இப்பிரதேசத்தை மேன்மைப்படுத்துவதால் பிரதேசத்தவரனைவராலும் பாராட்டப்படுகின் றார். இத்தனை வேலைப்பளுக்களுக்கு இடையேயும் தனது பிள்ளைகளிருவரும் உயர் நிலையடையக் காரணியாகவுமிருந்துள்ளார். ஊரான் பிள்ளைகளை "ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளைகள் தானே வளரும்" என்பதற்கிணங்க அவரது பிள்ளைகள் இருவரும் உயர் கல்வி கற்றுச் சிறப்புடன் வாழ்கின்றனர்.

பாடசாலை ஆசிரியர் சமூகம், உள்நாட்டு வெளிநாட்டு பழைய மாணவர் ஒன்றியம், ஆசிரியர் நலம்புரிச் சங்கம், பெற்றார் ஆசிரியர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச்சங்கம், செயல்திறன் மிகு சமூக அமைப்புகள் என எல்லாவற்றையும் ஒன்றிணைத்து அரவணைத்து மாணவர்களின் கல்வி முன்னேற்ற நடவடிக்கை களுக்கான எல்லா வளங்களையும் சேர்த்து வைத்துச் செல்லும் இவர் எங்களைவிட்டுப் பிரிந்து ஓய்வுபெற்றுச் சென்றாலும் வெளியே இவருக்கு ஓய்வில்லாத பணிகள் காத்திருக்கின்றன. பாடசாலைப் பணிகளிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்றாலும் சமூக மேம்பாட்டுப் பணிகளில் என்றும் இணைந்தே இருப்பார். நிறைந்தே இருப்பார். இவருக்கு விடைகொடுக்கும் இவ்வேளையில் எமக்கெனப் புதிதாக வந்திருக்கும் அதிபர் அவர்களை அன்புடன் வரவேற்பதுடன் அம்மையார் எமக்குக் காட்டிய ஆதரவையும் அன்பையும் அரவணைப்பையும் ஆலோசனைகள் வழிநடத்தல்களையும் அவரிடமிருந்தும் எதிர்பார்த்திருக்கின்றோம்.

தேடிக் கற்றறியும் மாணவர் ஒருவரோ, உண்மைகளை உள்ளவாறு ஆவணமாக்க முயலும் வரலாற்று ஆய்வாளரோ, நாவற்குழி பிரதேசம் பற்றி ஒரு வரலாறு எழுத முற்படுவாராயின் அம்மா அவர்களின் சேவைக்காலத்தில் நாவற்குழி மகா வித்தியாலயம் கண்ட அபரிமித வளர்ச்சிபற்றிக் குறிப்பிடாமலிருக்க முடியாது. அக்கருத்தை உள்வாங்கித்தான் அட்டையை அலங்கரிக்கும் அம்மாவின் புகைப்படம் இவரது ஆளுமையால் வளர்ச்சிகண்ட இவ் வித்தியாலயக் கொடியில் அமையப் பெற்றுள்ளது என தூய சிந்தனையாளர்கள் நோக்குவர். இன் னொருவகையில் நோக்கினால் உண்மையும் வாண்மையுடன் கூடிய கடும் உழைப்பைப் பிரதி பலிக்கும் எங்கும் நிறைந்திருக்கும் நீலவர்ணமும், அறிவால் ஏற்படும் தெளிவும் ஞானமும் தரும் தூய்மைக் குறியீடான வெண்மை வர்ணமும் கொண்டு அமையப்பெற்றுள்ளது. பாடசாலைப் பணிகளுடன் இணைத்து சமூகப் பணிகளுக்காகவும் இவர் செயற்பட்டு வருவதை அங்கீகரித்து சமாதான நீதவான் பதவியும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

நாவற்குழிக்குரிய பெண், நாவன்மையுடைய பெண், கல்விக்கதிபதியாகச் சரஸ்வதி இருப்பது போல கல்லூரிக்கதிபதியாக இருக்கும் பெண் என்பனவற்றை

யெல்லாம் உள்ளடக்கி இந்நூலானது நாமடந்தை என்ற பெயரோடு வெளிவருவது சிறப்பம்சமாகும்.

நாம், எமது வாழ்வியலில் தொடர்ந்தும் செய்து வருகின்ற பெருந்தவறு ஆவணப்படுத்தலின்மையாகும் அந்த நிலை மாற்றம் பெறவும் எமக்கென ஓர் ஆவணப்பதிவுமாக இந்நூலானது ஒரு ஆய்வுப் பெட்டகமாக அமைய வேண்டும் என்ற சிந்தனையால் துறைசார் அறிஞர்களின் ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கிவருகின்றது.

அம்மா வளர்த்துவிட்ட வளர் தெங்குகள் செழித்தோங்கி, தாளுண்ட நீரைத் தலையால் தரவேண்டும். அனைத்து மக்களும் ஒழுக்க சீலர்களாக வாழவேண்டும். பல சாதனையாளர்கள் இப்பிரதேசத்தில் எழ வேண்டும். பொருள்வளம் சிறக்க வேண்டும் இறைவன் அருள் வேண்டும்.

நல்லன எண்ணுவோம்! நல்லவையே நிகழும்!!

திரு.க.மயில்வாகனம்
காப்பாளர்
கந்தையா கனகம்மா
நிதியம்

# ஆசிச் செய்தி

எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்தித்து. திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அம்மையார் அவர்கள் கடந்த 12 வருடங்களாக அதிபராகவிருந்து யா/நாவற்குழி மகா வித்தியாலயத்திற்குச் சேவையாற்றி இப்போது ஓய்வு பெறுவது அனைவருக்கும் ஒரு பேரிழப்பாகும். இவ்வித்தியாலயத்தில் கடந்த மூன்று தசாப்தங்களாக பணியாற்றிய ஒருவர் ஓய்வு நிலைக்குச் செல்வதென்பது கவலைக்குரிய விடயம். இருந்தும் இயற்கையான இறைவனுடைய நியதிப்படி அவரது ஓய்வு இன்றியமையாததாகின்றது. அவர் ஆற்றிய சேவையை வார்த்தைகளால் வார்த்து விட முடியாது. அவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து பணி செய்யவும். இவ்வித்தியாலயம் அவரது விருப்பப்படி தொடர்ந்து வளர்ச்சியடையவும் சேவைநலன் பாராட்டு விழா சிறப்பாக நடைபெறவும், இம்மலர் சிறப்பாக வெளிவரவும் இறையருளும் குருவருளும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

சிறந்த ஆளுமையுள்ள , பேச்சுவன்மையுள்ள நேர்மையான அதிபர் நீடூழி வாழ்க!

இன்பமே சூழ்க! எல்லோரும் வாழ்க!

**இறைபணியில்,**
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைத்தன்யா**
**சின்மயாமிஷன்**
**யாழ்ப்பாணம்.**

# ஆசியுரை

"அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

ஈழத்தின் வடபால் பல வளங்களும் நிறைந்த நாவற்குழிக் கிராமத்தில் கல்விச் சுடரொளி வீசும் நாவற்குழி மகா வித்தியாலயம் கடந்த நூற்றாண்டு களாகச் செய்துவரும் கல்விப் பணி இக்கிராமத்திற்கு வளம் சேர்ப்பதாகும். கடந்த நூற்றாண்டு காலத்தில் பல நூற்றுக்கணக்கான மாணவச் செல்வங்களைக் கல்வியில் வளர்த்தெடுத்த இப்பாடசாலை ஒல்லாந்தர் காலத்திலே புரட்டஸ்தாந்து திருச் சபையினரால் ஆரம்பிக்கப்பட்டதாகும்.

ஆரம்பத்தில் ஆண்டு 5வது வரை மட்டும் இருந்த பாடசாலை இன்று A/L வரை வளர்ந்து பல பாடவினை வகுப்புக்களைக் கொண்டு கம்பீரமான தோற்றம் கொண்ட நுழைவாயில் முகப்பை முன் நிலை நிறுத்தி, நாவற்குழி சங்குபிட்டி வீதியில் சிறந்த கல்வி கூடமாக ஒளி வீசித் திகழ்கின்றது.

நூற்றாண்டு கண்ட இப்பாடசாலையில் பல ஆண்டுகள் அதிபர் நிலையில் பணியாற்றி, இன்று பிரிவு ஓய்வு பெற்று, ஓய்வெடுக்க விளைந்து நிற்கும் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள், அதிபராக, மிக்க துணிவுடன், தன்னை இப் பணிக்கு முற்று முழுதாக அர்ப்பணித்து, மாணவர்களை, மனித நேயத்தில் வளர்த்து, சமத்துவம் நிலைநாட்டி எல்லா மாணவர்களின் கல்வியிலும் அக்கறை கொண்டு, இக் கல்லூரியின் பலவித வளர்ச்சிக்கும் காரண கர்த்தாவாக அமைந்து தனது விடா முயற்சியாலும், அயராத உழைப்பினாலும், ஆசிரியர்களுடன் தோழமை கொண்டு, பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர், மாணவர், நலன் விரும்பிகள், குறிப்பாக வெளிநாடு வாழ் "நாவற்குழி ஒன்றியத்தின்" ஒத்துழைப்புடன் எல்லோருடைய மனங்களிலும் இடம்பிடித்து அளப்பரிய பணியாற்றி ஓய்வுபெறும் நிலையில் அதிபர் அவர்களை மனமார வாழ்த்தி நிற்கின்றேன். இதுவரை காலமும் காத்த இறைவன் இவரை தொடர்ந்து தனது அரவணைப்பில் வைத்து, அவரின் ஓய்வு காலங்களை மனமகிழ்வாக தன் குடும்பத்தாருடன் கழித்திட ஆசிவேண்டி இவ் ஆசியுரையை நன்றியுணர்வுடன் கூறி நிற்கின்றேன்.

நன்றி.

**பங்குதந்தை FR.T.பிரான்சிஸ்**
**புனித.லிகோரியார் ஆலயம்**
**சாவகச்சேரி.**

# "சேவா மாண்பு"

தென்மராட்சிக் கல்வி வலயத்தின் 1C பாடசாலையான யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களின் ஓய்வு குறித்து வெளியிடப்படும் மலரின் ஊடாக அதிபர் அவர்களை வாழ்த்துவதற்குக் கிடைத்த சந்தர்ப்பத்திற்காகப் பெருமையடைகின்றேன்.

ஒரு கல்விச் சேவையாளரின் சேவை என்று தொடங்கியது? என்று முடிகின்றது? என்பது முக்கியமல்ல. அவர் தனது சேவைக்காலத்தில் தனது அர்ப்பணிப்பான சேவையால் எத்தனை மனங்களில் நிறைந்துள்ளார் என்பதை வெளிப்படுத்துவதே முக்கியமாகும். அது மட்டுமன்றி ஒரு கல்வியியலாளருக்குரிய பெருமை என்பது அவர் தனது காலத்தில் எத்தனை பதவிகளை வகித்தார் என்பதை எண்ணிப்பார்ப்பதல்ல. பதவிகளைப் பெறுவதற்குரிய தகுதிப்பாட்டை அவர் அடைந்து கொண்டு அப்பதவிகளை வகிக்கின்றாரா என்பதை எண்ணிப் பார்ப்பதாகும். ஒருவருக்குப் பதவிகள் அமைவதால் அவர் பெருமையடை கின்றார் என்பதைவிட அப்பதவிகளைப் பெறத்தக்க தகுதிப்பாட்டைக் கொண் டுள்ளார் என்பதால் பதவிகள் பெருமையடைகின்றன என்பதே உயர்வானதாகும்.

இச் சிந்தனைகளின்படி அதிபர் அவர்களை நோக்கினால் கல்விச் சேவைக்காகத் தன்னை அர்ப்பணித்த பெருமகளாகக் காண்பதில் மகிழ்வடைகின்றேன். அத்தோடு இலங்கைக் கல்வி நிர்வாக சேவையில் தகுதிபெற்று அதிபர் பதவி வகித்தமையால் அவரது நிர்வாகத்திறன் எல்லோராலும் பாராட்டப்பட்டதுடன் அதிபர் பதவிக்கு பொருத்தமானவர் என்பதை நிரூபணம் ஆக்கியுள்ளது. அத்தகையதொரு தகுதிப்பாட்டுடன் கல்விச்சேவை புரிந்து ஓய்வுபெறும் அதிபர் அவர்களின் மனம் நிறைவடைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஒருவருடைய சேவையின் பயனை அவரது பிள்ளைகளின் உயர்வில் காணலாம். அதிபர் அவர்களின் பிள்ளைகள் நல்ல உயர்நிலை பெற்று கல்வியிலும் பண்பிலும் சிறப்புற்றிருப்பது அவரது தன்னலமற்ற சேவைக்கு ஒரு சான்றாகும். எனவே அதிபர் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் ஓய்வு காலத்திலும் தமது குடும்பத்துடன் இனித்திருக்க இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**சு.கிருஷ்ணகுமார்,**
**வலயக் கல்விப்பணிப்பாளர்**
**தென்மராட்சி.**

# அதிபரின் ஆள்புல ஆளுமை – ஓர் அனுபவ பகிர்வு

ஒரு மனிதனின் ஆளுமை வளர்ச்சியில் இயல்பூக்கமும் போலச்செய்தலும் பெருஞ் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பது உளவியளாளர்கள் முடிபு. இதில் இயல்பூக்கம் வயதின் வெளிப்பாடாகக் காணப்படுகின்றபோதும் போலச்செய்தல் சூழற் தாக்கத்தின் தெறிவினையாகவேயுள்ளது.

ஒருவருடைய வளர்ச்சியில் வீட்டுச்சூழல் மட்டுமன்றி பாடசாலைச்சூழலும் அதிக செல்வாக்கைச் செலுத்துகின்றது. ஆதலால்தான் நடைமுறையில் ஒருவர் தவறுவிடும் போது "நீ எந்தப் பாடசாலையில் படித்தாய்?" என வினவுகின்றனர். ஆதலால் பாடசாலைச் சூழலைக் கற்றலுக்குரியதாக வைத்திருக்கவேண்டிய தேவையுள்ளது. இது முற்று முழுதாக அதிபரின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது.

இரண்டாயிரம் ஆண்டிலிருந்து நான் கண்ட திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் விழுமியப்பண்புகளின் நாயகியாகவுள்ளார். சாந்தம், அன்பு, மனிதநேயம், முகமலர்ச்சி, ஆதரவு, அரவணைப்பு, ஆறுதல் கூறுமியல்பு, பொறுப்புணர்வு, தேவை யறிந்து உதவி செய்தல், பிரச்சினைகளை புரிந்துகொள்ளல், இவையாவும் அவரின் அணிகலனா? அல்லது அவருக்கு அணிகலனா? என நான் பிரித்தறியமுடியாது வியந்ததுண்டு.

மேற்போந்த பண்புகளைப் பார்த்து, புரிந்து பழகும் பிள்ளைகள் தம் அதிபரைப்போல செய்வதற்கு முனைவர் என்பதனை யாராலும் மறுக்கமுடியாது.

என்னையும் சேவை நயப்பு, நாயகியையும் நண்பிகளாக்கியதும் எமது ஒத்த பண்புகளேயாகும். நான் அதிபராக கடமையாற்றியபோது வலயச்சந்திப்புக்களுக்கு நேரந் தவறாது சமுகமளித்து முகமனுடன் முன்வரிசையில் அமைதியாக இருக்கும் இவரது பாங்கு என்னைக்கவர்ந்தது. நட்பாய் மலர்ந்தது புன்முறுவலால் புரிதல்கள் பகிர்வோம். மாறாக உதிரிகளாய் வார்த்தை வெளிவரினும் பாடசாலைசார் அனுபவ பகிர்வுகளாகவே அவையிருக்கும். இதனால் வலயச்சந்திப்புக்களில் அவர் முந்தினால் நானும் நான் முந்தினால் அவரும் முன்வரிசை இருக்கைகளை அருகருகே நிரந்தரம் ஆக்கிக் கொண்டோம்.

பதவிகளுக்கு தகுதிகள் இன்றியமையாதன. தகுதிகளுக்கான தடை தாண்டல்களை இருவருமே சமகாலத்தில் ஒருவருக்கொருவர் துணையாகவிருந்து அடைந்திருகின்

றோம். போட்டியும் பொறாமையும் மலிந்தவுலகில் அதுவும் குறிப்பாக பெண்கள் மத்தியில் இவையதிகம் எனும் பொதுப்பார்வையை புறநடையாக்கிய புதுமைப்பெண்ணாக சேவைநிறைவு நாயகியை அனுபவ உணர்வால் ஆராதிக்கின்றேன்.

அதிபர் பதவிக்காலத்தில் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் பரிமாறிக்கொண்ட உத்திகளும் யுக்திகளும் பாடசாலைச் செல்நெறியை சீர்மைப்படுத்தின.

பள்ளிப்பிள்ளைகளின் உள்ளவாற்றலும் கற்றலில் வல்லமையும் காணப்பட்டபோதும் கனதியான அவர்களின் வாழ்க்கை வரட்சிநிலையினை தானுணர்ந்து வள்ளல்களை நாடி வளத்தேவைகளை எடுத்துரைத்து வசதிகளை. கற்பவர் கரங்களில் சேர்ப்பித்தவர். இவற்றில் பொதுப்படையானவை வெளித்தெரிந்த போதும் அந்தரங்கமானவை இரண்டு/மூன்று உள்ளங்களில் மட்டும் உறங்கிவிட்டன.

வலயம் சார்பாக பாடசாலைத் தரிசிப்பிற்குச் செல்கின்றவேளையில் எல்லாம் தன் பாடசாலை வெளியீடுகள் சார்பாக ஆசிரியர்களின் ஆற்றுகை ஆற்றல்களையே எடுத்துரைப்பார். ஆயினும் இவர் ஒரு கண்டிப்பும் கண்ணியமும் மிக்க அதிபருமென்பது நான் அறியாதவிடயமுமல்ல.

தமது முகாமை உத்திகளால் உயர் சித்திகளை பெறுபேற்றில் காட்ட முடியவில்லையென உளம்சோராது சமூக சூழ்நிலைகளே பாதிப்பையேற்படுத்துகின்றன என இனங்கண்டு இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்காக மாணவர்களை தூண்டி அவர்களுக்கான உதவிகளை புலம்பெயர், பழைய மாணவர்களிடமிருந்து பெற்றுக்கொடுத்து மாகாணத்தில் மட்டுமல்ல தேசியம்வரை சாதனைகளை தமதாக்க வழிசமைத்தவர்.

கோழிகள் போல கொக்கரிக்காது ஆமைகள் போல பெரும் ஆற்றுகைகளையாற்றி விட்டு அமைதியாகவேயிருப்பார். பள்ளிப்பிள்ளைகளின் படிப்பில் மட்டுமல்ல சமநேரத்தில் தாயாக தனது தனயர்களிருவரின் கல்வியிலும் கவனம் செலுத்தி அவர்களை நல்நிலைவரையுயர்த்தியுள்ளார். சமநேரத்தில் தாயாக பணிபுரிந்து பிள்ளைகள் பெறுபேற்றில் பெருமையுறுத்துகின்றார்.

“காலையில் முகமலர்ச்சியுடன் வணக்கம் கூறும் எம் அதிபரின் ஊட்டமே நான் முழுநாளும் வினைத்திறனுடன் வேலைசெய்ய போதுமானது” என இப்பாடசாலை ஆசிரியர் ஒருவர் என்னுடன் பகிர்ந்துகொண்ட செய்தி அதிபரின் ஆற்றுகைக்கான பதக்கம் எனலாம்.

இவையாவும் அகவை அறுபதுடன் நிறைவுறுநிலைக்கு வந்தாலும் இவரின் வழிநடத்தலும் வளர்ப்பும் இப்பாடசாலையை தொடர்ந்தும் வளப்படுத்தும் என நம்புகின்றேன்.

ஆள்புல ஆளுமையில் வீறுகொண்ட வீராங்கனை ஓய்வுநிலை வாழ்விலும் ஓங்குபுகழோடும் ஒருங்கிணைந்த குடும்ப நலனோடும் வாழ இறைபதம் இறைஞ்சி அமைகின்றேன்.

**திருமதி.சி.சிவநாதன்**
**பிரதிக் கல்விப்பணிப்பாளர்**
**கல்வி முகாமைத்துவம்**
**வலயக்கல்வி அலுவலகம்**
**தென்மராட்சி.**

# சேவை நிறைவு காணும் நாயகிக்கு என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்

யா/நாவற்குழி மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி.வ.மேகலிங்கம் அவர்களது சேவையைப் பாராட்டி வாழ்த்துரை வழங்குவதில் இப் பாடசாலையின் பிரதி அதிபர் என்ற வகையில் பெருமையடைகின்றேன். 1993இல் நான் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் காலடி எடுத்து வைத்தபோது திருமதி.வ.மேகலிங்கம் அவர்கள் உப அதிபராக இருந்து அன்புடன் வரவேற்று இன்றுவரைக்கும் இப் பாடசாலையில் இணைபிரியாத சகோதரியாக இருந்து கல்விப் புலத்தில் அருஞ்சேவைகளை ஆற்றியுள்ளார். அப்போது உப அதிபராக இருந்து சேவையாற்றியவர், பின்பு அதிபர் சேவையின் தேவை கருதி இடையில் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் பெற்று அதிபராக சேவையாற்றினாலும் மீண்டும் 2003இல் இப் பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்று இன்று வரைக்கும் சேவையாற்றி வருகின்றார்.

இவரது காலத்தில் இப் பாடசாலை நிறைய மாற்றங்களைக் கண்டுள்ளது. பௌதீகவளம், கல்விச்செல்நெறி, இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் யாவும் புதுப்பொலிவு பெற்று சிறப்பான வளர்ச்சி கண்டுள்ளன. அந்தவகையில் அதிபர் திருமதி.வ.மேகலிங்கம் அவர்களின் தணியாத தாகமும் அர்ப்பணிப்பும் நிறைந்த சேவையை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவரது பிறப்பு வளர்ப்பு யாவும் இந் நாவற்குழி பிரதேசம் மட்டுமன்றி இவரது ஆரம்பக் கல்வியும் இப் பாடசாலையே ஆகும். பின்பு உயர் படிப்புக்களை நாடி வேறு பாடசாலைக்கு சென்றிருப்பினும் யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தில் தடம் பதித்த காலங்களை அவர் மறக்கவில்லை. அதனால்தான் இப் பாடசாலையின் ஆசிரியராக இருந்து உப அதிபராகி பின்பு அதிபராக உயர்வு பெற்று கல்வி நிர்வாகம் என்னும் பதவி நிலைக்கு உயர்வு கண்டதுடன் பதவிக்காக வெளிச்செல்லாது பாடசாலையின் வளர்ச்சிக்காக வெளிநாடுகளுக்குச் சென்று பணிபுரிகின்ற பழைய மாணவர்களை எல்லாம் அரவணைத்து அரும்பெரும் தொண்டாற்றியதைக்கண்டு அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

இவரது சேவை பாடசாலையுடன் நின்றுவிடாது நாவற்குழிப் பிரதேச மக்களுடன் பின்னிப்பிணைந்து இப்பிரதேசப் பிள்ளைகளையெல்லாம் வரவழைத்து வேண்டிய உதவிகளை எல்லாம் பெற்றுக்கொடுத்து அவர்களது கல்வி வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருகின்றமை நாம் எல்லோரும் அறிந்ததே. இப் பாடசாலையும் இக் கிராமமும் வளர வேண்டும் என்ற ஆதங்கத்துடன் முன்னின்று உழைத்தவர் எம் அன்புக்குரிய சகோதரி அதிபர் திருமதி.வ.மேகலிங்கம் அவர்கள்.

இவரது பாடசாலைப் பணி மட்டுமன்றி சமூகப் பணியின் திறமையினாலும் இவருக்கு ஏற்ற பதவியாக சமாதான நீதவான் என்னும் பட்டமும் அவரை வந்தடைந்து சமூகப் பணியாற்றுவதிலும் அங்கீகாரத்தை ஏற்படுத்தியது.

பாடசாலைச் சிறார்களின் கல்வி வளர்ச்சியை சிந்தையில் கொண்டு சிறந்த ஆசிரியர்களைப் பெற்று கல்விப் பெறுபேறுகளை உயர்த்திக் கல்வியியற் கல்லூரி, பல்கலைக்கழகம் மட்டும் மாணவர்களைக்கொண்டு சென்ற பெருமையும் இவரைச் சார்ந்ததே. வறுமைக்கோட்டின் கீழ் வாழுகின்ற மாணவர்களை இனங்கண்டு அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வெளிநாட்டு பழைய மாணவர்களிடம் மட்டுமல்லாது வெளிநாட்டு நிறுவனங்களிடமும் உதவிகளைப் பெற்றுக் கொடுத்து வருவது அர்ப்பணிப்பு நிறைந்த சேவையை எடுத்துக் காட்டுகின்றது.

"பிறர் பிள்ளையை வளர்க்கத் தன்பிள்ளை தானாக வளரும்" என்ற முதுமொழிக்கு அமைவாக இவரது அற்பணிப்பு நிறைந்த சேவையை இறைவனும் இன்முகம்காட்டி ஏற்று அவரது பிள்ளைகளான நிரோந்திபன் பொறியியலாளராகவும் மலரவன் வங்கி ஊழியராகவும் உயர்வுபெற்று விளங்குகின்றார்கள்.

திருமதி.வ.மேகலிங்கம் அவர்கள் நாவற்குழி மகா வித்தியாலயத்தின் மகத்தான வளர்ச்சியில் காத்திரமான அதிபராக திகழ்கின்றார். இவர் எவ்வளவோ சிரமத்தின் மத்தியில் இப் பாடசாலையைக் கட்டியெழுப்பி இருக்கின்றமை பாராட்டப்படவேண்டிய விடயமாகும். தனக்கு வந்த இடர்களை எல்லாம் இடராகக் கருதாது எதிர்த்து நின்று போராடி இவ் வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு வித்திட்ட நாயகியை நாம் மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

இவரது அற்பணிப்பு நிறைந்த பணியைப் பாராட்டி எடுக்கப்படுகின்ற மணி விழாவும், மலர் வெளியீடும் சாலப்பொருத்தமானதே. இவரது ஓய்வுக்காலம் அமைதி யுடனும் சிறப்புடனும் அமைய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன். வாழ்க வளமுடன், வாழிய, வாழிய வாழியவே!

**திருமதி.சுசீலா செல்வராசா**
**உபஅதிபர்**
**நாவற்குழி மகாவித்தியாலயம்.**

# யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலய அதிபரின் வாழ்த்துச் செய்தி

திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் நாவற்குழி ம.வி இல் அதிபராக பணியாற்றி அகவை அறுபதில் பணிநிறைவுறு நிலையில் சேவைநயந்து அயற்பாடசாலை அதிபராய் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் இறுமாப்படைகின்றேன்.

இவர் இப்பாடசாலையில் ஆசிரியராக உப அதிபராக, அதிபராக என பல்வேறு பணி நிலைகளில் 37 வருடங்கள் கல்விப் பணியாற்றியுள்ளார். இவரது சேவைகளை, சாதனைகளை கல்விச் சமூகம் ஒரு போதும் மறந்துவிடாது.

இவரோடு நான் இப்பாடசாலையில் 1993 இல் இருந்து 2002 வரை பணிபுரிய கிடைத்த வாய்ப்பை என் மனம் நினைத்து மகிழ்வுறுகின்றது. என் மனப்பதிவில் இவரின் முகாமைநிலையங்க சீரியபார்வையும், நேரிய சிந்தையும், துணிச்சலாக முடிவெடுக்கும் திறனும் நிசமான நிழலாயுள்ளன. இவை அதிபர்களுக்கு வழிகாட்டியாக அமையக் கூடியன.


இலங்கை கல்வி நிர்வாக சேவை தேர்வில் தேர்ந்தும் தாம் சார்ந்த சமூக கட்டுமான புடம்போடல் நலம் விரும்பி தம் சேவையை அதிபர் நிலைக்குள் அடக்கி அர்ப்பணஞ் செய்தமையை வியந்து வாழ்த்துகின்றோம்.

வீரியமும் வியப்பும் மறவாது இன்றுபோல் என்றும் வல்லமையாளப்வராய் வாழ இறையாசி வேண்டி பிரார்த்தித்து வாழ்த்தியமைகின்றேன்.

"வாழ்க பல்லாண்டு"

நன்றி

**திரு.சி.பவளகுமாரன்**
**அதிபர்**
**யா/கைதடி முத்துக்குமாரசுவாமி**


யாழ்ப்பாணம் நாவற்குழி மகா வித்தியாலயம்
சேவை நலன் வாழ்த்துப்பா
திருமதி.வ.மேகலிங்கம்
எம் அறிவுக்கும் திறனுக்கும்
களமும் தளமும் பலமும் தந்து
எம் வாழ்வுக்கு ஒளி தந்த கல்விச்சாலையே
உந்தன் திருவடியை பணிகின்றோம்!
கல்விச்சாலையை எழில்மிகு சோலையாக்கி
அதன் தரமும் வளமும் பெயரும் ஓங்கிட
அன்று முதல் இன்று வரை 25 அகவைக்கு மேல்
உழைக்கும் எம் அறிவுச்சாலையின்
முதல்வர் திருமதி வ.மேகலிங்கம் அவர்களை
"நற்பணி வித்தகி" என்று மாண்பேற்றி
பாராட்டு மலர்கள் தூவி வாழ்த்தி மகிழ்கின்றோம் !
எம் கல்விச்சாலையை தன்
கண்ணாய் காத்தும்
கடமையில் நேர்மையும்
அகத்தினில் துணிவும்
பண்பும் பணிவும் வாய்மையும்
பெண்மை என்னும் நிலையில்
இருந்து மென்மையாய்
வேகத்தோடு கலந்த விவேகத்தோடும்
எம் கல்விசாலையின் உயர்வுக்கு
உள்ளம் திறந்து உவகையோடு
பாராட்டி நிற்கின்றோம் உங்கள் பிள்ளைகளாய்!
எம் பாடசாலையின் காப்பரணாய்
இத்தனை காலம் எத்தனை இடரினும்
மனம் துவளாது மாண்புடன் பணியாற்றியே
உங்கள் மாணவ மாணவியர்கள்
அவர் தம் பெற்றோர்கள் மனதினில்
நீங்காத இடம் பெற்றீர்கள்
தளமாக்கிய உங்கள் சேவையினை என்றுமே
நன்றியோடு நினைவில் கொள்கின்றோம்
வாழ்க உங்கள் கல்விப்பணி
வளர்க எங்கள் பாடசாலை
ஓங்குக அதன் புகழ் அகிலம் எல்லாம்
வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
எங்கள் "நற்பணி வித்தகி" பல்லாண்டு காலமது
நலமாய் வளமாய் வாழ்க வாழ்கவே...!
நாவற்குழி மகாவித்தியால
பழைய மாணவர் சங்கம் – பிரான்ஸ்

NAVATKULY MAHA VIDYALAYA OLD STUDENTS
CANADA

www.navatkuli.net/canada.html info@navatkuli.net 1-647-998-8369

# நாவற்குழி மகாவித்தியாலய அதிபருக்கான வாழ்த்துச் செய்தி

நல்லாசிரியையாய் அதிபருமாய் அரும் பணியாற்றி ஓய்வு பெறும் உத்தமிக்கு நல் வாழ்த்துக்கள்!

கல்விப் பணியினை காசு சம்பாதிக்கும் ஒரு தொழிலாகக் கருதாது சமூக முன்னேற்றத் திற்கான உயர் பணி எனக்கருதி சேவை ஆற்றி மாணாக்கர்கள் அனைவருக்கும் நல்லாசிரியை யாய், நல் வழிகாட்டியாய் திகழ்ந்த எமது பெருமதிப்பிற்குரிய குருவாகிய திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களே! நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஆசிரியையாக இணைந்து மாணவர்களாகிய எம்முடன் பெற்ற தாயைப் போன்று அன்புடன் பழகி, பாலூட்டுவது போன்று கல்வி அறிவினை ஊட்டி எம்மை அறிவாளிகளாக்கிய உத்தமியே உங்களுக்கு எமது வணக்கம்.

சிறந்த சேவையின் காரணமாக அதிபராகப் பதவி உயர்வுபெற்று எங்களூர் வித்தியாலயத்திலேயே தொடர்ந்து பணியாற்றி சிறந்ததொரு மாணவ சமுதாயத்தை உருவாக்கியதன் மூலம் நாவற்குழியையே நல்ல நகரமாக்கிய பெருமைக்குரியவர் ஆனீர்கள். மாணவர்களுக்கு மாத்திரமல்ல தங்களுடன் பணியாற்றிய ஆசிரிய, ஆசிரியைகளுக்கெல்லாம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய அருங்குணங்களைக்கொண்ட அதிபராகப் பணியாற்றி வந்தீர்கள். அதன் மூலம் ஆசிரியர்களின் அன்புக்கும், மதிப்பிற்கும் உரியவரானீர்கள்.

தங்களை ஆசிரியையாகப் பெற்று கல்வி கற்று இன்று கனடா நாட்டில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் பழைய மாணவர்களாகிய நாம் ஏணியாய் எம்மை எல்லாம் இந்நிலைக்கு உயர்த்திவிட்ட உத்தமியாகிய தங்களுக்கு நன்றி உடையவர்களாக உள்ளோம். பழைய மாணவர்களாகிய நாம் எமது சங்கத்தினூடாக இங்கிருந்து திரட்டி அனுப்பிய நிதியினை முறைப்படி பயன்படுத்தி மகா வித்தியாலயத்தை பெரும் விருட்சமாக வளர்த்து விட்டீர்கள். உங்களின் அரும்பெரும் சேவையினை கௌரவிக்கும் வகையில் தாங்கள் ஓய்வுபெறும் இவ் வேளையில் எமது ஆசிகளையும், நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம் அம்மா.

தங்களை எங்கள் குருவாகப் பெற்ற நாமனைவரும் பாக்கியசாலிகள் ஆனோம் அம்மா!
வாழ்க வளமுடன் பல்லாண்டு நீவீர்!
நலமுடன் வாழ்த்தும் மாணாக்கர்கள்.

நாவற்குழி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் – கனடா

| கிருபாகரன் மகேந்திரராஜா | குணசீலன் செல்லத்துரை | வினோதன் மகாலிங்கம் |
|---|---|---|
| ................................ | ................................ | ................................ |
| President | Secretary | Event Coordinator |

# மணிவிழா காணும் வசந்த நாயகியே வாழ்க!...

அலைகடல் வற்றிலும் அன்புக்கடல் வற்றாத
மலைமகளே வசந்த மல்லிகைப் பூங்காற்றே
கலைமகளின் அதிபதியாய் வந்துதித்த எங்கள்
சிலையானவளே சித்திரத் தமிழ்மகளே வாழ்க!...

மணிவிழாக்காணும் வசந்தாதேவியே உங்கள்
துணிவும் பிறர்துயர் போக்கும் பண்பு நிறை
பணி கண்டு பலர் இன்று ஒன்றுகூடி விழா எடுத்து
அணி அணியாய் திரண்டு வாழ்த்துகிறார்கள் வாழ்க!...

நல்வழி நீ நின்று நானிலம் போற்றிடவே - உயிர்
கல்வியே மூச்சாய் காலமெல்லாம் உழைத்தவளே
சொல்லும் செயலும் ஒன்றாய்ப் பிறந்த மண்ணுக்கே - உன்
பல்வழிச் சேவையோ மலைபோல் உயர்ந்தது வாழ்க!...

மண்ணின் நாயகியே மணிவிழாத் தேவியே
கண்போன்ற கல்வியின் அதிபதி நாயகியே
பண்பான உன் பணிகளுக்காக நன்றி பகர்கின்றோம்
விண்ணகம் தொட்டிட வளமுடன் வாழ்கவே!...

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் தலைமை ஆசிரியராய்
காவற்காரியாய் நின்று ஏழைகளின் துயர்துடைத்தவளே
நாவிற்கினியவளே நல்மொழி வளர்த்திடும் தமிழிச்சி - நீ
கோவிற் பெருந்தகைக் கோமகளே நீ வாழியவே

ஆண்டு அறுபது அகவையில் உறவுகள் ஒன்றுகூடி
வேண்டுகின்றனர் விருப்புடன் வாழ்த்துக்கள் பலகோடி
மீண்டும் உன் சேவைகள் கிடைக்கட்டும் எம் பள்ளிக்கு
நீண்டு நெடுந்துயர் அற்று பல்லாண்டுகள் வாழியவே!...

பெற்றவர் உறவுகள் பெருமிதம் உவகையில்
உற்றவர் உறவுகள் கூடிப்பெருமை கொள்கையில்
சுற்றத்தார் பலரோ கனிவுடன் மகிழ்கையில் - பல
கற்றவரும் தமிழுடன் போற்றிடவே நீடுழி வாழியவே!...

இன்று அறுபது அகவையை எட்டும் வசந்த நாயகியே
அன்று பாடசாலையில் நீயும் நானும் வகுப்பு மாணவர்கள்
என்றும் எண்ணுகையில் பூஞ்சோலை வசந்தங்கள்தான்
நின்று நினைக்கையில் ஆனந்தம் பேரானந்தம் வாழியவே!...

பெண்ணினத்தின் வழிகாட்டி நீ பெருமைக்குரியவள் நீ
கண்ணியமும் கடமையுணர்வும் கொண்ட பெருந்தகையே
விண் புகழ்கொண்ட பாரதியின் புரட்சிப் பெண்ணே
பண்புடனே இன்னும் பல்லாண்டு வாழ்க... வாழியவே!...

பாராட்டுக்களுடன் வாழ்த்துபவர்...
**வைரமுத்து சிவராசா**
**(பழைய மாணவன்)**
**பிரதம ஆசிரியர் "மண்" கலை இலக்கிய சஞ்சிகை**
**தலைவர் ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம்**
**ஜேர்மனி - 24-10-2015**

# தலைவரின் எண்ணப் பதிவுகள் ...

தென்மராட்சிப் பகுதியில் சிறந்துவிளங்கும் பாடசாலைகளில் ஒன்றான யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தின் அதிபர் திருமதி. வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களின் சேவைநயப்புவிழாச் சபையின் தலைவர் என்றவகையில் எனது சிந்தனையிலிருந்து சில வரிகளை தங்களுடன் பகிர்ந்துகொள்வதில் பெருமையடைகின்றேன்.

யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தின் மாணவியாக 11 வருடங்களையும், 38 வருடங்களாக கல்விச்சேவையை ஆசிரியராக, அதிபராக இருந்து அதில் 28வருடகல்விச் சேவையினை எமது பாடசாலையில் ஆற்றியவர். மொத்தம் வாழ்நாளில் 39வருடங்களை எமது பாடசாலையிலேயே கழித்து 19.11.2015 அன்று தனது 60ஆவது அகவையில் ஒய்வு பெற்றிருக்கும் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களை வாழ்த்தி பாராட்டி "நாமடந்தை" என்ற சஞ்சிகையை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மண்ணின் மடந்தையாக இருப்பதால் பாடசலையின் கல்விசார், கல்விசாரா செயற்பாடுகளுக்கு அப்பால் பாடசாலையின் பௌதீகவளத்தை கட்டிவளர்த்தார். சமூகத்தில் அல்லது மாணவர்களின் குடும்பநலன்களையும் வளப்படுத்துவதை தனது பணியாககொண்டு செயற்பட்டார். அதிபராக இருந்த காலத்தில் இவருக்கான பதவி உயர்வுகள் வந்தும் கூட எமது பாடசாலையின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து தொடர்ந்தும் பாடசாலையின் அதிபராக இருந்து ஓய்வுபெறுகின்றார் என்பதை இவ்விடத்தில் நினைவுபடுத்தி எமது மனமார்ந்த நன்றிகளையும் பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன். அவருடைய சேவை அவர் காலத்தில் மாணவர்கள் படைத்த கல்விசார் சாதனைகளும் இணைபாடவிதானச் சாதனைகளும் எனறும் பறைசாற்றி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இச்சஞ்சிகை வெறும் புதினப் பத்திரிகைபோலன்றி பாடசாலையில் இதுவரை சேவையாற்றிய அதிபர்களின் விபரங்களையும், தற்போது ஓய்வுபெற்று நிற்கின்ற அதிபர் அவர்களின் காலத்தில் பாடசாலையில் நிலைப்படுத்தப்பட்ட சாதனைகள், அவருடைய வாழ்வியல் பாதை, மற்றும் அவரை வாழ்த்தி வழங்கப்பட்டிருக்கும் வாழ்த்துரைகள் என்பன இச்சஞ்சிகைக்கு பெருமை சேர்த்து நிற்கின்றன.

இச்சஞ்சிகையை மேலும் சிறப்பிப்பதற்காக விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலதரப்பட்டகல்விச் சமூகத்தினரின் படைப்புக்களை தாங்கி வெளிவருவது மேலும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவரது ஒய்வுக்காலம் சிறப்புற அமைய இறைவனை இறஞ்சி வாழ்த்தி அமைகிறேன்.

**கோ. ஜீவபாலன்**
**தலைவர்,**
**விழாக்குழு.**

# விழாக்குழு செயலாளரின் எண்ணங்கள்

நாற்றிசையும் நறுமணம் வீசும்
நாவற்குழி வித்தியாலயம் தனில்
நடை பயின்று நல்லாசியராய்
நாயகியாய் நடாத்தி மிடுக்கெய்தினீர்

ஊரெல்லாம் கூட்டி அறிவுதனை ஊட்டி
உலகெலாம் சென்று ஊட்டம்பெற்றுய்ய
சீர்பணியாற்றி நேரிய நிறைகுடமாய்
நிறைவுறு பணி நயந்து நெகிழ்கிறதென் நெஞ்சம்

பாரதி பாவரு பாவையாய் தானிருந்து
பாலகருக்கு பாடம் பயில்கூடப் பார்த்தசாரதியாய்
நேரிய பார்வையொடு நெறிப்படுத்தி நிமிரவைத்த
நிறைவுறு பணிநயந்து நெக்குருகுறது என்நெஞ்சம்

வசந்தமாய் வீசி வசந்த வாழ்வு பலர்க்குகந்து
வசந்தத்தின் தேவியாய் வலம்வரும் உம்மைக்கண்டு - வியந்திட
வந்திட்ட அகவையறுபது நிறைவுறு பணியியம்ப - என்
வசம் மனம்முந்தி வாழ்த்திடும் உம்பணியெண்ணி

வாழிய பல்லாண்டு வளமுறு செல்வம்பெற்று
வாழிய வாழிய வாழியவே.

**சரவணமுத்து சதீசன்**
**பழையமாணவர்**
**நாவற்குழி ம.வி.**

# ஆற்றல் மிக்க அதிபர்

யா/நாவற்குழி மகா வித்தியாலயமானது தான் கடந்துவந்த 146ஆண்டுகளில் ஆற்றல் மிகு அதிபர்கள் பலரைப் பெற்றுள்ளது. அவர்களுள் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் குறிப்பிடக்கூடியவர். இவ் வித்தியாலயத்தில் சேவையாற்றியவர்களுள் மிக உயர் அதிபர் தரத்தைப் பெற்றவர் இவர் என்பது பெருமை கொள்ளும் விடயமாகும். அவரது ஆளுமைக்கு தோற்றம், உரையாடல் முறைமை கல்வியுடன் இணைந்த விளையாட்டு ஆர்வம், கண்ணியமிக்க கடமை, இரக்க சுபாவம், தன்னம்பிக்கை, தன்னலமற்ற சமூகத் தொண்டு. பல வறிய மாணவர்கள் கல்வி வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பணி அணிசேர்த்து பலராலும் இன்றும் போற்றப்பட்டு வருகின்றது. கண்டிப்பும், கருணையும், கரிசனையும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டுவரும் இவரது நிர்வாகத்திறன் சற்று வித்தியாசமானது கல்வி, விளையாட்டு, ஒழுக்கம் ஆகிய மூன்றையும் ஒரே நேர்கோட்டில் வழிப்படுத்தி வருபவர்.

இளமைப் பருவக் கல்வியில் புகழ்பூத்த மாணவியாகத் திகழ்ந்தவர். இப் பாடசாலைக்கு மாணவியாக இருந்து சாதனைகள் படைத்தவர். கல்விப் புலத்திலும் விளையாட்டு மைதானத்திலும் ஒளிமயமான நட்சத்திரமாக விளங்கியவர். இளமைக் கல்விச் செயற்பாடுகள் ஒருவரின் ஆளுமையில் பெரும் செல்வாக்கைச் செலுத்தும் என அறிவியலாளர் கூறுவர். அதற்கமைய செழிப்புமிக்க ஆளுமை மற்றும் தலைமைத்துவப் பண்பு நிறைந்தவராகக் காணப் பட்டு வருகின்றார்.

இவர் அதிபராக இருந்த காலப்பகுதியில் பாடசாலையானது கல்வியிலும் இணைபாட விதான செயற்பாடுகளிலும் பல சாதனைகளைப் பெற்றுள்ளது. கோட்டமட்டம், வலயமட்டம், மாவட்ட மட்டம், மாகாணமட்டம், தேசியமட்டம் என வெற்றிகள் கிடைக்கப்பெற்று வருகின்றன. தேசியமட்டத்தில் வெற்றிகள் கிடைக்க வேண்டும் என முயற்சிகள் மேற்கொண்டவர். முயற்சி திருவினையாக்கும் என்பதற்கிணங்க அவரது முயற்சிகள் வீண்போக இல்லை. தேசியமட்ட கணித வினாடி வினாப்போட்டி தமிழ்தினப் போட்டிகளில் வெற்றி கிடைத்தன. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மிக அக்கறை கொண்டவர். அடிக்கடி பாடசாலை வளாகத்தை சுற்றி மேற்பார்வை செய்வது அவரது வழக்கம் பாடசாலையில் விழுமியங்களை ஏற்படுத்த பல முயற்சிகள் மேற்கொண்டு வருபவர். நேர காலம் பாராது பாடசாலையிலேயே அவரது வாழ்நாளைக் கழிப்பவர். தோல்விகளைக்கண்டு அஞ்சாது மேலும் முயற்சிகள் மேற்கொள்வார். பிரச்சினைகள் வரும் வேளைகளில் நுட்பங்களைக் கையாண்டு

எளியமுறையில் தீர்த்துவிடுவார். பிரச்சினைகள் தீர்ப்பதிலும் வல்லவராகத் தொழிற்படும் சிறந்த அதிபர் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் சமூகத் தொடர்புகளை வலுவாகப் பேணுவதனால் சுலபமான முறையில் பாடசாலையை நடாத்தும் ஆற்றலையும் கொண்டுள்ளார்.

இவர் புகழ்பூத்த ஆசிரியராகவும் இப் பாடசாலையிலே மிளிர்ந்தவர்.

"சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல்
யார்க்கும் அரிது"

என்ற வள்ளுவர் கூற்றுக்கேற்ப ஆசிரியர் தொழிலுக்கு அடிப்படையாகத் திகழ்ந்த ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் வல்லவராக சிறந்த ஆசிரியராக காணப்பட்டவர். மாணவர் மத்தியில் தமக்கென இடம் பிடித்தவர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர் அவரது எத்தனையோ மாணவர்கள் பெரிய பதவிகளில் காணப்படுகின்றனர்.

இவர் பாடசாலை மேம்பாட்டிற்கு பெரிதும் உழைத்த அதிபர்களில் முதல் அதிபராக வரலாற்றில் பெயர் பொறிக்கப்பட வேண்டியவர். இவரது காலம் ஒரு பொற்காலமாக அமைந்திருந்தது.

**சடாச்சரம் தயாநிதி**
**விழாக்குழுப் பொருளாளர்**
**ஆசிரியர்**
**யா/கைதடி முத்துக்குமாரசுவாமி வித்தியாலயம்**

# ஆசிரியர் நலன்புரிச் சங்கத்தின் வாழ்த்துச் செய்தி

147 வது வருடத்திலே கால் பதிக்கின்ற யா/நாவற்குழி மகாவித்தியாலயத்தின் நீண்ட கல்விப் பாரம்பரியத்தில் 17வது அதிபராகப் பொறுப்பேற்று பணியில் நிறைவு பெறும் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் அதிபர் அவர்களின் கல்விப் பணியானது மிகவும் காத்திரமானது. அவரது உன்னதமான உயர்ந்த சேவைகளைப் போற்றி நிற்கின்றோம். மாணவர்களின் நலனையே முற்று முழுதாக விரும்புகின்ற நல்லதொரு அதிபராகப் பணியாற்றி இருந்தாலும் பாடசாலையில் ஆசிரியர்களோடும் பணியாளர்களோடும் எப்போதும் நெருக்கமான நட்புறவினையே பேணி வந்துள்ளார். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் கூடிய கவனம் செலுத்தி அவற்றின் மேம்பாட்டிற்காக உழைத்ததுடன் அனேக பௌதீக வளங்களைப் பெற்றுக் கொடுத்ததில் முன்னிலை வகிக்கின்றார். பாடசாலையில் மகிழ்ச்சியும் அமைதியும் நிலவும் நல்லதொரு கவின் நிலையை ஏற்படுத்தி அன்பின் ஆழத்திலேயே நிர்வாகத்தை மேற்கொண்டார். முகமலர்ச்சியான தொடர்பாடல் மென்மையான கண்டிப்பிலும் இழையோடும் கருணை, தானும் செயலாற்றிக் கொண்டு மற்றவரையும் செயல் புரியத் தூண்டும் முன் மாதிரியான வாழ்வும் அவரது சிறந்த ஆளுமையும் ஒரே குடும்பம் என்ற உணர்வோடு எம்மை இணைத்து பணி செய்ய வழி சமைத்திருந்தார் என்றால் அது மிகையாகாது. இவரது கல்வி மற்றும் சமூகப் பணிகளுக்கு மேலாக இவரின் தனிப்பட்ட குணநலன்கள் கூட மகத்தானவை.

அந்த வகையில் மிகவும் உன்னதமானதொரு பணியாற்றி அரச பணியில் ஓய்வு பெறும் அதிபர் அவர்களை அனைத்து ஆசிரியர்கள், பணியாளர்கள் சார்பாக மனம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் சமர்ப்பித்து வாழ்த்தி நிற்கின்றோம். தொடர்ந்தும் அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமையவும் வளமுடனும் நலமுடனும் வாழ இறையாசீர் வேண்டி பிரார்த்தித்து நிற்கின்றோம்.

நன்றி

**சு.ஜெபநேசன்**
**செயலாளர்**
**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**யா/ நாவற்குழி ம.வி**

# சேவையின் நாயகி

செய்யும் தொழிலே தெய்வம் என
சேவைகள் என்றும் ஆற்றி
மெய்யன்புடன் மாணவரை அரவணைத்து
மேதியினியில் புகழ்பெற வைப்பவர்

பதவிகள் பலவற்றை துறந்து - எம்
பள்ளிக்காய் காலமெல்லாம் வாழ்ந்து
உதவிகள் தினமும் செய்து
உத்தரமாய் என்றும் வாழ்பவர்

கல்வியில் பெறுபேறு ஓங்கி
சாதனைகள் பலவும் பெற்றிட
வல்ல மாணவரை உருவாக்கி
வாழ்த்துக்கள் வாங்கித் தருபவர்

இணைபாட விதானத்திலே இன்று
தங்கப்பதக்கங்கள் வென்றிட
இரவு பகலெனப்பாராது
எப்பொழுதும் உரமூட்டுபவர்

மாணவச் செல்வங்கள் யாவருமே
சான்றோராய் தலை நிமிர்ந்து நின்றிட
ஒழுக்கத்தொடு நற் பண்புகளை
ஆண்டாண்டு காலமாய் விதைப்பவர்

தரணி எங்கும் எம் பாடசாலை
தன்னிகரில்லாக் கீர்த்தி பெற
தன்சுக துக்கங்களைத் தள்ளிவிட்டு
தளராது உழைப்பதில் வல்லவர்

அன்பொடும் பண்பொடும் அரவணைத்து
ஆசிரியரை தினம் ஊக்குவித்து - அவர்
வாண்மையினை வளர்த்தெடுக்க
வாஞ்சையுடன் நிற்பவர்

துன்பப்படுவோரின் துயரங்கள்
பஞ்சாய்ப் பறந்து சென்றிட - கண்
துஞ்சாது கருணையொடு
கரம் நீட்டிக் காப்பவர்

கற்றவர் கொண்ட சமுதாயமாய்
நாவற்குழியூர் சிறந்தோங்கிட
பற்றுடன் பாசமும் மிளிர
தாய் போல விளங்குபவர்

அகவை அறுபதில்
ஆளுமைமிக்க அதிபரை - என்றும்
ஆனந்தமாய் வாழ
அகமலர்ந்து வாழ்ந்துகிறோம்

ஆசிரியர்
**திருமதி.மீனா பரமேஸ்வரன்**
**(சென்யோன் பொஸ்கோ வித்தியாலயம்)**




திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம்

# அதிபர் திருவாட்டி வசந்தாதேவி மேகலிங்கம்
# ஒரு விபரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| 1. முழுப்பெயர் | : | திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் |
| 2. பிறந்த இடம் | : | பாடசாலை வீதி, நாவற்குழி, கைதடி |
| 3. பிறந்த திகதி | : | 1955.11.19 |
| 4. பெற்றோர் | : | சின்னப்பு இராமலிங்கம், செல்லம்மா இராமலிங்கம் |
| 5. சகோதரர்கள் | : | திருமதி.தெய்வநாயகி அப்புத்துரை<br>திருமதி.நவமணி விஸ்வரத்தினம்<br>திருமதி.பரமேஸ்வரி வீரசிங்கம்<br>திருமதி.நிர்மலாதேவி நடராஜா<br>திருமதி.சித்திராதேவி ஜெயபாலன் |
| 6. படித்த பாடசாலைகள் | : | யா/நாவற்குழி மகாவித்தியாலயம்<br>க.பொ.த.(சா/த) வரை<br>யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம் உயர்தரம் |
| 7. பட்டப்படிப்புகள் | : | கலைமாணி பேராதனைப் பல்கலைக்கழகம் 1984<br>பட்டப்பின் கல்வி டிப்ளோமா யாழ். பல்கலைக்கழகம் 1993 |
| 8. பெற்ற பதவிகள் | : | அதிபர் தரம் II 01.06.1991<br>அதிபர் தரம் I 01.06.1996<br>S.L.E.A.S 11.06.2011 |
| 9. பிள்ளைகள் | : | செல்வன்.மேகலிங்கம் நிரோத்திபன்<br>(மாணவன் பொறியியல் பீடம், மொறட்டுவை)<br>புலமைப்பரிசில் மாணவன்<br>SUTD பல்கலைக்கழகம், சிங்கப்பூர்.<br>செல்வன்.மேகலிங்கம் மலரவன்<br>(கொமர்ஷல் வங்கி நெல்லியடி |
| 10. முதல் நியமனம் | : | 08.06.1979 - 31.10.83 யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை<br>உதவி ஆசிரியர் - மாவட்டசேவை |
| 11. பதவி | | சேவை நியமனம்<br>உதவி ஆசிரியர்<br>மாவட்ட சேவை 8.6.78 - 14.02.194<br>கைதடி நாவற்குழி அ.த.க |

12. பட்டதாரி ஆசிரியர் 15.02.84 - 05.07.1989 நாவற்குழி ம.வி

13. பகுதித்தலைவர் அதிபர் சேவை 10.02.94 - 19.04.98 நாவற்குழிம.வி

14. உப அதிபர் அதிபர் சேவை 10.02.94-19.04.98 நாவற்குழி ம.வி

15. அதிபர் அதிபர் சேவை 20.04.98 -03.05.99 நாவற்குழி ம.வி

16. பிரதியதிபர் 04.05.99 - 14.03.2002 நாவற்குழி ம.வி

17. அதிபர் 15.03.2002-13.04.2003 மட்டுவில் சரஸ்வதி வித்தி

18. அதிபர் 01.05.2003-18.11.2015

19. அதிபரின் பதவிக்காலத்தில் ஆசிரியர்களாக பணிபுரிந்து ஆளுமை பெற்று பதவி உயர்வு பெற்றோர்

நா.கருணாகரன் - அதிபர்

ந.ஜெயரூபன் - அதிபர்

சு.சிவானந்தம் - அதிபர்

வே.க.சந்திரகுமார் - முதன்மை ஆசிரியர்

திரு.க.ஈஸ்வரன் - தொழில் வழிகாட்டல் அதிகாரி

**அதிபர் காலத்தில் விழாக்களுக்கு அழைத்து அறிமுகப்படுத்தப்பட்ட அறிஞர்கள்**

பேராசிரியர் - க.தேவராசா

பேராசிரியர் - வி.பி.சிவநாதன்

பேராசிரியர் - சபா ஜெயராசா

கலாநிதி - செ.திருநாவுக்கரசு

கலாநிதி - மா.க.ஈழவேந்தன்

டென்மார்க் Kanri Eriksen Red cross டெனிஸ்

நாவற்குழியூர் - நடராஜன் மகன் மகிழ்னன் நடராஜன்

பேராசிரியர் - வி.நித்தியானந்தம்

பேராசிரியர் - அ.சண்முகதாஸ்

பேராசிரியர் - மனோன்மணி சண்முகதாஸ்

தினக்குரல் - ஆ.சி.நடராஜா 02.08.2007

துணைவேந்தர் - பொ.பாலசுந்தரம்பிள்ளை

மேலதிக அரச அதிபர் - 05.11.2009 திருமதி.ரூபினி வரதலிங்கம்
பிரதேச செயலர் - திரு.எஸ்.ஸ்ரீனிவாசன்
விரிவுரையாளர் - எ.குமரன் 16.06.2010
கலாநிதி - திருமதி.சி.சிவச்சந்திரன் 01.07.2011
இந்திகா பண்டார நாயக்கா உள்ளூராட்சி அமைச்சர்
பாராளுமன்ற உறுப்பினர் - சில்வஸ்திரி அலன்ரின்
வைத்திய கலாநிதி - S.சிவரூபன்
ஜாக்ரத சைதன்யா- சின்மயாமிஷன்
பேராசிரியர் - மா.சின்னத்தம்பி
Hassan wep - ஜெனிவா
வட மாகாணசபை - கே.சயந்தன்
கே.ஆர்.டேவிற் - எழுத்தாளர்
நீதிபதி - ஸ்ரீநிதி நந்தசேகரன் - 27.06.2015
இந்திய துணைத்தூதுவர் - A.நடராஜன் - 28.06.2015
விரிவுரையாளர் - ச.கிருஸ்ண மோகன் - 10.07.2015
எழுத்தாளர் - வை.சிவராசா - ஜேர்மனி
பிரதம நூலகர் - ஸ்ரீ.அருளானந்தம்
யா/பல்கலைக்கழகம் 23.10.2015

# பாதச் சுவடுகள் ஒரு வரலாற்றுப் பார்வை

## மனிதன்

சமூக இயக்கத்தில். சமூகத்தை நெறிப் படுத்தவெனத் தோற்றம் பெற்ற அமைப்புகளில். அது சமயம் சார்ந்ததாகவும் இருக்கலாம் அல்லது. சமூகம் சார்ந்ததாகவும் இருக்கலாம் அல்லது. கலை இலக்கியம் சார்ந்ததுமாக இருக்கலாம். அது எத்துறை சார்ந்ததாக இருந்தாலும் அந்த அமைப்பின் இயங்கியல் உயிர் நிலையாக 'மனிதமே' காணப்படும். தனி மனிதனில் இருந்து சமூகம் தாண்டி. தேசியம் வரை இந்த 'மனிதம்' என்ற உயர் விழுமியத்தை நோக்கி நகரவே முற்படுகின்றன. இதனால் தான் "ஒரு பிர தேசத்தில் ஒரு கல்விக்கூடம் அமைக்கப்பட்டால். அந்தச் சமூகத்தில் ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது என்ற அர்த்தப்படும்" என ஒரு சிந்தனையாளன் குறிப்பிட்டுள்ளான்.

"தெரிந்து செய்வது அறிவு. தெளிந்து செய்வது ஞானம்" என இன்னொரு சமூகவியலாளன் கூறுகின்றான். இதில் 'தெரிந்து'. 'தெளிந்து' ஆகிய இரண்டு சிந்தனை நிலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இரண்டுமே மனித சிந்தனையின் ஆழத்தை அடிப்படையாகக் கொண்ட சொற்பிரயோகங்களாகும். 'தேடுதலின்' விளைவாகவே 'தெரிதல்' நிகழ்கின்றது. இந்தத் தெரிதல் நிலைக்குப் பின்னான 'அனுபவத் தேடலின் வழியாகவே ஞானம்' பிறக்கின்றது.

இந்த 'ஞானத்தின்' இன்னொரு நிலை தான் 'மனிதம்: எனப்படுகின்ற உயர்பண்பாகும். ஞானம் என்ற மனிதத்தைப் பெறுவதற்குத் தெரிதல் அடிநிலையாகவும். தெரிதலுக்கு அடி நிலையாக தேடுதலும் அமைகின்றது. இந்தத் தேடுதல் என்ற தூண்டலையும் தெரிதல் என்ற 'துலங்கலையும்' நிகழ்த்திவைக்கின்ற ஒரு செயற்கூடமாகவே கல்வி நிலையங்கள் அமைகின்றன.

தனி மனிதனின் அல்லது ஒரு மனிதக் குழுமத்தின். இதற்கு மேலால் தேசியத்தின் செல் நெறியில் மனிதத்தின் உள்ளீட்டை ஏற்படுத்தும் ஒரு 'உயிர் நிலை யாகவே: இக்கல்வி நிலையங்கள் அமைகின்றன என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

சமூகச் செல்நெறியில் மனிதத்தை உள்ளீடாக்குவதில் உயிர் நிலையாக விளங்கு கின்ற கல்விக்கூடத்தில். ஆசிரியராக. பிரதி அதிபராக. அதிபராக. இதற்கு மேலால் 'கல்வி நிர்வாக சேவையில்: உள்ளீர்க்கப்பட்டவராக முப்பத்தியேழு ஆண்டுகள் பணிபுரிந்து மணி விழாக்காணும் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களின் கல்விச் சேவைபற்றிய நயப்புரையாகவே இக் கட்டுரை அமைகின்றது. அறுபது வயதைப் பூர்த்தி செய்கின்ற அனைவருக்குமே மணிவிழா உண்டு. ஆனால் ஊர்கூடி மணிவிழா எடுக்கின்ற மேன்மை மிகச் சிலருக்கே கிடைக்கின்றது. இந்த மிகச் சிலருள் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களும் உள்ளடங்குகின்றார். சமூகத்தில் ஏதோவொரு துறையில் 'மேன்மைப்பட்டவர்களே' மணிவிழாவுக்குரியவர்கள் என்பது சமூக நியமங்களில் ஒன்றாகும்.

ஒருமனிதனை 'மேன்மையானவன்' என்று சமூகம் கணிக்கும் போது, அந்த மனிதன் சராசரி மனித நிலையைத் தாண்டி, தான் சார்ந்த துறையிலோ அல்லது, சமூகப் பணியிலோ 'அர்ப்பணிப்புடன்' செயற்பட்டவன் என்ற உயர் கணிப்புக்குட்பட்ட வனாகவோ வாழ்ந்ததற்கான சமூக அங்கீகாரம் பெற்றவனாகவே இருப்பான். திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் தான் சார்ந்த கல்விப்புலத்தில் அர்ப்பணிப்புடன் நடந்து கொண்டார் என்பதை நாவற்குழி மக்கள் ஏகமனதாக அங்கீகரிக்கின்றனர். மகாகவி பாரதி வாழ்ந்து - மடிந்து எத்தனையோ ஆண்டுகளின் பின்னர்தான் மகாகவி பாரதி 'தேசியக் கவிஞன்' என்ற எல்லைக்குட்படுத்தப்பட்டான் என பதிவுகள் கூறுகின்றன. ஆனால் பாரதியால் காணப்பட்ட புதுமைப் பெண்ணாக' வாழ்ந்த திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் தன்வாழ் நாளிலேயே மேன்மைப்படுத் தப்பட்டதானது மிகவும் கவனத்துக்கும், கவனிப்புக்கு முரிய நிகழ்வாகவுள்ளது.

"மனிதனால் வளர்ந்தது கல்வி, கல்வியால் வளர்ந்தவன் மனிதன்" என்று கல்வியியலாளர்கள் கூறுவர். திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் நாவற்குழிக் கிராமத்தின் இளம் சந்ததியினருக்கு கல்விப்புலத்தில் ஏற்றி விடுகின்ற ஏணியாக இருந்ததுடன், தனது சொந்த முயற்சியையும், சொந்த ஆளுமையையும் ஏணியாக்கித் தானும் கல்விப்புலத்தில் உயர்ந்து கொண்டமை அவரது முயற்சியின் சமநிலைப்பட்ட தன்மையைப் புலப்படுத்துவ தாக உள்ளது.

தான் பிறந்த கிராமத்தில், தான் கல்வி கற்ற பாடசாலையில் அதிபராக இருந்து பணி யாற்றுகின்ற வாய்ப்பு மிகச் சொற்பமானவர்களுக்கே கிடைத்திருக்கின்றது. அந்த வரிசை யிலும் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் பெருமைபெறுகின்றார்.

நான் தென்மராட்சிக்கல்வி வலயத்தில் உதவிக் கல்விப்பணிப்பாளராகக் கடமையாற் றிய காலத்தில் தென்மராட்சிக் கல்வி வலயத்தின் உயர்ந்த கணிப்பைப் பெற்று, வலயத்தின் கணிப்புக்குள்ளான அதிபர்களின் வரிசையில் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களும் ஒருவராக இடம்பெற்றிருந்தார் என்பதை இங்கு தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடை கின்றேன். தென்மராட்சிக் கல்வி வலயத்தில் கடமையாற்றியவன் என்ற வகையில் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் பற்றிய எனது மனப் பதிவுகளையும் இங்கு பகிர்ந்து கொள்ளலாமென எண்ணுகிறேன். திருமதி. வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களின் தொடர் சாதனைகளுக்குப் பிற்புலமாக இருந்து அவரது சிந்தனைப் புலங்களைப் பின்வருமாறு என்னால் இனங்காண முடிகின்றது.

தேவைகளைப் பட்டியல் இட்டு, அத்தியாவசிய தேவைகளை இனங்காணல், அத் தேவையை நிறைவேற்றக் கூடியவர்களை இனங்காணல், திட்டமிடல், பொருத்தமான ஆளணியினரைத் தெரிவித்தல், ஆளணியினரை இணைத்தல், வரவு செலவைத் திட்டமிடல், நடைமுறைகளை நிர்வகித்தல், நிர்வகித்தவற்றை அறிக்கையிடல், துறைசார்ந்தவர்களுடன் அறிக்கையை மீளாய்வு செய்தல், மீளாய்வு செய்தவற்றை நடைமுறையாக்கல். மேற்குறிப்பிட்ட விடயங்களில் அவர் காட்டிய அவதானங்களே அவரின் தொடர் சாதனைகளுக்கு அடிநாதமாகவும், ஆதார சுருதியாகவும் அமைந்தனவென என்னால் உறுதிபடக் கூறமுடியும்.

சகல பிரச்சினைகளையும் சிரித்த முகத்தோடு ஏற்றுக் கொள்கின்ற உயர்ந்த உளவியற் பண்பையும் இவரிடம் கண்டு ஆச்சரியப்பட்டுள்ளேன்.

தேவை கருதியும், நட்பு ரீதியிலும் எத்தனையோ தடவைகள் நான் இப்பாட சாலைக்கு வந்திருக்கின்றேன். ஒவ்வொரு குடும்பத்திலும் குடும்ப உறுப்பினர்கள் சார்ந்ததும், சமூகம் சார்ந்ததும், அரசியல் சார்ந்ததுமான - ஏதோவொரு பிரச்சினை இருப்பது தவிர்க்கமுடியாதது. வசந்தா அவர்களுக்கும் குடும்பத்தில் தீர்க்கக்கூடியதும், தீர்க்கமுடியாததுமான பிரச்சினைகள் இருந்ததைத் தனிப்பட்ட முறையில் நான் தெரிந்து வைத்திருந்தேன். ஆனால் ஒருமுறையாவது அவர் முகம் சோர்ந்து போய் இருந்ததை நான் ஒரு முறைதானும் காணவில்லை. இதுதான் அவரிடம் எனக்கு மிகவும் பிடித்த உயர் பண்பாகும். "ஒரு மனிதன் எந்த நிலையிலும் 'சமநிலை' தவறக்கூடாது" என்ற தத்துவத்தைப் பின்பற்றியவராகவே அவர் காணப்படுகின்றார்.

திரு.திருமதி.இராமலிங்கம் செல்லம்மா தம்பதிகளுக்கு 19.11.1955இல் இவர் மகளாக நாவற்குழியில் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை நாவற்குழி மகாவித்தியாலயத்திலும், உயர்தரக் கல்வியை யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்று, 1984இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டத்தை நிறைவு செய்தார். அதன் பின், பட்டப்பின் கல்வி டிப்ளோமாவை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் (Dip-in,Ed) 1993இல் நிறைவு செய்துள்ளார். 1991இல் அதிபர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டு, இலங்கைக் கல்விச் சேவையில் உயர் நிலையாக மதிக்கப்படுகின்ற 'கல்வி நிர்வாக சேவையில்' (S.L.E.A.S) உள்ளீர்க்கப்பட்டுள்ளார்.

இவரது கல்விச் சேவை பின்வரும் ஒழுங்குமுறையில் தொடர்ந்திருப்பதை இவரைப் பற்றிய பதிவுகள் தெரிவிக்கின்றன.

1. முதல் நியமனம் 8.6.1978கைதடி நாவற் குழி தெற்கு அ.த.க.பாடசாலை
2. இடமாற்றம் 15.02.1984 நாவற்குழி மகாவித்தியாலயம்
3. பகுதித் தலைவர் 06.07.1989 நாவற்குழி மகாவித்தியாலயம்
4. உப அதிபர் 10.02.1994 நாவற்குழி மகாவித்தியாலயம்
5. கடமை நிறைவேற்று அதிபர் 20.04.1998 நாவற்குழி மகாவித்தியாலயம்
6. பிரதி அதிபர் 04.05.1999 நாவற்குழி மகாவித்தியாலயம்
7. அதிபர் (இடமாற்றம்) 15.03.2002 மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்
8. அதிபர் (இடமாற்றம்) 01.05.2003 நாவற் குழி மகாவித்தியாலயம்
9. அதிபர் (க.நி.சேவை) 11.06.2011 நாவற்குழி மகாவித்தியாலயம் (இன்றுவரை)

திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் தனது முப்பத்தியேழு வருடகாலக் கல்விச் சேவையில் மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய காலத்தைத் தவிர்த்து மொத்தமாக முப்பத்தாறு ஆண்டுகள் நாவற்குழி மகாவித்தியாலயத்திலேயே கடமையாற்றியுள்ளார் என்பது மிகவும் கவனத்துக்குரியதொரு செய்தியாகும்.

ஒரு நிர்வாகத்தின் தலைமைப் பதவியில் இருக்கின்ற ஒருவர், தனது நிர்வாகக் கட்டமைப்பின் 'மையப்புள்ளியையும்' அந்த மையப் புள்ளியின் வரலாற்றையும், அந்த

மையப்புள்ளியின் பலம்-பலவீனங்களையும் பட்டியலிட்டுப் புரிந்துகொள்ளும் ஆளுமை மிக்கவராகவும் இருத்தல் அவசியமானதாகும். வசந்தா அவர்களைப் பொறுத்தவரை மேற் கூறப்பட்ட ஆளுமைக்கு இயல்பாகவே உட்பட்டவராகக் காணப்படுகின்றார். நாவற்குழிக் கிராமத்தின் ஆணி வேர் தொடக்கம், கடைசிக் குருத்துவரை அவரது இரத்தத்தில் ஊறிய ஒரு செய்தியாகவே அமைந்துள்ளது. அடுத்து, தனது நிர்வாகக் கட்டமைப்பின் பலம் - பலவீனங்களின் பட்டியல்படி பலங்களை, மேலும் எவ்வாறு பலமாக்கலாம் என்பதையும், பலவீனமானவற்றை எப்படிப் பலமாக்கலாம் என்ற யதார்த்த சிந்தனையும் வசந்தா அவர்களிடம் நிறைந்திருப்பதை நான் பல சந்தர்ப்பங்களில் அவதானித்திருக்கிறேன்.

மூன்றாவதாக, தன்னோடு பணிபுரிகின்ற ஆசிரியர்களையும், நாவற்குழி யிலும் அயல்க் கிராமங்களிலும் வாழுகின்ற 'பிரமுகர்களையும்', சர்வதேச நாடுகளில் வாழ்கின்ற 'நம்மவர்களையும்' நாவற்குழி மகாவித்தியாலயத்தின் கல்வி அபிவிருத்திக்கு எவ்வாறு பயன்படுத்தலாமென்ற நுணுக்கமான சிந்தனைக் கூர்மையுமிக்க வராகவே வசந்தா அவர்கள் காணப்படுகின்றார்.

நான்காவதாக, இவர் தனது, பெற்றோருக்கு மகளாகவும், தனது கணவனுக்கு மனைவியாகவும், தனது பிள்ளைகளுக்குப் பொறுப்பான தாயாகவும், மாணவர்களுக்குச் சிறந்தொரு ஆசிரியையாகவும், தன்னோடு பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்குச் சிறந்த வழி காட்டியாகவும், கல்வி அலுவலகத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்குப் பொறுப்புக்கூறும் சிறந்த நிர்வாகியாகவும், சமூக தர்மத்துக்குத் தலை வணங்கும் சத்தியம் மிக்கவராகவும், உன்னதமான சமூகப்பிரசையாகவும் வசந்தா அவர்கள் வாழ்ந்துள்ளார். தற்துணிவோடு வாழ்ந்து காட்டியுள்ளார் என்பதில் இரண்டாங்கருத்துக்கு இடமில்லையெனத் துணிந்து கூறமுடியும்.

இவருடைய நிர்வாகத்தில் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திகள் பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசிய மானதும், பொருத்தமானதுமென எண்ணுகிறேன். ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திகள் பொதுவான பார்வைக்கு 'அற்பமான' விடயங்களாகத் தென்படலாம். கிராமப்புறத்துப் பாடசாலை ஒன்றில் ஒரு 'பொறுப்பதிகாரியினால்' இவ்வளவும் செய்யப்பட்டுள்ளது என்ற தளத்தில் நின்று பார்க்கும் போதுதான் இச்செயற்பாடு களின் மகிமையைப் புரிந்து கொள்ளமுடியும்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள், 'அகமலர்' சஞ்சிகை வெளியீடு, கல்விக் கண்காட்சி நடத்தப்பட்டது. மாணவர்களுக்குச் சேட்டுகள், சப்பாத்து கள் வழங்கப்பட்டது. இறுவெட்டு வெளியிடப்பட்டது. கல்விச் சுற்றுலா மேற்கொண்டமை, ஏ.எல் மாணவர்களுக்கு வர்த்தகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது, தமிழ் மொழித்தினப் போட்டியில் தேசிய மட்டத்தில் சிறுகதையாக்கம் முதலிடம் பெற்றமை, சிங்கள மொழிப் பேச்சுப்போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்றமை, கணித விநாடி வினாப் போட்டியில் முதலாம் இடம் பெற்றமை, கல்விக் கண்காட்சி நடத்தப் பட்டமை, மாணவி செல்வி சோபனாவின் 'நேர்கோடுகள் என்றும் வளைவதில்லை' என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டமை, க.பொ.தஉயர்தர பரீட்சையில் 3ஏ எடுத்தமை, பரிசளிப்பு விழா விளையாட்டுப் போட்டி, தமிழ் மொழித்தினம், ஆசிரியர் தினம்,

சிறுவர்தினம், மாணவர் முதல்வர் விழா நவராத்திரி விழா ஒளிவிழா போன்ற விழாக்களை நடத்தியமை.

மேற்கூறப்பட்டவைகள் கல்விப் புலத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளாகும், அடுத்து பௌதீகத் துறையில் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திகள் பற்றியவை. நீக்குழாய் அமைக்கப்பட்டது, நீர்த்தாங்கி அமைக்கப்பட்டது, மலசலகூடம் அமைக்கப்பட்டது, மின் இணைப்பு ஏற்படுத்தப்பட்டது, ஒலிபெருக்கிச் சாதனம் கொள்வனவு செய்யப்பட்டது. மேலத்தேய வாத்தியக் கருவிகள் கொள்வனவு செய்யப்பட்டது, மின் பிறப்பாக்கி கொள்வனவு செய்யப்பட்டது, சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டது, 'றோணியோ மெசின்' கொள்வனவு செய்யப்பட்டது. விளையாட்டு மைதானம் சீராக்கப்பட்டுச் சுற்று மதில் கட்டப்பட்டது. கணினி அலகு நிர்மானிக்கப்பட்டது, தொலைத் தொடர்புச் சாதனம் கொள்வனவு செய்யப்பட்டது, பாடசாலையின் நுழைவாயில் நிர் மாணிக்கப்பட்டது, விஞ்ஞான ஆய்வுகூடம் நிறுவப்பட்டது, சமையலறை நிறுவப்பட்டது. சுகாதார அறை கட்டப்பட்டது, கற்றல் வள நிலையம் அமைக்கப்பட்டது, துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையம் அமைக்கப்பட்டது, காலைப் பிரார்த்தனைக் கூடம் அமைக்கப்பட்டது, சத்துணவு வழங்கப்படமை, புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த., சாதாரண/ உயர்தரப்) பரீட்சை களில் திறமைச்சித்தி பெற்ற மாணவர்களை கௌரவித்தல், ஊக்குவித்தல்.

மாணவர்களையும், ஆசிரியர்களையும் பெற்றோர்களையும், அரசியல் தலைவர்களையும், சமூகப் பொது நிறுவனங்களையும், சர்வதேச நாடுகளில் வாழ்கின்ற உடன் பிறப்புகளையும் சந்தித்து, அவர்களை இணங்கவைத்து, பல சிரமங்களுக்கூடாக இவ்வளவு சாதனைகளையும் புரிந்த திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களுக்கு, அவரின் வாழ்க்கைச் சாதனை களைப் பதிவு செய்யும் ஒரு 'மணி விழா மலர்' வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களின் வாழ்க்கையில் ஒரு 'மைல் கல்லாக' அமையுமென்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

**கே.ஆர்.டேவிட்**
**(ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர்)**

# பொருளடக்கம்



| | |
|---|---|
| வகுப்பறைகளில் ஆசிரியர்கள் ஏன் தோல்வியடைகின்றனர் | 01 |
| முரண்களுக்குள் தொலையும் முழுமை | 09 |
| இலங்கையில் உள்ளூராட்சி முறைமை | 22 |
| அருணகிரிநாதரின் ஞானத்தமிழ் | 28 |
| தலைமைத்துவம் | 35 |
| பட்டப்படிப்பு காலத்தினுள் கலைப்பட்டதாரிகள் | 40 |
| திருவாசகத்தில் அறிவியல் சிந்தனைகள் | 45 |
| மறைக்கலைத்திட்டத்தின் கவனத்தை வேண்டி | 49 |
| THE STEERING WHEEL | 58 |
| நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும் | 62 |
| ஆசிரிய வாண்மையாற்றுகைக்கு வளம் சேர்க்கும் | 66 |
| கற்றல் கற்பித்தல் அபிவிருத்தியில் அதிபரின் வகிபாகம் | 70 |
| மழலைகளை வளப்படுத்தும் முன்பள்ளிகளில் வளப்படுத்தும் | 72 |
| வழிகாட்டி | 78 |
| ஒழுக்காற்று குழுவும் அதிபரின் வகிபங்கும் | 83 |
| அதிபர் நடிபங்கும் நடைமுறைச் செல்நெறியும் | 86 |



பள்ளிப் பருவத்தில் பயிற்சியின் போது



பள்ளிப் பருவத்தில்



பட்டம் பெற்ற வேளையில்



பெற்றோர், சகோதரங்களுடன்



இல்லறபந்தத்தில் இணைந்தபோது



மகனின் பிறந்தநாள் நிகழ்வின் போது

# வகுப்பறைகளில் ஆசிரியர்கள் ஏன் தோல்வியடைகின்றனர்: முதல்நிலை ஆற்றல்கள் பற்றிய விசாரணை

மா.சின்னத்தம்பி
பேராசிரியர்

பாடசாலைகள் என்பன வகுப்பறைகளை மையப்படுத்தி உருவாக்கப்பட்டவை. பாடசாலைகளின் நிலப்பரப்புக்களில் அதிக இடத்தை கையகப் படுத்தியிருப்பவையும் வகுப்பறைகள் தான்.

இத்தகைய வகுப்பறைகள் உயிர்த்துடிப்புடன் செயல்படும் போதெல்லாம் ஆசிரியர் புகழ் பெறுகிறார்; மாணவன் பயன்பெறுகிறான்; பாடசாலை திருப்தியடைகின்றது; சமூகம் முன்னேற்றமடைகின்றது.

வகுப்பறைகளை முகாமை செய்யும் மைய சக்தி கற்பிக்கும் ஆசிரியர்களே. அவர்கள் வகுப்பறை முகாமைத்துவத்தில் அதீத நம்பிக்கை கொண்டு, உண்மையாகவும், நேர்மையாகவும், வினைத்திறனுடனும் தொடர்ந்து செயல்படவேண்டியது அவசியம்.

வகுப்பறைகளில் ஆசிரியர்கள் தங்கம் போல் ஜொலிக்கவேண்டும்; மாணவர்கள் மகிழ்ச்சியுடனும் திறமையுடனும் கற்க ஆசிரியர் துணைபுரியவேண்டும். ஆசிரிய – மாணவ இடைவினையுறவில் உத்தம நலன்கள் பிறக்க வேண்டும்.

இதனடிப்படையில் வகுப்பறையிலான கற்றல் பற்றியும், வகுப்பறையிலான கற்றல் சூழல் பற்றியும் வகுப்பறை முகாமைத்துவம் பற்றியும் இக்கட்டுரை ஆராய்கின்றது.

## வரையறை

வகுப்பறைச்சூழலை மேம்படுத்த வகுப்பறை முகாமைத்துவம் விளைதிறன் மிக்கதாக அமைதல் அவசியம்.

வகுப்பறை முகாமைத்துவம் பின்வரும் பல அம்சங்களை உள்ளடக்கியது.

* வகுப்பறை முகாமைத்துவ திட்டமிடல்
* வகுப்பறை நடத்தைகள்
* வகுப்பறை ஒழுக்க நெறிகள்
* கற்பித்தல் ஒழுங்கும், உபாயங்களும்
* நேர முகாமைத்துவம்
* பாடசாலை முகாமைத்துவ அனுகுமுறையும் ஆதரவும்
* வகுப்பறை மட்ட சமூகவியல் செல்வாக்குகள்

எனினும் இக்கட்டுரையானது இவற்றில் முதல் இரண்டு அம்சங்களான திட்டமிடல் மற்றும் நடத்தைசார் செயல் ஒழுங்குகள் தொடர்பான ஆசிரியர்களின் அறிவு, ஆற்றல், ஈடுபாடு, செயலாற்றம்பற்றி மாத்திரமே விரிவாக விளக்க முயல்கின்றது என்பதை மனங்கொள்ளுதல் அவசியமாகும்.

## கற்றல் - எண்ணக்கரு

பிள்ளைகளின் அறிவில் அல்லது நடத்தையில் நிரந்தரமான மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய அனுபவங்களை அவர்கள் பெறுவது கற்றல் எனப்படுகின்றது. இந்த மாற்றமானது தெளிவான இலக்குடன் நிகழலாம், அல்லது எந்த விதமான குறிக்கோளுடனும் தொடர்பின்றியும் நிகழலாம்; நன்மை சார்ந்ததாகவோ, தீமை சாந்ததாகவோ நிகழலாம். சிறந்த கற்பவனாக திகழ்வதற்கு எப்போதும் மாற்றங்கள் அனுபவங்களின் வழியாக நிகழவேண்டிய தவசியம் தமது சூழலுடன் இடை வினையுறவு கொள்வதன் மூலமாகவே தனி நபர்கள் கற்கும் தகைமையை வளர்த்துக்கொள்கின்றனர்.

பிள்ளைகள் கற்றல் என்பது உடல் ரீதியான மாற்றங்களினால் நிகழ்வதாக கொள்ள முடியாது; அதேபோல் பசி, நோய், களைப்பு என்பவற்றினால் கற்றல் நிகழாதெனவும் கூற முடியாது. ஆனால் இவையனைத்தும் கற்றல் நிகழ்வின் மீது சிறு பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவைதான்.

அறிவுசார் உளவியலாளர்களின் கருத் துப்படி, கற்றல் என்பது உள்ளார்ந்த ரீதியில் – அக நிலையில் – நிகழ்கின்ற செயல்தான்; பிள்ளைகளின் அறிவுநிலை தொடர்பாக ஏற்படு கின்ற இந்த அகநிலை மாற்றத்தை நேரடியாக, புலனாகக் கூடியவகையில் அவதானிக்க முடி யாதென அவர்கள் விளக்குகின்றனர். சிந்தித்தல், ஞாபகப்படுத்தல், பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுதல் போன்ற அவதானிக்கமுடியாத மூளைசார்ந்த செயற்பாடுகளே கற்றல் என்பது அவர்களது கருத்தாகும்.

நடத்தைவாத கற்றல் கோட்பாடுகளை அவர்கள் அந்த அடிப்படையிலேயே உருவாக்கு கின்றார்கள். கற்றலின் விளைவு என்பது நடத்தை களில் ஏற்படும் மாற்றங்கள் என்பதுதான் அவர் களது விளக்கமாகும்.

பவ்லவ் (Pavlov) தோண்டைக் (Thou dole), ஸ்கின்னர் (Skinner) போன்றோரது ஆய்வு களும் விளக்கங்களும் அவ்வாறே அமைந்தன.

மாணவரது நடத்தைகளை ஊக்குவிப் பதில் ஆசிரியர்களுக்கும், அவர்களது தொழிற் பாட்டுக் களமான வகுப்பறைகளுக்கும் மிகப் பெரிய முக்கியத்துவம் உள்ளது. வகுப்பறை களில் பல்வேறு நிலைகளில் அவர்களைப் பாராட்டுவது இந்தகையதுதான்.

பிள்ளைகளின் மதிப்பை உயர்த்தக் கூடிய நேர்மறையான வகுப்பறை நடத்தைகள் (Positive Classroom behaviours) ஆசிரியர் களினால் போதியளவில் மீள வலியுறுத்தப் படவேண்டியுள்ளது. நேர்மறை நடத்தைகள் நீடித்து நிலைப்பதற்கு வகுப்பறைகளில் பல் வேறு வகையிலான மீள வலியுறுத்தல்கள் ஆசிரி யர்களால் பின்பற்றப்படவேண்டும் என பிர யோக நடத்தைப்பகுப்பாய்வாளர்கள் தெளிவு படுத்து கின்றனர்.

கற்றல், நடத்தைகளில் மாற்றங்கள் ஏற்படுவதுடன் தொடர்புடையது. அது ஆசிரியர் களின் செயற்பாடுகளுடன் தொடர்புடையது; இதனால் வகுப்பறைகள் சார்ந்த செயற்பாடு களுடனும் தொடர்புடையது.

கற்றலில் சிறப்பு நிலையடைதல், குழுவாக இணைந்து செயற்படுவதால் கற்றல், கற்றல் செயற்பாடுகள், நேர்மறையான வகுப் பறை நடத்தைகள், ஆசிரிய மாணவ இடை வினையுறவுகள், வகுப்பறைகளிலான மாணவர் களின் சுயமுகாமைத்துவ நடத்தைகள் போன்ற பலவும் பிள்ளைகளின் கற்றல் தொடர்பான மேம் பாடுகளை ஏற்படுத்தும் மூலகங்களாக விளங்கு கின்றன.

இவை தொடர்பாக வகுப்பறை முகா மைத்துவம் என்பது அதிகளவு முக்கியத்துவம் பெறுகின்றது.

**கற்றல் சூழல்** (Learning Environ ment)

பிள்ளைகள் பாடசாலைகளில் உற்சாக மாகவும் மகிழ்ச்சியாகவும் கற்பதற்குரியதாக பௌதிக சூழலும், சமூக சூழலும் உருவாக்கப்படு தல் வேண்டும். கற்பதற்குரியதான கற்பித்தல், கற்றலில் மாணவர் உண்மையாக ஈடுபடுதல், கூடிய நேரம் வகுப்பறையில் கற்றல், கட்டுப் பாட்டுடன் நேர்மறை நடத்தைகளுடன் வகுப் பறையில் செயற்படுதல், கற்பதற்கான உதவி களையும், ஊக்குவிப்புக்களையும் பெறுதல், பிள்ளைகள் மரியாதையாகவும் சமத்துவ மாகவும் வகுப்பறைகளில் ஆசிரியர்களால் நடாத்தப்படுவதாக நம்புதல் போன்ற பலவும் ஒன்றிணைந்த களம் தான் வகுப்பறை. கற்றல் கற்பித்தலுக்கான உயிர்ப்பு மிக்க அமைவிடம் தான் வகுப்பறை.

கற்பதற்குரிய சிறந்த சூழ்நிலைகள் உருவாக்கப்பட்டு பேணப்படுகின்ற இடமாகவே வகுப்பறைகள் அமைகின்றன.

பாடசாலை முகாமைத்துவத்தின் முதன்மையான கவன ஈர்ப்புக்குரிய செயலாற்றக்களமாக வகுப்பறைகள் உணரப்படுகின்றன.

அறிவு, திறன்கள், தன்னம்பிக்கை, விழுமியம், ஆளுமை, நேர்மனப் பாங்கு போன்றவற்றை மாணவர்களிடம் வளர்க்கும் நாற்று மேடையாகவும் கருதப்படுவன வகுப்பறைகள் தான்.

குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கு ஒருபோதும் வழங்கமுடியாத பல விடயங்களை பல உணர்வுகளை பல மனவெழுச்சிகளை ஆசிரியர்கள் கைமாற்றுகின்ற செயற்பாட்டு மையங்களாக உணரப்படுவன வகுப்பறைகள் தான். இத்தகைய வகுப்பறைகளில் பிள்ளைகள் சிறப்பாக கற்பதற்குரிய சூழல் உருவாக்கப்படுதல் வேண்டும்.

மாணவர்களும்ஆசிரியர்களும்தொடர்ச்சியாக இடைவினையுறவு கொள்கின்ற இடமாக வகுப்பறைகள் விளங்குகின்றன. வகுப்பறை சார்ந்த எல்லா அம்சங்களும் கற்றலையும், கற்பித்தலையும், மானிட உறவுகளையும், பாதிக்கும் வல்லமை கொண்டவையாகும்.

வகுபபறைச்சூழல் என்பது மிகவும் கவனமாக தெளிவான குறிக்கோள்களுடன் உருவாக்கப்படுவன.

வகுப்பறைகள் பல் பரிமாணங்கள் கொண்டவை பல்வேறு தனிப்பட்டவர்கள் இலக்கு நோக்கி ஒன்று கூடியுள்ள இடமாக அவை விளங்குகின்றன. இந்த வகுப்பறைகளில், பல இலக்குகள், பல முன்னுரிமைகள், பல ஆற்றல்கள், பல செயற்பாடுகள் கொண்ட பலர் ஒன்று கூடி செயற்படுகின்றனர்.

ஒரே ஆற்றலுடன், ஒரே வேகத்துடன், ஒரே மாதிரி பணிகளை எல்லா மாணவரும் நிறைவேற்ற வேண்டும் என்ற (கற்பிதமான) எதிர்பார்ப்புடன் வகுப்பறைச் சூழல் ஒழுங்கு படுத்தப்படுகின்றது. போலச் செய்தல் (Simula tion) சமகாலத்தில் செய்தல் (Simultaueors) போன்றன வகுப்பறைகளில் எதிர்பார்க்கப்படுகின்றன.

எதிர்பாராத நடத்தைகள் சார்ந்த பிரச்சினைகள் வகுப்பறைகளில் எழுகின்றன. ஆசிரியர்கள் தாமதமின்றி தீர்வுகளை கண்டறிய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். கற்பித்தல், கண்காணித்தல், கட்டுப்படுத்தல், உதவுதல், ஒழுங்குபடுத்தல், ஊக்குவித்தல், முரண்பாடுகளுக்கு தீர்வுகாணுதல் போன்ற பல பணிகளை ஒன்றிணைந்தவகையில் ஆசிரியர்கள் சிறப்பாக மேற்கொள்ளவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனர். அதற்கான சூழலை வகுப்பறைகளில் ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.

ஆசிரியர்கள் ஒருநாளில் நூற்றுக் கணக்கான அறிவுசார் தொடர்புகளை மாணவர்களுடன் ஏற்படுத்தி அதில் வெற்றி காண வேண்டும். இதனை சடுதியான தடைகள் பாதிக்கக்கூடும். கற்பித்தல் பலகையைப் பயன்படுத்த முடியாதிருத்தல், அயலில் மிகப் பெரிய சத்தம் ஏற்படல், மாணவன் ஒருவர் சடுதியாக மயங்கி விழுதல், மின்தடை ஏற்படல் போன்ற ஏதேனும் ஒன்று சடுதியாக நிகழ்வதால் கற்பித்தல் சூழல் பாதிக்கப்பட்டு விடுகிறது; இலக்கு தவறிவிடுகிறது.

எல்லா மாணவர்களும் ஆசிரியர்களும் கூட்டுணர்வுடன் ஒத்துழைப்பதால் மாத்திரமே வகுப்பறை கற்பதற்குரிய சூழலைப் பெறுகிறது. வகுப்பறை செயற்பாடுகளில் மாணவர்கள் ஒழுங்காக இயங்குவதை உறுதிப்படுத்துவதற்கு மாணவரிடையிலான ஒத்துழைப்பு (Coopera tive) ஊக்குவிக்கப்படுதல் வேண்டும். மாணவரது துர் நடத்தைகளை நிதானமாக வகுப்பறைகளில்

கட்டுப்படுத்த வேண்டும். இதில் பிள்ளைகளின் உடல்சார், உள நிலைசார், குடும்பம் சார், சமூக அடுக்குநிலை சார் காரணிகள், தராதரங்கள் என் பனபற்றிய அறிவை ஆசிரியர் கொண்டிருக்க வேண்டும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றனர்.

இதன்படி வகுப்பறைச் சூழல் பின்வருவன வற்றுக்கு இடமளிப்பதாக பேணப்பட வேண்டும்.

- இதமான மாணவர் நடத்தைகள்
- வகுப்பறைச் செயற்பாடுகளுக்குரிய திட்ட மிடல்
- கல்விசார் மாணவர் நடத்தை பற்றிய எதிர் பார்க்கை
- சிறப்பான ஆசிரியர் கற்பித்தலும் வழி காட்டலும்
- மாணவர் தொடர்பாக சமமான மரியாதை பேணல்
- உற்சாகமான மாணவர் செயற்பாடும் நடத் தையும்
- பாரபட்சமற்ற ஊக்குவிப்பும் தண்டனையும்

**வகுப்பறை முகாமைத்துவம்** (Classroom Managment)

ஆசிரியர்கள் கொண்டிருக்க வேண்டிய திறன்களுள் ஒன்றாக வகுப்பறை முகாமைத்துவ திறன்களும் கொள்ளப்படுகின்றன.

போதியளவான புதிய பாட அறிவைப் பெற்றிருத்தல், இடைவினையுறவு, கற்பித்தல், வழிகாட்டுதல் தொடர்பான திறன்களை வளர்த் துக்கொள்ளுதல், ஆசிரிய தொழில்சார் தொழிண்மை ஒழுக்கங்களை பின்பற்றுதல், தொழில்பற்றிய அகநிலை தத்துவம் ஒன்றை நம்புதல் என்பன நிறைவான ஓர் ஆசிரியருக்கு அவசியமான பண்புக்கோலங்களாகும்.

ஆனால் இதற்கு மேலதிகமாக ஆசிரியர் களுக்கு வகுப்பறை முகாமைத்துவ திறன்களும் அவசியமென அமெரிக்காவின் ரெக்சாஸ் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த பல ஆய்வாளர்கள் 1980, 1988, 2000 ஆண்டுகளில் வலியுறுத்தியி ருந்தனர். இதற்கு அடிப்படையாக பல ஆய்வுகளை இவர்கள் மேற்கொண்டிருந்தனர். இவர்களில் எம்மர் (Emmer), எவட்சன் (Evertson) அண்டசன் (Anderson) போன்றோர் 1980 களிலும் 2000ஆண்டளவில் பல ஆய்வுகளைச் செய்திருந்தனர். வேர்சாம் (Worslam 2000) மேற்கொண்ட ஆய்வுகளும் முக்கிய மானவை.

பாடசாலைகள் தொடங்கிய முதல் வாரத்திலும், பின்பும் பலதடவைகளும் பாட சாலைகளின் வகுப்பறைகளை தரிசித்து, கூர்ந்து அவதானித்து அங்கு நிலவிய வகுப்பறை முகாமைத்துவ பிரச்சினைகள் பலவற்றை இனங் கண்டனர். ஆசிரியர்களின் விளைதிறன், வகுப்பறை முகாமைத்துவத்தின் பண்புத்தரம், மாணவரது செயலாற்ற வேறுபாடுகள் போன்றன தொடர்பான பல பிரச்சினைகளை அவர்களால் அடையாளம் காணமுடிந்தது.

நல்ல நடத்தையும், கற்கும் திறனும் கொண்ட மாணவர்களது வகுப்பறைகளில் ஆசிரிய முகாமைத்துவ திறன்கள் ஊக்கமளிப்ப தாக இருப்பதையும், அதிக பிரச்சினைகள் கொண்ட வகுப்பறைகளில் உள்ள ஆசிரியர்கள் அதிக சிரமங்களோடு செயலாற்றியதையும் அவதானித்ததாக குறிப்பிட்டனர்.

இதனடிப்படையில் ஆசிரியர்களுக்கு முகாமைத்துவ கோட்பாடுகளை கற்பிக்க வேண் டியதன் அவசியம் உணரப்பட்டது. முகாமைத் துவ கோட்பாடுகளை நன்கு அறிந்து அவற்றைப் பிரயோகிக்கும் போது வகுப்பறை முகாமைத் துவத்திலான விளைதிறன் உயர்வதும் நேர் மனப்பாங்கு வளர்வதும் நன்கு அவதானிக்கப் பட்டது.

விளைதிறன் மிக்கதான கற்பித்தலானது வகுப்பறை முகாமைத்துவம் மற்றும் ஒழுங்கு முறை என்பவற்றிலேயே தங்கியுள்ளது.

வகுப்பறைகளில் ஆசிரியர்களது நடத்தைகள் மற்றும் செயற்பாடுகள் வகுப்பறையிலான கற்றலை ஊக்குவிக்கின்றன.

## ஆசிரியர் நடத்தை

மாணவர்கள் தமக்குரிய வகுப்பறைப் பணிகளையும், செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு ஏற்றவகையிலான நடத்தை களை பின்பற்றுவதே வகுப்பறை ஒழுங்கு எனப்படுகிறது. இது ஆசிரியரது முகாமைத்துவ திறனிலேயே பெரிதும் தயங்கியிருப்பதாக எம்மர் (Emmer, 1987) விளக்குகின்றார்.

விளைதிறன் மிக்க வகுப்பறை முகாமைத்துவ முதல்நிலை நடத்தைகளாக ஆசிரியரிடம் காணப்படவேண்டிய நடத்தைகளாக பின்வருவன குறிப்பிடப்படுகின்றன. எம்மர் (Emmer) எவேட்சன் (Evertson) அண்டர்சன் (Anderson) ஆகியோர் (1980) இவற்றை குறிப்பிட்டுள்ளனர்.

1) வகுப்பில் மாணவர்களுக்கு தெளிவான வழி காட்டல்களை வழங்குதல்.
2) வகுப்பறையில் எதையும் மிகவும் தெளிவாக அறிவுறுத்தல்.
3) வகுப்பறைச் செயற்பாடுகளுக்குரிய குறிக்கோள்களை தெளிவாக விபரித்தல்.
4) மிகவும் விரும்பத்தக்க மனப்பாங்குகளை தெளிவாக குறிப்பிடுதல்.
5) தெளிவான பார்வைத் தொடர்புகளை (eyecontact) வகுப்பறையில் பேணுதல்.
6) மாணவரது நலன்களை மையப்படுத்தியதான விடயங்களை வகுப்பறையில் வெளிப்படுத்தல்.
7) மாணவர்கள் கூறுவதை மிகவும் கவனமாக செவிமடுத்தல்.
8) மிகவும் சரியான நேரங்களில் சரியான உணர்வுகளை வெளிப்படுத்தல்.
9) பல்வேறு மாதிரியான வெகுமதிகளை மாணவர்களுக்கு வழங்குதல்.
10) பொருத்தமான நடத்தைக் கோலங்களை வகுப்பறையில் வெளிப்படுத்தல்.
11) மாணவர் வெற்றிபெறுவதற்கு அதியுயர்ந்த முன்னுரிமை வழங்குதல்.

இத்தகைய நடத்தைகளை ஒரு வகுப்பில் நுழைகின்ற முதல் நாள், மற்றும் முதல் வாரங்களில் சிறப்பாக வெளிப்படுத்துபவர்களை (ஆசிரியர்களை) அதிக முகாமைத்துவ நடத்தைகள் கொண்டவர்களென மதிப்பிடப்பட்டுள்ளது. புதிய பாடசாலைகளுக்கு புதிய வகுப்புக்களுக்கு முதலில் செல்லும் ஆசிரியர்கள் இவைபற்றிய தெளிவான அறிவை கொண்டிருத்தல் அவசியம்.

## முகாமைத்துவ திட்டம் தயாரித்தல்

வகுப்பறைகளை முகாமை செய்வது பற்றிய திட்டங்கள், பாடசாலைகள் தொடங்கும் வருட தொடக்கத்திலேயே தயாரிக்கவேண்டும். இது பௌதிக சூழல் (Physical) மற்றும் மாணவர் செயற்பாடுகள் (Environment) சார்ந்தனவாக அமைதல் வேண்டும்.

பௌதிக சூழல் என்பது வகுப்பறை இடவசதி, மாணவர் இருக்கை ஒழுங்கு, ஆசிரியர் இருக்கை, கற்றல் – கற்பித்தல் சாதனம் பேணும் முறை, ஆசிரியர் – மாணவர் இடைவினையுறவுவசதிகள், குழுவாக மாணவர் செயற்படுதற்குரிய வசதிகள் போன்ற பலவற்றையும் கவனத்தில் கொண்டு தளபாடங்களையும் இடவசதிகளையும் ஒழுங்குபடுத்துவது ஆகும்.

வகுப்பறை மாணவர்கள் நீண்டநேரம் அமர்ந்து செயல்படுமிடம் என்பதால் மேசை – கதிரை பொருத்தமாக இடப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும் மாணவர்கள் ஆசிரியரையும் அவரது கற்பித்தல் செயற்பாடுகளையும் அவதானிப்பதற்கு இடமளித்தல் வேண்டும், தமது பொருட்களை தடையின்றி பயன்படுத்தும். வசதிகளையும் உறுதிப்படுத்த வேண்டும். பின்வரும் மூன்று அம்சங்களை இதன்போது ஆசிரியர் கவனித்தல் வேண்டும்.

1. எத்தகைய நடத்தைகள் மாணவர்களிடம்

எதிர்பார்க்கப்படுகின்றன என்பதை தீர் மானித்தல்.

2. எதிர்பாக்கைகளை செயல் ஒழுங்குகள், விதிகளுக்குரியதாக மாற்றுதல்.
3. ஏற்படும் விளைவுகளை சரியாக இனங் காணுதல்.

மாணவர் நடத்தைகள் எவ்வாறு அமைதல் வேண்டும் என்ற எதிர்பார்க்கை மிகவும் தெளிவாக திட்டமிடப்படுதல் வேண்டும். இது இரண்டாவது அம்சமாகும். ஏனைய வகுப்புக்களில் அவதானித்த விடயங்களை மனதில் வைத்து புதிய வகுப்புக்குள் நுளைவதற்கு முன்னதாக சில தீர் மானங்களை ஆசிரியர்கள்மேற்கொள்ளவேண்டும்.

✷ அமர்ந்து செய்யும் வேலைகள், சிறிய குழு நிலை கலந்துரையாடல், எல்லோருக்கு மான போதனை, தனிப்பட்ட மாணவர்களுக் குரிய செயல்திட்டங்கள் தொடர்பான விதிகளை (Rules) தீர் மானித்தல் வேண்டும்.
✷ கிடைக்கும் வகுப்பறை இடவசதியை மாணவர்களின் பல்வகைப்பட்ட செயற்பாடுகள், மற்றும் நடத்தைகளுக்குரியதாக பயன் படுத்துவதில் அதிக கவனமும் திட்டமும் வேண்டும்.
✷ வகுப்பறை விதிகளுக்கு அமைவாக மாண வர் செயல்படுவதை உறுதிப்படுத்த வேண் டும். வகுப்பு மட்டங்களுக்கு ஏற்ப இவற்றை மாற்ற வேண்டும்.

மேயரும் (Mayer (1983) வேறு பலரும் பின்வரும் விதிகள் இவை தொடர்பாக அவசியம் என்று குறிப்பிட்டனர்.

✷ வினாக்களை கேட்பதற்கு முன்னர் கைகளை உயர்த்துதல்.
✷ ஆசிரியர் போதிக்கும் போது அல்லது அறி வுறுத்தல் வழங்கும் போது கவனமாக செவி மடுத்தல்.
✷ ஆசிரியர் கூறியதன்படி செயற்படுதல்
✷ சகபாடிகளுடன் இணக்கமாக இருத்தல்
✷ தரப்பட்ட பணிகளை மாத்திரம் செய்தல்
✷ குறித்த நேரத்துள் ஒப்படைகளைச் செய்தல்
✷ நீர் மற்றவர்களால் எவ்வாறு நடாத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீரோ, அதன்படி பிறமாணவரை நடாத்துதல்
✷ தேவையான கற்றல் சாதனங்களை ஒழுங் காக கொண்டுவருதல்.
✷ மணியடிப்பதற்கு முன்னர் வகுப்பறையில் ஒழுங்காக அமர்தல்.
✷ கைகள், கால்கள், உடைமையான பொருட் கள் என்பவற்றை கட்டுப்பாட்டுடன் வைத் திருத்தல்.
✷ வகுப்பறையில் நேர்மறை வெளிப்பாடு களை ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும். உற்சாகத்தை வெளிப்படுத்துதல் விரும் பத்தக்க முகவெளிப்பாடுகள் வெகுமதி யளித்தல், ஓய்வு (மாணவர்க்கு) வழங்குதல் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும்.

பாரபட்சமின்றி எல்லா மாணவர்களையும் அங்கீகரிப்பதும் தண்டனை அல்லது வெகுமதி வழங்குவதும் மிகவும் அவசியம்.

## விளைதிறன்மிக்க முகாமைத்துவத்தை பேணுதல்

வகுப்பறைகளில் விதிகளை நன்கு அறிவுறுத்தியதன் பின்பும் நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தவேண்டும்.

✷ வகுப்பறை விதிகளும், சட்டங்களும் மிகச் சரியாக பின்பற்றப்படுகின்றனவா என் பதைக் கண்காணித்தல் வேண்டும்.
✷ சிறிய தவறுகள் மிகப்பெரிய பிரச்சினை களாக மாறுவதன் முன்னதாக அதனை கண்டறிந்து அதனை விரைவாக தீர்த்து வைத்தல். கண்காணிப்பு மற்றும் பிரச்சினை தீர்க்கும் திறன்களை ஆசிரியர்கள் வளர்த் தல் வேண்டும்.
✷ மாணவர்க்கு வழங்கப்படும் வேலைகள் மற்றும் ஒப்படைகள் அவர்களது ஆற்றல், வயது, வசதி என்பவற்றுக்கு பொருத்தமான வையா என்பதை மதிப்பீடு செய்தல்வேண்டும்.
✷ மாணவரது பொறுப்பின்மை அல்லது செய் யாது விடுதல் என்பது உரியவாறு திருத்தப்

படுதல் வேண்டும். ஆசிரியர் அளவுக்கதிகமாக உணர்ச்சிவசப்படுதல், திட்டித்தீர்த்தல், தண்டித்தல் என்பவற்றுக்கு உட்படுதல் கூடாது.

நடத்தைகளை வகுப்பறையில் மேம்படுத்துவதற்கு பின்வரும் செயற்பாடுகளில் ஆசிரியர் கவனம் செலுத்தவேண்டும்.

1) பொருத்தமற்ற நடத்தையாயின் அதனை நிறுத்தும்வரை ஆசிரியர் அவரை தொடர்ந்து அவதானித்தல் வேண்டும்.
2) தவறுகள் திருத்தப்படும்வரை ஆசிரியர் தனது பார்வைத் தொடர்பை (eye contact) நீடித்துக்கொள்ள வேண்டும்.
3) சரியான விதிகளின்படி மாணவர் செயற்படுவதை தொடர்ந்து வலியுறுத்தி வருதல் வேண்டும்.
4) சரியானவற்றை மாணவர் தெரிந்துகொள்வதற்குரிய பின்னூட்டல்களை வழங்குதல் வேண்டும்.
5) விதிகள் மீறப்படும்போது, பொருத்தமான வகையில் சிறிய தண்டனைகளை (Miled punish ments) வழங்க முடியும்.
6) ஒரே வேலையை மாணவர் நீண்டநேரம் திரும்பத்திரும்பச் செய்வதை தவிர்த்தல் வேண்டும். மாணவர் செயற்பாடுகளின் தன்மையை அவர்கள் குதூகலமாக செயல்படுவதற்கு இடமளிக்கும் வகையில் அடிக்கடி மாற்றுதல் வேண்டும்.

மாணவர்களிடம் பொறுப்புக்கூறும் பண்பு (Accountability) வகுப்பறைச் செயற்பாடுகள் மூலமாக வளர்க்கப்படுதல் வேண்டும்.

வகுப்பறையில் அறிவு, திறன், விழுமியம் என்பவற்றுடன் தனது செயலுக்கு தாமே பொறுப்பு என்பதை நேர்மையாக ஏற்படும் இயல்பையும் கற்றுக்கொள்ள வேண்டும். இதற்கு ஆசிரியர் வகுப்பறையை பயன்படுத்த வேண்டும். இது பின்வரும் நடத்தைகளுடன் தொடர்புடையன என எம்மர் (Emmer) மற்றும் எவட்சன் (Evertson, 1982) விளக்குகின்றனர்.

1. ஒப்படை தொடர்பான புரிந்துணர்வை பெறுதல் முழுமையாக செய்துமுடித்தல், வழங்க வேண்டிய திகதி, பின்பற்ற வேண்டிய படிமுறை ஒழுங்கு என்பன பற்றிய தெளிவை மாணவர் பெற்றுக்கொள்ளுதல்,
2. ஒப்படை பற்றிய தொடர்பாடல் எதற்கு வழங்கப்படுகிறது? அதனை எவ்வாறு பெற முடியும்? என்பது பற்றியறிதல். இதற்கு ஆசிரியர் அறிவுறுத்தல் அவசியம்.
3. வகுப்பறையில் மாணவர் செயற்படும் போது ஆசிரியர் ஒழுங்கான முறையின்படி அவர்களது வேலைகளை மேற்பார்வை செய்தலும், பரி சோதித்தலும் அவசியம்.
4. பொருத்தமான பின்னூட்டலை மாணவர்க்கு வழங்கும் நோக்குடன் கவனமாக அவர்களது வேலைகளை பரிசோதித்தல்.
5. மாணவர்களது ஒப்படைகள் தொடர்பான மதிப்பீடுகள் சார்ந்து பதிவேடு ஒன்றையும் ஆசிரியர் பேணுதல் வேண்டும்.

**முடிவுரை**

ஆசிரியர்களது வகுப்பறை மட்ட வெற்றி என்பது அவர்கள் தமது தொழில் சார்ந்த பணி இலக்குகள் பற்றிய தெளிவான அறிவுடனும், அவற்றை நடைமுறைப்படுத்துவதிலான உண்மை ஈடுபாட்டுடனும் தொடர்புடையதாகும்.

இதில் வகுப்பறையை முகாமை செய்யும் "முகாமையாளர்" என்ற வகிபாகம் பற்றி இங்கு விவாதிக்கப்பட்டது.

திட்டமிடல், நடத்தைகளை மேம்படுத்தல் என்ற இரண்டு முதல்நிலை அம்சங்கள் பற்றி தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக வெற்றிகரமான வகுப்பறை மேலாண்மையை நிறைவேற்றுவதற்கு பின்வருவன பற்றிய அறிவையும், திறன்களையும் மேலதிகமாக ஆசிரியர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

- உறுதியான ஒழுக்க நெறிமுறைகள்
- விளைதிறன்மிக்க கற்பித்தல் உபாயங்கள் மற்றும் ஒழுங்கமைப்பு
- சிறந்த நேர முகாமைத்துவம்

* பாடசாலை முகாமைத்துவத்துவத்தின் வகுப் பறை முகாமைத்துவம் பற்றிய எதிர் பார்க் கைகள்
* மாணவரிடம் சமூக திறன்களை வளர்த்தல் தொடர்பான புரிந்துணர்வு.

வகுப்பறைகளில் ஆசிரியர்கள் வெற்றி கரமாக செயற்படத்தவறினால் அவர்களது பாட சாலைமட்டத்திலான மதிப்பும், சமுதாயத்திலான புகழும், பாதிக்கப்படும். நீண்டகாலத்தில் ஆசிரி யர் தமது தொழில் வாழ்க்கை (Career) யில் தோல்வியுற்றவராகிவிடுவார். இது ஆசிரிய தொழில்வாண்மை பற்றிய கருத்தியல்களை எதிர்மறையானவையாக மாற்றிவிடும் என்பதை உணர்தல் அவசியம்.



கணவர் பிள்ளைகளுடன்



உபஅதிபராக இருந்தபோது



வணிக தீபம் சஞ்சிகை வெளியீட்டின் போது

# முரண்களுக்குள் தொலையும் முழுமை - 02

## ஈழத் தமிழ்ச் சமூகத்தின் கல்விச் செயற்பாடுகள் எதிர்கொள்ளும் சவால்கள்

திருவாட்டி ஸ்ரீகாந்தலக்ஷ்மி அருளானந்தம்
பிரதம நூலகர் யாழ் பல்கலைக்கழகம்.

### நுழைவாயில்

ஒரு சமுதாயம் மதித்துப் போற்றும் வாழ்க்கை நோக்கங்கள், குறிக்கோள்கள் ஆகிய வற்றையும் வழிவழியாக அதனுள் பரவிக் காணப்படும் திறன்களையும் இன்றைய தலை முறைக் குழந்தைகளுக்கு அளிக்க ஒரு சமு தாயம் மேற்கொள்ளும் பல்வேறு செயல்முறை களின் தொகுப்பாகவோ அல்லது அறிவு, விழு மியங்கள், திறன்கள், மனப்பாங்குகள் என்பவற் றைப் பெற்றுக்கொள்ளும் செய்முறையாகவோ அதுவுமன்றி அறிவைத் தருவதற்கும் திறன்களை விருத்தி செய்வதற்குமென பயிற்சியும் அறி வுறுத்தலும் வழங்கும் செய்முறையாகவோ கல்வி என்ற கருத்துநிலை பல்வேறு வகையில் பொருள் கொள்ளப்படுகிறது. கல்வி என்ற எண்ணக்கரு தொடர்பாக தமிழர்களிடம் உள்ள தகவல்கள் எண்ணற்றவை. கல்விக்கு தமிழ்ச் சமூகம் வழங்கியிருக்கும் இடம் மிகவும் உன்னத மானது. கல்விக்கென இலங்கை அரசு செலவழிக்கும் தொகையோ மிகவும் அளப்பரியது. கல்விக்கு அரசு வழங்கும் முன்னுரிமை, உலகின் கல்விக்கொள்கைளின் சிறப்பம்சங்களை பிழிந் தெடுத்து உருவாக்கப்பட்ட கல்வித்திட்டங்கள், திறமைகளை வடித்தெடுத்து பொருத்தமான இடங்களில் பொருத்தக்கூடிய வகையில் தரம் பிரிக்கப்பட்ட பாடசாலைகள், சர்வதேச உதவு நிறுவனங்களின் அளப்பரிய கவனம் என கல்வியின் புறவயப்பட்ட விரிவாக்கமானது ஆச் சரியமும் பிரேமையும் தரத்தக்கதாக அமையும் அதே சமயம் கற்றல், கற்பித்தல் உட்பட சமூகப் பிரஜை ஒன்றை உருவாக்குவதற்கான கல்வியின் அகவயப்பட்ட விரிவாக்கமானது அவலமும் பிரமையும் தரத்தக்கதாக அமைந்திருக்கிறது.

உலகமயமாக்கம், அறிவியல் கண்டு பிடிப்புகள், தகவல் சுனாமி, பொருளாதார வளர்ச்சி போன்றவை கல்வியை அறிவுநுட்பத் திற்கான அடித்தளம் என்ற நிலையிலிருந்து மாற்றி பொருளீட்டுவதற்கான முதலீடாக தரமிறக்கியுள்ளன. அதுமட்டுமன்றி கல்வி பொருளாக மாற்றப்பட்டு எழுத்தறிவிக்கும் இறைவர்களான ஆசிரிய சமூகமே அதன் விற்பனையாளராக மாறியிருக்கும் பரிதாபம், விற்பனையை மேம்படுத்துவதற்கான விளம்பர தாரர்கள், இடைத் தரகர்கள் என கல்வி வியாபாரம் களைகட்டி பறக்கின்ற ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்கின்றோம். இதனால் ஏற்படும் விசனமும் "தெள்ளிய அறிவும் நன்நடத்தையும் கொண்ட பண்பட்ட மக்களை உருவாக்குவதே கல்வி" என்ற மாட்டின்லூதர், "மனிதனை மனிதனாக வாழ வைப்பதே உண்மைக் கல்வி" என்ற சுவாமி விவேகானந்தர், "அன்பை உணருதல், அன்பு காட்டுதல் என்றால் என்ன என்று கண்டுபிடித்தல், அன்பு காட்டுதல் என்பவையே கல்வி" என்ற இந்திய கல்விச் சிந்தனையாளர் ஜே.கிருஸ்ணமூர்த்தி, போன் றோரின் சிந்தனைகள் வழி சென்று மனிதத்தை மனிதர்களிடம் உருவாக்குவதே உண்மைக் கல்வியின் நோக்கம் என்பதை அறிவுறுத்தி உண்மைக்கல்வியை எமது மக்களுக்கு நாம் வழங்குவதில் தடையாக இருக்கின்ற எண்ணற்ற பல காரணிகளில் ஒன்றிரண்டை ஆவணப் படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### கற்றல் என்ற கருத்துநிலை

கற்றல் என்பது ஒரு அறிவை புதிதாகப் பெறுதல் அல்லது ஏற்கனவே உள்ள அறிவை

இற்றைப்படுத்தல் அல்லது மெருகூட்டுதல் அல்லது வலுவூட்டுதல் எனப் பொருள் கொள் எப்படுகிறது. செய்முறை சார்ந்து நோக்கும் போது படிப்பு, அனுபவம் அல்லது கற்பித்தல் போன்றவற்றால் அறிவும் திறனும் பெறும் செய் முறை கற்றல் எனப்படுகின்றது. பிறப்புமுதல் நம்மிடம் இயற்கையாக அமைந்து காணப் படாமல் நாம் பின்னர் பெறும் அனுபவங்களும் அவற்றின் விளைவுகளும் கற்றல் என்பதில் அடங்குவதாக இந்திய கல்வியியலாளர் 'சந்தானம்' குறிப்பிடுகிறார். இவ்வனுபவங்கள் அறிவு சார்ந் தவையாகவோ, மனவெழுச்சிகள் சார்ந்தவை யாகவோ, உடலியக்கங்கள் சார்ந்தவையாகவோ அல்லது இவை யாவற்றுடனும் ஒருங்கே தொடர் புடையதாகவோ இருக்கலாம். கற்றல் பாங்கு என்பது மெய், வாய், கண், மூக்கு செவி ஆகிய ஐம்பொறிகளினூடாக நடைபெறும் பார்த்தல், கதைத்தல், கேட்டல், தொட்டுணர்தல், முகர்தல் ஆகிய செய்முறைகளில் நடைபெறுகின்றது. இதி லிருந்து நாம் புரிந்து கொள்ளக்கூடியது கற்றல் என்பது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து செல்லும் ஒரு செய்முறையாகும். கற்பதற்குரிய இடம் கல்வி நிறுவனங்களான முன்பள்ளிகள், பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்ற தவறான பார்வை எம்மிடையே உண்டு. இக்கல்வி நிறுவனங்கள் வாழ்க்கைக்கான கற்றலின் ஒரு பத்து வீதத்தையாவது தருமா என்பது கேள்விக்குரியது. அவ்வாறாயின் கற்றலின் களங்கள் வேறு எவை?

கற்றலின் ஆரம்பம் கருவறையாகும். வாழ்வின் பெரும்பாலான கற்றல் குடும்பம் என்ற ஆதார நிறுவனத்திலிருந்துதான் நடைபெறு கின்றது. குடும்பமும் சுற்றுப்புறச் சூழலும்தான் கற்றலின் பிரதான களங்கள்.

## கருவறை என்னும் கற்றலறை

மனிதனின் வாழ்க்கைக் காலம் குழந் தைப்பருவம், இளமைப்பருவம், நடுத்தரப் பருவம், முதுமைப்பருவம் என்ற நான்கு பிரதான பருவங் களைக் கொண்டது. இந்த வாழ்க்கைக் காலத்தில் முதல் 18 வருடங்கள் குழந்தைப்பருவம் என வரையறுக்கப்பட்டிருக்கிறது. தனிமனித நோக் கிலும் சரி, சமூக நோக்கிலும் சரி ஒரு சமூகம் எதிர்கொள்ளும் பெரும்பாலான பிரச்சினை களுக்கான ஆணிவேருக்கும் இந்தக் குழந்தைப் பருவத்திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. இதனடிப்படையில்தான் குழந்தை வளர்ப்பு, குழந்தை உளவியல் தொடர்பான ஆய்வுகள் இன்று தீவிர கவனம் பெற்றுவருகின்றன. இத்தகைய ஆய்வில் இறங்கும் போது குழந்தைப் பருவத்திற்கு முந்திய 10 மாதங்கள் தாயின் கருப்பையில் வளரும் உயிரின் வாழ்நிலை தொடர்பான கேள்விகளும் ஆய்வுகளும் மனித சமூகத்தின் கவனத்தை திசைதிருப்பியாக வேண்டுமென்பது தவிர்க்க முடியாதது.

குழந்தை உளவியல் தொடர்பான ஆய்வு கள் முனைப்புப் பெற்ற காலத்திலேயே மானுட வளர்ச்சியைத் தீர்மானிப்பது பரம்பரைக் காரணி களா? சூழல் காரணிகளா? என்ற விவாதமும் தொடங்கிவிட்டது. "சூழலுக்கும் பரம்பரை அலகு களுக்கு மிடையிலான தொடர்பு போட்டித் தன்மை அதாவது ஒன்றை ஒன்று அழித்தல் வாய்ந்ததல்ல. இது நடனம் போன்ற நேர்த்தி யான அசைவுத் தன்மை வாய்ந்தது. இந்த அசை வானது கரு உருவாகி மூன்றாவது வாரத்தி லிருந்தே தோன்றிவிடுகின்றதெனவும் சூழல் காரணமாக கருப்பையில் ஏற்படும் மாற்றங்கள் ஆளுமை மிக்க பரம்பரை அலகுகளின் வழி உருவாகிக் கொண்டு வரும் கருவின் போக் கையே திசை திருப்பிவிடும்" என்ற ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழக உள நோயியல் ஆய்வாளரான ஸ்ரான்லி கிரீன்ஸ் பான் (Stanley Greenspan) அவர்களது கூற்று சூழலா, பரம் பரையா என்ற தனிக்கட்சி விவாதங்களுக்கான கருத்துநிலையை தகர்த்து இரு காரணிகளதும் பரஸ்பர செல்வாக்குத் தொடர்பான கருத்தொற் றுமை நிலையை ஆய்வாளர்களிடையே ஏற் படுத்திவிட்டது. எடுத்துக் காட்டாக மூளைத்திறன் அதிகம் வாய்த்த பெற்றோரின் மரபணுக்களின் வழி உருவான குழந்தையை தாய் எதிர்கொள்

ளும் சூழல் பாதிப்புகள் மூளை வளர்ச்சி குறைந்த குழந்தையாக மாற்றும் வல்லமை வாய்ந்தவை யாகும். இதனால்தான் இன்றைய தந்தைவழி சமூக அமைப்பிலும் சரி இதற்கு முன்னர் நிலை கொண்டிருந்த தாய் வழி சமூக அமைப்பிலும் சரி தாய்மை நிலை என்பது கொண்டாடப்படுவதற்குரிய தாகவே இருந்து வருகிறது. தம்மிடம் இருக்கும் பொருளாதார வசதிகளுக்கமைய கருவுற்றிருக் கும் பெண்ணின் விருப்பங்கள் பூர்த்தி செய்யப்படு வதும், உடல், உள ஆரோக் கியத்தில் குடும்பத்தவர் அதிக கவனம் எடுப்பதும், சடங்குகள் மூலம் தாய்மை நிலை கொண்டாடப்படுவதும் இயல்பாகவே இருந்து வருகிறது.

### கருவறைக் கவலையீனங்கள்

கருவறையிலேயே கற்றல் செயற்பாடு நடைபெறுவதை ஆய்வுகள் மெய்ப்படுத்தியிருக் கின்றன. பெற்றோர் மற்றும் சூழலால் குழந்தை வடிவமைக்கப்படுகிறது. தாயின் குரலிலிருந்து அது ஒலியைக் கற்கிறது. ஏனைய ஒலிகள் கரு வறையைக் கடந்து தெளிவான முறையில் கருவை வந்தடைதல் சாத்தியமற்றது. பிறக்கும் குழந்தை கள் தாய் பேசும் மொழியின் சாடையிலேயே அழு கின்றன என்றும் ஆய்வு முடிவுகள் கூறுகின்றன.

ஒலியை மட்டுமன்றி சுவையையும் மணத்தையும் கூட கருவறையில் சிசு கற்கின்றது. இது உண்மையெனில் கருவறையில் கேட்டல் அல்லது செவிமடுத்தலூடாக சிசு கற்கின்றது. தாயின் எண்ணங்கள், உணர்வுகள் அனைத்தும் குழந்தையிடம் போய்ச் சேருகின்றது. குறிப்பாக கரு உருவாகிய நாளிலிருந்து 2-6 வார காலங்களில் தான் குழந்தையின் உறுப்புக்கள் தோன்ற ஆரம்பிக்கின்றன. குழந்தையின் இருதயம் துடிப்பதும் கைகள், கால்கள், விரல்கள் என்பன தோன்றுவதும் உள்ளுறுப்புகள், நரம் பமைப்புகள் உருவாவதும் இக்காலப்பகுதி யிலேயேதான். இக்காலத்தில் தாயின் உடலில், மனநிலையில், உணர்வுநிலையில் ஏற்படும் மாற்றமானது கருவை நேரடியாகவே தாக்கு கின்றது என ஆய்வுகள் கூறுகின்றன.

வறுமையை அடிப்படை பண்பாகக் கொண்ட சமூகங்களில் பசியால் வரும் அனைத்து எதிர்க்கணிய மன எழுச்சிகளையும் செல்வச் செழிப்பைப் பிரதான பண்பாகக் கொண்ட சமூகங்களில் உடலுழைப்பின்மையால் ஏற்படும் நோய்கள் சார்ந்து பெண்ணுக்கு ஏற்படும் மன எழுச்சிகளையும் குழந்தை கற்கின்றது. இன ஒடுக்குமுறையை எதிர்கொள்ளும் தமிழ்ப் பெண்ணுக்கு உடல் பாதிப்பு மட்டுமன்றி உளப் பாதிப்பும் அதிகமாகும். அகதி வாழ்வு, சொத்துக் களின் இழப்பு, பொருளாதார கஷ்டங்கள், அன்புக் குரியவர்களின் இழப்பு, திடீர் மரணங்களால் ஏற்படும் அதிர்ச்சி, எறிகணைத் தாக்கங்கள் போன்றவற்றை கருவறையில் குழந்தையும் எதிர்கொள்கின்றது. இன்றைய சமூகத்தில் பரக்கப்பரக்க பஸ் எடுத்து வேலைக்குப் போகும் கர்ப்பிணிப் பெண்ணின் பரபரப்பு, பதட்டம், இயலாமை, வேதனை, விரக்தி அனைத்தையுமே குழந்தை அனுபவிக்கின்றது.

### சமூக நிறுவனங்களின் ஆதிக்கம்

சமூகம் தனிமனிதர்கள் சேர்ந்து உரு வாக்கப்பட்டது எனினும் அது பலதரப்பட்ட நிறு வனங்களின் கட்டமைப்பாலானது. சமூகத்தின் தோற்றப்பாடுகள், மரபுகள், முறைசார்ந்த கட்ட மைப்புகள் என்பவற்றின் தொகுப்பே சமூக நிறு வனங்கள் ஆகும். தனிமனிதர் ஒவ்வொருவரும் பெற்றோராக, ஆசிரியராக, தொழிலாளியாக, தொழில் முயற்சியாளராக, சமூக சேவையாள ராக என பலதரப்பட்ட வகையில் இந் நிறுவனங்களில் தமது பங்கை ஆற்றுகின்றனர். சமூக நிறுவனங்களின் ஆதார (primary) நிறுவனங்களாகக் கருதப்படுபவை குடும்பம், கூட்டாளிக்குழு, சுற்றுப்புறச் சமுதாயம் என்ற மூன்றுமே. இவை சமூக உறுப்பினரிடையே நேரடித் தொடர்பைப் பேணுபவை. மனித குலத்தின் ஆரம்ப கட்டங்களிலேயே இந்த ஆதார நிறுவனங்கள் தோற்றம் பெறத் தொடங்கி விட்டன. பிறப்பால் விலங்காக இருக்கும் மனிதன் மனிதனாக வார்க்கப்படுவது குடும்பம் என்ற அச்சில்தான். மனிதன் சந்திக்கின்ற

முதலாவது உறவான தாய் சேய் உறவு மனிதனுக்கு தன்னுணர்வையும், தன்னைச் சுற்றியுள்ள கூட்டாளிகளின் உறவு சமூக உணர்வையும் தோற்றுவிக்கிறது. பாடசாலைகள், மத நிறுவனங்கள் போன்றவை நேரடித் தொடர்பையும், மறைமுகத் தொடர்பையும் பேணுகின்ற இடைநிலை (Intermediate) நிலையங்களாகக் கருதப்படுகின்றன. முற்றிலும் மறைமுகத் தொடர்பைப் பேணுகின்ற அரசு, தொடர்பு சாதனங்கள் போன்றவை வழிநிலை (Secondary) நிலையங்கள் எனக் கூறப்படுகின்றன. கற்றல் செயற்பாட்டின் ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும் இச் சமூக நிறுவனங்களின் செல்வாக்கு அளப்பரியதாகும். கருவறை தொடங்கி கல்லறைவரை ஒவ்வொரு வளர்ச்சிப் படியிலும் செல்வாக்குச் செலுத்தும் வலிமை மிக்க இச் சமூக நிறுவனங்களின் அளவு, தன்மை, ஆதிக்கம் என்பவற்றினூடாக ஒரு சமூகத்தின் தன்மையையும், அதன் சிக்கல் வாய்ந்த அமைப்பையும் இனங்கண்டுகொள்ள முடியும். இதிலிருந்து தனிமனித வளர்ச்சிக்கும், சமூக வளர்ச்சிக்கும் அடிப்படை இச் சமூக நிறுவனங்களே என்பது தெளிவு.

## குடும்பம் என்னும் முதல் நிறுவனம்

உழைப்பு, தாராள மனப்பாங்கு ஒத்துணர்வு, அழகுணர்ச்சி, கட்டுப்பாடு, கீழ்ப்படிவு போன்ற நற்பண்புகளின் பிறப்பிடமாக அமைவது குடும்பம். கருவறையைவிட்டு குழந்தை வெளியே வந்ததும் பார்த்தல் அல்லது அவதானிப்பு மூலமான கற்றல் செயற்பாடு இங்கிருந்துதான் தொடங்குகின்றது. பிறக்கும் எந்தக் குழந்தையும் தாயிடமிருந்தே பெரும் பாலானதைக் கற்கிறது. பார்த்துக் கற்றலில் கூர் நோக்கு அல்லது அவதானிப்பு என்ற அம்சம் முக்கியம் பெறுகின்றது. தான் வாழும் சூழலின் ஒவ்வொரு அம்சமும் அதில் காணப்படும் முரண்களும் குழந்தையின் கற்றல் செயற்பாட்டில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றன. சமூகத்திலுள்ள ஏனைய மனிதர்களைப் பற்றி ஒருவன் கொண்டுள்ள மனப்பான்மை, தான் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழவேண்டும் என்பது தொடர்பாக ஒருவனது குறிக்கோள்கள், ஒருவனது வாழ்க்கை நடை என்பவை குடும்பத்திலிருந்தே வருகின்றது. "நான்" என்னும் உணர்வையும் "நாம்" என்னும் உணர்வையும் குழந்தைகளில் விதைப்பதில் குடும்பத்திற்குப் பெரும் பங்குண்டு. ஒத்துழைப்பு, பரந்த மனப்பான்மை, உதவும் பாங்கு கொண்ட குடும்ப உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்தில் வளரும் பெற்றோரின் குழந்தைகள் முழு ஆளுமை வளர்ச்சியுடன் இருப்பதை ஆய்வுகள் உறுதி செய்கின்றன. கருவறை விட்டு வெளியே பிரவேசிக்கும் குழந்தையின் முதல் மூன்று வருடங்கள் முழுமையாக வீட்டுச் சூழலால் வடிவமைக்கப்படுகின்றது.

குழந்தையின் ஆளுமை வளர்ச்சிப் போக்கைத் தீர்மானிக்கும் பிரதான சக்தி அக் குழந்தை வாழும் குடும்பச் சூழலே. குடும்பத்தில் பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்குமிடையில் ஏற்படக்கூடிய புறக்கணித்தல்–ஏற்றுக் கொள்ளல், அசட்டை செய்தல்–அதிக கவனமெடுத்தல், கட்டுப்படுத்தல்–முழுச் சுதந்திரமளித்தல், பணிந்து போதல்–அதிகாரம் செய்தல், ஒதுங்குதல்–ஒன்றிப்போதல் ஆகிய தொடர்புகள் குழந்தைகளது ஆளுமை வளர்ச்சிப் போக்கையும் சமூக மனப்பான்மைகளையும் நிர்ணயிக்கின்றன என்பதைக் கல்விசார் ஆய்வுகள் மெய்ப்படுத்துகின்றன. "குழந்தையின் முதல் ஆறு ஆண்டுகளின் வாழ்க்கையை என்னிடம் ஒப்படையுங்கள். அதற்குப்பிறகு அதன் வாழ்க்கை அமைப்பை எப்படிப்பட்டவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதைப்பற்றி எனக்கு கவலையில்லை" எனக் கூறும் பெஸ்ட லோசி என்ற தலைசிறந்த கல்வியாளரின் கூற்று மனித வாழ்க்கையில் குடும்பமும் சுற்றுப்புறச் சமூகமும் வகிக்கும் பங்கைத் தெளிவாகக் காட்டப் போதுமானது. பார்த்துச் செய்தல் குழந்தையின் பிரதான பண்பு என்பதனால் தேடல் உணர்வுக்கான களம் இங்கிருந்தே ஆரம்பிக்கிறது. நகர்ப்புறக் குடும்பங்களில் நெருக்கமான வசிப்பிடங்களில்

வாழ்க்கை, பணம் சேர்ப்பதில் நாட்டம், பெற்றோர் இருவரும் வேலை பார்த்தல், விவாகரத்து போன்ற அம்சங்கள் அதிகமாக இருக்க கிராமப்புறக்குடும்பங்களில் அறியாமை, வறுமை, போன்ற அம்சங்கள் அதிகமாக உள்ளன.

### குழப்பமுறும் குடும்பச் சூழல்

"முதல் மூன்று ஆண்டுகளில் ஒருவன் கற்கும் அளவு அவனது வாழ்க்கையில் வேறு எந்த மூன்று ஆண்டுகளிலும் கற்பதில்லை" எனக் கூறும் யோன் டீவி என்ற கல்வியியலாளரின் கூற்றை அடிப்படையாகக் கொண்டு எமது வீடு களில் நடப்பதை ஒருமுறை நினைவில் கொண்டு வருவோமெனில் "பிறந்த இரண்டு வயது குழந்தை எழுப்பும் வினவல்களுக்கு பேராசிரியர்களே விடையைத் தேடிடும் காலம் இது. முந்திய தலைமுறைக் குழந்தைகளைப் போலன்றி இன்றைய குழந்தைகள் மிக்க அறிவுடன் பிறக்கிறது அல்லது வளர்கிறது என்று பெருமிதம் கொள்ளும் பெற்றோருக்கும், இதனை ஆய்வின்றியே அறுதியாகக் ஏற்றுக்கொள்ளும் இன்றைய உயர் தகவல் தொழில்நுட்பச் சூழலுக் கும் மட்டும் இது பொருத்தமானது என்ற தவறான பார்வை எம்மிடையே உண்டு. இன்று நேற்றல்ல குழந்தையின் வினவல்கள் என்றுமே பதிலளிக்க மிகவும் கடினமானவை. சில பெற்றோர் முடிந்தளவிற்கு பதிலளிக்க முற்படுகின்றனர். பலரோ அடக்கிவிடுகின்றனர். பெற்றோர் இருவரும் வேலை பார்க்கும் குடும்பங்களில் ஆயாவின் பராமரிப்பில் வாழும் குழந்தையின் வினவல்களுக்கு பதிலளிக்க யாருமே இருப்ப தில்லை. பல குழந்தைகளின் வினவல்கள் பதிலளிக்கப்பட முடியாத சந்தர்ப்பங்களில் கிழட்டுக் கதையாக உருவகப்படுத்தப்பட்டு பெற்றோரால் அல்லது வீட்டிலுள்ள பெரி யோரால் முடக்கப்பட்டுவிடுகின்றது.

இன்றைய பெரும்பாலான குடும்பங்கள் பூசல்நிறைந்த குடும்பங்களாகவே காணப்படு கின்றன. பெற்றோர் இருவருமே வேலை பார்க் கும் குடும்பங்களில் உள்ள காலை நேரப் பதட் டம், பரபரப்பு, சண்டை, அதனால் வெளிப்படுத் தப்படும் விரக்திநிலை அனைத்தையுமே குழந்தை ஆழ்ந்து அவதானிக்கின்றது என்பதை பெற்றோர் மறந்துவிடுகின்றனர். குடும்பங்களில் நாம் காணும் இன்னோர் பண்பு தொடர்ச்சியான நச்சரிப்பு. நச்சரிப்புக்கு பேர் போனவர்கள் பெண்கள் என்பதை பெண்களே ஏற்றுக் கொள்வர். மனைவி என்ற வகிபங்கில் அதைக் கொண்டா, இதைக் கொண்டா என கணவனை நச்சரிப்பதும், தாய் என்ற வகிபங்கில் சிறிது நேரம் கூட விளையாட விடாது படி, படி என பிள்ளைகளை நச்சரிப்பதும் குடும்பத்திலிருந்து சற்றேனும் ஓடி ஒளிந்து கொண்டால் என்ன என்ற எண்ணத்தை குடும்ப உறுப்பினர்களிடம் இந்த நச்சரிப்பு ஏற்படுத்துகின்றது. உலகத்தின் புகழின் உச்சியில் ஏறியிருந்தபோதும் மனைவி யின் நச்சரிப்பால் மணவாழ்க்கையின் மகிழ்ச் சியைத் தொலைத்தவர்களில் உலகப் புகழ்பெற்ற பிரான்சின் மன்னன் நெப்போலியன், ரஷ்யாவின் இலக்கிய மேதை லியோரோல்ஸ்ரோய், அமெரிக்க அதிபர் ஆபிரகாம்லிங்கன் போன்றோர் உள்ளடங்குவர்.

### மாறும் உறவு மனப்பாங்குகள்

மனப்பொருத்தமுள்ள குடும்ப வாழ்க் கையே நல்ல குடும்ப வாழ்க்கைக்கு அடிப்படை யாகவும் தொடக்கமாகவும் அமையும் என்ற உளவியலறிஞர்களின் கூற்றுக்கு அமைய தமிழ்ச் சமூகங்களின் வாழ்க்கை இல்லை என்பதை அனைவருமே ஏற்றுக்கொள்வர். "அப்பா லீவில் வந்தால் நாம் வீட்டின் முன்புற வாயிலால் நுழைய முடியாது. ஏனெனில் அப்பாவும் அம்மாவும் தனிமையில் இருந்து பேசும் இடமாக அது மாறிவிடும். அப்பாவின் பெட்டியில் கணிசமான இடம் அம்மாவிற்குரிய பொருட்களாகவே இருக் கும். யாரும் அதற்கு உரிமை கோர முடியாது. எங்களுக்கென்றும் அப்பா கொண்டு வருவார் ஆனாலும் அம்மாவிற்குரியதைவிட ஒருபடி குறைவாகவே அவை இருக்கும்" என மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் தாய் தந்தையர்

ஒன்றாக அமர்ந்து பேசுவதைக் காண்பதே மிக அரிதாக இருந்த ஒரு காலகட்டத்தில் ஐந்து குழந்தைகளைக் கொண்ட ஒரு குடும்பத்தில் தொலைதூரத்தில் வேலை பார்த்து இடையிடையே வீட்டுக்கு வரும் தகப்பனின் நடவடிக்கைகளையும் தாய் தந்தையரின் அந்நியோன்னியத்தையும் பெருமையுடனும் நகைச்சுவையுடனும் விவரிக்கும் மனப்பாங்கு கொண்ட ஒரு பல்கலைக்கழக மாணவனை தற்போது எம்மால் தரிசிக்க முடியுமா?. வீடு பெரிதாக, பல அறைகளைக் கொண்டமைந்தாலும் சிறு குழந்தைகளுக் கெதிரிலேயே ஒன்றாக படுத்துறங்குவது இன்றைய தலைமுறைப் பெற்றோருக்கு மேற்கத்தைய பாணியாக இருக்கக்கூடும். ஆனால் குழந்தை தூங்கியிருக்கும் என்று கற்பனை பண்ணிக்கொண்டு அசண்டையீனமாக குழந்தை எதிரிலேயே குடும்பம் நடத்தும் சில பெற்றோரையும் அதனை இரகசியமாக அவதானிக்கும் குழந்தைகளையும் மேற்கத்தைய சமூகம் நிச்சயம் கொண்டிருக்கவில்லை என்ற கசப்பான யதார்த்தம் எத்தனை பேருக்கு தெரியும்?.

குழந்தை பேசக் கற்றுக்கொள்ளும் ஆரம்பக்கட்டங்களிலேயே "நீ அம்மா பிள்ளையா அப்பா பிள்ளையா" என்ற தாய் அல்லது தகப்பனின் அதுவுமன்றி உறவினரின் "செல்லங் கொஞ்சும்" வினவல்கள் குழந்தையை ஒன்றில் ஏதாவது ஒரு கட்சியில் சேரும் மனப்பாங்கைக் கற்றுக்கொடுக்கின்றது அல்லது இருவரையும் தனித்தனி திருப்திப்படுத்தும் கெட்டித்தனத்தைக் கற்றுக் கொள்கின்றது. கணவன் மனைவி உறவு தங்கியிருத்தல் உறவாக இருக்கும் பண்பு அதிகமாக இருக்கும் குடும்பங்களில் கட்சிகட்டிப் பிரிக்கும் பண்பையே குழந்தைகள் அதிகம் கற்றுக் கொள்கின்றனர்.

## வலுவற்ற "வளர்ப்புப் பண்ணைகள்"

கற்றல் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கும் வலுமிக்க நிறுவனங்களாக இருப்பவை கல்வி நிறுவனங்கள். மனிதன் சந்திக்கும் முதலாவது நிறுவனமாக முன்பள்ளிக்கல்வி நிறுவனங்கள் கருதப்படுகின்றன. உடல், உள, சமூக, மனவெழுச்சி விருத்தி, பாடசாலைக்கான தயார்படுத்தல் உள்ளடங்கிய ஒட்டுமொத்த விருத்திக்குப் பொருத்தமான வாய்ப்புகளையும் அனுபவங்களையும் வழங்குவது கிட்டத்தட்ட 3-5 வயது வரையான காலப்பகுதியை உள்ளடக்கும் முன்பள்ளிக் கல்வியின் நோக்கமாகும். முன்பள்ளிப்பருவக் கல்வி ஏற்பாடுகள் பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றலின் முழுமையான வளர்ச்சிக்கும் வாழ்நாள் முழுவதற்குமான கல்விக்குமான அத்திவாரத்தை இடுகின்றன. பிற்காலத்தில் உருவாகும் சிறந்த உளப்பாங்குகள், கற்றலை விரும்பும் மனநிலை என்பன உருவாக இப்பருவத்தின் வளர்ச்சி மிக முக்கியமானது.

மனிதப்பண்புகளின் "வளர்ப்புப் பண்ணை"களாகக் கருதப்படும் இந்த நிறுவனங்களின் தற்போதைய நிலை பரிதாபத்திற்குரியது. இந் நிறுவனங்களின் கற்பித்தற்பணி எமது சமூகத்தில் பெரும்பாலும் அடிப்படைக்கல்வித் தகுதியற்றவர்களிடமே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. தனது பிள்ளை ஆங்கிலத்தில்தான் கற்க வேண்டுமென்ற பெற்றோரின் அவாவானது வருவாய் நோக்குடன் இயங்கும் பல முன்பள்ளிகளின் உருவாக்கத்திற்குக் களமமைத்திருக்கிறது. கிராமப்புறங்களில் முன்பள்ளியே தெரியாது வீட்டின் அருகிலுள்ள பாடசாலையில் தாய்மொழியில் கல்வி கற்று பொறியியலாளராகவும் மருத்துவராகவும் உயர்ந்து நடமாடும் எடுத்துக்காட்டுகளாக இன்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் எம்மவரிடம் இன்றைய பெற்றோர் கற்றுக்கொள்வது என்ன?. பெரும்பாலான முன்பள்ளிகள் பிள்ளை பராமரிப்பு நிலையங்களாக இயங்குகின்றன. குழந்தையின் தொல்லையிலிருந்து பெற்றோர் சற்றுநேரமாவது ஒளிந்திருக்கக் கூடிய புகலிடங்களாகவும் இவை மாறுகின்றன. முன்பள்ளியின் நேரத்தைச் சற்றுக்கூட்டினால் என்ன என்று அங்கலாய்க்கும் தொழில்பார்க்கும் பெற்றோரும் இருக்கத்தான் செய்கின்றனர். இதற்கு மாற்றுவழியாக முன்பள்ளிப் பிள்ளை

களுக்கும் தனியார் கல்வி நிலையங்களை உருவாக்கினால் என்ன என்ற கருத்துநிலையும் தோற்றம் பெற்றிருக்கின்றது.

## ஆட்டங்காணும் அத்திவாரம்

மனித வளர்ச்சிக் கட்டங்களில் இளமை, ஆர்வம், துடிப்பு, தேடல் அதிகம் உள்ள குழந்தைப்பருவம் முழுவதையும் தமதாக்கி அவர்களை நாட்டின் எதிர்காலத்தை ஒப்படைப்பதற்கான வழிப்படுத்தல் என்ற மாபெரும் பொறுப்பை ஏற்று நிற்பவை பாடசாலைகள் என்ற கல்வி நிறுவனங்கள். குழந்தைகளின் உள்ளத்தை கிட்டத்தட்ட 12 வருடங்கள் பண்படுத்தும் பாரிய கடமைப்பாட்டில் இருப்பவை. மொழித்திறன் விருத்தி, ஆக்கவேலை, சூழலுக்கேற்ற தொழில், பாடசாலையையும் சமூகத்தையும் இணைத்தல் போன்றன 6–10 வயது வரை கிட்டத்தட்ட ஐந்து ஆண்டுகளை உள்ளடக்கும் ஆரம்பக் கல்வியின் நோக்கமாக இருக்கிறது. "குழந்தைகளினுடைய மனதின் இரகசியத்தையும், ஆசிரியர் பயிற்சி என்னும் கலையையும், ஆசிரியரின் திறமைகளையும் அறிய முற்படுகையில் ஒவ்வொரு குழந்தையிடமும் நான் எனது ஆசிரியனை, ஆசானைக் காண்பேன்" என்கிறார் ஆறுவயதுக் குழந்தைக்கு படிப்பு சொல்லிக் கொடுப்பதை தனது மிக விருப்புக்குரிய தொழிலாக ஏற்ற ருஷ்ய விண்வெளிக்கழகத்தின் தலைவரும் இயற்பியல் விஞ்ஞானியுமான அமனஷ்வீலி. குழந்தைகளின் நடவடிக்கைகளின் உட்பொருளினுள் ஆழப்புகுவதன் மூலம், குழந்தையின் உள்ளாற்றல்களைப் பயன்படுத்தி, அன்பு, பரந்த மனப்பாங்கு, நகைச்சுவை உணர்வு, துடியார்வம், யதார்த்தத்தை அறியும் ஆக்க பூர்வமான அணுகுமுறை ஆகியவற்றைத் தட்டியெழுப்பி இவர்களுக்கு அவசியமான சமூக அம்சங்களை அளிக்க முடியும் என்ற இவரது கூற்று ஆரம்பக்கல்விப் பருவத்தின் அத்தியாவசியத்தையும் வீட்டுச் சூழல் ஒன்றிலிருந்து முதன் முதலாக பாடசாலை என்ற நிறுவனத்திற்குள் நுழைகின்ற ஆறு வயது குழந்தையின் முக்கியத்துவத்தையும் தெளிவாகக்காட்டப் போதுமானது.

ஆரம்பக் கல்வியின் முதல் மூன்று ஆண்டுகளோ அல்லது ஐந்து ஆண்டுகளோ ஒரே ஆசிரியரின் கீழ் விடப்படுவதும் ஆசிரியர்கள் குழந்தை விரும்பும் பாடத்தை அதனது போக்கில் விளங்கப்படுத்துவதற்கேற்ற சூழலும் எமது கல்விமுறையில் இல்லை. புத்தகச் சுமையால் கேள்விக்குறி போல் வளைந்து நிற்கும் குழந்தைகள் உலகில் மகிழ்ச்சிகரமான கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் இடமின்றி ஆண்டு ஒன்றிலிருந்தே புலமைப்பரிசில் பரீட்சைக்கு ஏற்ற வகையில் பிள்ளைகளைத் தயார்படுத்துவதும் ஐந்து ஆண்டுகள் வரை குழந்தையின் கற்றல் மகிழ்ச்சிகரமானதாகவன்றி அவலம் நிறைந்ததாக மாறியிருப்பதும் பரிதாபத்திற்குரியதொன்று. பரீட்சையில் சித்தியடைவதைவிட முதற்தரத்தில் தேறுவதற்கான தயார்படுத்தல்களே முனைப்புப் பெற்றிருக்கின்றன.

## தொழிற்கல்வியின் ஆக்கிரமிப்பு

குடியாட்சிப்பண்பு நிறைந்த எதிர்கால மக்களை உருவாககுதலும், உயர்கல்விக்கோ அல்லது ஏதாவது ஒரு தொழிலுக்கோ செல்லக்கூடிய தகுதியை உண்டாக்குவதுமே 10–16 வரையான காலப்பகுதியை உள்ளடக்கும் இரண்டாம் நிலைக்கல்வியின் நோக்கமாகும். இடைநிலைக் கல்வியின் கிட்டத்தட்ட 20 வீதமாவது தொழிற்கல்வி வாய்ப்பு அளிக்கப்படவேண்டிய கட்டமாக இது உணரப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாணவரும் சமூக வளர்ச்சித் திட்டங்களில் தொடர்ச்சியாக ஒரு மாதமாவது பங்குபெற வைக்கப்படல் வேண்டும். மரவேலை, உலோக வேலை, அச்சடித்தல், கணினித் தொழினுட்பம் போன்றவற்றுக்கான தொழிற்கூடங்களை ஒவ்வொரு பாடசாலையும் கொண்டிருத்தலின் அவசியத்தை இது உணர்த்துகிறது. 17–18 வயது வரையான இரண்டு வருடங்களை உள்ளடக்கும் உயர்கல்வியானது பல்கலைக்கழகக் கல்விக்கான தயார்படுத்தலில் முழுக்கமுழுக்க ஈடுபட வைக்கும் அதேசமயம் தொழிற்கல்வியையும் வளர்த்தெடுக்கும் நோக்கத்தைக் கொண்டது. கிட்டத்தட்ட 80 வீதம் தொழிற்கல்விக்கு

முக்கியத்துவம் கொடுக்கும் பருவமாக இது உணரப்பட்டிருக்கிறது. உயர்கல்விக்குள் நுழையும் வாய்ப்பற்ற மாணவர்கள் தொழிற் கல்வியில் பயிற்சியைப் பெறுவதற்கு ஏற்ற வகையில் பல் தொழினுட்பக் கல்லூரிகளின் உருவாக்கத்தை இது வேண்டிநிற்கிறது.

## அந்தஸ்து நோக்கிலான அழுத்தங்கள்

தமிழ்ச் சமூகத்தின் கல்வி நோக்கம் வெறும் தொழில் நோக்கமாக இருந்திருப்பின் மகாத்மா காந்தியின் ஆதாரக் கல்விக் கொள்கையை சிரமேற்கொண்டு பாடசாலைக் கொரு கைப்பணி நிலையங்களால் எமது பாடசாலைகள் நிரம்பியிருக்கும். அந்தஸ்து மிக்க தொழில் நோக்கி பிள்ளைகளை வலிந்து செலுத்தும் ஆதிக்க சக்தியாகவே இன்றைய தமிழ்க் குடும்பங்களை இனங்காண முடிகிறது. தமது ஆறேழு பிள்ளைகளில் ஒன்றை பொறி யியலாளராகவோ அன்றி மருத்துவராகவோ ஆக்குவதற்கு எமது முந்தைய தலைமுறை அவ்வளவு சிரமப்படவில்லை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வர். தனது தேவைகளை மட்டுமன்றி குடும்பத்தின் தேவைகளை அதுவும் கூட்டுக் குடும்பத்திலுள்ள பேரன் பேத்திகளின் தேவைகளை நிறை வேற்றுவதற்கு தமது பிள்ளைகளைப் பழக்கிய பெற்றோரிடமிருந்துதான் மிகச் சிறந்த கல்வியாளர்களை மருத்துவர்களை, பொறி யியலாளர்களை இச்சமூகம் உருவாக்கியிருக்க இன்றைய தலைமுறையோ ஒன்றிரண்டு பிள்ளைகளுடன் தம்மை மட்டுப்படுத்தியிருப்பது மட்டுமன்றி தனது தேவைகளைக்கூட தனித்து நிறைவேற்ற முடியாதளவிற்கு குழந்தைகளை அனைத்திலும் தங்கியிருப்போராக மாற்றி யிருக்கிறது. தமது கரங்களால் தமது வயிற்றை நிரப்புவதற்குக்கூட நேரமின்றியோ அல்லது விருப்பமின்றியோ அதுவுமன்றி பெற்றோரின் அதீத கவனிப்பின் தன்மையாலோ பெற்றோரில் தங்கியிருக்கு மளவிற்கு ஆக்கப்பட்டிருக் கின்றது.

வீட்டில் அம்மாவின் கரங்களினால் செலுத்தப்படும் உணவை இயந்திரத்தனமாக உள்வாங்கும் அதே பிள்ளை கொத்து ரொட்டிக் கடையில் தட்டு நிரம்ப கொத்தும் பெப்சி சோடாவுமாக எத்துணை மகிழ்ச்சியாக தனது கரங்களினால் அத்தனை உணவையும் சாப்பிட்டு முடிக்கின்றது என்பது எத்தனை அன்னையருக் குத் தெரியும்?. உண்ணும் உணவின் சத்துக்களை கூடுமானவரையில் உணவுக் கலங்கள் உறுஞ்சு வதற்கு உமிழ்நீரின் உதவி தேவையென்பதை யும் சொந்தக்கரங்களால் உண்ணுவதன் மூலமே உமிழ்நீர் சுரப்பிகள் இயங்கும் என்பதும் படித்த அம்மாக்களுக்கே தெரியவில்லை.

## வெறுவாய் மெல்லும் மூன்றாம் நிலைக்கல்வி

மூன்றாம்நிலைக் கல்வியின் நோக்கம் மாணவரிடையே உண்மை அறிவை வளர்ப்பதும் அதைப் பரப்புவதுமாகும். சமூகத்தை தாங்கக் கூடிய தலைவர்களையும் சமூகத்தை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் துறைசார் வல்லுனர் களையும் உருவாக்குவதில் பல்கலைக்கழகத்தின் பங்கு அளவிடற்கரியது. பல்கலைக்கழகக் கல்வியின் உண்மையான நோக்கம் ஆய்வும் அந்த ஆய்வின் பெறுபேறை சமூகத்தில் பிரயோகிப்பதுமாகும். பல பேராசிரியர்களைச் சுடச்சுட உருவாக்கி யிருக்கும் பல்கலைக்கழகம் இதுவரை சமூகத் திற்கு தேவையான எத்தனை கண்டுபிடிப்புகளைச் செய்திருக்கிறது? பல்கலைக்கழக சமூகமே தமது பணியிடத்தை அரிவரிப் பள்ளிக்கூடம் என ஏளனம் செய்யுமளவிற்கு இது தரமிறங்கி யுள்ளது. மாணவர்களை பாலியல் இம்சை செய்தல், மாணவர்களின் ஆக்கங்களை தமது ஆக்கமாக வெளியிடுதல், தமது வசதியை கருத்திற் கொண்டு பாடவேளைகளை வடிவமைத்தல், போன்ற ஊடகங்களின் எண்ணற்ற குற்றச்சாட்டுகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ள கற்பித்தற் சமூகமும், பணம், பதவி, சமூகச் செல் வாக்கு போன்றவற்றுக்கு உறுதுணையாக அமை யும் தராதரமற்ற நியமனங்களை ஊக்குவிக்கும் நிர்வாகக் கட்டமைப்பும் மாணவ சமூகத்தின் பிரதான கற்றல் களங்களாக மாறியிருக்கின்றன.

## உளத்தூண்டல் அற்ற உடற்கல்வி

தலைமைத்துவப் பண்பு, விட்டுக் கொடுக்கும் மனப்பாங்கு, தோல்வியை சமமாக ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு, குழுப் புரிந்துணர்வு மற்றும் சமூக மென்திறன்களைத் சமூக உறுப்பினர்களுக்கு வழங்குவதில் உடற் கல்விக்கு பாரிய பண்புண்டு. வீட்டுக்குள் விளையாடும் பாண்டிக்குண்டு, தாயம், முற்றத்தில் விளையாடும் கிட்டிப்புள், தாச்சி, போளை அடித்தல் போன்றவை முதற்கொண்டு நிறுவனமயப்பட்ட விளையாட்டுப் போட்டிகள் வரை உள்ளடங்கும். இது மட்டுமன்றி மன ஒருமைப்பாடு, புலனடக்கம், போன்றவற்றைத் தரவல்ல உளப்பயிற்சிகளையும் உள்ளடக்கும். ஆனால் நடைமுறையில் இந்த உடல் உள பயிற்சிகள் வெறும் சம்பிரதாய விளையாட்டுப் போட்டிகளாகவும், அரசியல், சமூக குழு முரண்பாடுகளை ஊக்குவிக்கும் களமாகவுமே எமது சமூகத்தில் முளைவிடத் தொடங்கி யிருக்கிறது. தைரியம், பற்றுறுதி, பரந்த மனப்பாங்கு, பொதுநலப் பண்பு போன்றவற்றை வளர்ப்பதற்கு உதவும் விளையாட்டுக் குழுக்களுடன் குழந்தைகள் செலவிட்ட காலம் மாறி, தனியார் கல்வி நிலையங்களில் கூடுதலான நேரம் முடக்கப்பட எஞ்சியுள்ள நேரத்தில் கணணி விளையாட்டுக்களும், வியா பார ரீதியான வர்த்தக மையங்களும் முக்கியப் படுத்தப்படுவதனால் குழந்தைகளை பிரதான அங்கத்தவராக கொண்ட விளையாட்டுக்குழு என்ற வலுமிக்க ஆதார நிறுவனம் நகர்ப்புற சமூகங்களில் மெல்ல மெல்ல மறைந்துகொண்டு போகிறது. சமூக உறுப்பினர்கள் அனைவருமே பங்குகொள்ளக்கூடிய விளையாட்டுகளை கைவிட்டு பதின்மூன்று பேர் கொண்ட கிரிக்கெற் உலகிற்குள் மாய்ந்து போய்க்கிடக்கின்றது இன்றைய பெரும்பான்மை இளைய சமூகம்.

## சிறுவர் உரிமை மீறல்கள்

குழந்தையின் தன்மையும் முதிர்ச்சி யடைந்த ஒரு மனிதனின் இயல்பும் வேறு பட்டவை என்ற சிந்தனை அறவே எழாத 16ம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து விடுபட்டு குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் கவனமாகவும் கட்டுப்பாட்டுடனும் வளர்க்கப்பட வேண்டியவர்கள் என்ற சிந்தனைத் துடிப்பு தோற்றம் பெற்ற மத, இலக்கிய மலர்ச்சிக் காலத்தை மெல்லக் கடந்து, குழந்தையின் மூளை வளர்ச்சி, உளவியல் தாக்கம், குழந்தைக் கும் பெற்றோருக்குமிடையிலான தொடர்பு, குழந்தைக்கும் சகல குழந்தைகளுக்குமிடை யிலான தொடர்பு, குழந்தையின் நடத்தை மாற் றம், அதற்கான சமூக சூழல் பற்றிய அதிகள விலான கேள்விகளும் ஆய்வுகளும் அக்கறை களுமாக ஒரு நூற்றாண்டைச் செலவழித்து சிறுவர் உரிமைகளும் நலன் பேணும் திட்டங்களும் வெறும் உபதேசமாகப் போய் விடுமோ என்ற வினா எழுப்பும் நிலையில் 21ம் நூற்றாண்டில் காலடி வைத்திருக்கிறது மனித சமூகம். 15 வயதிலேயே குழந்தைக்கு தாயாகும் சிறுமியரையும் குடும்பப் பாரத்தைச் சுமக்கும் பொறுப்புள்ள சிறுவர்களையும் தம்முன்னே காணும் சிறுவர் நலனில் அக்கறை கொண்டவர்களுக்கு 18 வயதுக்குட்பட்டவர்கள் அனைவருமே "குழந்தைகள்" என கணிக்கப்பட வேண்டியவர்கள் என்ற ஐக்கிய நாடுகள் சாசனத்தின் பிரகடனம் அதிர்ச்சியூட்டும் செய்தியாகவே கருதப்படுகிறது.

## சமூக நெறிபிறழ் நடத்தைகள்

"ஒருவருடன் ஒருவர் கலந்து, இணைந்து எல்லோருக்கும் பொதுவான சில நோக்கங் களை அடைவதற்காக கூடிச் செயற்படும் பல மனிதர்களின் கூட்டே சமூகம்" என்கிறார் கிட்டிங்ஸ் என்ற அறிஞர். பாதுகாப்பு, புதிய அனு பவங்களைப் பெறல், பிறரது தூண்டல்களுக்கு ஏற்ப நடத்தல், பிறர் தம்மைப்போல் ஒருவராக எம்மை ஏற்றுக்கொள்ளல் ஆகிய நான்கு ஊக்கிகளே சமூகத் தொடர்புகளுக்கு அடிப்படை என்கிறார் தோமஸ் என்ற அறிஞர். ஒரு மனி தனின் முழு வளர்ச்சிக்கு சமூகம் இன்றியமை யாதது. உணவு, உடை, உறையுள் போன்ற உடல் தேவைகளும், அன்பு போன்ற உளத்தேவை களும், பாதுகாப்பு, பொழுதுபோக்கு போன்ற

சமூகத் தேவைகளும் நிறைவு பெறுவதற்கு சமூக வாழக்கை மனிதனுக்கு அவசியமானது. தனி மனிதனையும் அவன் வாழும் சமூகத்தையும் பிரித்துப்பார்ப்பது சாத்தியமற்றது. கற்றல் செயற் பாடானது ஒரு சமூகத்தின் சூழலால் வடிவமைக் கப்படுகின்றது. மனிதனும் சமூகமும் ஒன்றுட னொன்று பின்னிப் பிணைந்திருப்பது போன்றே தனிமனித வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும் ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்தது. மனித வளர்ச்சியானது சமூகத்தின் வளம், சமூகத்தின் மரபு, சமூகத்தின் தேவைகள், சமூகத்தின் சூழல் என்பவற்றின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது போன்று மரபு, வயது, பயிற்சி, சூழல் என்பன மனித உருவாக்கத்துக்கு முக்கிய பங்கு வகிக்கின்றன.

ஒரு மனிதனின் ஆளுமை பண்புகள் அவன் வாழுகின்ற சமூகத்தின் தன்மையினால் நிர்ணயிக்கப்படுகின்றது என்பது உண்மையெனில் தற்போதைய எமது சமூகம் பற்றிய தெள்ளிய அறிவு எமக்கு அவசியமானதாகும். ஒன்றுக் கொன்று முரண்பட்ட நடத்தைகளைக் கொண்ட மைந்த மிகமிகச் சிக்கல் வாய்ந்த ஒரு சமூகமாக, எங்கும் எதிலும் போட்டி மனப்பான்மையை ஊக்குவிக்கும் அதேசமயம் தனிமனிதர் களிடமிருந்து அதிகளவு கீழ்ப்படிதலை எதிர் பார்க்கும் சமூகமாக, இன ஒடுக்கு முறையை பூரணமாக அனுபவிக்கும் சமூகமாக,. தமது தனித்தன்மைகளை, பாண்பாட்டுக்கோலங்களை மெல்லமெல்ல கைவிட்டு கண்டதே காட்சி கொண்டதே கோலம் என அலையும் சமூகமாக, நெறிபிறழ் நடத்தைகள் மெல்ல மெல்ல தலை யெடுத்தாடுகின்ற சமூகமாக, சமூகச் சிந்தையற்ற கல்வியாளர்களை மிக அதிமாகக் கொண்டி ருக்கும் சமூகமாக இனங்காணப்பட்டிருக்கும் இன்றைய எமது சமூகத்தில் மாணவர்களை சமூக இயல்பினராக்குவது எவ்வாறு என்பது ஒரு கசப்பான யதார்த்தமாகவே உள்ளது.

## மறைந்து கொண்டு வரும் அனுபவக்கல்வி

கற்றலின் பிரதான களங்களில் முக்கிய மானது பிறரது பட்டறிவு எமக்கு படிப்பறிவாவது ஆகும். முந்தைய தலைமுறை சேர்த்து வைத்தி ருக்கும் அனுபவங்கள் கல்வி நிறுவனங்கள் தரும் கற்றலின் பிரயோகங்கள் என்பதை பலர் மறந்துவிடுகின்றனர். கூட்டுக் குடும்ப வாழ் விலிருந்து கருக்குடும்ப வாழ்விற்கு எமது சமூகம் மாறியகையுடன் மூத்தவர்களது அனுபவங்களைப் பகிரும் அரிய வாய்ப்பும் மறைந்துவிட்டது. நிலைகொண்டிருக்கும் ஓரிரு குடும்பங்களில் அது தலைமுறை இடைவெளி என்ற பார்வையில் புறக்கணிக்கப்படுகின்றது. ஏழைக் குடும்பத்தில் பிறந்து சுயமாக உழைத்து முன்னேறிய ஒரு கணவனுக்கு வாழ்க்கைப்பட்ட பின்னர் ஊதாரித்தனமாக மாறிய மனைவியை “ஆபத்துக்குதவாப் பிள்ளை, அரும்பசிக்கு உதவா அன்னம், தாகத்தைத் தீராத்தண்ணீர், தரித்திர மறியாப் பெண்டிர்“ என்ற விவேக சிந்தாமணியின் பாடல்களில் பொருத்தமான ஒன்றை மேற்கோள் காட்டும் அன்றைய அப்பாக்கள் பள்ளிக்கூட வாசல் மிதிக்காது வெறும் திண்ணைப் பள்ளியில் கற்றவர்கள் மட்டுமே. திருக்குறள் போன்ற நீதி நூல்களை அதன் பொருளுடன் சொல்லும் வல்லமையை இன்று எத்தனை அப்பாக்கள் கொண்டிருக்கின்றார்கள். குளிக்கும் இடம், கூட்டும் இடம், ஏன் கழிக்கும் இடம் கூட திருவெம்பாவையின் இருபது பாடல்களையும் மனப்பாடம் செய்வதற்கு அன்றைய தலைமுறை பயன்படுத்தியதால் தான் இன்றும் புத்தகம் இன்றியே அவற்றை நினைவில் இருத்திப்பாடும் வல்லமையை அது கொண்டிருக்கின்றது. இன்றைய எமது நிலை?. மனனப் போட்டியில் மதிப்பெண் வாங்குவதுடன் அது மறந்து விடுகின்றது. வள்ளுவர் சொல்லும் கசடு அறக்கற்றலும் கற்றபின் அதற்கு அமைய நடத்தலும் ஏட்டுப்படிப்பாகவே நின்றுவிடு கின்றது.

## முன்னணி வகிக்கும் முகஸ்துதிகள்

சமூகத்தின கலை, இலக்கிய மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் மனிதனின் மற்றுமோர் முக்கிய கற்றல் களங்களில் ஒன்றாகும். பரந்த

கல்வி, ஆழமான அறிவு, அனுபவ முதிர்ச்சி, ஒழுக்கமான வாழ்க்கை போன்றவற்றால் உயர்ந்து நிற்கும் பெரியவர்களை சமூகத்தின் நிகழ்வுகளுக்கு அழைத்து அவரது கையால் பெருமையும் பெருமிதமும் அடைந்த தமிழ்ச் சமூகத்தின் விழாக்கள் உண்மையான பாராட்டுக்களால் அன்று நிரம்பி வழிந்தன. மேடையில் இருப்பவர் தொடர்பான மரியாதை அவையில் இருக்கும் அனைவருக்கும் இருந்தது. அவர் முன்னால் விழுந்து வணங்கி ஆசி பெறுவதும் கூட பெரிய விடயமாகப் போற்றப்பட்டது. ஆனால் இன்றைய சமூகத்தின் நிகழ்வுகள் எமக்குக் கற்றுக்கொடுப்பது உண்மையான பாராட்டுக்களை அல்ல. முகத்துக்குப் புன்னகைத்து முதுகுக்குப் புறங்கூறுவது எப்படி என்பதையே. இன்றைய அழைப்பிதழ்களில் வெறும் பிரதம விருந்தினரை உள்ளடக்கிய எம்மவரின் அழைப் பிதழ்கள் இந்த முதுகு சொறியும் போக்கினால் சிறப்பு விருந்தினர், பின்னர் கௌரவ விருந் தினர் என தமக்கு படிப்பிலோ, பதவியிலோ கூடியவர் அல்லது பொருளுதவியோ செய்வார் என நம்புபவர்களையெல்லாம் அழைப்பிதழில் உள்ளடக்கும் பரிதாபம் கடந்த இருதசாப்த வளர்ச்சி மட்டுமே. இது அண்மையில் ஒரு நிகழ்வு இரு பிரதம விருந்தினர்களை உள்ளடக்குமளவிற்கு இன்னொரு படி மேற்சென்றுள்ளதை செய்தி ஊடகங்கள் ஆவணப்படுத்தியிருக்கிறன.

### தொலையும் பண்பாட்டு அடையாளங்கள்

செழிப்பும், பொருளாதார வளர்ச்சியும், குழந்தை வளர்ப்பு தொடர்பான அதீத கவனமும் ஏற்படுத்தும் அதிக வாய்ப்பு வசதிகளின் காரண மாக போதைப் பொருட் பாவனை, குடி, கொலை, கொள்ளை, சிறுவர் விபச்சாரம் போன்ற வன்முறைக்குற்றங்களில் சிறுவர்கள் அகப்பட்டு சீரழிந்து கொண்டிருக்கும் போக்கு ஒருபுற மிருக்க இதற்கு நேர் மாறாக வசதி வாய்ப்புக்கள் எதுவுமின்றி வறுமை, பசி, பட்டினி, போசாக்கின்மை, கல்வி அறிவின்மை என்பவற்றின் காரணமாக குழந்தையிலேயே குடும்பப் பாரத்தை சுமக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஏழைக்குடும்ப சிறுவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றனர். தொலைக் காட்சிப் படங்கள் விளையாட்டுக்கள், கேலிச்சித் திரங்கள் போன்றவற்றில் இடம்பெறும் வன்முறைக் காட்சிகளை பார்த்ததும் "உலகமே இப்படித்தான், இதையேதான் ஒவ்வொருவரும் செய்கின்றனர் எனவே நாமும் செய்யலாம்" என்ற தோற்றப்பாட்டை சிறுவர்கள் பெறுவதும் வன்முறை இங்கு அதிகரிக்கக் காரணம் எனப் படுகிறது.

ஏனைய பல சமூகங்களுக்கு இல்லாத அளவு போட்டி மனப்பான்மையை தமிழ்ச் சமூகம் கொண்டிருக்கிறது. தமிழ்ச்சமூகத்தின் வியாபார சந்தையில் அதிக கேள்வியுள்ள பொருளாக காணப்படுவது கல்வி என்ற வியாபாரப் பண்டம். கல்வியின் விற்பனை யாளர்கள் ஆசிரியர்கள். விளம்பரமின்றியே மிக அதிகளவில் விற்பனையாகும் பொருளும் கல்வியே. தனக்கென தனித்துவப் பண்புகளை தக்கவைத்துக்கொண்ட தமிழ்ச்சமூகத்தின் இன்றைய பண்புமயப்படுதல். ஏனைய சமூகங்கள் தம்மை அடுத்தவரிலிருந்து வித்தியாசப்படுத்த ஏதாவது ஒரு அடையாளத்தை, ஆகக் குறைந்தது தமது ஆடையணிகளிலாவது (அது சீக்கியர்களின் தலைப்பாகையாகவோ, முஸ்லிம்களின் தொப்பி யாகவோ) பேணுவதாக இருக்க எமக்கென தனித்த அடையாளம் இன்றி உலகில் எது வெல்லாம் புழக்கத்திற்கு வருகின்றதோ அவற்றை காட்சிப்படுத்தும் பொம்மைகளாகவே எமது சமூகம் இனங்காணப்படுகின்றது. கல்விச் சமூகத்தை எடுத்துக்கொண்டால் ஆரம்ப காலங் களில் நாம் வாத்தியார் என அழைக்கின்ற அன்றைய உபாத்தியாயர்களை பாடசாலைக் குள் மட்டுமன்றி பாடசாலைக்கு வெளியிலேயே யும் சமூகத்தின் எந்தவொரு நிகழ்விலும் அதே கோலத்தில் இனங்காணக்கூடிய ஒரு வாய்ப்பும் தமிழ்ப்பண்பாட்டின் தனித்தன்மையையும்

காணக்கூடியதாக இருந்தது. ஆனால் இன்று சீருடைகள், ஒழுக்க அம்சங்கள், கட்டுப்பாடுகள் அனைத்தும் மாணவர்களிடம் மட்டும் திணிக்கப் படும் தன்மையே பெரும்பாலும் உண்டு. இதிலிருந்து தெரிவது என்ன?. மாணவ சமூகத்திற்கு விதிக்கப்படும் கட்டுப்பாடுகளோ ஒழுங்கு நடவடிக்கைகளோ பாடசாலையுடன் மட்டும் தான் என்ற ஆழமான உணர்வும் அதனை கழற்றி எறிந்து சுமையிலிருந்து விடுபடும் தருணத்தை மாணவர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்ற உணர்வும் மிக அதிகளவில் உண்டு. சமூகத்தின் நேர்க்கணிய மாற்றத்தை கற்பதன் மூலமே சமூக அபிவிருத்தியைப் பற்றி சிந்திக்கலாமேயன்றி எதிர்க்கணிய மாற்றங்களினால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கும் சமூகத்தில் ஒரு மனிதனை சமூக இயல்பினராககுதல் சாத்தியமற்றது.

### அதிகரிக்கும் விலகல்களும் இடைவெளிகளும்

பிள்ளைகளை தேடல் உணர்வு அதிக மாக இருக்கும் ஆரம்பப் பள்ளி மாணவர்களின் பெற்றோர் ஆசிரியர்களிடம் போடும் கட்டளைகளில் பிரதானமானது மேலதிக பாடத்திட்ட செயற்பாடுகளில் பிள்ளைகளை சேர்க்க வேண்டாம் என ஆசிரியர்களுடன் சண்டை பிடிக்கும் பெற்றோர்கள், தனியார் கல்வி நிலையங்களில் மட்டுமன்றி அதற்கும் மேலாக தனிப்பட்ட வீட்டு ரியூசனில் அதிகம் செலவழிக்கும் பெற்றோர்கள் பள்ளி நிகழ்வுகளில் அன்பு, பாதுகாப்பு, பரஸ்பர உறவு என்பவற்றின் அடிப்படையில் உருவான குடும்பம் என்ற ஆதார நிறுவனம் இன்று அவற்றை புறந்தள்ளி பணத்துக்கும் அந்தஸ்து மிக்க தொழிலிற்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நிறுவனமாக மாறிக்கொண்டு வருகிறது. வாழ்க் கைப் படிப்பை புறந்தள்ளி ஏட்டுப்படிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பாடசாலை என்ற நிறுவனம், விரும்பத்தகாத மனவெழுச்சி களை மனிதரிடம் குறிப்பாக குழந்தைகளிடம் தூண்டிவிடும் திரைப்பட ஊடகங்கள், நின்று நிதானித்து சிந்தித்துப் பார்த்து செயற்பட நேரமற்ற பரபர உலகில் தொகை ரீதியாகவும் தரரீதியாகவும் பெருத்துக்கொண்டு போகும் தகவல் வெள்ளத்துக்குள் நல்லதை, பொருத்த மானதை தெரிவு செய்வதற்கான நேரமோ, பொறுமையோ, அறிவோ அற்ற மனித சமூகம் இப்படி இன்றைய சமூகத்தின் எதிர்க்கணியப் போக்கை விவரித்துக்கொண்டே போகலாம்.

வீட்டுக்கும் வீட்டுக்கு வெளியேயான வாழ்க்கைக்குமிடையிலான விலகல்களும் இடைவெளிகளும் அதிகரித்துச் செல்லும் ஒரு சமூகமாக எமது சமூகம் இனங்காணப் படுகின்றது. பாடசாலையில் அறஞ்செய விரும்பு எனப் படிக்கும் குழந்தை வீட்டில் பிச்சைக்காரன் வந்ததும் படலையைச் சாத்தும் அப்பாவையோ அல்லது அம்மாவையோ பார்க்க நேரும் சந்தர்ப்பங்களில் குழப்பமடைகின்றது. பாடசாலைக் கல்வியை ஊக்குவிப்பதைவிடுத்து தனியார் கல்வி நிலையங்களுக்கு வரத் தூண்டும் ஆசிரியர்கள், போதைவஸ்து பாவனைக்கு தண்டனை கொடுத்துவிட்டு வீட்டிலோ களியாட்ட நிகழ்விலோ அவற்றை நுகரும் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள், வீட்டின் பொருளாதார ஏற்றத்தாழ்வைக் காரணங்காட்டி ஒருசிலரை ஒதுக்கும் கூட்டாளிக் குழுக்கள் அனைத்துமே இந்த இடைவெளிகளை மேலும் ஆழமாக்குகின்றன. இத்தகைய குழப்பங்கள் நடைமுறை வாழ்க்கைக்கும் பாடசாலைக் கல்விக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை என்ற ஆழமான உணர்வை சிறுவயதிலிருந்தே குழந்தையிடம் விதைத்துவிடுகின்றது.

### முடிவுரை

சவால்களைப் பட்டியலிட்டுவிட்டு தீர்வை தராமல் விடுதல் எந்தவொரு பயனுமற்றது. தனக்கென தனித்தன்மையைக் கொண்ட சமூகங்களாக ஒவ்வொரு கிராமமும் வளர்ச்சி யடையுமெனில் முரண்கள் குறைவதற்கு



சிவமணி முன்பள்ளியில் முதன்மை விருந்தினராக
கொடியேற்றல்



கந்தையா கனகம்மா நிதிய நிகழ்வில் விருந்தினர்களுடன்



சாவகச்சேரி பிரதேச சபையின் பொதுநூலக
புத்தகதினத்தில் விருந்தினராக பரிசு வழங்கல்



காந்தி பாலர் பாடசாலை
விளையாட்டுவிழாவில்

பெருமளவு வாய்ப்புண்டு. வெறும் அரசியல் பிரகடனமோ அல்லது நனவாக்க முடியாத கனவோ எதுவாக இருப்பினும் "அயல் பாடசாலையை சிறந்த பாடசாலையாக்குதல் என்ற கல்வியமைச்சரின் பிரகடனம் சமூக சிந்தையுள்ள மனிதனை உருவாக்க நினைக்கும் அனைத்து உள்ளங்களிற்கும் தெம்பு தரும் ஒரு செய்தியாகும். தாய்மைநிலையுடன் மிக தொலை தூர பணியிடத்திற்குச் செல்தலின் சிரமம், சக விளையாட்டுத் தோழரை விட்டு சமூக பொருளாதார கலாசார அம்சங்களில் வேறுபட்ட குழுக்களுடன் தன்னை இசைவாக்கம் செய்வதில் ஒரு மாணவனுக்கு இருக்கும் சிரமம். ஓய்வு நோக்கத்திற்கு இடையூறாக இருக்கும் தனியார் கல்வி நிலையங்களிற்கு செல்வதன் சிரமம் போன்றவை சொந்தப் பாடசாலையில் கற்பதன் மூலமோ வேலை பார்ப்பதன் மூலமோ குறையுமெனில் சமூக இயல்பினராக்கு வதிலுள்ள சவால்களும் குறைவதற்கு இடமுண்டு. எமக்கு முந்திய தலை முறையின் ஐக்கியப்பட்ட ஒழுக்க, பண்பாட்டு அம்சங்களும் இன்றைய தொழில்நுட்ப வசதி வாய்ப்புகளும் இணையு மெனில் தனித் தன்மையும் சமூக சிந்தையுமுள்ள மேதைகளை இச் சமூகம் அதிகளவில் கொண்டு சிரஞ்சீவியாய் நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

**உசாத்துணைகள்**


1. Eshleman, Adam(2009). Probing Question: Can babies learn in utero?.
   141254/2009/02/23/research/probing-question-can-babies-learn-utero
2. சந்தானம், எஸ். (1987). கல்வியின் சமூக தத்துவ அடிப்படைகள். சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்.-
3. அமனஷ்வீலி,ச. (1987) குழந்தைகள் வாழ்க. மொழிபெயர்ப்பு. இரா.பாஸ்கரன். மொஸ்கோ: முன்னேற்றப்பதிப்பகம்.
4. சந்திரசேகரம்,சோ. (2006). முன் பள்ளிக் கல்வியின் முக்கியத்துவம். அகவிழி. 2(22). யூன் 2006. ப13-15.
5. நவாஸ்தீன், ப.மு.(2006). இடைநிலைக் கல்வியில் அறிமுகப்படுத்தப்படும் புதிய கலைத்திட்டச் சீர்திருத்தங்கள். அகவிழி. 2(23). யூலை. 2006. ப12-17.

# இலங்கையின் உள்ளூராட்சி முறைமை

**கலாநிதி த.கிருஷ்ணமோகன்**
**முதுநிலை விரிவுரையாளர் அரசியல் விஞ்ஞானம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம்.**

## அறிமுகம்

புராதன காலத்திலிருந்து உள்ளூராட்சி நிறுவனங்கள் இலங்கையில் செயற்பட்டு வந்துள்ளன. ஆரம்ப காலங்களில் சுதேசிய மக்களின் தலைசிறந்த மனிதர்கள் என்று கருதப் பட்ட முதலியார், மணியகாரர், உடையார் போன்ற உள்ளூர் தலைவர்கள் நிர்வாகங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர். ஆயினும் பிரித்தானியர் வருகையின் பின்னர் சுதேச உள்ளூராட்சி அமைப்பு முறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. 1965ஆண்டு பிரித்தானிய மாதிரியிலான உள்ளூராட்சி அமைப்புக்கள் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்துடன், பிரித்தானியர் தாம் இலங்கையைக் கைப்பற்றிய போது காணப் பட்ட சுதேச உள்ளூராட்சி முறைமையிலுள்ள குறைபாடுகளை சீர்படுத்தி தமது வருமானங்களை உச்சப்படுத்தக்கூடிய வகையில் நிர்வாக அலகுகளை நவீனமயப்படுத்தினர். இதன் விளை வாக நீண்ட காலமாகச் செயற்பட்டுவந்த சுதேச உள்ளூராட்சி அமைப்பு முறைமை மேலும் மாற்றமடைந்தது. அரசியல் திட்ட அபிவிருத்தியில் பெரும் திருப்பு முனையாகக் கூறப்படும் டொனமூர் அரசியல் திட்டத்தின் வருகையுடன் உள்ளூராட்சி நிறுவனங்களிலும் மாற்றம் ஏற்பட்டது. தற்போது மத்திய அரசாங்கச் சட்டங் களின் மூலம் அதிகாரத்தை ஒப்படைக்கும் வகை யிலான உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப் பட்டுள்ளன. இலங்கையில் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை ஆகிய மூன்றுவகையான உள்ளூராட்சி மன்றங்கள் தற்போது நடைமுறை யிலுள்ளன. இந்நிலையில் இலங்கையின் உள்ளூராட்சி முறைமையின் தோற்றம், வகை கள், செயற்பாடுகள், மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுடன் உள்ளூராட்சி நிறுவனங் களுக்குள்ள தொடர்புகள் போன்ற விடயங் களை இக்கட்டுரையானது ஆராய்கிறது.

## தோற்றம்

1931ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப் பட்ட டொனமூர் அரசியல் திட்டம் அரசாங்க சபையினை நிறுவி அதிலிருந்து மந்திரிசபை ஒன்றை தோற்றுவித்தது. அமைச்சுக்களில் ஒன் றாகிய உள்ளூராட்சி அமைச்சு உள்ளூராட்சி நிறுவனங்களின் கட்டமைப்பில் பல முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியது. சிறிய நகரங் களில் பட்டினசபைகளும், பெரிய நகரங்களில் நகரசபைகளும், அதி பெரிய நகரங்களில் மாநகர சபைகளும் தோற்றுவிக்கப்பட்டன. ஆரம்ப காலத்திலே கொழும்பு மாத்திரமே மாநகரசபையாக இருந்தது. 1938ஆம் ஆண்டு காலி, கண்டி ஆகிய நகரங்கள் மாநகர சபை களாகத் தரம் உயர்த்தப்பட்டன. டொனமூர் காலத்தின் இறுதிக் காலத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் அமைப்பு ரீதியில் நான்குவகை அதிகார சபைகளாக மாற்றியமைக்கப்பட்டன. அவைகளாவன, மாநகர சபைகள், நகர சபைகள் பட்டின சபைகள், கிராமக்குழுவானது கிராம சபையாக மாற்றியமைக்கப்பட்டது.

1924ஆம் ஆண்டு இயற்றப்பட்ட "கிராமக்குழுச் சட்டம்" 1932, 1933, 1938 ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்டது. கிராமக் குழு முறையில் பேணப்பட்டுவந்த பரம்பரை உரிமை என்பது இச்சட்டங்கள் மூலம் இல்லா தொழிக்கப்பட்டது. டொனமூர் குழுவின் வரு கைக்கு முன்னர் பெரும் நிலச் சுவாந்தர்களாக

வும், பரம்பரை, பரம்பரையாகச் செல்வம் படைத்தவர்களாகவும் இருந்த முதலியார், மணியகாரர், உடையார் போன்றவர்களே கிராமியமட்ட நிர்வாகங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர். 1932ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட கிராமக்குழுத் திருத்தச் சட்டத்தின் மூலம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கிராமக்குழு அங்கத்தவர்கள் கிராமிய மக்களிடமிருந்து வரிகளைச் சேகரித்தல், பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல், போக்குவரத்து தெருக்கள் அமைத்தல், பராமரித்தல், பொதுச்சந்தை, நீர் விநியோகம் போன்றவைகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பானவர்களாக இருந்தனர்.

டொனமூர் காலத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட, பிரதிநிதிகளால் நிர்வகிக்கப்படுகின்ற நிறுவனங்களாக வளர்ச்சியடைந்தன. இதனால் சோல்பரி பிரபு உருவாக்கிய மந்திரிசபை ஆட்சிமுறையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் அமைப்பில் பாரியளவிலான மாற்றங்கள் எதுவும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆயினும், சுதந்திரத்தின் பின்னர் உள்ளூராட்சி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தி வந்த உள்ளூராட்சித் திணைக்களத்தில் காலத்திற்குக்காலம்பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்துள்ளன.

## இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்களின் அமைப்பு

டொனமூர் சீர்திருத்தக்காலம் தொடக்கம் பலமடைந்த பிரித்தானிய மாதிரியிலான உள்ளூராட்சி நிறுவனங்கள் காலத்திற்குக் காலம் பல மாற்றங்களை உள்வாங்கியிருந்தது. ஆயினும் பிரித்தானியர்கள் உருவாக்கியிருந்த மாநகரசபைகள், நகரசபைகள் என்பனவற்றில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கவில்லை. இலங்கையிலிருந்த உள்ளூராட்சி நிறுவனங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- மாநகரசபைகள் – 12
- நகர சபைகள் – 39
- பட்டின சபைகள் – 83
- கிராம சபைகள் – 548

நகரசபைகளுக்கும், பட்டினசபைகளுக்குமிடையில் சனத்தொகைகள் நிலவிஸ்தீரணம் என்பவைகளுக்கு ஏற்ப சிறிய வேறுபாடுகள் காணப்பட்டன. உள்ளூராட்சி நிறுவனங்கள் சட்டக்கோவையின்படி ஒவ்வொரு உள்ளூராட்சி நிறுவன அதிகாரசபைகளும் ஒரு கூட்டு அமைப்பாகும். இதன் பதவிக்காலம் நான்கு வருடங்களாகும். உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவும் மத்திய அரசின் கீழுள்ள உள்ளூராட்சி திணைக்களத்தின் கீழ் இயங்கின.

உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி திணைக்களம் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பொறுப்பானதாகும். உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு உள்ளூராட்சி ஆணையாளர் தலைமை தாங்கினார். அவருக்கு உதவியாக நான்கு பிரதி ஆணையாளர்கள் இயங்கினர். இப்பிரதி ஆணையாளர்கள் முறையே திட்டமிடலும் மதிப்பும், கட்டுப்பாடு, அபிவிருத்தி, நிதி என்பவற்றுக்குப் பொறுப்பானவர்களாவர்.

### அதிகாரங்கள்

உள்ளூராட்சி நிறுவனங்கள் அனைத்தினதும் அதிகாரங்கள் ஒருமித்த தன்மைகளைக் கொண்டவைகளாகும். இதனால் இவ் அமைப்புக்களுக்கிடையில் சமநிலையும், சீரான உறவினையும் தொடர்ந்து பேணிக்கொள்ள முடிகின்றது. இச்சமநிலையானது போக்குவரத்து வீதி விளக்குகளை அமைத்துப் பராமரித்தல், பொது சுகாதாரம், சுத்திகரிப்பு, பொதுப் பயன்பாட்டுச் சேவைகள் என்பவற்றின் மூலம் ஏற்படுகின்றது. ஆயினும் சில வகையான அதிகாரங்கள் சபைக்குச் சபை வேறுபட்டுக் காணப்பட்டது.

### மாநகர சபைகள்

மாநகரசபைகள் சட்டக்கோவை 46 இற்கு இணங்க, மாநகர சபைகளின் அதிகாரங்கள் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளன.

- தனது எல்லைக்குட்பட்ட எல்லா போக்கு

வரத்து வீதிகளையும், திறந்த வெளிகளையும் பராமரிக்க, சுத்திகரிக்கவுமுள்ள அதிகாரம்.

* தனிப்பட்ட போக்குவரத்து வீதிகளைப் பராமரிக்க, சுத்திகரிக்க, திருத்தவுள்ள அதிகாரம்.
* மாநகரசபைகளின் வளர்ச்சிக்கும், அபிவிருத்திக்குமான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தும் அதிகாரம்.
* பொதுநல சேவைத்திட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தும் அதிகாரம் (உதாரணம் நூலகம், பூங்கா, சிறுவர் விளையாட்டுப் பூங்கா)
* மாநகர சபைகள் சட்டக் கோவைக்கு இணங்க தனது எல்லைக்குட்பட்ட மக்களுக்கு தொந்தரவு தரும் விடயங்களை கண்டறிந்து தடுக்க அல்லது முற்றாகத் தடைசெய்ய அல்லது தணிக்கவுள்ள அதிகாரம்.

இவற்றைவிட மாநகரசபைகள் சட்டக் கோவை 40 (1) இற்கு இணங்க பின்வரும் அதிகாரங்களும் மாநகரசபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

* நீர் விநியோகம்
* பொதுக்கட்டிடம், தெரு விளக்குகளை அமைத்தல்
* மின்சார விநியோகம்
* சந்தைகளை அமைத்துப் பராமரித்தல்
* பொதுக் குளியல் பிரதேசங்களைப் பராமரித்தலும், சலவைத் தொழில் செய்யும் இடங்களைப் பராமரித்தலும்.

## நகரசபைகள்

1939ஆம் ஆண்டு 35ஆம் இலக்க சட்டக் கோவைக்கு இணங்க நகரசபைகள் தோற்றுவிக்கப்பட்டன. பொதுவாக நகரசபைகளின் செயற்பாடு மாநகரசபைகளின் செயற்பாடுகளை ஒத்ததாகவேயுள்ளது. நகரசபைகள் சட்டக் கோவைகளில், 44 தொடக்கம் 101 வரையிலான விதிகள் பொதுவான கடமைகளை எடுத்துக் கூறுகின்றன. 103 தொடக்கம் 128 வரையிலான விதிகள் பொதுச் சுகாதார செயற்பாடுகளை எடுத்துக் கூறுகின்றன. 129 தொடக்கம் 152 வரையிலான விதிகள் பொதுப் பயன்பாடுடைய சேவைகள் தொடர்பாக எடுத்துக் கூறுகின்றன. பொதுவாகக் கூறுகின்ற போது நகரசபைகள், பொதுச் சுகாதாரம், போக்குவரத்துப் பாதைகள் போன்றவற்றை நிர்வகிப்பதற்கான அதிகாரங்களை நகரசபைகள் கொண்டுள்ளன.

நகரசபைகள் பின்வரும் கடமைகளை நிறைவேற்ற வேண்டும் என நகரசபைச் சட்டக் கோவை கூறுகின்றது.

* குழந்தை பராமரிப்பு அல்லது பிரசவ விடுதிகளை அமைத்து பிரசவ விடுதிக்கான தாதிமார்களை பயிற்றுவிக்க வேண்டும்.
* வீட்டுத் திட்டங்களை உருவாக்க வேண்டும்.
* பூமியதிர்ச்சி, பஞ்சம் போன்றவற்றால் பாதிக்கும் மக்களுக்கு நிவாரணமளிக்க வேண்டும்.
* பேக்கரி, உணவு விடுதிகள், சலூன், சந்தைகளை மேற்பார்வை செய்து நெறிப்படுத்த வேண்டும்.

நடைமுறையில் மாநகரசபைகள் மீது மத்திய அரசாங்கம் செலுத்தும் கட்டுப்பாடுகளைவிட, நகரசபைகள் மீது செலுத்தும் கட்டுப்பாடு அதிகமாகும். உள்ளூராட்சி அமைச்சர் நகரசபைகளுக்கான பொதுவான விதிகளை இயற்றவும், புதிய திட்டங்களை, கொள்கைகளை அறிமுகப்படுத்தவும் அதிகாரம் பெற்றிருந்தார்.

## பட்டினசபைகள்

1946ஆம் ஆண்டு, இலங்கையில் பட்டினசபைகள் சட்டமூலம் இலக்கம் 3 இற்கு இணங்க பட்டினசபைகள் உருவாக்கப்பட்டன. பட்டினசபைகள் அமைப்பு, தொழிற்பாடு, கடமைகள் மாநகரசபையை ஒத்ததாக உள்ளன. பொதுச் சுகாதாரம், பொது நலசேவைகள் என்பவைகளை மேற்கொள்வதே பட்டினசபைகளின் நோக்கமாகும்.

## கிராம சபைகள்

1961ஆம் ஆண்டு கிராம சபைகள் சட்டம், நாட்டில் இயங்கிய கிராமிய சங்கங்களை கிராம சபைகளாக மாற்றியமைத்தது. கிராமசபை சட்டக்கோவை, கிராமிய சபை களுக்கு அதிக அதிகாரங்களை வழங்கியுள்ளது. கிராமசபை சட்டக் கோவை இல 36இன்படி ஒவ்வொரு கிராம சபைகளும் தமக்குத் தேவையான பதவிகளை உருவாக்குவதற்கும், காணிகளை விற்க, மாற்ற, வாடகைக்குப் பெறுவதற்கும், ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கும், கிராமிய மட்ட அபிவிருத்தி நிர்மாணப் பணிகளைச் செய் வதற்கும், மேற்பார்வை செய்வதற்கும் அதிகார மும், உரிமையும் பெற்றிருந்தன.

கிராமச்சபைச் சட்டக்கோவை 37இன் படி, வரிவசூலிப்பதற்கும், வரி மதிப்பீடு செய்வதற்கும் அதிகாரம் பெறுகின்றன. இதனை விட பொது நல சேவைகளாகிய நீர் விநியோகம், தெரு விளக்கு அமைத்தல், மின்சார விநியோகம், சந்தைகள், பொதுக் குளியலறை களை அமைத்தல், வறியவர்களுக்கான வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவைகளும் கிராமசபைகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

## மாவட்ட அபிவிருத்திச் சபைகள்

1977ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்திற்கு வந்தவுடன், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்த துரித பொரு ளாதார அபிவிருத்தி என்ற இலக்கை அடை வதற்கு ஏற்ப, உள்ளூர் நிர்வாக அமைப்பினை மீளமைத்துக்கொண்டது. துரித பொருளாதார அபிவிருத்தி என்பது பூரணமான மக்களின் பங் களிப்புடனேயே வெற்றிபெற முடியும் என்பதால் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்திக்கான உள்ளூர் நிர்வாக அமைப்புக்கள் தோற்றுவிக்கப் பட்டன. துரித பொருளாதார அபிவிருத்திக்காக தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்தி சபைகளுடனும், மாவட்ட அமைச்சர்களுடனும் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஒருங்கிணைக்கப் பட்டன. 1978ஆம் ஆண்டு நாட்டில் காணப்பட்ட பட்டின சபைகளும், கிராமசபைகளும் இல்லா தொழிக்கப்பட்டன. இதற்கு ஏற்ப காலம் கால மாக இருந்த நான்கு வகையான உள்ளூராட்சி நிறுவனங்களை 1979ஆம் ஆண்டு மூன்றுவகை யான நிறுவனங்களாக அரசாங்கம் மாற்றி யமைத்தது. அவைகளாவன.

- ✷ மாநகர சபைகள்
- ✷ நகர சபைகள்
- ✷ மாவட்ட அபிவிருத்தி சபைகள் என்பவை களாகும்.

மேலும் 1979ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு இணங்க 1980களில் தோற்றுவிக்கப்பட்ட மாவட்ட அபிவிருத்திச்சபை கிராமியப் பிரதேசங்களின் அபிவிருத்திகளைப் பொறுப்பேற்றுக் கொண்டதுடன். கிராமசபைகள் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் உப அலுவலகங்களாக மாற்றப்பட்டன.

தேவைக்கதிகமான உள்ளூராட்சி நிறு வனங்கள் காணப்படுவதால் கிராமிய அபி விருத்தி பாதிக்கப்பட்டு வந்துள்ளமை கண்டறி யப்பட்டமையே பட்டினசபைகளும், கிராம சபை களும் இல்லாதொழிக்கப்பட்டதற்கான காரண மாகக் கூறப்பட்டது. கிராமசபைகள், பட்டின சபைகள் இல்லாதொழிக்கப்பட்டமை மூலம் உள்ளூராட்சி நிறுவன அமைப்பில் சமமின்மை யினை அரசாங்கம் ஏற்படுத்தியது. இதனால், கிராமிய மக்களுடைய பொது வசதிகள் பாதிப் படையத் தொடங்கின. இது பாராளுமன்றத்திற்கு உள்ளேயும், வெளியேயும் அரசாங்கத்திற்குப் பலத்த அழுத்தத்தினைக் கொடுக்கத் தொடங்கியது. பாராளுமன்றத்திற்கு உள்ளே யான அழுத்தத்தினைவிட பாராளுமன்றத்திற்கு வெளியேயான அழுத்தத்திற்கு அரசாங்கம் அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இதனால் 1981ஆம் ஆண்டு அபிவிருத் திச்சபைகள் சட்டமூலம் திருத்தப்பட்டு கிராமிய மட்டத்தில் அல்லது கிராமசேவையாளர்கள் மட்

டத்தில் கிராமோதைய சபைகளும், உதவி அரசாங்க அதிபர் மட்டத்தில் பிரதேச சபைகளும் தோற்றுவிக்கப்பட்டன. இவ்விரு நிறுவனங் களும், ஆரம்பத்தில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படாத உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. கிராமோதய சபை அங்கத்தவர்கள் கிராமிய மட்டத் தொண்டர் நிறுவனங்களின் அங்கத் தவர்களை ஒன்றுகூட்டி அவர்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்டனர். இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களிலிருந்து ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் செயலாளராக திட்ட அமுலாக்க அமைச்சினால் நியமிக்கப்பட்ட சமூகசேவை உத்தியோகத்தர் கடமையாற்றினார்.

கூடுதலான ஜனநாயகப் பண்புகளைப் புகுத்துவதற்காக 1987ஆம் ஆண்டு பிரதேசசபை கள் திருத்தச்சட்ட மூலம் கொண்டுவரப்பட்டது. இச்சட்ட மூலம் புதிய உள்ளூராட்சி முறைமை யினை அறிமுகப்படுத்தியதுடன், உள்ளூராட்சி நிறுவன அமைப்பில் ஜனநாயக மரபுகள், சம்பிர தாயங்கள் தொடர்ந்து பேணப்படவும் வழிவகுத் திருந்தது. திருத்தச்சட்ட மூலத்தின் படி, நகர, மாநகர சபைகளுடன் இணைந்து பிரதேச சபை களும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அங்கத் தவர்களைக் கொண்டிருக்க வேண்டும். உள்ளூராட்சி நிறுவனங்களுக்குள் பிரதேச சபைகள் தீர்மானம் எடுக்கும் செய்முறைகளில் கிராமிய மக்களின் பங்களிப்பினை மிகவும் துரிதப்படுத்தியது. மேலும் எடுக்கப்படும் தீர்மானங்களை கிராமிய மட்டங்களில் நடை முறைப்படுத்துவதிலும் முதன்மைவகித்தது. அபி விருத்திச்சபைகள் திருத்தச் சட்டமூலத்தின்படி, பிரதேச சபைக்கு தெரிவுசெய்யப்படும் தலைவர் அரசாங்க உத்தியோகத்தராகவோ அல்லது பாராளு மன்ற உறுப்பினராகவோ இருக்கக் கூடாது. இவ் வொழுங்கு அவசியமானதாகும். பிரதேச சபைத் தலைவர் என்ற பதவியினூடாக ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தனது எதிர்கால வாக்குப்பலத்தைத் தீர்மானிக்கவோ, தனது அரசியல் தேவைக்குப் பிரதேசசபையினைப் பயன்படுத்தவோ முடியாதிருக்கும். இவ்வாறான தொரு ஒழுங்குமுறை தொடர்ந்து இருக்கு மானால், பிரதேச சபைகள் நீடித்திருக்கக்கூடிய வாய்ப்பு அதிகமாக இருக்கும் எனச் சுட்டிக் காட்டப்பட்டது.

## மாகாணசபைகளுக்குள் உள்ளூராட்சிசபைகள்

1987ஆம் ஆண்டு இலங்கையின் அரசி யல் யாப்பில் செய்யப்பட்ட பதின்மூன்றாம் திருத் தச் சட்டத்தின் அட்டவணை ஒன்பதாவதிலுள்ள மாகாணசபைகளுக்கான அதிகார நிரலின் 4.1 உறுப்புரை மாநகரசபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் ஆகிய உள்ளூராட்சி நிறுவனங்களை அரசியல் யாப்பினால் நிறுவப்பட்ட நிறுவனங்களாக ஏற்றுக்கொண்டது.

மத்திய அரசாங்கத்தின் சட்டத்தின் மூலமும், பதின்மூன்றாவது யாப்புத் திருத்தச் சட்டத்தின் மூலமும் நிறுவப்பட்ட மாகாண சபை கள் மூலமும் உள்ளூராட்சி சபைகளுக்கான அதி காரங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஆனால் 1987ஆம் ஆண்டின் முன்னர் மத்தியரசாங்கத் தினால் மாத்திரமே இச்சபைகளுக்கான அதி காரங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இப்போது உள்ளூராட்சி சபைகளுடன் தொடர்புடைய சட்டக் கோவைகளுக்குட்பட்டு உள்ளூராட்சி சபைகளை மேற்பார்வை செய்யும் மற்றும் கலைக்கும் அதிகாரங்கள் மாகாணசபைகளுக்கேயுரியதாகும். ஆனால் இச்சபைகளுக்கான தேர்தலை நடாத்தும் அதிகாரம் மத்தியரசாங்கத்திற்குரியதாகும்.

பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்திற் கிணங்க மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதி நிதிகள் உள்ளூராட்சி சபைகளைப் பொறுப் பேற்கக்கூடிய வகையில் 08 மாநகர சபைகள், 30 நகர சபைகள், 152பிரதேச சபைகள் என்பவற்றிற்கான தேர்தல் 1988ஆண்டு தை மாதம் முதலாம் திகதி நடாத்தப்பட்டது. விகிதாசார பிரதிநிதித்துவ முறையின் மூலம் நான்கு வருட பதவிகாலத்திற்காக பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இத்தேர்தல் விருப்பு



சமாதான நீதிவானாக நியமனம் பெற்ற போது



சிறுவர் நேயப் பாடசாலைக்கான
விருதுடன் கணவரும்




பாடசாலை விளையாட்டு நிகழ்வில்
பாடசாலைக் கொடியேற்றலின் போது

வாக்கு முறை யினை அடிப்படையாகக்கொண்ட திறந்தபட்டியல் முறையின் அடிப்படையில் நடைபெற்றது. ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 02 மாநகர சபைகள், 04 நகர சபைகள், 36 பிரதேச சபைகளுக்கான தேர்தல்கள் இப்பிரதேசங்களில் நடைபெற்றுவந்த உள்நாட்டு யுத்தம் காரணமாக நடைபெறவில்லை.

உள்ளூராட்சி சபைகளுக்கான பிரதான நிதி மூலாதாரங்களை மத்தியரசாங்கமும், மாகாணசபைகளும் தமது வரவு செலவுத்திட்டத்தினூடாக வழங்குகின்றன. ஆயினும் வரி அறவிடுதல் மற்றும் தமக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள வழிமுறைகளுடாக உள்ளூராட்சி நிறுவனங்கள் தமக்கான நிதியினைத் திரட்டி முகாமைசெய்யமுடியும்.

## முடிவுரை

கோட்பாட்டடிப்படையில் உள்ளூர் மட்டத்தில் நிர்வாகத்தை எளிதுபடுத்துவதிலும், அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் உள்ளூராட்சி சபைகள் முக்கிய வகிபங்கினை கொண்டிருப்பதால் இவைகளின் செயற்பாடு காத்திரமானவைகள் எனக் கூறப்படுகிறது. இங்கிலாந்திலுள்ள உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக ஆய்வு செய்த ரெட் கிளிவ் மட் குழு (Red Cliffe Maud Committe) உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக பின்வருமாறு எடுத்துக் கூறியுள்ளது. "பொதுச்சேவைகளை மேற்கொள்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்கள் மிகவும் அவசியமானதாகும். இவ் உள்ளூராட்சி நிறுவனங்கள் ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அமைப்புக்களாகக் காணப்படவேண்டும். சில சேவைகள் மட்டும் மத்திய அரசாங்கத்தினால் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அல்லது இச்சேவைகளை வழங்குவதற்காக மத்திய அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட குழுக்கள் நியமிக்கப்பட வேண்டும்." இக்கருத்திற்கு இசைவாக அனேக மேலைத்தேச அரசுகளில் காணப்படும் உள்ளூராட்சி நிறுவனங்கள் யாவும் கல்வி, பொலிஸ், சமூக சேவைகள் போன்ற முக்கிய அதிகாரங்களை தன்னகத்தே கொண்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. நியூசிலாந்தில் வீடமைப்பு, மருத்துவம் என்பன உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. கல்வி மத்திய அரசிடமேயுள்ளது. பிரித்தானியாவில் தேசிய சுகாதார சேவை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் 1972ஆம் ஆண்டு உள்ளூராட்சி நிறுவனங்கள் சட்டக்கோவை இவ்வதிகாரங்களில் சிலவற்றைக் குறைத்துள்ளது.

ஆனால் இம் முக்கிய துறைகளில் இலங்கையில் காணப்படும் உள்ளூராட்சி நிறுவனங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான அதிகாரங்களையே கொண்டுள்ளன. அல்லது சில துறைகளில் அதிகாரமின்றியே காணப்படுகின்றது. இவ்விடத்தில் உசுலா, கே.ஹிக்ஸ் (Ursula K.Hicks) இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாகக் கூறப்படும் கருத்து கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். "இலங்கையில் பலமான ஓர் உள்ளூராட்சி நிறுவனமுறை வளர்ச்சி அடையவில்லை. இலங்கையில் பலமான ஓர் உள்ளூராட்சி நிறுவனங்களுக்குப் பின்வரும் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். ஆரம்பக்கல்வி, பண்ணைகள், சினிமாக் கொட்டகைகள், வாடகை வண்டி (Taxi) சேவை, சமூக, கலாசார நிலையங்கள் போன்றவைகள் உள்ளூராட்சி நிறுவனங்களில் பொறுப்பில் விடப்பட வேண்டும்." எனக் கூறுகின்றார். ஆனால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டதாகும். நிதி மூலாதாரங்கள் அருமையானதாகும். மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களின் மேற்பார்வைக்கும், வழிநடத்தலுக்கும் உட்படுதல், மத்திய அரசாங்கத்தினால் காலத்திற்கு காலம் பிறப்பிக்கப்படும் பல்வேறு சட்டங்கள், சுற்று நிருபங்கள், நியதிகள் போன்றவற்றிற்கு கீழ்படிதல், நகர அதிகாரசபையின் இறுக்கமான விதிகளுக்கு கட்டுப்படுதல் போன்றவற்றால் இவற்றின் அதிகாரங்கள், சுதந்திரம் என்பன கட்டுப்படுகின்றன.

# "அருணகிரிநாதரின் ஞானத்தமிழ்"

**பேராசிரியர்,டாக்டர் கனகசபாபதி நாகேஸ்வரன்**
**இணைப்பேராசிரியர், மொழித்துறை,**
**சப்ரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா,**
**இலங்கை.**

" பக்கரை விசித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பட்சியெனும் உக்ரதுர- கமுநீபப்
பக்குவ மலர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள் கை- வடிவேலும்
திக்கது மதிக்கவரு குக்குடமும் ரக்ஷைதரு
சிற்றடியும் முற்றிய- பன்னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென எனக்கருள் கை - மறவேனே
இக்கவரை நற்கனிகள் சர்க்கரை பருப்புடன் நெய்
எட்பொரி யவல் துவரை - யிளநீர்வண்
டெச்சில் பயறப்பவகை பச்சரிசி பிட்டு வெள்
ளரிப்பழம் இடிப்பல் வகை - தனிமூலம்
மிக்க அடிசிற் கடலை பக்ஷணம் எனக் கொளொரு
விக்கின சமர்த்தன் எனும் - அருளாழி
வெற்ப குடிலச்சடில விற்பரம ரப்பருள்
வித்தக மருப்புடைய - பெருமாளே."

-திருப்புகழ்

"ஏறுமயிலேறிவிளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே" 1
"தந்தைக்கு உபதேசம் செய்த தமிழ்த் தெய்வம்" 2

அருணகிரிநாதர் திருப்புகழ் பாட, உதவி, ஞானத்தழிழான ஞானமொழியான முத்தைத் தரு; என்ற அடியை எடுத்துக் கொடுத்தவர் முருகக் கடவுள். தந்தைக்குப் பிரணவத்தின் பொருளை உபதேசித்து தகப்பன் சாமி; எனப் பெயர்கொண்டவர்.

முருகக்கடவுளின் திருமந்திரமும் சரவணபவ; குமாராயநம; என்ற ஆறெழுத் துக்களைக் கொண்டது;. இதனை "ஆறெழுத் தடங்கிய அருமறை" என நக்கீரரும்," இசையில் சடாக்ஷரம் " என அருணகிரிநாத சுவாமிகளும் போற்றியுள்ளனர். செந்தமிழ், இன்பத்தமிழ், பைந்தமிழ், தேன்தமிழ், தீந்தமிழ், நறுந்தமிழ், பக்தித்தமிழ், ஞானத்தமிழ், என்று தமிழ் மொழி யின் பண்புகள் குறித்துப்பல பெயர்கள் எமது தமிழுக்குக் கிடைத்துள்ளன. இனிய தமிழ் தான் அளித்த முருகன் அருணகிநாதரின் வாயாலேயே தமிழின் சீர்மையையும், செம்மையையும், மேன்மையையும், உண்மையையும் எடுத்துக் கூற அருள்செய்துள்ளான். திருநாவுக்கரசு நாய னார் "ஞானத்தாற் தொழுவார் சில ஞானிகள்" என்று திருமுறையிலே சுட்டுகிறார், இறைவன் திருவருள் சமயவரலாற்றிலே திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், 63 மெய்யடியார்கள், மார்க்கண்டேயர், அருணகிரிநாத சுவாமிகள் நாயன்மார்கள் என்போருக்கு இறைவன் (சிவன்/முருகன்) திருக்காட்சிகள் கிடைத்தன. பல்வேறு குலத்தினர், பல்வேறுதரத்தினர், பல்வேறு பண்பினர், பல்வேறு இயல்பினரான வர்க்கெல்லாம் பரம்பொருள் காட்சிகொடுத்து அருளினன். சுந்தரர், சேக்கிழார், அருணகிரிநாதர் என்போருக்கு முறையே பித்தா; உலகெலாம், முத்தைத்தரு' என்று அடியெடுத்துக்கொடுக்கப்பட்ட வரலாறுகளும் உள்ளன.

அருணகிரியாரது ஞானத்தமிழ், சந்தத் தமிழாகும். தமது சுய அனுபவத்தினை எவ்வா றெல்லாம் புகலமுடியுமோ அவ்வாறெல்லாம் லாவகமாகப்பாடுவதற்கு உதவியது இந்த ஞானத்தமிழ். ஞானத்தமிழாற் புகன்றவை யனைத்தும் மானுடவாழ்வுக்குப் படிப்பினை களாயின.

"தமிழ் வளர்க்கும் இதயத்தில் தான் வளரும் தெய்வம், அமிழ்தினும் இனிய சொல்லாம் முருகன்தெய்வம். சொல்லுக்குப் பொருள் கூறி

சுவை தந்த தெய்வம் – தான் சொல்லாகிப் பொருளாகிசுவையுமான தெய்வம்" 6

"மாசிலாத கன்னித் தமிழின் காவல னாகிவிட்டான்" 7 "சொலற்கரிய திருப்புகழை உரைத்தவரை யடுத்தவகை அறுத்தெறிய உறுக்கி யெழும் அறத்தை நிலை காணும்" 8 என்று புகழ் கிறது வேல்வகுப்பு. சொலற்கரியதிருப்புகழ்; என்னும் அடை சிந்திக்கற்பாலது.

"அடைபெறுவாதென்று முத்தி யதிமதூ செந்தமிழ்க்கும் அருள்பெற நினைந்து சித்தி யாகலாம்"9

கடைக்கணியல் வகுப்பில் அதிமதுரச் செந்தமிழ்; என்ற அடைசெய்யப்பட்டுள்ளமை நோக்கற்பாலது.

"முத்தமிழால் வைதாரையுமங்கு வாழவைப்போன்" 10

முத்தமிழ்ச் சிறப்பு விசேடமாகத் தமிழ் மொழிக்குரியது. கருத்தாலும், காலத்தாலும் முற்பட்டமொழி தமிழ்மொழிதனைச் சுட்டும் அருணகிநாதர் திருப்புகழிலே "முந்துதமிழ்" என்றுரைத்துள்ளார். இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத் தமிழ் என்பன முத்தமிழாகும். முத் தமிழின்பத்தைச் சுவைப்பதால் அருள் செய் பவன் முருகன். ஆதலினாலேயே ஆடுவர், பாடுவர், பாராயணஞ் செய்வர். முருகப் பெரு மானின் தந்தையான சிவபெருமான் இராவணனது சாமகானத்திற்கு இரங்கியிளகியவர், எனவே செந்தமிழின்ப இசைப்பாடல்களாலே – சந்தத்தமிழ்ப் பாடலின் இன்பமேலீட்டினாலே இரங்குபவன் முருகன்.

ஈழத்துக் கவிஞர் சோ. பத்மநாதன்.

" செந்தமிழின்பம் நுகர்ந்து வள்ளி

செவ்விதழ் ஈரம் பகிர்ந்து"

என்று நல்லைக் குமரனைப் பாடு கிறார்". ஈண்டு 'தமிழரானவரை மட்டும் வாழவைப்பான் மற்ற மொழிகளால் வைத வருக்கு வாழ்வில்லை' என்று கூறலாகாது. முருகப்பெருமானுக்கு மொழி வேறுபாடு கிடையாது. முத்தமிழால் வைதாரையுமங்கு வாழவைப்போன்" என்று பாடியது அருணகிரி நாத சுவாமிகளுக்குத் தமிழ்மொழியில் ஏற்பட்ட பற்றுதலிலேயாகும். அருணகிரியாரின் மொழிப் பற்றை எடுத்துக் கூறும் சிதம்பர சுவாமிகள்.

"வடமொழி தென்மொழிப்பாவால் நிறை தயவுற நினப்புகழ்ந்து நின்றேத்தி" 12 என்று கூறுவர்"
" மொழி புகழும் உடைமணியும் அரை வடமும் அடி இணையும் முத்தச் சதங்கையும் சித்ரச்சி கண்டியும் கொள்வோனே" 13

பிரமதேவனிடம் 'ஓம்' எனும் பிரண வத்தின் பொருளைக் கேட்டவன் முருகன். 'தகப்பன்சாமி' எனப்படும் முருகனுக்குச் சிவன் சீடன், குரு முருகன். சுவாமியை குருமலை என்றும் போற்றப்படும். சிவனது மடிமீதிருந்து உபதேசம் செய்த கடவுள் முருகக்கடவுள். "ஒரு பெரும் தத்துவத்தின் சாறெடுத்து நல்ல ஓமெனும் மந்திரத்தின் பொருளுரைத்துத் தந்தைக்கு உபதேசம் செய்தமலை" என்று பாடுகிறார் சீர்காழி கோவிந்தராஜன், விநாயகர், நாரதர், மகாவிஷ்ணு, பிரம்மா, அகத்தியர், விரவாகு முதலியவர்கள் சூழ்ந்துநிற்க முருகக் கடவுள் தந்தையின் மடிமீதிருந்து உபதேசம் செய்யும் காட்சியின் விளக்கமும், சிற்பங்களாகவும், சிலை வடிவங்களாகவும் சுவாமிமலையிலே காணலாம்.

ஞானபண்டிதன், குருநாதன் எனப்படுவோன் முருகனே.
"சிவத்தின் சாமி மயில்மிசை நடிக்குஞ் சாமி யெமதுளே சிறக்குஞ் சாமி சொரூபமீதொளிகாண" 14
"ஓதுவித்த நாதர் கற்க ஓதுவித்த முனிநாண ஓர் எழுத்தில் ஆறெழுத்தை ஓதுவித்த பெருமாளே" 15
"நாத போற்றியென முது தாதை கேட்க அநுபவ ஞானவார்த்தை யருளிய பெருமாளே"

'ஓம் ; எனும் எழுத்தின் மகிமையை வேதகர்த்தாவாகிய பிரம்மாவும் கூற இயலா

தென்றால் மற்றவர்கள் விளக்கமுடியுமோ எனக் கந்தபுராணம் வினவுகிறது. ஆகவே ஓம்; என்னும் மகாமந்திரத்தைச் சதா நினைந்து வழிபடும் வரத்தை திருவேரகப்பெருமான் அருள வேண்டும் என அருணகிரிநாத சுவாமிகள் பிராத்திக்கின்றார்.

"ஓமெழுத்திலன்பு மிகவூறி
ஓவியத்திலந்த - மருள்வாயே" 17

ஓம் என்னும் எழுத்தாகிய ஏரினால் பண்படுத்தினால் திருவாகிய தெய்வத்திருவருள் கிட்டும்; என்று முருகப்பெருமான் குருமூர்த்தியாக உணர்த்துகிறான்– திருப்புகழ் முழுவதுமாகவே முருகனது பெரும்புகழை உரைக்கும் அருணகிரியார் வாழ்வியலிலே தமதனுபவத்தையும் தமது மனம் மங்கையரின் மயற்பட்டுக் கிடந்துழன்ற நிலைமையையும் மங்கையருள் – விலைமாதரின் – இழிவையும் பிறரது வாழ்வில் செம்மையேற்படத்தக்க முறையிலே வர்ணித்தும் பாடியுள்ளார்.

"முதுமா மறைக்கு ளொருமா பெகாருட்டுன்
மொழியே யுரைத்த
தகையாதெனக் குனடி காண
வைத்த தனியேரகத்தின் - முருகோனே -18

சிவபெருமான் ஞானோபதேசம் பெற்ற தலமாகச் சாமிமலை இருப்பதால் இங்கு யக்நோபவீதம் (பூணூல் அணியும் சடங்கு) நிகழ்த்துதல் மிகவும் விசேஷமாகக் கருதப்படுகின்றது, திருவெண்ணாமலையிலே முருகக் கடவுள் அருணகிரிநாதருக்கு "முத்தைத்தரு" என்று அடியெடுத்துக் கொடுத்ததால் அவர் அன்றுமுதல் பல்வேறு முருகத் தலங்களையும், அத்தலங்களிலுறையும் தமிழ்தெய்வம் முருகக் கடவுளையும் பாதாதிகேசமாகவும் கேசாதி தாகமாகவும் வர்ணித்துத் திருப்புகழைப் பாடியருளினார், தமிழ்; அருணகிரியின் தாளத்திற்கு ஆடியது, இது முருகனின் பெருங்கருணை.

"இலங்கு தர தமிழ் விளங்கவருதிரு
இலஞ்சி மருவிய பெருமாளே" 19

தமிழ் விளங்கவந்துதித்தவன் முருகன். கந்தபுராணத்தின் காப்புச் செய்யுளிலே திகட சக்கரம்; என்பதற்கு வீரசோழிய நிகண்டினை ஆதாரம் காட்டிப் பொருளுரைத்தவன் முருகக் கடவுள். சொற்புணர்ச்சி விதியில் வித்தகன் அவன். முற்றிய தமிழிலக்கண ஆட்சியுடையவன் முருகன். அச்செய்தியை அருணகிரிநாதர்.

"செந்தமிழ்நூல் விரித்தோனை" 20 என்கிறார்.

கீர்த்திபெற்ற திருப்புகழைத் தொடர்ந்து பாடி அருணகிரிநாத சுவாமிகள் முருகவேள் பணித்ததால், வயலூர் முருகபக்தர்களால் மிகவும் போற்றப்படுகிறது. திருப்புகழை முருப்பெருமான் தனது திருமார்பில் பதக்கமாகத் தரித்திருப்பதாக வேடிச்சி காவலன் வகுப்பு" "ஒளி வளர் திருப்புகழ் மார்தணி கிருபாகரனும்" என்று விளக்குகிறது. திருப்புகழ்பாடலைப் பாடிய படியே நோய் நீக்கம் பெற்ற அன்பர்கள் அனந்தம் என்றால், திருப்புகழின் பொருளையும் மகிமையையும் எழுத்துக்களாலும், வார்த்தைகளாலும் எடுத்துரைக்க இயலாது. அருணகிரிநாதர் பாடிய பதினாயிரம் திருப்புகழ் பாடல்களில் காலதேவனால் தூர்ந்தவைபோகத் தற்பொழுது 1311 பாடல்கள் மட்டும், தணிகைமணி ஸ்ரீ.வ.சு செங் கல்வராயபிள்ளை குடும்பத்தினர் ஸ்ரீ திரு முருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் முதலியவர்களின் பெருமுயற்சியால் கிடைக்கப் பெற்றுள்ளன. சென்னையிலுள்ள தணிகை மணி வீட்டைத் திருப்புகழின் தாய்வீடு எனப் போற்றுவார் வெள்ளிமைலை சுவாமிகள்.

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாத சுவாமிகள் தனது வாலிபப்பருவத்தில் உலகபோகங்களில் தடுமாறித் தனது இளமையைக் கெடுத்துப் பிணியுற்று மனம் நொந்து திருவண்ணாமலையிலுள்ள வல்லாள மன்னன் கோபுரத்தின் உச்சியிலிருந்து உயிர் துறக்க வீழ்ந்தார். அங்கு கோயில் கொண்டுள்ள முருகவேள் அவரை தனது திருக்கரங்களாலே தாங்கிப்பாதுகாத்ததோடு அவரது பிணியையும்

நீக்கிப் பிரணவ உபதேசம் செய்து உலகம் உய்யும் பொருட்டுத் திருப்புகழைப்பாடிப் பணிந்து முத்தைத் தரு; என்று அடியையும் எடுத்துக் கொடுத்ததாகவும் வரலாறு கூறுகின்றது. இதனை அருணகிரிநாதரும் தமது திருப்புகழிலே கூறியுள்ளார்.

"ஆணவ அழுக்கடையுமாவியை விளக்கியது
பூதியடை வித்ததொரு-பார்வைக்காரனும் . 21

"ஆடக விசித்ரகண கோபுர முகப்பிலரு
ணபுரியினிற்கு மடையாளக் காரனும்
........ குறத்தி திருவேளைக்காரனே" 22

"பாதமலர் பாடுநீ என்ன அடியேனுமெய்
படிபாட என்ற அளவில்
பத்தி தருமுத்தநகை அத்தியிறை வாவெனப்
பாடென்று சொல்லி இயலாற்
பூதலமுமெங்கிளையும் ஈடேறநாவிற்
பொறித்தவருரைத்த கவிதைப்
புத்தமுது பன்னிரு செவிக்கு நிறையக்கொண்டு
போதமுன் அளித்தருளினாற்..."23

அருணகிரிநாதர்க்கு அருள்புரிந்த முருகப்பெருமான் திருவண்ணாமலையில் வல்லாள மன்னன் கோபுரத்தின் வட பக்கம் கோபுரத்திளையனார் என்னும் பெயருடன் தரிசனம் தருகிறார். முருகப்பெருமான் அடியெடுத்துக் கொடுக்க அவர் பாடிய முதற்றிருப்புகழ்ப்பாடலே 'முத்திகொருவித்து' என அமைந்துள்ளது. ஆகவே திருப்புகழ் முத்திக்கு வழியாக விளங்குவதில் வியப்பொன்றுமில்லை. இம்முதற் பாடலே சைவ வைணவ சமரசத்தை நிலைநாட்டும் வகையிலும் வடமொழி, தென் மொழிப் பேதத்தைப் போக்கும் வகையிலும் அமைந்துள்ள தெனில் திருப்புகழ் ஒரு சிறந்த ஞானநூலாகத் திகழ்கின்றது என்பதற்கு யாதொரு ஐயமும் இல்லை, ஆறுமுகப் பெருமான் அடியெடுத்துக் கொடுத்த அப்பாடலை இன்று எத்தனை பேர் சரியாக வாசிப்பார்களோ? இறையுண்மையையும், பக்தியையும், திருப்புகழையும் சினிமாவிழுங்கி விட்டது.! முற்றிலுமுண்மை.

அருணகிரிநாதரை வயலூருக்கு முருகப் பெருமான் அழைத்து அவருக்கு ஒரு திருமுகத்துடனும் நான்கு திருக்கரங்களுடனும் மீண்டும் காட்சியளித்துத் தனது மயில்வாகனத்தையும், கடம்பமாலையையும், வடிவேலையும், சேவற் கொடியையும், திருவடியையும் வடிவேலையும், பன்னிருதோள்களையும், வயலூரையும் வைத்துத் தொடர்ந்து பாடும்படி பணித்தார். "பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்கிறார். இச் செய்தியைக் கந்தரனுபூதியில். உருவமற்ற இறைவனை அரூபியாகத் தியானம் செய்வது உடலுணர்ச்சியுடைய உயிர்களுக்கு எளிதான காரியமல்ல. ஆகவே நிர்க்குணப்பிரமத்தைச் சகுணப் பிரம்மமாக அடையாளங்களுடன் வழிபட வேண்டுமென முருகப்பெருமானே அருணகிரிநாத சுவாமிகளை இவ்விதம் பாடும்படி பணித்தார். "உயர் திருப்புகழ் விருப்பமொடு செப்பென எனக் கருள்கை மறவேனே" என்று கூறுகிறார். "வயலூர் வயலூர்" எனப்பாடி வயலூரின் பெருமையைத் திருப்புகழிலே விளக்குகிறார் அருணகிரிநாதர்.

திருப்புகழை உலகினுக்குத் தந்து பெருமைபெற்ற வயலூர் முருகப் பெருமானை, சூரியர், சந்திரர், அக்கினி, ஆகிய முச்சுடரும் வழிபட்டுப் பேறுகள் பெற்றதால் இந்த ஸ்தலம் மிகவும் புனிதமான. ஸ்தலமெனவுங் கருதப்படுகிறது. சூரியனும் சந்திரனும் அக்கினியும் விளக்க முடியாதென்றும் தனது பரமபதத்தையடைந்தவர்கள் முத்தியடைந்து விடுகிறார்களென்றும் அருளியிருக்கின்றார்.

அருணகிரிநாத சுவாமிகள் பக்தர் குழாம் சூழத் திருப்புகழ்பாடிக் கொண்டு முருப் பெருமான் கோயில் கொண்டுள்ள திருத்தணி மலையை வலம்வரும் போது துஷ்டர்கள் சிலர் திருப்புகழையும், அடியார்களையும் அவமதித்து எள்ளிநகையாடினர். மனம்வருந்திய அருணகிரிநாத சுவாமிகள் முருகவேளை நினைத்து "சினத்தவர் முடிக்கும்" என்னும் திருப்புகழ்ப்பாடலில் முதல் நான்கு அடிகளையும்

பாடவும் எம்பெருமான் அருளால் துஷ்டர்கள் அனைவரும் திடீரென நெருப்பில் எரிந்து சாம் பலானதையும் பின்னர் கருணையே உருவான சுவாமிகள் இப்பாடலின் அடுத்து நான்கடிகளைப் பாடவும் மாண்டவர்கள் மீண்டும் எழுந்து அடியார் களானதாகவும் கூறப்படுகிறது. இப்பாடலைத் தினநதோறும் பாராயணம் செய்பவர்களுக்குப் பூதப்பிரேத பைசாச வேதாளங்கள், பில்லி சூனியங்கள் முதலியவற்றால் எவ்வித பயமும் தீங்கும் நேரிடாது என்று சொல்லப்படுகிறது.

தமிழ்மொழியாற் பாடப்பட்டுள்ள தேவார, திருவாசகங்களும், திருப்புகழும் அற்புதங்கள் பலவற்றைச் செய்துள்ளமையையும், தீராப் பிணிகளைத் தீர்த்துள்ளமையும் பிரத்தியட்ச மாகக் காணலாம். வடமொழி மந்திரங்களை விடவும் தேவாரத்திருமுறை திருப்புகழ் என்பன அதிக ஆற்றலும், சக்தியும், சிறப்பும், மேன்மை யும், வாய்ந்தவை, பெரியபுராண அருளாளர் களும், நாயன்மார்களும், அருணகிரியார், அபிராமிப்பட்டர் போன்றோரும் அற்புதர்களே. அருணகிரித் தமிழ் சொட்டும் ஞானத்தமிழின் இனிமை புலப்படும் பாடல் இது:

"சினத்தவர் முடிக்கும் பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவர் உயிர்க்குஞ் - சினமாக
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருப்புகழ் நெருப்பென் - றறிவோம்யாம்

நினைத்ததுமளிக்கும் மனத்தையு முருக்கும்
நிசிக்கருவறுக்கும்- பிறவாமல்
நெருப்பையும் எரிக்கும் பொருப்பையுமிடிக்கும்
திறைப்புகழுரைக்குஞ்- செயல்தாராய்

தனத்தன தனத்தத் திமித்திமி திமித்தித்
தகுத்தகு தகுத்தத் - தனபேரி
தடுட்டுடுட்டுண் டெனத்துடி முழக்குந்
தனத்துடன் நடக்குங் - கொடுசூரர்

சினத்தையு முடற்சங்கரித்த மலை முற்றுஞ்
சிரித்தெரிகொளுத்துங் - கதிர்வேலா
தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்தென்
திருத்தணி யிருக்கும் - பெருமானே." 24

திருத்தணி முருகக்கடவுளை வேல் வகுப்பு, போர்க்களத்தலகை வகுப்பு, திருஞான வேழ வகுப்பு, திருக்கையில் வழக்கவகுப்பு, சித்துவகுப்பு, கந்தரந்தாதி. மயில்விருத்தம் ஆகியவைகளிலும் அருணகிரிநாத சுவாமிகள் போற்றிப்பாடியுள்ளார். திருத்தணிப் பெரு மானது அருளைப் பெற்றவர்களில் 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் வாழ்ந்த கருநாடக சங்கீத மும்மணிகளில் ஒருவரான முத்து சுவாமி தீட்க்ஷிதர் அவர்களும் ஒருவர். திருத் தணியில் இறைவனது சந்நிதியில் இப்பெரியார் மெய்மறந்து முருகவேளைத் தியானித்திருக் கும் போது, ஆறுமுகப்பெருமானே ஒரு சிறுவனது வடிவில் தோன்றி, இவரது வாயில் கற்கண்டைப் போட்டதாகவும் அன்று முதல் இவர் அற்புதமான கீர்த்தனைகளைப் பாடத்துவங்கிய தாகவும் சொல்லப்படுகிறது. இவரது கீர்த்தனை களில் "குருகுஹ" எனவருவதைக் காணலாம். இது அவரது முத்திரை. 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருவருட்பிரகாச வள்ளலார் எனும் ஜோதிராமலிங்க சுவாமிகளும் திருத்தணி முருகப் பொருமானை நினைத்து உருகி அப் பெருமானையே ஞானதேசிகனாகக் கொண்ட வர்கள். வள்ளலார் இளம்வயதிலேயே அந் தரங்கத் தெய்வவழிபாட்டில் திளைத்துக் கல்வி யிலாது காலங்கழிக்கவே அவரது தமையனான சபாபதிப்பிள்ளை தமது மனைவியாகிய பாப் பம்மாவிடம் வள்ளலாருக்கு வீட்டில் உணவு அளிக்கலாகாதென உத்தரவிட்டார். ஆயினும் அண்ணியார் அன்பும் ஆதரவுங் கொண்டு தம் கணவர் அறியாதவாறு மாலை வேளைகளில் உணவளித்து வந்தார். ஒரு நாள் அண்ணியின் கண்ணீரைக் கண்டு திடுக்கிட்ட வள்ளலார் தமையனார் சொற்படி வீட்டில் அமர்ந்து கல்வி பயின்று வரவேண்டுமெனக் கேட்டுக்கொண் டார். வீட்டிலுள்ள ஒரு சிற்றறையில் கண்ணாடி, திருவிளக்கு, புத்தகம், கற்பூரம் முதலியனவை களுடன் அமர்ந்து வள்ளலார் திருத்தணி கேசனை நினைந்து உருகவே கண்ணாடியில் எம்பெரு மான் தோன்றி இவருக்குக் கல்வியெல் லாம் ஓதாது உணரும்படி அருளினார். இதனைத்

திருவருட்பா ஐந்திலும், செல்வச்சீர்த்தி மாலை யிலும் பாடியுள்ளார். ஆகவே முருகக்கடவுளது பெருங்கீர்த்தி வியத்தற்குரியது. விளங்குவதற்கு அரியது.

“செவிகுளிர அருளும் செம்மலாக முருகனைக் கண்ட அருணகிரிநாதர்',

“செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்ப மொடு

செப்பென எனக்கருள்கை - மறவேனே”21

“சிவனார் மனங்குளிர உபதேசமந்ரமிகு

செவிமீதிலும் பகர் செய் - குருநாதா”22

என்றும், தமக்கு முருகனருயளியமையையும், சிவனுக்கு

முருகன் உபதேசித்தமையையும் கூறுகிறார்.

“ பக்தியால் யானுனைப்பலகாலும்

பற்றியே மாதிருப்புகழ் பாடி” 23.

என்றும்

“ முந்துதமிழ் மாலை கோடிக் கோடி

சந்தமொடு நீடு பாடிப்பாடி” 25

என்றும்,”

தெரிதமிழை உதவு சங்கப் புலவோனே” 2

என்றும்

“உபதேசமந்திரப் பொருளாலே

உனைநான் நினைத்தருள் பெறுவேனோ” 28

என்றும்,

“செந்தமிழ்பாணப்பாவலர்

சங்கித யாழைப் பாடிய

தென் திருவானக்காவுறை பெருமாளே” 25

என்றும் திருப்புகழ் வரிகளில் கூறுகிறார்

## முடிவுரை

அருணகிநாத சுவாமிகளின் திரு புகழைப் பாடப்பாட வாயினிக்கும் என்று கூறுவர். வாய் மணக்கும் என்றும் உண்டு. இரந் திரந்து ஞானத்தமிழால் முருகனை இள கவைக் கும் அருணகிநாதரின் கவிதாசாமர்த்தியம் வியக்கற்பாலது. மணிப்பிரவாள நடையிலே முத்தும் பவளமுங்கலந்தாற் போல வட சொல்லையும் தமிழ்ச் சொல்லையும் பொருத் தித் தனித்துவமான சந்தங்களிலே திருப்புகழை அருளியுள்ள அருணகிரிநாதர் அதில் தமது தன்னுணர்ச்சி அனுபவங்களையும் தெளிவுறக் கூறியுள்ளார். சிற்றின்பப்பொருளான பெண்களை இழித்தும், பழித்தும், அதேவேளை அவர்களின் மயக்கை நிலை நிறுத்தியும் திருப்புகழிலே சான்றுகள் தருகிறார்.

ஈழத்துத் திருத்தலமான திருக்கோணமலைத் திருப்புகழிலே பெண்கள் பற்றிக் குறிப் பிடும் பகுதிகள் தற்கால உலகிற்குப் பாட மாகிறது.

“விலைக்கு மேனியிலணிக்கோவை மேகலை

தரித்த வாடையு மணிப்பூனு மாகவே

மினுக்கு மாதர்களிடக் காம மூழ்கியே மயலூறி

மிகுத்த காமிய எனப்பாரு ளோரெதிர்

நகைக்க வேயுட லெடுத்தேவி யாகுல

வெறுப்ப தாகிய யுழைத்தேவிடாய்படு கொடி யேனைக்

கலைக்கமாகவே மலக்குடிலை மிகு

பிணிக்குளாகிய தவிக்காமலேயுனை

கவிக்கு வாய் சொலி கடைத்தேறவே செயுமொருவாழ்வே

கதிக்கு நாதனி யுனைத்தேடியேபுக

புமுரைக்கு நாயெனை யருட்பார்வையாகவே

கழற்குளாகவே சிறப்பான தாயருள் தரவேணும்

மலைக்கு நாயக சிவக்காமி நாயகர்

திருக்குமாரனை முகத்தாறு தேசிக

வடிப்ப மாதொரு குறப்பாலையாள் மகிழ் - தருவேளே

வசிட்டர் காசிபர் தவத்தான யோகியர்

அகத்யமாமுனி இடைக்காடர் கீரனும்

வகுத்த பாவினில் பொருட்கோலமாய்வரு -முருகோனே

நிலைக்கு நான் மறை மகத்தாபூசுரர்

திரிக் கோணமலை தலத்தாரு கோபுர

நிலைக்குள் வாயினில் கிளிப்பாடுபூதியில் -வருவோனே

நிகழ்த்து மேழ்பவ கடற்சூறை யாகவே

யெடுத்த வேல்கொடு பொடித்தூள தாஎறி

நினைத்தகாரிய மனுக் கூலமே புரிபெருமானே

முற்றும்

**அடிக்குறிப்புகள்**

1. திருமுருகன் பாமாலை, (2012), திரு வண்ணாமலைத் திருப்புகழ், மாதாமுத்ரா, சென்னை, ப.44
2. ஆறுமுகனுக்குகந்த ஆறுபடை வீடுகள், (1997), குன்றத்தில் குடியிருக் கும் தெய்வம், சென்னை.
3. மேலது,
4. மேலது,
5. மேலது,
6. மேலது,
7. மேலது, யாரந்த முருகன்,
8. மேலது,வேல்வகுப்பு, ப.20. செய்.
9. மேலது,கனடக்கணியல் வருப்பு , செய்21.
10. கந்தரலங்காரம், செய், 22.
11. கவிஞர் சோ.பத்மநாதன், முருகன்பாடல்.
12. ஆறுமுகனுக் குகந்த ஆறுபடை வீடுகள், சிதபரசுவாமிபாடல், செய்29.
13. மேலது, திருப்புகழ், ப.101.
14. மேலது, திருப்புகழ், ப.137.
15. மேலது, திருப்புகழ், ப 140.
16. மேலது, திருப்புகழ், ப 140.
17. மேலது, திருப்புகழ், ப 140.
18. மேலது, திருப்புகழ், ப 143.
19. மேலது, இருஞ்சித் திருப்புகழ் ப. 173.
20. கந்தரலங்காரம், செய், 72, ப, 184.
21. மேலது, திருவேளைக்காரன் திருவகுப்பு, ப 199.
22. மேலது, திருவேளைக்காரன் திருவகுப்பு. ப199.
23. மேலது, மார்க்கசகாயதேவர், திரிவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ், சிறு தேர்ப்பருவம் ப.199.
24. மேலது, திருப்புகழ், ப 225.
25. தனபாலசிங்கன், செ, (1973), வேலுண்டு வினை இல்லை,திருமகள் அழுத்தகம் சுன்னாகம் திருப்புகழ் , ப 16
26. அதேநூல், திருப்புகழ்
27. அதேநூல், திருப்புகழ். (இக்கட்டுரை யாளர்க்கு மனனமான திருப்புகழ்ப் பாடல் கள்)
28. அதேநூல், திருப்புகழ்.
29. அதேநூல், திருப்புகழ்.
30. அதேநூல், திருப்புகழ்.
31. அதேநூல், திருப்புகழ்.
32. அதேநூல், திருப்புகழ்.
33. அதேநூல், திருப்புகழ்.

முற்றும்




உலக இந்து மாநாட்டிற்கு தலைமை தாங்குகையில்




பாடசாலையின் 146 ஆவது ஆண்டு விழாவின் போது

# தலைமைத்துவம் LEADERSHIP

**பேராசிரியர்.தி.வேல்நம்பி** Ph.D.,
பீடாதிபதி
முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடம்
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

## அறிமுகம்
## Introduction

முகாமைத்துவத் தொழிற்பாடுகளுள் நெறிப்படுத்தலில் அடங்கும் ஒரு செயற்பாடே தலமைத்துவமாகும். தனிநபர் செயற்பாடாயினும் சரி, குடும்பமாயினும் சரி, நிறுவனச் செயற்பாடாயினும் சரி தலைமைத்துவம் மிகவும் இன்றியமையாதது. ஏன் நாட்டின் வளர்ச்சிக்கும் கூட நல்ல தலைமைத்துவம் அவசியமானது. இந்த வகையில் தலைமைத்துவத்தை முக்கிய தொழிற்பாடாகக் கொண்டிருக்கும் முகாமைத்துவம் மிகவும் பிரதானமானதாகக் கருதப்படுகின்றது. வினைத்திறனான செயற்பாடுகளினூடாக இலக்குகளை அடைந்து கொள்வதற்கு தலைமைத்துவம் அவசியமாகின்றது. இத்தகைய தலைமைத்துவத்தைப்பற்றி உன்னிப்பாகக் கவனிப்பது சாலச்சிறந்ததாகும்.

## தலைமைத்துவம்
## Leadership

தலைமைத்துவம் என்பது முகாமைத்துவத்தின் ஒரு இணைந்த பகுதியாகவும் முகாமைச் செயற்பாடுகளில் முக்கிய பங்கு வகிப்பதாகவும் காணப்படுகின்றது. திட்டமிடல், ஒழுங்கமைத்தல், ஊழியரிடல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் என்னும் ஐந்து முகாமைக் கருமங்களினுள்ளும் வழிநடத்தல் என்னும் தொழிற்பாட்டினுள் அடங்கும் ஒரு பிரதான கருமமே தலைமைத்துவமாகும். வெற்றிகரமான நிறுவனமொன்றுக்கு வினைத்திறனான தலைமைத்துவம் அவசியம் என்பதனால் முகாமையாளர்கள் அடிப்படையில் பிரதானமானவர்களாகவும், அந்த நிறுவனத்தின் அருமையான வளமாகவும் கருதப்படுகின்றார்கள் (Peter Drucker, 1954). காலத்துக்குக் காலம் நூற்றுக் கணக்கான புதிய நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இரண்டு வருடங்களுக்குள் அவற்றில் ஏறக்குறைய 50% ஆனவை தமது வியாபாரச் செயற்பாட்டிலிருந்து விலகிவிடுகின்றன. ஐந்தாவது வருட இறுதியில் மொத்தத்தில் 1/3 பங்கு நிறுவனங்களே சந்தையில் நிலைத்திருக்கின்றன (George Terry, 1960). இத்தகைய நிலைமைக்குக் காரணம் வினைத்திறனற்ற / பயனுறுதித்தன்மையற்ற தலைமைத்துவமேயாகும். எனவே நிறுவனங்களின் வளர்ச்சிக்கும், நிலைத் திருப்புக்கும் நல்ல தலைமைத்துவம் அவசியமாகின்றது.

தலைமைத்துவம் என்பது பொதுவான ஒரு நோக்கத்தை நோக்கிச் செயற்படவைக்கும் பொருட்டுத் தனிநபர்கள் அல்லது குழு மீது செல்வாக்குச் செலுத்தி அவர்களை வழிநடத்திச் செல்லும் ஆற்றலே ஆகும். எனவேதான் தலைமைத்துவமானது ஒரு இயங்கும் செய்முறை (Dynamic Process) எனப்படுகின்றது. பொதுவான நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான உதவியாளர் அல்லது கீழூழியர்களை (Subordinates) அவர்களது கடமைகளைச் சுய விருப்பின் படியும், போட்டியடிப்படையிலும், விடாமுயற்சியுடனும் செய்வதற்கெனச் செல்வாக்குச் செலுத்தித் தூண்டுகின்ற ஒரு கலையே தலைமைத்துவம் எனப்படுகின்றது. இன்னொரு வகையில் கூறின் கொடுக்கப்பட்ட ஒரு நிலைமையில் இலக்குகளை அடைந்து கொள்வதற்காக ஒரு தனி நபர், அல்லது குழுவின் செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு செய்

முறையே தலைமைத்துவம் எனலாம் (Hersey, Paul and Ken Blanchard, 1982). இங்கு ஊழி யர்களின் சுயவிருப்பார்ந்த செயற்பாடு (Willin gness) என்பது முக்கியமானது. ஏனெனில் இதுவே வெற்றிகரமானதும், பயனுறுதித்தன்மை யுடையதுமான தலைவர்களைப் பொதுவான முகாமையாளர்களிலிருந்து வேறுபடுத்தும் மூலமாகக் காணப்டுகின்றது. இங்கு தலை வனைப் பின்பற்றுவோர்களின் விருப்புத்தன்மை (Willin gness of the followers) என்பதற்குப் பெருமளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுதல் வேண்டும். ஏனெனில் இதுவே தலைவரை மற்றவர்களிலிருந்து வேறுபடுத்தி ஒரு உயர் வான இடத்தில் வைத்திருப்பதற்கான விசேட அம்சமாகக் கருதப்படுகின்றது. இதனடிப்படை யில் இத்தகைய தலைமைத்துவத் தொழிற் பாட்டினடிப்படையில் தலைமைத்துவம் என்பதனைப் பின்வருமாறு வரையறை செய்யலாம் (Chandan. S.J. 1977).

L=F(f.g.w.s)

இங்கு

L = Leadership – தலைமைத்துவம்

F = Function – தொழிற்பாடு

F = Followers – பின்பற்றுவோர்

G = Goal – இலக்கு


W = Willingness of subordinates- உதவியாளர்களின் விருப்பம்

S = A given situation - ஒரு கொடுக்கப்பட்ட நிலைமை

நேரடியாகக் கூறுவதாயின் "ஒரு கரு மத்தைத் தலைவன் எவ்வாறு ஆற்றவேண்டு மென்று விரும்புகின்றாரோ அதே போல் ஏனை யோரையும் தொழிற்படவைக்கும் கருமமே தலைமைத்துவம்" எனப்படுகின்றது. Terry (1977) என்பவருடைய கருத்துப்படி குழு இலக் கினை அடைவதற்காகச் சுயவிருப்போடு உழைப்பதற்கென ஊழியர்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒரு தொழிற்பாடே தலைமைத்துவம் எனப்படுகின்றது. வழிப்படுத்தி, ஒருங் கிணைத்து, மேற்பார்வை செய்யும் ஒருவருக்கும் பொது இலக்கினையடையும் செயற்பாட்டிலுள்ள மற்றவர்களுக்குமிடையிலான ஒரு தனிப்பட்ட உறவே தலைமைத்துவம் எனவும் வரையறுக்கலாம் (Fiedler, 1962).

எப்பொழுதும் தலைவன் தன்னைப் பின்பற்றுவோரை அல்லது தனக்குக் கீழே இருக்கும் உதவியாளர்களைத் தான் விரும்பிய வாறு தொழிற்படவைப்பவனாக இருக்கவேண் டும். இதனையே "நேர்க்கணியச் செல்வாக்கு" என அழைப்பர். இது எதிர்க்கணியச் செல் வாக்காக மாறிவிடக்கூடாது. சரியான தலை மைத்தும் இடம்பெறவேண்டுமாயின் தலைவன் எப்பொழுதும் மற்றையவர்களைவிடக் கூடிய வலுவினைக் கொண்டிருத்தல் வேண்டும். இதன்மூலம் இவன் மற்றையோர்மீது செல்வாக் குச் செலுத்துகின்ற நிலை உருவாகும். இத் தகைய செல்வாக்கு ஊழியர்களது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகவும் அமையும். இதனைப் பின்வருமாறு காட்டலாம்.

**தலைமைத்துவச் செய்முறை**




## தலைவர் எவ்வாறு இருத்தல் வேண்டும்

நல்ல ஒரு தலைவன் எத்தகைய இயல்பம்சங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதை நன்கு தெரிந்திருத்தல் வேண்டும். இவ்வகையில் நல்ல தலைவர் என்ற வகையில்

ஒருவர் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது பற்றிச் சில முன்மொழிவுகள் முன்வைக்கப்படு கின்றன.

1. தலைவரென்ற வகையில் தனது கடமை களைத் தானே முன்னெடுத்துச் செல்லும் ஆற்றலுடையவராக இருத்தல் வேண்டும். இங்கு தலைவர் ஊழியர்களில் தானும் ஒருவர் என்று எண்ணிச் செயற்பட வேண் டுமே தவிர தான் மற்றையவர்களிலிருந்து வேறுபட்ட, மிகவுயர்ந்த ஒருவர் என எண் ணிக்கொள்ளலாகாது. மாறாக மற்றவர்கள் "இவர் எங்கள் தலைவர்" எனக்கருதும் மதிப் பார்ந்த நிலையில் செயற்படுபவராக இருத் தல் வேண்டும்.

2. தலைவர் தனது உதவியாளர்களினது திற மைகளையும், ஆர்வத்தையும் அறிந்து கொள்ளக்கூடியவராக இருத்தல் வேண்டும். உதவியாளர் ஒவ்வொருவரும் வேறுபட்ட எதிர்பார்ப்புக்களையும், நடத்தையியல் அம் சங்களையும் கொண்டவராக இருப்பார். வேறுபட்ட திறமைகளையும், பலம், பல வீனங்களையும் கொண்டவர்களாக இருக் கலாம். எனவே தலைவர் இதயசுத்தியோடு செயற்பட்டு அவர்களது பிரச்சினைகளை யும் தவறான எண்ணங்களையும் போக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். இதனையே "மனித நடத்தைகளைப் புரிந்துகொள்ளும் பண்பு" என்பர். இன்னொருவகையில் கூறின் தலைவர் மற்றவர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும். ஒழுக்க மும், நன்னடத்தையும், துறைசார் அறிவும், செயற்பாட்டுத்திறனும் கொண்ட ஒருவர் இந் நிலையைப் பெற்றுவிடுவார். இதனையே "மற்றையோர் நிலைக்குள்ளாகுதல் (Empathy) என அழைப்பர்.

3. தமது துறை / தொழில்சார் அறிவையும், திறனையும் வளர்த்துக்கொள்ளுமாறு தனது உதவியாளர்களைத் தூண்டுதல் வேண்டும். இதற்கு முன் தலைவன் இத்தகைய அறிவை யும் திறனையும் கொண்டவராக இருத்தல் வேண்டும். ஒரு தலைவன் தனது அறிவையும் திறனையும் விருத்திசெய்யும் வகையில் தொடர்ச்சியாகக் கற்பவராகவும், பயிற்சிகளைக் கொண்டவராகவும் இருத்தல் சிறந்தது. அன்றேல் அவர் மற்றவர்களைத் தூண்ட முடியாது போகலாம் அல்லது மற்றவர்கள் வளர்ச்சி பெறுவதை விரும் பாதிருக்கலாம். இது சில வேளைகளில் தலைவனுக்கும் உதவியாளர்களுக்கு மிடையில் ஒருவித இடைவெளியை ஏற்படுத்தி விடலாம். இதன் காரணமாகவே தலைவர் அறிவும் திறனும் கொண்டவராக இருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப் படுகின்றார்.

4. தலைவன் உற்பத்தித்திறன் (Productivity) உடையவராக இருத்தல் வேண்டும். உற்பத் தித்திறன் என்பது வினைத்திறன் (Effici ency), பயனுறுதித்தன்மை (Effectiveness) என்பவற்றில் தங்கியுள்ளது. அதாவது உள்ளீடுகளுக்கும், வெளியீடுகளுக்கும் இடையிலான தொடர்பைக் காட்டுவதாக உற்பத்தித்திறன் அமைகின்றது. குறிப்பாகப் பாடசாலை மாணவ தலைவர்களை எடுத் துக்கொண்டால் அவர்கள் பெற்றுக்கொண்ட பயிற்சிக்கும், அடைந்துகொள்ளப்பட்ட சாதனைகளுக்குமிடையில் நேர்க்கணியத் தொடர்பு இருத்தல் வேண்டும். மாணவ தலைவர்கள் ஒழுக்கம், கட்டுப்பாட்டைப் பேணுவதில் வெற்றியடைய வேண்டும். விளையாட்டு மற்றும் போட்டி நிகழ்வுகளின் தலைவர்கள் தமது குழுவை வெற்றியடையச் செய்யும் வகையில் செயற்படுதல் வேண்டும்.

5. தலைவர் என்ற வகையில் ஒருவர் எத் தகைய தலைமைத்துவத்தைக் கொண்டிருப் பது சிறந்தது எனத் தீர்மானித்துக்கொள்ளு தல் வேண்டும். பொதுவாக சர்வாதிகாரத்

தலைமைத்துவம் (Dictational Leadership), ஏகாதிபத்தியத் தலைமைத்துவம் (Authoritarian Leadership), ஜனநாயகத் தலைமைத்துவம் (Democratic Leader ship), தலையீடற்ற அல்லது கட்டுப்பாடற்ற தலைமைத்துவம் (Laissez – fair / free – regin Leadership) எனப் பல்வேறு தலைமைத்துவ வகைகள் காணப்படுகின்றன (Stogdill.R,1974.,Sivalingam.T,2005.)

இவற்றுள் ஜனநாயகத் தலைமைத்துவமே சிறந்ததென்றும் அதிகாரத்தலைமைத்துவம் பொருத்தமற்றதென்றும் பொதுவாகப் பலரும் கருதுகின்றனர். ஆனால் ஒரு தலைவர் இவ்வாறு முற்கூட்டியே மனதில் எண்ணிக் கொண்டு தனது தலைமைத்துவப் போக்கைக் கொண்டிருப்பது தவறு. அது தொழில் முயற்சிகளையும், சந்தர்ப்பத்தையும் பொறுத்ததாக இருக்கவேண்டும். தலைவர் நிலைமைக்கேற்றவாறு தனது தலைமைத்துவ நடத்தைப் பாங்குகளை மேற்கொள்வதுடன் நிலைமையை மாற்றுபவராகவும் இருத்தல் வேண்டும். இவ்வகையில் மாணவ தலைவர் எதிர்கால இலக்குகளைக் கருத்திற்கொண்டு செயற்படுபவராகவும், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர் முதலானவர்களின் நம்பிக்கைகள், விழுமியங்கள், உளப்பாங்குகளைச் சீர்செய்பவராகவும், எதிர்காலத்துக்கான கருத்துக்களை விருத்தி செய்பவராகவும் இருத்தல் வேண்டும். இதுவே நிலைமைக்கேற்ப அல்லது நிலைமாற்றத் தலைமைத்துவத்தின் புதிய சிந்தனையாகவும் காணப்படுகின்றது.

6. துறை ரீதியான புலமையில் மாணவர்களிடையே வேறுபாடுகள் காணப்படலாம். புலமையுள்ளவர்களில் சிலர் அவற்றைச் சரியாக வெளிப்படுத்தமுடியாது கஷ்டப்படுகின்றனர். எனவே இவற்றை விருத்தி செய்வதற்குரிய வழிமுறைகளையும் பயிற்சிகளையும் தலைவர் புதிது புதிதாக முன்வைக்கலாம். தொடர்ச்சியான வழிகாட்டல் கருத்தரங்குகள், சமூகத்திலுள்ள பிரதான ஆளணியினர்கள், ஆற்றுப்படுத்துகைகள் போன்றன இவற்றுக்குத் துணையாக அமையும். எவ்வாறாயினும் சிறப்பான கற்றலிலும், இணைபாட விதானச் செயற்பாடுகளிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டும்.

7. பொருத்தமான வேலைகளுக்குப் பொருத்தமான ஊழியர்கள் (Right man for the right job) அமர்த்தப்படுதல் விரும்பத்தக்கது. அதாவது பொருத்தமான மாணவர்களுக்குப் பொருத்தமான செயற்பாடுகளையும் வேலைகளையும் ஒப்படைப்பது விவேகமுள்ள தலைவரின் பணியாகும். விளையாட்டு நிகழ்வுகளுக்கும், மன்றங்கள் மற்றும் அமைப்புக்களுக்கும் ஆட்களைத் தெரிவு செய்யும் போது பாரபட்சம் முகத்துதி பார்க்காது பொருத்தமானவர்களை தெரிவு செய்து கொள்ளுதல் வேண்டும். இத்தகைய தகைமை மாணவ தலைவர்களிடம் அமையப் பெற்று இருக்கவேண்டும்.

8. தலைவர் தன்னிச்சையாக முடிவெடுக்காது பங்குபற்றல் தீர்மானத்தை எடுப்பதே சிறந்தது. அதாவது தீர்மானமெடுத்தலில் உதவியாளர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இங்கு ஒரு சிலர் சொல்வதைமட்டும் கேட்காது பெறுமதியான கருத்துக்களை முன்வைக்கும் சகலரதும் ஆலோசனைகளையும் உள்வாங்கிச் சிறந்த தீர்மானத்தை எடுப்பவராக இருக்கவேண்டும். அத்துடன் புதிய செயற்பாடுகளின் நோக்கத்தை விளங்கிக் கொண்டு அதனையடையக்கூடிய வகையில் செயற்படுதல் வேண்டும். குறிப்பாகப் பாடசாலைகளில் கொண்டுவரப்பட்ட மாணவர் ஒப்படைத் திட்டமானது மாணவர்களது உருவாக்கல் அல்லது



திரு.S.தம்பு
1868



திருமதி.S.M.சீவரத்தினம்
1925



திரு.D.P.சீவரத்தினம்
1939



திரு.A.செல்லத்துரை
1951



திரு.H.W.A.நந்தானியேல்
1961



திரு.R.கந்தையா
1965



திரு.S.M.E.யோசேப்
1974



திரு.T.தியாகராஜா
1974



திரு.A.சின்னத்துரை
1977



திருமதி.R.சூசைரத்தினம்
1982



திரு.N.A.நாகராஜா
1983



திரு.T.முத்துக்குமாரசாமி
1986



திரு.N.சத்தியநாதன்
1991



திரு.K.மயில்வாகனம்
1992



திரு.P.முத்துலிங்கம்
1993



திருமதி.V.மேகலிங்கம்
1998



திரு.P.முத்துலிங்கம்
1999



திருமதி.V.மேகலிங்கம்
2003 – 2015



கந்தையா கனகம்மா நிதிய பரிசில் நாளில்



கோயிலாக்கண்டி மேற்கு ஸ்ரீ சரஸ்வதி சனசமூக நிலைய 46வது ஆண்டு நிறைவு விழாவில்




பாரதி சனசமூக நிலைய வைரவிழாவில்

படைப்பாற்றல் திறனை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டது. ஆனால் இன்று இது எந்தப் பாடசாலை யிலும் முழுமையாக அடையப்படவில்லை என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் கொடுக்கப்படும் வேலைகளைப் பெற்றோரோ அல்லது தெரிந்தவர்களோ எழுதிக் கொடுக்க மாணவர்கள் அதனை சமர்ப்பிப்பவர் களாகவே காணப்படுகின்றனர். இதனை ஆசிரியர்களும் அதிபர்களும் தெரிந்து கொள்ளவில்லையோ என்னவோ புரிய வில்லை. மாணவர்கள் தாமாகவே செய்யக் கூடிய ஆற்றலை விருத்திசெய்யும் வகையில் ஒப்படைகளை முன்னரே ஒப்படைத்துவிட்டு குறைந்தபட்சம் வகுப் பறையில் கொடுக்கப்படும் குறிக்கப்பட்ட நேரத்தில் அதனை நிறைவுசெய்து தருமாறு ஆசிரியர்கள் மாணவர்களை வேண்டும் வகையில் அறிவுறுத்தப்படுவது பொருத்த மானதாக இருக்கும். இந் நோக்கில் மாண வர்கள் தமது ஒத்துழைப்பை வழங்கு வதுடன் கலை கலாசாரப் போட்டிகளும் அவற்றில் பங்கேற்பையும் அதிகரிக்கும் வகையில் செயற்படுதல் வேண்டும்.

9. பக்கச்சார்பின்றி நடுநிலையோடு செயற் பட்டு உதவியாளர்களை ஊக்குவிப்பவராக இருப்பதுடன் நேர முகாமைத்துவத்தையும் (Time Management) பின்பற்றுபவராக இருத்தல் விரும்பத்தக்கது. தலைவர் தமது நாளாந்த வேலைகள் தொடர்பான அட்ட வணையை முற்கூட்டியே கொண்டிருப் பதுடன் அதற்கேற்ப கருமங்கள் நிறைவு செய்யப்படுகின்றனவா என்பதை உறுதி செய்து கொள்ளுதலும் வேண்டும். இந் நேர அட்டவணையானது வாராந்த அல்லது மாதாந்த அடிப்படையிலும் பேணப்படலாம். மாணவர்களை ஒழுங்காகப் பாடசாலைக் குச் சமூகமளிக்க வைக்கவும் நேரம் பிந்தாது வருகை தருவதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பாடசாலைக்கு வருகை தரும் மாணவர்கள் உரிய நேரத்தில் வகுப் பறைக்குச் சென்று உரிய நேரத்தில் தமது கற்றலை நிறைவு செய்கின்றார்களா என்பதைத் தமது மேற்பார்வை மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் மிகவும் அவசியமானதாகும்.

10. ஆசிரியர்களும் மாணவர்களும் மரியாதை யுடனும் கௌரவத்துடனும் (Respect and Dignity) நோக்கப்படுதல் வேண்டும். ஆசிரி யர்கள் நன்கு படித்த சமூக அறிவியல்ப் பின் னணிகளை உடையவர்கள். அவர்களுக் கென்று ஒரு தனிப்பட்ட பெறுமதி அல்லது விழுமியம் (Personal values) உண்டு. இதற் கமைய மாணவர்கள் ஆசிரியர்களுடன் மரியாதையாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

11. மேற்படி விடயங்களோடு ஒரு தலைவர் அடக்கம், பணிவு, நட்புத்தன்மை, நெகிழ்ச்சி, ஒழுக்கப்பண்பு, அர்ப்பணிப்பு, ஆளுமைசார் திறன் என்பவற்றைக் கொண்டிருப்பது அவ ரது தலைமைத்துவத்துக்கு வலுச்சேர்ப்பதாக அமையும்.

**முடிவுரை**

பாடசாலைகள் எமது சமூகத்தின் பிர தான சேவை நிறுவனங்கள் என்றவகையில் பாடசாலையில் மாணவ தலைமைத்துவம் பற்றிச் சற்று ஆழமாக இக் கட்டுரையில் பார்க்கப் பட்டுள்ளது. பாடசாலைத்தலைமைத்துவம், மாணவர்களின் தொழிற்பாடுகளும் பங்கும் சிறந்த தலைவருக்கு இருக்கவேண்டிய பல்வேறு அம்சங்கள் என்பன ஆழமாக எடுத்துக்காட்டுக் களுடன் ஆராயப்பட்டுள்ளன. இவை மாணவ தலைவர்களின் தலைமைத்துவப் பண்பினை அல்லது இயல்பை விருத்தி செய்வதற்கு உதவும் எனலாம்.

# பட்டப்படிப்புக் காலத்தினுள் கலைப்பட்டதாரிகள் நிறைவு செய்யக் கூடிய கற்கை நெறிகள் : ஓர் பார்வை

**திரு.எஸ்.எஸ்.உதயகுமார்**
சிரேஷ்ட விரிவுரையாளர் மற்றும் தலைவர்
பொருளியல் துறை .
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

- ❖ அறிமுகம்
- ❖ க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் கற்கக் கூடிய பாடங்கள்
- ❖ இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் கலைப்பிரிவில் ஏதாவது ஒரு கற்கை நெறியை தொடர்வதற்கான வாய்ப்புக்கள்.
- ❖ இலங்கைக்கு வெளியே உள்ள பல்கலைக் கழகங்களில் தொலைக்கல்வி மூலம் கலைப் பிரிவில் ஏதாவது ஒரு கற்கை நெறியைத் தொடர்வதற்கான வாய்ப்புக்கள்.
- ❖ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினுள் கற்கின்ற காலத்தில் கலைப்பிரிவில் தெரிவு செய்யக் கூடிய கற்கை நெறிகள்.
- ❖ யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்விகற் கின்ற காலத்தில் இளநிலைக் கலைப்பட்ட தாரிகள் தமது ஆளுமைகளையும் தொழில் வாய்ப்புக்களுக்கான தகைமைகளையும் வளர்த் தெடுப்பதற் கான வாய்ப்புக்கள்.
- ❖ கலைப்பட்டதாரிகளாக கற்று வெளியேறும் போது கூறக் கூடிய தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள்.
- ❖ முடிவுரை

## அறிமுகம்

இலங்கையில் முறைசார் கல்வி முறையின் கீழ் 6 வயதில் தரம் ஒன்றில் கற்றல் செயற்பாட்டில் உள் நுழையும் ஒரு மாணவன் அல்லது மாணவி 11 வருடங்கள் கல்வி கற்று க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய பின்னர் கிடைக்கின்ற பெறுபேறுகளின் அடிப்படையிலும் தமது குடும்ப சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டும் சில வேளைகளில் பெற்றோரின் கட்டாய திணிப்பின் காரணமாகவும் அல்லது சகபாடிகளின் தீர்மானத்தைக் கவனத்தில் கொண்டும் க.பொ.த உயர்தர வகுப்பிற்கான கற்கைநெறி தொடர்பான தெரிவு மேற்கொள் ளப்படுகின்றது இவ்வகையில் கா.பொ.த உயர்தர பரீட்சையில் உள்ள பாடங்களை அடிப்படை யாகக் கொண்டு ஐந்து முக்கிய பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளன.

1. கலைப்பிரிவு
2. வணிகப் பிரிவு
3. உயிரியல் விஞ்ஞானப் பிரிவு
4. பௌதீக விஞ்ஞானப் பிரிவு
5. தொழில் நுட்பப்பிரிவு

இக்கட்டுரை கலைப்பிரிவு மாணவர் களுக்காக எழுதப்பட்டுள்ளதால் கலைப்பிரிவு தொடர்பாக கற்கக் கூடிய கற்கை நெறிகள் தொடர்பான விபரங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

### க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் தெரிவு செய்து கற்கக் கூடிய பாடங்கள் தொடர்பான விபரங்கள்

**அ) சமூக விஞ்ஞானங்கள்/பிரயோக சமூகக் கற்கைகள்**

1. பொருளியல்
2. புவியியல்
3. வரலாறு
4. மனைப் பொருளியல்
5. விவசாயவிஞ்ஞானம்/கணிதம்/இணை கணிதம்

6. ஆறு தொழில்நுட்பங்களில் ஏதாவது ஒன்று (குடிசார் தொழில்நுட்பம், இரத்திரனியல், தகவல் தொழில்நுட்பம், விவசாயத் தொழில்நுட்பம், பொறி முறைத் தொழில்நுட்பம், உணவுத் தொழில்நுட்பம், உயிர் வள தொழில் நுட்பம்)
7. கணக்கீடு/ வணிகப் புள்ளிவிபரவியல்
8. அரசியல் விஞ்ஞான மூலங்கள்
9. அளவையியலும் விஞ்ஞான முறையும்
10. தொடர்பாடல் ஊடகக் கற்கைகள்
11. தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும்

**ஆ. சமயங்களும் நாகரிகங்களும்**

1. பௌத்தம்/பௌத்த நாகரிகம்
2. இந்து சமயம்/ இந்து நாகரிகம்
3. கிறிஸ்தவம்/கிறிஸ்தவ நாகரிகம்
4. இஸ்லாம்/ இஸ்லாமிய நாகரிகம்
5. கிரேக்க உரோம நாகரிகம்

**இ. அழகியற் கலைகள்**

1. சித்திரம்
2. நடனம் : அ) சிங்களம் ஆ) பரதம்
3. நாடகமும் அரங்கியலும் அ)சிங்களம், ஆ) தமிழ், இ) ஆங்கிலம்
4. சங்கீதம் : அ) கீழைத்தேய ஆ) கர்நாடக இ). மேலைத்தேய ஈ) மொழிகள்

1. வெளிநாட்டு மொழிகள்
   அ) சீனம், ஆ)பிரெஞ்சு, இ).ஜேர்மன், ஈ) கிந்தி உ) ஜப்பானிய மொழி, ஊ) மலாய், ஏ) பார்சிய ஏ) ரஸ்யமொழி, ஐ) உருது
2. சாஸ்திரிய மொழிகள்:
   அ) அரபு, ஆ) பாளி, இ) கிரேக்கம் ஈ) சமஸ்கிருதம், உ) இலத்தீன்
3. தேசிய மொழிகள்:
   அ) தமிழ் ஆ) சிங்களம், இ) ஆங்கிலம்

**இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் கலைப்பிரிவில் ஏதாவது ஒரு கற்கை நெறியைத் தொடர்வதற்கான நிபந்தனைகள்.**

1. அடிப்படைத் தகைமை: க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் குறைந்தது சாதாரண சித்தியை (S) பரீட்சார்த்தி பெற்றிருக்க வேண்டும்.

2. க.பொ.த உயர்தரத்தில் பாடத்தெரிவானது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருந்திருத்தல் வேண்டும்.

குறைந்தது ஒரு பாடத்தையாவது சமூக விஞ்ஞானங்கள்/பிரயோக சமூகக கற்கைகள் ஆகியவற்றிலிருந்து எடுத்திருக்க வேண்டும்.

சமயங்களும் நாகரிகங்களும் என்ற பாடத்தின் கீழ் வகைப்படுத்தப்பட்ட சமயமொன்றைப் பரீட்சாத்தி ஒருவர் எடுத்திருந்தால் அவர் அந்த சமயத்துடன் தொடர்பான நாகரிகத்தை எடுத்திருக்கக் கூடாது.

தொழில்நுட்ப பாடங்களில் ஒன்றைசமூக விஞ்ஞானங்கள்/பிரயோக சமூகக் கற்கைகளில் வேறு இரண்டு பாடங்களுடன் எடுக்க முடியும்.

மேற்கூறப்பட்டவற்றுக்கு விதிவிலக்காக ஒன்றில் மூன்று தேசிய மொழிகள் (தமிழ், சிங்களம், ஆங்கிலம்) அல்லது ஆகக் குறைந்தது ஒரு தேசிய மொழியை உள்ளடக்கி தேசிய மற்றும் சாஸ்திரிய மொழிகளின் இணைப்பு (உதாரணமாக சிங்கம், பாளி, சமஸ்கிருதம் அல்லது ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன்) கொண்டதாக இருக்கலாமே தவிர மூன்று சாஸ்திரிய மொழிகளை பரீட்சார்த்திகள் எடுத்திருக்கலாகாது.

இரு மொழிகள், உட்பட மூன்றாவது பாடமாக சமூக விஞ்ஞானங்கள்/ பிரயோக

சமூகக் கற்கைகள், சமயங்கள்/ நாகரிகங்கள் அல்லது அழகியற் கற்கைகள் ஆகிய வற்றில் ஏதாவது ஒன்றினை எடுக்க முடியும்.

**க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்ற மாணவர்கள் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் தெரிவு செய்து கற்கக் கூடிய கற்கை நெறிகள் பற்றிய விபரங்கள்.**

1. கலை (கலை இளமாணி, பொது கலை இளமாணி சிறப்பு)
2. கலை (SP) : – (இக்கற்கை நெறி கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிறிபாளி வளாகத்தில் மட்டும் உள்ளது) (க.பொ.த.சாதாரண தரத்தில் ஆங்கிலம் சித்தி கட்டாயம் அத்துடன் சிறிபாளி வளாகத்தால் நடாத்தப் படும் உளச்சார்ப்புப் பரீட்சையில் சித்தி) (150 பேர்)
3. கலை (SAB):– (இக்கற்கை நெறி இலங்கை சப்பிரகமுவப் பல்கலைக்கழகத்தில் மட்டும் உள்ளது) (பொருளியல், புள்ளிவிபரவியல், சமூகவியல், அரசியல் விஞ்ஞானம், சிங்களம், ஆங்கிலம், ஜப்பானிய மொழி, கிந்தி, சீனம், ஜேர்மன் பாடங்கள் எடுத்தவர்கள் விண்ணப்பிக்க முடியும். கலைப் பிரிவுக்கு 50% ஒதுக்கப்படும் (100 பேர்)
4. சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் (களனிப் பல்கலைக்கழகம், 3 வருடக் கற்கை நெறி, ஆங்கில மொழி போதனா மொழி. (35 பேர்)
5. சட்டம்
6. முகாமைத்துவக் கற்கைகள் :– (TV) (இக்கற்கைநெறி கிழக்குப் பல்கலைக் கழகத்திலும் வவுனியா வளாகத்திலும் உள்ளது)
7. கட்டடக்கலை
8. தொடர்பாடல் கற்கைகள் (க.பொ.த சாதாரண தர ஆங்கிலம் "C" தர சித்தி கட்டாயம்) கிழக்குப் பல்கலைக்கழக திருகோண மலை வளாகம்) 3 வருட கற்கைநெறி, (50 பேர்)
9. வடிவமைப்பு (கட்டடக்கலை)
10. நவநாகரிகம் வடிவமைப்பும் உற்பத்தி அபிவிருத்தியும்.
11. கணிய அளவையியல்
12. தகவல் தொழில்நுட்பம்
13. பட்டினமும் நாடும் திட்டமிடல்
14. தகவலும் தொடர்பாடல் தொழில் நுட்பமும்
15. கணக்கிடலும் முகாமைத்துவமும்
16. இஸ்லாமியக் கற்கைகள்: (தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இஸ்லாம் அல்லது இஸ்லாமிய நாகரிகத்தில் குறைந்தது 'S' சித்தி பெற்றிருத்தல், (200 பேர்)
17. அரபு மொழி : (தென்கிழக்குப் பல்கலைக் கழகம், அரபு மொழியில் ஆகக் குறைந்தது 'S' சித்தி பெற்றிருத்தல், (150 பேர்)
18. தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்
19. கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்
20. சங்கீதம் (375 பேர்) (ஆகக் குறைந்த தகைமை சங்கீதம் 'C' ஏனைய இரண்டும் 'S'), இராமநாதன் நுண்கலைக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அனுமதிக்கு உளச்சார்புப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை, போதனா மொழி கட்டாயம் தமிழ்
21. நடனம் (334 பேர்) ஆகக் குறைந்த தகைமை நடனம் 'C' ஏனைய இரண்டு 'S'), இராம நாதன் நுண்கலைக் கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், அனுமதிக்கு உளச்சார் புப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை, போதனா மொழி கட்டாயம் தமிழ்)
22. சித்திரமும் வடிவமைப்பும் (30 பேர்) ஆகக் குறைந்த தகைமை சித்திரமும் வடிவமைப் பும் 'C' ஏனைய இரண்டும் 'S') இராம நாதன் நுணகலைக் கல்லூரி– யாழ்ப் பாணப் பல்கலைக்கழகம், அனுமதிக்கு உளச்சார்பு பரீட்சை மற்றும் நேர்முக பரீட்சை போதனா மொழி கட்டாயம் தமிழ்)

23. நாடகமும் அரங்கியலும் (86 பேர்) ஆகக் குறைந்த தகைமை நாடகமும் அரங்கமும் 'C' ஏனைய இரண்டும் 'S' யாழ்ப்பாண பல் கலைக்கழகம், சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவனம் – கிழக்குப் பல்கலைக்கழகம் (போதனா மொழி கட் டாயம் தமிழ்).

24. கட்புலமும் தொழில்நுட்பவியல் கலையும் (50பேர்) ஆகக் குறைந்த தகைமை கலை 'C' ஏனைய இரண்டும் 'S', கட்புல அரங்கேற்றக் கலைகள் கிழக்குக் பல் கலைக்கழகம், (போதனா மொழி சிங்களம்)

25. கட்புலக் கலை (100 பேர்) ஆகக் குறைந்த தகைமை கலை 'C' ஏனைய இரண்டு 'S' கிழக்குப் பல்கலைக்கழகம், போதனா மொழி சிங்களம்)

26. முகாமைத்துவமும் தகவல் தொழில் நுட்பமும் (SEUSL): (இக்கற்கை நெறி இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் மட்டும் உள்ளது.

27. உடற்றொழில் கல்வி

28. விளையாட்டு விஞ்ஞானமும் முகாமைத் துவமும்

29. பேச்சும் செவிமடுத்தல் விஞ்ஞானமும்

30. விருந்தோம்பல் சுற்றுலா மற்றும் நிகழ்ச்சி கள் முகாமைத்துவம்.

31. தகவல் தொழில்நுட்பமும் முகாமைத்துவமும்

32. சுற்றுலாவும் விருந்தோம்பல் முகாமைத் துவமும்

33. தகவல் முறைமைகள்

34. நிலத்தோற்றக் கட்டடக்கலை பல்கலைக் கழக அனுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் பல கற்கை நெறிகளுக் கான அனுமதியை நாடலாம். உதாரணம் : சட்டம், கட்டடக்கலை, தகவல் தொழில் நுட்பமும் முாமைத்துவமும்...............

க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்ற மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அனுமதி கிடைக்கும் சந்தர்ப்பத்தில் அங்கு கற்கக் கூடிய கற்கை நெறிகள் பற்றிய விபரங்கள்:

**தெரிவு செய்யக் கூடிய பிரதான பாடங்கள்**

1. பொருளியல்
2. புவியியல்
3. அரசறிவியல்
4. திட்டமிடல்
5. சமூகவியல்
6. மானிடவியல்
7. வரலாறு
8. தொல்லியல்
9. மெய்யியல்
10. உளவியல்
11. இந்து நாகரிகம்
12. இந்து மெய்யியல்
13. ஊடகக் கற்கை
14. மனைப் பொருளியல்
15. கிறிஸ்தவ நாகரிம்
16. மொழியியல்
17. தமிழ்
18. ஆங்கிலம்
19. ஆங்கிலம் இரண்டாம் மொழி (ELT)
20. மொழிபெயர்ப்புக் கற்கை
21. சமஸ்கிருதம்
22. Fine Arts
23. நாடகமும் அரங்கமும்

க.பொ.த உயர்தரத்தில் கலைப்பிரிவில் கல்வி கற்ற மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஷேட அனுமதி பெறுவதன் மூலம் கற்கக் கூடிய கற்கை நெறிகள்.

24. சித்திரமும் வடிவமைப்பும் (இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார் மடம்.)
25. சங்கீதம் (இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார்மடம்.
26. நடனம் (இராமநாதன் நுண்கலைக்கழகம் மருதனார் மடம்)

27. சட்டம் (ஆங்கில மொழி மூலம்) விசேட அனுமதி)
28. முகாமைத்துவக் கற்கைகள் (ஆங்கில மொழி மூலம் – வவுனியா வளாகம்)

**கட்டாய பாடங்கள்**

1. அடிப்படை விஞ்ஞானம்
2. கணினி விஞ்ஞானம்
3. சமூக நல்லிணக்கம்
4. ஆங்கிலம் இரண்டாம் மொழி (மூன்று வருடங்கள் ஆறு பருவங்கள்)

**விருப்பத்துக்குரிய பாடங்கள்**

1. சிங்களம்
2. ஆங்கிலம்
3. பிரெஞ்ச்
4. சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்
5. நுண்பாக நிதி
6. வியாபார முகாமைத்துவம்
7. மனிதவள முகாமைத்துவம்

மாணவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கற்கின்ற காலத்திலேயே தமது ஆளுமைகளையும் தலைமைத்துவத்தையும் வளர்த்தெடுப்பதற்குக் கிடைக்க கூடிய ஏனைய சில வாய்ப்புக்கள்

1. Student Councilling – மாணவ ஆலோசகர்களது உளவள ஆலோசனைகள்
2. Carrier Guidance Unit தொழில் வழிகாட்டல் அலகு
3. Extramural Studies Units – புறநிலைப் படிப்பு அலகு
4. External Degree Unit- வெளிவாரிப் பட்டப் படிப்பு அலகு
5. Sport Science Unit - விளையாட்டு விஞ்ஞான அலகு
6. Opporunities of Cultural Activities – கலை கலாசார செயற்பாடுகளுக்கான வாய்ப்புக்கள் :– உதாரணம் கலைவார நிகழ்வுகள்
7. Department Student Societies – துறை ரீதியான மாணவர் மன்றங்கள்
   உதாரணம் 1.இளம் பொருளியலாளர் மன்றம், அரசறிவியல் ஒன்றியம் இந்து மன்றம், தமிழ் மன்றம்
8. Art Student Union – கலைப்பீட மாணவர் ஒன்றியம்
9. University Student Union – பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

**முடிவுரை**

இலங்கையில் இலவசக் கல்வியின் கீழ் ஒரு மாணவன் தனது கற்றல் செயற்பாட்டை ஆரம்பித்து பல பரீட்சைகள் எழுதி பல்கலைக் கழக அனுமதி பெற்று பட்டப்படிப்பையும் இலவசமாகவே பூர்த்தி செய்த பின்னரும் அரச தொழிலை மட்டும் (White colour Job) எதிர்பார்த்து நீண்ட நாட்கள் வேலையின்மை என்ற நிலையிலும் பின்னர் பட்டதாரிப்பயிலுனர் என்ற வகையில் கீழுழைப்பு நிலையிலும் காலத்தைக் கழித்து மனச்சோர்வடையாது தகைமை மற்றும் வினைத்திறனுடன் கூடிய ஆளுமையும் வளர்த்தெடுப்பதற்காக பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கின்ற காலத்திலேயே கிடைக்கின்ற அனைத்து சந்தர்ப்பங்களையும் உச்ச கற்கின்ற அளவில் பயன்படுத்தி நல்ல ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

**நேரம் பொன்னானது காலம் பொல்லாதது**
**நன்றி.**

"Know about our professional world and make our life happy"

**"தொழில் உலகை அறிவோம் வாழ்வை இனிமையாக்குவோம்.**



கற்றல் வளநிலைய மாகாணமட்ட 1ம் இட விருதுடன்




புலமைப்பரிசில் அதிபர்கள் கௌரவிப்பு



தேசியமட்ட கணிதவினாடிவினா முதலாமிட மாணவனுடன்

# திருவாசகத்தில் அறிவியல் சிந்தனைகள்

Dr.திருமதி.விக்னேஸ்வரி பவநேசன்
முதுநிலை விரிவுரை மாணவர் தரம் -I
யாழ் பல்கலைக்கழகம்.

தமிழில் எழுந்த பக்தி இலக்கியங்களின் வரிசையில் திருவாசத்திற்குத் தனித்துவமான சிறப்பு உள்ளது. பக்திப் பாவலர்கள் வரிசையில் மணிவாசகர் தலைமைத் தகுதி பெற்றவர் என்பது அனுபூதிமான்களின் அனுபவ வாக்கு. 'தேன்' எனப் பாராட்டத்தக்க திருவாசகப் பாடல்கள் மூலம் தமிழுக்கும் பக்தியின் மொழி என்ற பாராட்டை துறைசார் வல்லுநர்களிடம் பெற்றுத் தந்தவர் மணிவாசகர். அவர் தமது பாடல்களின் வழி வெளிப்படுத்திய இறையனுபவமே இத்தகைய மேன்மைக்குரிய காரணம். அத்துடன் இத்தகைய நிலைக்கான அடிப்படை அம்சம் அவர் இறைவனிடம் புலப்படுத்தி நின்ற பக்தி நிலை ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல் மூவரும் பாடியருளிய தமிழ் தேவாரம் எனப்படும். மணிவாசகர் பாடியருளியது திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு நூல்களுமாகும். பன்னிரு திருமுறையில் எட்டாவதாக வைத்து எண்ணப்படுவது. 'எட்டு' என்பது இறைவனுடைய திருவடியைப் பற்றுதற்குரிய ஒரு பண்பு. 'உணர்ந்து எட்டே' என்பார் திருமூலர். திருவாசகம் என்ற பெயர் திருவுடைய சொற்களால் ஆகிய அருள்நூல் எனப் பொருள்படும். இந்நூல் உருகாத உள்ளத்தையும் உருக்கிப் பசுத்துவங் கெடுத்து பதித்துவம் அருளவல்லது. ஆதலால் இது செந்தமிழுக்கு அன்பு மறையாய்ப் போற்றப்படுகின்றது. திருவாசகத்தைத் தேன் எனக் கூறுதல் மரபு. தேன் உடற்பிணிக்கு மருந்தாதல் போல் திருவாசகம் உயிர்ப்பிணிக்கு மருந்தாகின்றது.

தேவர் குறளும் திருநான்மறை முடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்-கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசக மென்றுணர்

எனவும்

தொல்லை இரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகமென்னுந் தேன்

எனவும் வரும் பாடல் அடிகளால் இந்நூலின் சிறப்புத் தெளிவாகின்றது. ஓதுவார் உள்ளத்தை உருக்கவைக்கும் பேராற்றல் மிக்கது. நாடு, மொழி, இனத்தால் வேறுபட்டவரையும் உருக வைக்கும் "திருவாசகத்திற்கு உருகார் ஒருவாசகத்திற்கும் உருகார்" என்றும் கூறுவர். மணிவாசகருடைய காலம் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது என்பர் அறிஞர்கள்.

"மணிவாசகருடைய வாய் திருவாய் அதுவும் ஒப்புயர்வற்ற மலர்வாய். அவர் திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் தேன் என்றார். அதைப் போல வாசகர் என்றால் மிக நுட்பமாகப் பரவும் தன்மையது. மலரிலிருந்து நுட்பமாக வெளிப்படுவது மணம். அதற்கு வாசகம் என்னும் பெயர் வாசம் என்றால் வாழ்கின்ற இடம் என்றும் ஒரு பொருள். மணம் என்று மற்றொரு பொருளும் உண்டு. மாணிக்கவாசகர் வாயிலிருந்து வெளிவந்த மொழிகள் வாழ்கின்ற, மொழிகள் இதனால் இதற்கு அடை சேர்த்துத் 'திருவாசகம்' என்று பெயரிட்டனர்" என்று தவத்திரு தேமொழியார் சுவாமிகள் குறிப்பிடும் கருத்து இங்கு குறிப்பிடத்தக்கது.

இத்தகைய அரிய தெய்வீகப் பாடல்களை இயற்றிய மணிவாசகரின் அறிவியல் சிந்தனைகள் பற்றிய ஆராய்வதே இக் கட்டுரையின்

நோக்கமாகும். மணிவாசகர் தம் கல்வி, அனு பவம் அறிவு எனும் இவற்றைத் துணை யாகக் கொண்டு அமைச்சர் பதவியை அடைந்தவர். வாரியார் சுவாமிகள் கூறியது போல் "பிறப்பின் உரிமையால் வருவது அரச பதவி, அறிவின் திறத்தால் வருவது அமைச்சர் பதவி ஆகும்" இவ ருக்கு வந்த அமைச்சர் பதவி என்பது அறிவின் திறத்தாலே வந்த பதவி என்பதில் ஐயமில்லை.

ஆதிமுதல் அந்தம்வரை அனைத்தை யும் அகக்காட்சியிலே காணக்கூடிய பேரறிவு நிலையே ஞானம். எல்லா நிகழ்ச்சிகளின் அடி நாத மாக, அடித்தளமாக அமைந்திருக்கும் ஒன்றே பிரம்மம் என்று உணரப்படுகின்றது. பிரம்மத்தோடு தன்னைஇணைத்துக்கொள்ளும் விஞ்ஞானி அறிவுவிழிப்பும், மெய்ஞ்ஞானி ஆன்ம விழிப்பும் அடைகிறான். புரியாத பல புதிர்களுக்கு விடையினை விஞ்ஞானியும் மெய்ஞ்ஞானியும் பெறுகின்றனர். புலன்களால் பொருள்களை உணரும் பொழுது மன அலைச்சூழல் மிகவும் விரைவாக இயங்குகிறது. அந்த விரைவு அகத்த வச் சாதனையால் குறைக்கும் நுண்ணிய நிலை யில் தான் மறை பொருட்களை உணரமுடியும். இந்நிலையை அல்ஃபாரைம் (Alpharhytham) என்பர். இந்த அல்ஃபாரைம் என்ற அதிர்வு நிலைக்கு மனத்தைக் கொண்டு சென்றோ மாயின் வான மண்டலத்திலுள்ள எண்ண அலை களையெல்லாம் தானாகவே வாங்கிக்கொள்ளக் கூடிய வலிமை மனத்திற்கு உண்டாகிறது என்றும் சிற்றறிவானது பேரறிவோடு ஒன்றி நிற்கும் யோகம் கைகூடுகிறது என்றும் சித்தர்கள் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆன்மஞானம் கைவரப்பெற்ற நிலை யில் தனக்குக் கிட்டிய இப்பேற்றை

"நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே
காட்டாதன வெல்லாங் காட்டிப் பின்னும்
கேளாதன வெல்லாம் கேட்பித் தென்னை

(திருச்சதகம், பாடல் எண், 28)

என்ற பாடலில் மணிவாசகர் விளக்கியுள்ளார். திருவம்மானைப் பகுதியிலும் இதனையே குறிப் பிடுவது நோக்கத்தக்கது.

மாணிக்கவாசகர் விஞ்ஞான அறிவைப் பெற்றுத் திகழ்ந்தார். அவருடைய அறிவியல் அறிவு பக்திக்கு இடையூறாக அமையவில்லை. எடுத்துக்காட்டாக திரு அண்டப்பகுதியைக் குறிப் பிடலாம். இத்திருவண்டப்பகுதியை மாணிக்க வாசகர் இணைக்குறள் ஆசிரியப்பாவில் பாடியுள்ளார். இணைக்குறள் ஆசிரியப்பா என்பது ஆசிரியப்பாவின் பொது விலக்கணம் பெற்று ஈற்றடியும் முதலடியும் தவிரப் பிற அடிகள் இரண்டும் பலவும் குறளடியானும் சிந்தடியானும் வருவது. மாணிக்கவாசகர் இயற்கை வெளி யிலே காணப்படுகின்ற அசைவுகளை யெல்லாம் இறைவனாகவே கண்டார். அவ்வாறு கண்டதை மிக அழகாகத் திருவண்டப் பகுதியில் உரைக் கின்றார்.

"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந்த தன்மை வளப்பெரும் காட்சி
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழைகதிரின் துன் அணுப்புரையச்
சிறிய ஆகப் பெரியோன்"

(திருவாசகம் 3)

இப்பாடலில் அண்டமாகிய பேருலகப் பகுதி களின் உருண்டை வடிவமும் அவற்றின் எல்லை யற்ற தன்மையும், வளப்பமும் ஒன்றுக் கொன்று மேலாக நின்று நூற்றொரு கோடிக்கு மிக்கன, வீட்டின் துறைவழிக் காணும் கதிர் அணுக்களை ஒத்து (அண்டங்கள்) சிறியனவென்று சொல்லும் படி பெரியோனாக விரிந்தும் பரந்தும் இறைவன் உள்ளான் எனக் குறிப்பிடுகிறார். இங்கு காணப் படும் சில அறிவியல் உண்மைகளை எடுத்துக் கொண்டு அவை தற்கால அறிவியல் புதுமைகளு டன் எவ்வளவிற்கு ஒத்துள்ளன என்பதை நோக் கினால், 'அண்டப்பகுதி' என மாணிக்கவாசகர் கூறியதை இன்று Universe என்று கூறுகிறோம். அதிலுள்ள உண்டைப் பிறக்கம் என்பதை Galaxy என்று கூறுகிறோம். நூற்றொரு கோடி யின் மேற்பட விடுத்தன என்பதை Expanding Universe என்கிறோம். இப்பாடலில், அண்ட மாகிய பெரும்பகுதியில் நூறுகோடியின் மேலாக உண்டைகள் பெருக்கமுற்று விரிந்தன என்கிறார் மணிவாசகர்.

பருமைக்கு உதாரணமாக இவ்வண்டத்தைக் கூறி இறைவன் இதனைவிடப் பெரியோன் ஆதலின் அவன் பெருமையை நோக்க இவ்வண்டமும் அணுவை ஒப்பச் சிறியதாய் விட்டது என்கிறார். எவ்வாறு அண்டத்தைப் பற்றி அறிந்திருந்தாரோ அதைப்போலவே அணுவைப் பற்றியும் அறிந்திருந்தார். இதனை,

"விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க

என்று குறிப்பிடுகின்றார். இதில் விரிந்த உலகமெல்லாம் கலந்து நிற்பவன், மிக நுண்மையான பொருளிலும் வியக்கத்தக்க நுண்மையாய் நின்று இயக்குவோன் காண்க என்கிறார்.

மாணிக்கவாசகர் அணுக்களின் திரட்சி பற்றியும் குறிப்பிட்டுள்ளார். எல்லாப் பொருட்களும் அணுக்களால் ஆனவை. ஒரு பொருளின் மிகச் சிறிய வடிவமே அணுவாகும். இவற்றின் கூட்டியக்கத்தாலேயே ஒவ்வொரு பொருளும் மதிக்கப்படுகின்றன. அதுவே அப்பொருளின் தன்மையாகிவிடுகின்றது. இதனை

"அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பெயர்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோர் நிழல் திகழ்
நீரில் இன்சுவை நிகழ்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன்"

(திருவாசகம் – திருவண்டப்பகுதி வரிகள் 20–6)

என்ற அடிகள் விளக்குகின்றன.

திருவாசகத்தில் கருவியில் (Embryology) பற்றியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. டார்வினின் பரிணாமக் கொள்கை பற்றிக் குறிப்பிட்டவர் அரிய மானிடப் பிறவி மாதந்தோறும் அடையும் வளர்ச்சி நிலையையும் விரிவாகப் பாடியுள்ள திறம் போற்றத்தக்கது. ஆண், பெண் சேர்க்கையால் உருவாவதே கருவாகும் அவ்வாறு உருவான நிலையிலிருந்து ஒவ்வொரு மாதமும் எத்தகைய பெருந்தடைகளைக் கடக்கின்றது என்பதை,

"மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
ஈனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்
ஒருமதித் தான்றியின் இருமையிற் பிழைத்தும்
இருமதி விளைவின் ஒருமையிற் பிழைத்தும்
மும்மதிதன்னுள் அம்மதம் பிழைத்தும்
அஞ்சு திங்களின் முஞ்சுதல் பிழைத்தும்
ஆறு திங்களின் ஊறவர் பிழைத்தும்
ஏழு திங்களின் தாழ்புவி பிழைத்தும்
எட்டுத் திங்களின் கட்டமும் பிழைத்தும்
ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்து"

(போற்றித் திருவகவல், வரிகள் 14–25)

என்ற அடிகள் படம்பிடித்துக் காட்டுகின்றன. நுண்ணியல் கருவிகொண்டு கைதேர்ந்த கருவியல் மருத்துவர் பார்ப்பதைப் போன்று துல்லிய மாகக் கணக்கிட்டுக் கூறியுள்ளார்.

இப்பரந்த உலகைத் தோற்றுவித்த இறைவன் அதில் வாழ உயிர்களையும் தோற்றுவித்தான். புல்லுண்டில் தொடங்கி மனிதனில் நிறைவுறும் இவ்வுயிர்க்குலம் முழுவதும் தொடர் கொண்டே நிலைபெற்று வருகின்றது. திருவாசகத்தின் தொடக்கப்பகுதியான சிவபுராணத்தில் ஓரறிவு உயிரிலிருந்து படிப்படியாக முன்னேறி ஆறறிவு உயிருக்கு வந்து, பேயாய்க் கணங்களால் ஆன பிறகு ஞானியாகிறார். அவ்வாறு ஆனபின்பு உச்சிக்கே போய்விட்டார். அங்கிருந்து பார்க்கும் போது தான் எந்தப் பிறவியிலிருந்து இந்தப் பிறவிக்கு வந்தோம் என்பதை உணர்கிறார். ஓரறிவில் இருந்து ஆறறிவுவரை வளர்ந்த நிலையைக் காட்டுகிறார்.

இதனை,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க்கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன், எம் பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்"

(திருவாசகம் 1, சிவபுராணம்)

என்ற அடிகளால் விளக்குகிறார்.

அணுவின் அமைப்பும் அண்டங்களின் அமைப்பும் ஒப்புடையனவாக உள்ளன என அறிவியலாளர் ஆய்வுகளால் மெய்ப்பித்துள்ள னர். இவ்வாறு அறிவியலறிஞர் ஆய்வுகள் மூலம் கண்டவற்றையே ஞானச் செல்வர்கள் உள்ளு ணர்வால் அநுபவமாகக் கண்டுள்ளனர். இவ் வகையில் அறிவியலறிஞர்களின் அனுபவ வியலும் ஞானச் செல்வர்களின் அனுபவ வியலும் ஓரிடத்தில் சந்திப்பதை நாம் அறிய முடிகின்றது. அணுக் கோயிலின் முன்நிற்கும் விஞ்ஞானிகளும் அண்டக் கோயிலின் முன் நிற்கும் மெய்ஞ்ஞானிகளும் ஒரே உண்மையைத் தான் காண்கின்றனர்.

ஊழியின் முடிவில் இந்த அகிலம் முழு வதும் அணுத்தத்துவமாக மாறும் என்பதையும் மீண்டும் படைப்புக்காலத்தில் அது அண்டங் களாக மாறும் என்பதையும் மெய்யுணர்வாளர் விளக்குகின்றனர். இந்த உண்மையினையே இன்றைய அறிவியலறிஞர்கள் புலனுணர்வைப் பன்மடங்கு பெருக்கும் கருவிகளைக் கொண்டு விளக்குகின்றனர். நாம் காணும் பொருள்கள் யாவும் அணுத்திரளைகளேயன்றி வேறொன் றுமில்லை என்பதை எடுத்துரைத்தனர். இதனையே அம்பலத்தில் ஆடும் ஆனந்தக் கூத்து விளக்குகின்றது. அணுவிலும் இந்த ஆனந்தக் கூத்தையே நாம் காணுகின்றோம் என்பதை மணிவாசகப் பெருமான்.

"பூதங்கள் ஐந்தாகிப்
புலனாகிப் பொருளாகிப்
பேதங்கள் அனைத்து மாய்ப்
பேதமிலாப் பெருமையினைக்
கேதங்கள் கெடுத்தாண்ட
கிளரொளியை மரகதத்தை
வேதங்கள் தொழுதேத்தும்
விளங்குதில்லைக் கண்டேனே"

(திருவாசகம் – கண்டபத்து – 10)

என்ற விஞ்ஞானத்தையும் மெய்ஞ்ஞானத்தை யும் ஒருங்கே காண்கின்றனர்.

முடிவாக நோக்கின்'அறிவே சக்தி' என்ற உண்மையை மெய்யறிவு பெற்ற மெய்ஞ் ஞானிகளும் அறிவியல் அறிவு பெற்ற விஞ்ஞானிகளும் ஒருதளத்தில் ஓரிடத்தில் ஒன்றாகவே சந்திப்பதை மாணிக்கவாசகரது திருவாசத்தினூடாக அறிந்து கொள்ள முடி கின்றது. அறிவியல் காணாத அல்லது காண முயலுகின்ற ஒன்றை ஆன்மீகவியல் கண்டு கொண்டது. விஞ்ஞானத்தின் முடிவு மெய்ஞ் ஞானம். அதுவே அறிவின் எல்லை. அண்ட சரா சரங்கள் எல்லாம் இறைவனின் படைப்பே ஆகும்.

**உசாத்துணை நூல்கள்**


1. திருவாசகம் ப.இராமநாதபிள்ளை விளக்க உரை
2. திருவாசகத்தில் ஓர் திறனாய்வு – டாக்டர் இந்திரா சோமசுந்தரம் – 1993
3. திருவாதவூரரும் சைவத்திருநெறியும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் – 2014
4. ஆன்மீகமும் அறிவியலும் – ந.சுப்பு ரெட்டியார் 1985
5. திருக்கேதீச்சரத் திருக்குடத்திரு மஞ்சனமலர் 1976

# மறை கலைத்திட்டத்தின் கவனத்தை வேண்டி நிற்கும் கட்டிளமைப்பருவம்

மகாலிங்கம் சத்தியகுமார்
விரிவுரையாளர் கல்வியியல்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## முகவுரை

கட்டிளமைப் பருவத்தினரிடையே அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனை, நெறிபிறழ்வான நடத்தைகள், விபத்துக்கள் போலித்தனம், தன்னம்பிக்கை இன்மை போன்ற தேசிய வியாதிகள் பலவற்றிற்குத் தீர்வுகாண வேண்டிய பொறுப்பு பாடசாலைகளிடமே சுமத்தப்படல் வேண்டும். ஏனெனில் மனிதனை மனிதனாக்கக் கூடிய கல்வியை வழங்குவதில் மிகவும் பொறுப்புவாய்ந்த நிறுவனமாகப் பாடசாலைகளே தொழிற்படுகின்றன.

உண்மையான கல்வி என்பது தகவல்களைச் சேகரிப்பதல்ல, அது மனதின் இயல்பான ஆற்றலை வளரச்செய்வது என சுவாமி விவேகானந்தர் குறிப்பிட்டுள்ளார். இதுவரை உலகம் பெற்றுள்ள எல்லா அறிவும் மனதிலிருந்து வந்ததே. பிரபஞ்சத்தின் எல்லையற்ற நூற் களஞ்சியம் சொந்த மனதிற்குள்ளேயே இருக்கிறது. புறவுலகம், மனிதன் தனது மனதை ஆராய்வதற்காக அமைத்த வெறும் ஒரு தூண்டுகோல், ஒரு வாய்ப்பு மட்டுமே, மனிதன் ஆராயப்போகும் பொருள் அவனுடைய மனம் தான். இதற்காகவே ஆன்மிகச் சிந்தனைகள் வழங்கப்படுவதற்கு முன் எமது கட்டிளமைப் பருவத்தினருக்குக் கல்விச் சிந்தனைகள் வழங்கப்படல் வேண்டும் எனச் சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தியுள்ளார்.

"ஒரு மனிதன் அறிகிறான்" என்பதைச் சரியான உளவியல் மொழியில் கூறுவதானால் கண்டுபிடிக்கிறான் அல்லது திரையை விலக்குகிறான் என்று கூற வேண்டும்.

அது போலவே ஒரு மாணவன் கற்கிறான் என்பது உண்மையில் அவன் எல்லையற்ற அறிவுச் சுரங்கமாகிய தன் சொந்த ஆன்மாவை மூடியிருக்கும் திரையை விலக்கிக் கண்டுபிடிப்பதையே குறிக்கும்.

இவ்வுலகில் வாழ்வதற்கான அறிவோ, ஆன்மிக அறிவோ எல்லாமே மனதில்தான் உள்ளது. பலரிடம் இவை கண்டுபிடிக்கப்படாமல் மூடப்பட்டிருக்கிறது. மூடியிருக்கின்ற திரைகள் மெல்ல மெல்ல நீக்கப்படும் போது நாம் 'கற்கிறோம்' என்று கூறுகிறோம். இதனையே சுவாமி விபுலானந்தர் எல்லா மனிதர்களுக்குள்ளும் அறிவு இருக்கிறது மனிதனுக்குள் இருக்கும் அறிவானது பட்டை தீட்டப்படாத வைரம் போல் இருக்கின்றது, எனக் குறிப்பிடுகின்றார். திரையை விலக்கிக்கொள்வதற்கும், பட்டை தீட்டி வைரத்தை ஒளி பெறச் செய்வது போல் அறிவைப் பிரகாசிக்கச் செய்வதற்கும் முன்மாதிரியான நடத்தைகளைக் கொண்ட மனிதர்களும் நிறுவனச் செயற்பாடுகளும் இன்றியமையாததாகும்.

ஏனெனில் ஒரு மாணவன் 13 வருடங்களைப் (6-18 வயது) பாடசாலையில் செலவழிப்பதுடன் மிக முக்கியமான பருவங்களை அப்பாடசாலைக் கல்வியினூடாகவே கடந்து வருகிறான்.

கல்வி என்பது என்ன? அது புத்தகப் படிப்பா? இல்லை, பல வகைப்பட்ட அறிவைத் தேடிக்கொள்வதா? அதுவும் இல்லை, மனதின் போக்கையும் வெளிப்பாட்டையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து பயனளிக்குமாறு

செய்கின்ற பயிற்சியே கல்வி. இப்பயிற்சி சமூகத்திற்கும் தனக்கும் நன்மை பயக்கக்கூடிய சிறந்த கலாசாரத்தை அல்லது பண்பாட்டை உருவாக்கும். (சுவாமி விவேகானந்தர்)

**பாடசாலைக் கல்வியில் கலைத்திட்டம்**

இலங்கையை பொறுத்தவரைக்கும் கட்டிளமைப் பருவத்தினருக்குப் பாடசாலையில் வழங்கப்படுகின்ற இலவசக் கல்வியானது திட்டமிடப்பட்ட வகையில் முயற்சித்து ஏற்படுத்தப் படும் சமூக மாற்றத்திற்கான முயற்சியாகவே காணப்படுகின்றது. அதற்காகவே காலத்திற்குக் காலம் இடைநிலைக் கல்வியில் கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் கட்டிளமைப் பருவத்தினரின் நெறிபிறழ்வான மற்றும் சமூக விரோத நடத்தைகளைக் கட்டுப்படுத்தவோ, குறைக்கவோ முயடிவில்லை. மேலும் மேலும் இந்நிலைமை அதிகரிப்பதையே காண முடிகிறது. கலைத்திட்டமானது எப்போதும் இரண்டு விடயங்களைக் கருத்தில் கொண்டுள்ளது. ஒன்று கலைத்திட்ட ஒழுங்கு, மற்றையது போதனாமுறைமை. போதனா முறைமை எனும் போது ஆசிரியரின் நடத்தைகள் தொடர்பான விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. கற்றல் கற்பித்தல் மற்றும் பாட, பாடப் புறக் கிருத்திய நடவடிக்கைகள் போன்ற அனைத்தும் இதிலடங்கும்.

பாடசாலைக் கலைத்திட்டமானது பூரண கலைத்திட்டம் எனக் குறிப்பிடக் கூடிய வகையில் முறையான, முறைசாரா, இணை, மறை, மேலதிக போன்ற கலைத்திட்டங்களை உள்ளடக்கிய கட்டாயமான கலைத்திட்டத்தைக் கொண்டது. பாடசாலை மாணவர் குறித்த வயதெல்லையைக் கொண்டவராக இருத்தலுடன் முழுநேர வருகையும் இன்றியமையாததாகும். இங்கு ஆசிரியர்களும் கலைத்திட்டமும் தொடர்புள்ள வகையில் செயன்முறை இடம்பெறும். இச் செயன்முறையின் மூலம் சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தேவையான பிரஜைகள் உருவாக்கப்படுகின்றனர். இச் செயன்முறையின் போது கட்டிளமைப் பருவத்தினரின் முக்கியத்துவம் கருத்தில் கொள்ளப்படுகிறதா? கருத்தில் கொள்ளப்படவில்லையா? என வினவினால் கருத்தில் கொள்ளப்படுவதில் பலவீனம் காணப் படுகின்றது என்பதனையே இன்றைய சமூக நிலைமை கோடிகாட்டி நிற்கின்றது.

சமூகம், கல்வி இலக்குகள், கலைத்திட்டம் ஆகியன ஒன்றுடனொன்று தொடர்புடையன. சமூகத்தின் இலக்குகளே பாடசாலையின் இலக்குகளைத் தீர்மானிக்கின்றன. மாணவர்களுக்குக் கற்பிக்க வேண்டியது எதுவெனத் தீர்மானிக்கவேண்டியது பாடசாலையின் இலக்காகும். கலைத்திட்டமானது பாடசாலைக் கல்வியின் இலக்குகளைத் தீர்மானிக்க முன்னர் சமூகத்தின் தேவைகளை இனங்காண வேண்டியது அவசியமாகும் இன்றைய நிலையில் எதிர்கால நாட்டைக் கட்டியெழுப்புவதில் முக்கிய பங்காற்றப்போகின்ற கட்டிளமைப் பருவத்தினரிடையே காணப்படுகின்ற தேவைகளை விசேடமாக இனங்காண்பது தவிர்க்க முடியாத தொன்றாகும்

இன்றைய பாடசாலை அறிவை மட்டும் வழங்கும் நிறுவனம் மாத்திரமன்று ஒரு குறித்த யாப்புக்கு அமைவாகப் பொதுப் பண்புகளுடைய வாழ்க்கை முறையைக் கொண்ட ஆசிரியர், மாணவர், மூத்தோர், இளையோர் அனைவரையும் உள்ளடக்கிய சிறப்பான ஒரு வகையானதுமான சமூகமாகும் (Spen's Report - 1935).

சமூகத்திற்குத் தேவையானது எது என்பதைச் சமூகம் அறியாவிடின் கல்வியிலும் சமூகத்திலும் சிக்கார்ந்த தன்மை உருவாகும். அது போலவே கட்டிளமைப் பருவத்தினரின் தேவைகளைப் பாடசாலையும், குடும்பமும் அறியாவிடில் இப்போது சமூகத்தில் காணப்படுகின்ற மலிந்துபோயுள்ள நெறிபிறழ்வான நடத்தைகளைக் கொண்ட மாணவர், சமுதாயமே உருவாகும். மாணவர்களின் இவ்வாறான

நடத்தைகள் எமக்கு சொல்ல விளைகின்ற செய்திகளாகவே பார்க்கப்படல் வேண்டும். அவர்களைக் கல்வியிலிருந்து புறந்தள்ளிவிட முடியாது.

எனவே சமூகத்தினால் தீர்மானிக்கப் படும் கல்வி இலக்குகள் இயன்றவரை கட்டிள மைப்பருவத்தினரை விளங்கிக் கொள்வத னூடாக அடையப்பெறும் வகையில் கலைத்திட் டம் தயாரிக்கப்படல் வேண்டும்.

## கட்டிளமைப் பருவத்தின் பண்புகள்

இளைஞனை/யுவதியை எதிர் காலத் துக்காகத் தயார்படுத்தல் கல்வியின் ஒரு பணி யாகும். தற்கால உலகைப் பொறுத்தவரை கட்டிளமைப் பருவத்தினரை எதிர்காலத்திற்குத் தயார் படுத்தலே கல்வியின் மிகப் பெரிய பணி யாகும். தற்போதுள்ள ஆசிரியர்கள் பெண்பிள்ளை களைவிட ஆண்பிள்ளைகளுக்குக் கற்பிப்பது கடினம் என்கிறார்கள். அதிலும் கட்டிளமைப் பருவத்திலுள்ள ஆண்பிள்ளைகளுக்குக் கற்பிப் பது மிகக் கடினம் எனவும், அவர்கள் தங்களைப் பார்க்கும் பார்வையே தம்மை கூச்சமடையச் செய்வதாகவும் கூறி அவர்களை அருவருப்பான பிறவிகளாக நோக்குகின்றனர். கட்டிளமைப் பருவத்தினரின் உன்னதமான தன்மைகள் இதனால் புறந்தள்ளப்படுகின்ற அல்லது கவனிக் காதுவிடப்படுகின்ற, கொடூரமான தண்டனைகள் வழங்கப்படுகின்ற செயற்பாடுகளினால் வீணே பாடழிந்து போகின்ற நிலைமைகளே இன்றைய இளம் சந்ததியினரின் நெறிப்பிறழ்வான நடத்தை கள் அதிகரிப்பதற்கும் கல்வி அடைவுகளில் ஏற்படும் பாதிப்பிற்கும் காரணமாக அமைகின் றனவோ? என எண்ணத் தோன்றுகின்றது.

கல்வி அடைவு என்பது மாணவர்களின் புள்ளிகளால் மட்டுமே தீர்மானிக்கப்படுவதாகக் கருத்தில் கொள்ளப்பட்டுப் பாடசாலை நிர் வாகம் மற்றும் கல்வி அதிகாரிகள் அழுத்தங் களைப் கொடுப்பதால் ஆசிரியர்கள் மூச்சுத்திண றும் நிலையிலேயே இவ்வாறான நிலைமைகள் நடந்தேறிவிடுகின்றன. ஆனாலும் கல்வி என்பது பாடசாலைகளுக்கோ, நூல்கள் வெளியீட்டிற்கோ எண் பெறுமானங்களுக்கோ வரையறைப்பட்ட ஒன்றன்று என்பதும் பிள்ளையின் ஆளுமை யைச் சமூகத்திற்குப் பொருத்தமானவாறு அல்லது கட்டிளமைப் பருவத்தினரின் சக்தியை சமூகத் திற்குப் பொருத்தமானவாறு பயன்படுத்துவதற்கு வகை செய்தல் வேண்டுமென 'பரன்ட்' என்பவ ரது கூற்றின் மூலம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும், வாழ்வின் கற்பனைகள் அனைத்தையும் வர வழைக்கும் பருவம் என்றும், தெளிவற்ற மனப்பனிகளுக்கு ஊடாகப் பயணம் செய்து பகற்கனவு காணும் பருவம் என்றும், புதிய விருப் பங்கள், புதிய அனுபவங்கள் புதிய சந்தர்ப்பங் களை நோக்கி விழித்தெழும் பருவம் என்றும் பேசப்படுகின்ற கட்டிளமைப் பருவம் (13-18 வயது) பிற்கால வாழ்வில் நின்று திரும்பிப் பார்க் கும் போது மிக அழகான பருவமாகத் தோற்ற மளிப்பது (கோகிலா மகேந்திரன் – 2008)

மற்றவர்களில் தங்கி வாழும் பிள்ளைப் பருவத்திலிருந்து தன்னாதிக்கமும் தன்னிறை வும் கொண்ட நிறையுடலியாக மாறும் பருவம் என்று இதனைச் சமுகவியலாளர் கணிக் கின்றனர்.

கட்டிளமைப்பருவத்தினரும் இளைஞர் களும் புதுப்புது எண்ணங்கள் உத்திகள், தூண் டல்கள் என்பவற்றுடன் திடீரென உணர்ச்சிவசப் பட்டு முடிவுகளை எடுப்பதன் மூலம் முழு மூச்சுடன் பலமானவர்களாகவும் மிகுந்த சக்தி மிக்கவர்களாகவும் செயற்படுவார்கள். இதனா லேயே கட்டிளமைப்பருவம் என்பது ஓர் இரண் டாவது பிறவி என Stanley Hall என்பவர் கருதுகின்றார்.

இந்தப் பருவத்தினர் தமது நிலை களைத் திடீரென மாற்றுவார்கள், மாறுவார்கள். தவறுகள் இழைப்பார்கள் முயற்சிப்பார்கள். எதற்

கும் துணிந்தவர்களாகவும் நம்பிக்கை உள்ளவர்களாகவும், அதேநேரம் குழப்பமடைந்தவர்களாகவும் பயந்தவர்களாகவும், இலகுவில் பாதிக்கப்படக் கூடியவர்களாகவும் பதற்றப் படுபவர்களாகவும் இருப்பர். பிழையாகவும் சரியாகவும் முயற்சிப்பார்கள், பரீட்சிப்பார்கள் மேலும் உடலிலும் உள்ளத்திலும் ஏற்படும் முக்கிய மாற்றங்கள் காரணமாக இவர்கள் அநேகமான நேரங்களில் சமநிலையான மனதுடன் இருப்பதில்லை. இதனால் புயல்வீசும் பருவம் என இப்பருவம் பொதுவாகக் குறிப்பிடப்படுகிறது.

சமூகமயமாக்கலில் ஏற்படுகின்ற பதற்றம், தன்னை அடையாளப்படுத்துவதில் ஏற்படுகின்ற குழப்பம் ஆகியவை காரணமாக புதிய புதிய உறவுகள், ஆழமான உயிருக்கு உயிரான சிநேகிதங்கள், பாலியல் நாட்டங்கள், கோபம், சண்டைகள், முரண்பாடுகள் காதல்கள், உன்னதமான இலக்குகள், இரக்கம், தியாகம் என்று மாறி மாறி ஒன்றுக்கொன்று முரணான பல உந்தல்கள் அவர்களுக்குள் தொழிற்பட்டுக் கொண்டிருக்கும். முதல் முறையாகத் தம்மை ஒரு பொருளாக எடுத்து ஆராய்வர். இதனால் தமது பெருமளவு சக்தியை வெளிவிடுதல் பின்னர் நன்றாகக் களைத்துப் போதல் ஆகிய இரண்டு எல்லைகளுக்கிடையில் ஆடிக்கொண்டே இருப்பார்கள் உலகை மேலும் சிறந்ததாக மாற்றுதல் என்ற பிரதான இலக்கைக் கொண்டு இவர்களில் பலர் இலட்சியவாதச் செயற்பாடுகளில் இறங்குவர் அதனால் தாய், தந்தை, பெரியவர்களிலும் பார்க்கச் சகபாடிகளின் கவனத்துக்கு கருத்துக்கு செல்வாக்கு முக்கியத்துவம் கொடுப்பர். இவர்களின் செயற்பாடுகளை விளங்கிக்கொள்வது கடினமாக இருக்கும்.

எதிர்காலம் நிச்சயமற்றதோ என்ற ஐயம் வரும், இப்படி இருந்தால் என்ன என்ற கேள்வி அடிக்கடி தோன்றும், இவர்களின் சில கற்பனைகள், கேள்விகள் பாடசாலைக்கும், வகுப்பறைச் சூழலுக்கும், சமுதாயத்திற்கும் பலத்த எச்சரிக்கையாகவும் இருக்கும் இந்தக் கேள்விகள் கற்பனைகள் காரணமாகத் திருப்பிக் கதைக்கும் பிள்ளையைப் பெற்றார் எதிர்கொள்வார்கள் வேறு வேறு சுய அடையாளங்களைத் தேடுவதால் குழப்பமடைவார்கள் ஆசிரியரைக் கேள்வி கேட்பார்கள் சில வேளை கிண்டலும் செய்வார்கள். ஆசிரியருடன் இணங்கிப் போகவோ அவரின் சொல்லுக்கு கீழ்ப்படிந்து அடங்கிப் போகவோ மறுப்பார்கள். குறியீடுகளைக் குறியீடுகளாகப் பார்ப்பதால் இரட்டை அர்த்தங்களில் கதைப்பார்கள் இதனால் ஆசிரியரின் வெறுப்புக்குரிய மாணவராக பாடசாலையில் மாறுவார்கள்.

இவ்வாறான வெறுப்பார்ந்த நிலைமைகளின் போது அவர்களுக்குத் தண்டனைதர முயல்வதனாலேயே முரண்பாடுகள், பிரச்சினைகள், நெறிப்பிறழ்வான நடத்தைகள் அதிகரிக்கின்றன. உண்மையில் கட்டிளமைப் பருவத்தினர் தாம் அன்பு செய்யப்பட வேண்டும் என்று விரும்புகிறார்கள். உடல் உள நிலைகளில் தாம் ஆரோக்கியமாக இருக்கவேண்டும் என்றும் தாம் நினைத்ததை நினைத்தபடி செய்துவிட வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். பாடசாலை நிர்வாகக் கட்டமைப்பு, பாடசாலை முகாமைத்துவ மற்றும் (கலைத்திட்டப்) போதனா முகாமைத்துவ செயற்பாடுகள், கட்டொழுங்குக் குழுவினரின் பணிகள் இவர்களை விளங்கிக் கொள்ளாத வகையில் அமுலாக்கப்படும் பொழுது அவர்களுக்கு ஏற்படும் சிறு தோல்விகள், வெறுப்பு, அன்பு கிடையாமை, அலட்சியம் ஆகியன அவர்களினுடைய அபரிமிதமான (சக்தி) ஆற்றல்களை வக்கிர உணர்வாகவும், வன்செயல் புரியும் விருப்பமாகவும், போதைப் பொருள்கள் மீதான நாட்டமாகவும் மற்றவர்களை வதைத்துப் பார்க்கும் (உடலாலும், உள்ளத்தாலும்) ஆசையாகவும் மாற்றிவிடுகின்றன.

இவையே ஆசிரியர்களின் கற்றல் – கற்பித்தல் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பதுடன் பண்புள்ள மாணவன், தொடர்பான

கேள்விக்கும் பெருஞ் சவாலாக அமைந்து விடுகின்றன.

ஆசிரியர்களைப் பொறுத்தவரை பாடம் தொடர்பான அறிவைத்தரும் பகுதியில் அனை வருமே நன்றாகச் செயற்படுகிறார்கள். நன்கு திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்ட கலைத்திட்டம் உள்ளது. அதனை அடிப்படையாகக் கொண்டு பாடத் திட்டங்களையும், கற்றல்–கற்பித்தல் முறை களையும் சிறப்பான முறையில் பயன்படுத்திப் பாடங்களைக் கற்பிக்கிறார்கள். இதில் எத்தனை ஆசிரியர்கள் பாடக் கலைத்திட்ட நடை முறைகளில் மறைந்திருந்து சமூக அபிவிருத்திசார் நிலையில் தொழிற்படுகின்ற மறை கலைத்திட்டம் தொடர்பாக ஆழமாகச் சிந்தித்திருக்கிறார்கள்.

மாணவர்கள் பண்புள்ளவர்களாக விளங்க வேண்டும் என விரும்பும் ஆசிரியர்கள் இன்றைய உலகமயமாதல் நிலைமைகளில் அவர்களிடம் நல்ல பண்புகளை வளர்ப்பது எப்படி என்பதனை அறியாதவர்களாக இருக்கின் றார்களா?

**பண்பாட்டு மைய கலைத்திட்டம்**

"குறிப்பிட்ட ஓர் இடத்தில் வெகுகாலமாக ஒன்றாக வாழ்ந்துவரும் மக்கள் கூட்டம், தங்களுக் கென்று சில கோட்பாடுகளையும், வரை முறை களையும் வகுத்துக்கொண்டு அவற்றிற்குத்தக்க வாறு வாழ்ந்துவரும் பொழுது அத்தகைய கூட்டத் தின் தனித்தன்மை, நறுமணம் போல் நம் கவனத் தைக் கவரும் வண்ணம் உள்ளது. இதுவே அவர் களின் கலாசாரம் என்பது (ஸ்வாமி சின்மயாநந்தர்) கருத்தாகும்.

கலாசாரம் என்பது பின்வரும் அம்சங் களைச் சார்ந்துள்ளது. அதாவது ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டம் ஓர் இடத்தில் ஒன்றாகக் கூடி நீண்டகாலம் வாழ வேண்டும். பொது வான சில பண்பாடுகளை, நெறிமுறைகளை மதித்து நடப்பவர்களாக இருக்க வேண்டும் அத்தகைய சூழ்நிலையில்தான் அம்மக்கள் கூட்டத்தை இனம்காண உதவும் ஒரு தனிப்பட்ட கலாசாரம் உருவாகும். இதற்கு மாறாக அவர்கள் ஒன்றுகூடி வாழாமல் இங்கொருவரும் அங்கொரு வருமாகப் பிரிந்து வாழ்ந்தாலோ அல்லது தங்களுக்கென்று பொதுவான சில பண்புகளை வகுத்துக்கொண்டு கூடி வாழாது எப்பொழுதும் இடம்மாறிக் கொண் டிருப்பாரானால் அவர்களைச் சுட்டிக்காட்ட உதவும் எத்தகைய கலாசாரமும் உருப்பெறாது.

இவ்வாறான சூழ்நிலையில் உருவாகும் சிறப்புத்தன்மை அல்லது குணாதிசயம்தான் கலாசாரம் என்றழைக்கப்படுகிறது. இது ஒரு தனிமனிதரின் குணாதிசயம் அல்லது, ஒரு கூட்டத்தின் ஒட்டுமொத்தக் குணாதிசயமாகும்.

தனிமனிதன் ஒரு குறிப்பிட்டவகையில் நடந்துகொள்ளும்போது 'அது அவனது இயல்பு' என்று நாம் பொதுவாகக் கூறுவோம். ஆனால் ஒரு சமூகம் வெவ்வேறு சூழ்நிலைகளில் ஒரு குறிப்பிட்டவகையில் நடந்துகொள்ளுமேயானால் அதனை அச் சமுதாயத்தின் கலாசாரம் என்று கூறுகிறோம். அதாவது தனிமனிதனின் நடத் தையை இயல்பு என்றும் சமுதாயத்தின் நடத் தையை கலாசாரம் என்றும் அழைக்கின்றோம்.

கலாசாரம் பண்பாடு என்றால் என்ன என்று தெளிவாகக்கூறுவது சிறிது கடினம். கற்பிப்பதன் மூலம் அதை விளக்க முடியாது. கலாசாரம் அல்லது பண்பாடு என்பது கற்பதாலேயோ (படிப்பதால்) கற்பிப்பதாலேயோ (போதிப்பதால்) அறிந்து கொள்ளக்கூடிய ஒன்று அல்ல ஆனால் அது எளிதாகக் கிரகித்துக் கொள்ளக்கூடியது. வீட்டிலே பேசப்படும் மொழியை குழந்தைகள் எப்படி அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப் படாமலேயே தாங்களாகவே கற்றுக்கொள்கிறார் களோ அது போலவே கலாசாரம் அல்லது நற் பண்புகள் அவர்களால் எளிதாகக் கிரகித்துக் கொள்ளப்படுகின்றன.

எவற்றைச் செய்யலாம் எவற்றைச் செய்யக்கூடாது என்று ஓயாது மாணவர்களுக் குப் போதிக்கும் ஆசிரியர்கள் அவற்றுக்கு மாறாக

வாழ்வார்களானால் மாணவர்கள் ஆசிரியரின் அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். நாம் முன்னுதாரணமாக நல்வழியில் வாழ்ந்து காட்டுவதுதான் அறிவுரைகளைக் காட்டிலும் மாணவர்கள் மனதில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும். ஆகவே தனிமனிதர்களாக விளங்கும் ஆசிரியர்களின் இயல்புகள் மாணவர் சமுதாயத் தின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களுக்கு காரணமாக அமைவதுடன் அது பண்பான/ பண் பற்ற பாடசாலைக் கலாசாரமாக அமைவதற்கும் காரணமாக அமைந்து விடுகிறது.

மாணவரைப் பொறுத்தவரையில் வீடும் பாடசாலையும் அவனின்/அவளின் வாழ் வின் மிக முக்கிய வாழ்விடங்களாகக் காணப்படு கின்றன. குடும்ப ஆரோக்கியம் குறையும் போது பிள்ளைகள் பெரும் நெருக்கீட்டுக்கு முகம் கொடுக்கின்றனர். அதேபோன்று பாடசாலை ஆரோக்கியம் குறையும்போது மாணவர்கள் நெருக்கீட்டுக்கு உள்ளாகின்றனர்.

மாணவர்களிடையே நல்ல பண்புகளை வளர்ப்பதில் குடும்பமும் பாடசாலையும் மிக முக்கியமான சமூக நிறுவனங்களாகும். தற் காலத்தில் பெரும்பாலான சமூகங்களில் புதிய விஞ்ஞான ஆய்வுகள் நாளுக்கு நாள் முன்னேற் றிச் சென்ற வண்ணமுள்ளன. சமூகத்தின் அபிவிருத்திக்கு இம் முன்னேற்றம் அவசியமான தாகும். சமூகத்தின் இடையறாத நிலவுகைக்கு உதவுகின்ற பிரதானமான நிறுவனம் பாடசாலை யாகும். சமூகத்தின் எதிர்கால முன்னேற்றமோ சீரழிவோ எதுவானாலும் அது தற்போதைய இளந்தலை முறையினரிலேயே தங்கியிருக்கும். தற் போதைய இளந் தலைமுறையினரை நற் பிரஜைகளாக மாற்றுவதில் பெரும் சேவையாற் றும் நிறுவனம் பாடசாலையாகும்.

பாடசாலை என்பது சமூகத்தில் இருந்து உருவாகிய சிறியதொரு சமூகமாகும். சமூகத் தின் அலகொன்றாக விளங்கும் பாடசாலை யானது ஒருவகைச் சிறப்புவாய்ந்த சமூகம் எனவும் ஸ்பென்சர் குறிப்பிட்டுள்ளார்.

தற்கால சமூகம் சிக்கார்ந்த தன்மை கொண்டது. பாடசாலை மீது பெரும் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பாடசாலை என்னும் வரையறைக்குள் கற்பித்தலை மேற் கொள்வ தென்பது சாத்தியமற்ற தொன்றாகும். எனவே பாடசாலைக் கலைத்திட்டமானது சமுதாய மையமானதாக அமையவேண்டும். அவ்வாறு சமுதாய மையமாக அமையவேண்டுமானால் பண்பாடுசார் மறை கலைத்திட்ட அம்சங்களிலேயே பாடசாலைகள் தமது கவனக்குவிப்பை மேம்படுத்தவேண்டுமென்பது தெளிவான உண்மையாகும். ஏனெனில் பாடசாலைகள் இரண்டு விதமாகச் செயற்பட வேண்டிய சூழ்நிலையைத் தற்போதைய கட்டிளமைப் பருவத்தினரின் நெறி பிறழ்வான நடத்தைகள் துரிதப்படுத்தியுள்ளன. இதனால் பாடசாலை யானது ஒரு தனிச்சமூகம் என்ற வகையிலும் புறச் சமூகத்தினரைப் பிரதிபலிக்கும் இடம் என்ற வகையிலும் செயற்படுவதற்கு ஏற்ற வகையில் புறச் சமூகத்தில் உள்ள அம்சங் களைக் கலைத்திட்டதினூடாகவே பிரதிபலித்தல் வேண்டும். இதற்குக் கருவியாக அமைவதே மறை கலைத் திட்டமாகும்.

**தகவல் தொடர்புப் புரட்சியில் ஆசிரியர்**

வட இந்தியாவில் கி.பி 300இல் நாலந்தா பல்கலைக்கழகம் 10,000 மாணவர்களுடன் சிறப் பாகச் செயற்பட்டுவந்தது. அத்தனை மாணவர் களும் தனித்தனியாக நேர்முகத் தேர்வுக்குப் பிறகு சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். "எப்படி அவர்களால் இது முடிந்தது என நான் வியக்கிறேன்" என்றார் சீன யாத்திரிகரான யுவான் சுவாங்.

இந்தக் கல்வி முறையில் மிக முக்கிய மானவர் குரு. மாணவனுக்கும் சமுதாயத்துக்கும் எது நல்லது என்பதை அவர் நன்கு அறிவார். சமுதாயத்தை நன்கு நடத்த அதன் முக்கிய பணிகளைச் செவ்வனே ஆற்றுவதற்கு சிறந்த தனிமனிதர்களை உருவாக்குவதே இந்தக் கல்வி முறையின் பிரதானமான நோக்கமாகும்.

கல்வியில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது அச்சுக்கலையின் அறிமுகம். கையெழுத்து முறை புழக்கத்தில் வந்தபோது கையால் எழுதப்பட்ட நூல்கள் மடாலயங்களில் பாதுகாக்கப்பட்டன. 500ஆண்டுகளுக்கு முன் அச்சிடும் முறை கண்டுபிடிக்கப்பட்டது. அச்சிடப்பட்ட நூல்கள் மாணவர்களின் கைகளில் தவழ்ந்தன. இந்த மாற்றம் ஆசிரியர்களைச் சற்றுச் சிரமப்படுத்தியிருக்கலாம்.

தொழிற்புரட்சிக்கு முன்புவரை கல்வியில் மாணவனின் 'பண்பு' என்பதே முக்கியத்துவம் பெற்றிருந்தது. மாணவர்கள் கல்வி கற்கும் மனநிலைக்குத் தயாரான பிறகே கற்பிக்கப்பட்டார்கள். அதற்கேற்ற வகையில் ஆசிரியர் மையமான கலைத்திட்ட முறையே பெரும்பாலும் நடைமுறையில் இருந்துவந்தது.

தொழிற்புரட்சி, பண்புப் பகுதியை முற்றிலும் மாற்றியது. தொழிற்புரட்சிக்கு நல்ல அறிவும் சிறிது தொழில்நுட்பமும் கொண்ட ஏராளமான பட்டதாரிகள் உடனடியாகத் தேவைப்பட்டார்கள். ஆகையால் தொழிநுட்பத்தை தொழிற்சாலைகளில் அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார்கள். இந்த நிலை கல்வியின் மூலம் பண்பு, ஆன்மீகம் என்ற கருத்தை முழுவதுமாகச் சிதைத்துவிட்டது.

**மறை கலைத்திட்ட நடைமுறை**

தேசிய ரீதியில் தயாரிக்கப்பட்ட கலைத்திட்ட அம்சங்களை பாடசாலைகளில் அமுலாக்கம் செய்யும் வகையில் பாடங்களைத் திட்டமிடுதல் மற்றும் கல்விக் கால அட்டவணை ஆகியவை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் பாடசாலைகளின் சுதந்திரமான நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன.

கற்றல் – கற்பித்தல் நடவடிக்கைகளில் ஆசிரியர்கள் தமது நடத்தைகளில் மிகவும் கவனமாக இருப்பதுடன் சிறந்த முன் மாதிரிகளாகவும் திகழ வேண்டும். அத்துடன் கட்டிளமைப் பருவத்தினரின் உடல் உள ஆற்றல்களை மேம்படுத்தும்வகையில் முறைசாரா கலைத்திட்ட நடைமுறைகளான இணைக்கலைத்திட்டம் (Co-Curriculum) மறை கலைத்திட்டம் (Hidden Curriculum) மற்றும் மேலதிக பாடஞ்சாரா கலைத்திட்டம் (Extra Curriculum) ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்துதல் வேண்டும். இதன்மூலம் சுதந்திரமான நடத்தைகளுக்கான சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு வழங்கமுடியும் என்பது வெளிப்படையாக உணர்த்தப்பட்டது.

பாடசாலைக் கல்விச் செயற்பாட்டில் வகுப்பறையில் இடம்பெறும் கற்றல் – கற்பித்தல் செயற்பாட்டிற்கும் புறம்பாக (மனிதனுடைய பண்பான வாழ்க்கைக்குத் தேவையான அனைத்துப் பயிற்சிகளும் முறையான கல்வி முறைமையில் வரையறைக்குட்பட்ட கால வேளைக்குள் ஒரு மாணவன் பெற்றுக்கொள்வதனைவிடப்) பரந்தள விலான அறிவும், பயிற்சியும் மறை கலைத்திட்டத்தினூடாகப் (முறைசாரா முறைமையின் மூலம்) பெற்றுக்கொள்ள முடியும். இதன்போது இணைக் கலைத்திட்டம் எனும் எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டு இணைப்பாட விதானச் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பாடசாலைகளில் 13 வருடங்களாக மாணவரின் நடத்தைக் கோலங்களை வடிவமைப்பது பாடசாலைக் கலாசாரம் என்கிற மறை கலைத்திட்டமாகும். கட்டிளமைப்பருவத்தினரின் சமூக விருத்திக்கான ஆற்றல்களை வழங்கி அவர்களைச் சமூகத்திற்குள் நகர்த்துவதில் பெரும் பங்குவகிப்பது இந்த மறை கலைத்திட்டமாகும். சுருக்கமாகக் கூறுவதாயின் மனிதப்பண்பியல் விருத்தியை உருவாக்கும் பாடசாலைகளின் தொழிற்பாடும் நடைமுறைகளுமே பாடசாலையின் மறை கலைத்திட்டமாகும்.

தகவல் தொடர்புப்புரட்சி காரணமாக இப்போது கல்விக்குக் காலமோ இடமோ ஒரு

தடையாக இல்லை. தகவல் தொடர்பின் மற்றோர் அங்கமான இணையத்தளங்களின் மூலம் மாணவர்கள் உலகில் சிறந்த ஆசிரியர்களை எங்கிருந்தாலும் தொடர்பு கொண்டு விளக்கம் பெறமுடிகிறது.

மாணவர்கள் எளிதில் இணையத்தளத் திற்குச் சென்று தங்களுக்குத் தேவையான தகவல்களைப் பெறுகிறார்கள். இவ்வாறு பெற்றுக்கொள்ளும் தகவல்கள் மூலம் தாம் அனுபவிக்கும் யாதேனுமொன்று தொடர்பாக மாணவரிடத்தே நம்பிக்கையும் அங்கீகரிப்பும் உருவாகும் போது நேர்க்கணிய மனப்பாங்கு விருத்தியடையும். இவ்வாறாக உருவாகும் மனப்பாங்குகள் சமூகத்தினால் (பாடசாலை மற்றும் வாழும் சூழல்) ஏற்றுக் கொள்ளப் படுபவையாகவோ மறுதலிக்கப்படுபவை யாகவோ அமையலாம். அறிவு கிடைப்பதன் விளைவாக முறையற்ற பாலியல் விளக்கங்கள், போதைப் பொருள் பயன்பாடு போன்ற சமூகம் அனுமதிக்காத பழக்கங்களுக்குக்கூட மாண வர்கள் அடிமைப்பட இடமுண்டு. அதே நேரம் இணையத்தளத்தில் தேடுதலின் மூலம் அதிக தகவல்களைச் சேகரித்துக்கொண்டு வகுப்பறைக் குள் நுழைந்து பதிலளிக்க முடியாத பல கேள்விகளை எழுப்புதலும் இடம்பெறுகின்றன. மாணவர்களின் பண்பு குறித்த கவலைக்கு இது ஒரு பெரிய காரணம். ஒரு கணினி நல்ல பண்புகளை வளர்க்குமா, என்று தெரியவில்லை. எனவே மாணவரிடத்தே பெறுமானம் மிக்க மனப்பாங்குகளை உருவாக்குவதிலேயே ஆசிரியர்கள் கவனம் செலுத்துதல் வேண்டும்.

இம் மறை கலைத்திட்டமானது பாட சாலையில் நடைபெறுகின்ற அனைத்து விடயங் களிலும் பங்குகொள்கின்ற அனைத்து மனித உயிர்களினதும் முன்மாதிரியான நடத்தைகளி லும் செயற்பாடுகளிலும் தங்கி யுள்ளது.

ஒரு பாடசாலையினுடைய இயக்கத் தில் காலை நடைபெறுகின்ற கூட்டுப் பிரார்த் தனையிலிருந்து பாடசாலை நிறைவடைந்து பாடசாலைக்கீதம் இசைக்கப்பட்டு மாணவர் கலைந்து வீடு செல்லும் வரையான அனைத்து வித செயற்பாடுகளும் உள்ள டங்கிய ஒரு நாள் பாடசாலை வாழ்க்கையானது மாணவனின் ஆளுமை உருவாக்கத்தில் மிகவும் முக்கியமான தாக்கத்தைச் செலுத்துகின்றது. அதிலும் கட்டிளமைப்பருவத்தினரிடையே காணப்படு கின்ற உன்னதமான ஆற்றல்களுக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்த அனுபவங்களைக் கொடுப்பனவாக அவை விளங்குகின்றன.

**முடிவுரை**

மறை கலைத்திட்டம் என்பது வெறுமனே அறிவைப் பெற்றுக்கொள்ளும் வகுப்பறைக் கற்றல் – கற்பித்தலுக்கு அப்பாற்பட்ட வகையில் மனிதநேயம், தலைமைத்துவம், ஆன்மிகம், புரிந்துணர்வு, விழுமியம், பண்பாடு ஒழுக்கம் பாரம்பரியத்தை பேணுதல், மென்திறன் மனித உணர்வுகளை கலாசார பன்மைத்துவத்தை மதித்தல் போன்ற பல பண்புகளை மாணவர் களிடத்திலே வளர்க்கின்றது.

உலகளாவிய ரீதியில் மதிக்கப்படு கின்ற ஒரு மாணவனை உருவாக்கும் வகையி லான பல கூறுகளை மாணவன் கற்றுக் கொள்ளும் வகையில் அமைந்துள்ள மறை கலைத்திட்டமானது ஒரு வகையில் கற்றுக் கொண்ட கலைத்திட்டமாகவும் அமைகின்றது. அறிவைப் பெற்றுக்கொள்வதோடு மட்டுமல்லாமல் வாழ்விற்கான கொள்ளலைக் கொண்டதாக விளங்குவது மறை கலைத் திட்டமாகும்.

எனவே கட்டிளமைப்பருவத்தினரிடையே காணப்படுகின்ற அண்மைக்காலமாக அதி கரித்து வருகின்ற நெறி பிறழ்வான நடத்தை களைக் கட்டுப்படுத்துவதற்கும் நேரான வழியில் அவர்களை மாற்றியமைப்பதற்கும் பாடசாலை களில் ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் எப்போதும் உறுதுணையாக அமைவது மறை கலைத்திட்டமாகும்.


ஏடு தொடக்குதலில்


மங்கல விளக்கேற்றலில் கல்விப்பணிப்பாளருடன்


கனடா பழைய மாணவர் ஒன்றுகூடலில் விருந்தினராக


மாணவ முதல்வர் தினவிழாவில் யாழ் பல்கலைக்கழக
பிரதம நூலகருடன்

கட்டிளமைப்பருவத்தினரை முகாமை செய்வது என்பது வர வரக் கடினமாகி வருகின் றது என்பது ஒரு பொதுவான குற்றச்சாட்டு ஆகும். ஆனால் வரலாற்றை நாம் ஒருமுறை திரும்பிப் பார்த்தால் எமது இனத்தின் பண்பாட் டைக் காத்துநின்று சீரழிந்து போகவிடாமல் வளர்த்துச் சென்றவர்கள் இந்த கட்டிளமைப் பருவத்தினரும் இளைஞர்களுமே! அதனை என் றென்றும் எவராலும் மறுத்துரைக்கவோ! மறக்கவோ! முடியாது.

ஆனாலும் கட்டிளமைப் பருவத்தினர் எந்தக் காலத்திலும் ஏனைய வயதுப் பிரிவினில் இருந்து வித்தியாசமானவர்களாகவே இருந் திருக்கிறார்கள். இதனை உலக நாடுகள் பலவற் றின் வரலாற்றைப் பார்க்கும்போது புரிந்து கொள்ள முடிகிறது. சமுதாயத்தின் ஏனைய பிரிவினர் அனைவரும் ஒட்டுமொத்தமாகத் திரண்டு இவர்களைக் கெட்டவர்கள் அடங்க மாட்டாதவர்கள், புரட்சிக்காரர்கள் என்று அழைக் கின்றபோது, ஏன் ஆசிரியர்களும் அவர்களுடன் சேர்ந்து கொள்கிறார்கள்.?

**உசாத்துணை**

1. கோகிலா மகேந்திரன் (2008) மனமெனும் தோணி சேமமடு பதிப்பகம், கொழும்பு.
2. சுவாமி விமூர்த்தானந்தர் (2013) வெற்றிக்கு வித்திடும் ஆசிரியர்களே! ஸ்ரீராமகிருஷ்ண மடம் மயிலாப்பூர் சென்னை – 4
3. ஸ்வாமி தேஜோமயானந்தர் (2009) இந்து கலாசாரம் ஓர் அறிமுகம் சென்ட்ஸ்? சின்மயாமிஷன் ட்ரஸ்ட் சேத்துப்பட்டு, சென்னை.
4. கோகிலா மகேந்திரன் (2015) நேர் கொண்ட பாவை கலை இலக்கியக்கள வெளியீடு தெல்லிப்பளை.
5. தயா சோமசுந்தரம் (2015) இளைஞர்களின் எதிர்காலம், (கட்டுரை) புதன் பொய்கை, உதயன் நாளிதழ்.
6. கலைத்திட்ட கொள்கையும் நடைமுறையும் தொகுதி II (மட்டம் 6) பட்டமேற் கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.
7. கினிகே.ஐ.எல்(2008) புதிய கலைத்திட்ட நோக்கும் பாடசாலைக் கல்வியில் எதிர் பார்க்கப்படும் மாற்றமும், கல்வி வாண்மைத் தேர்ச்சி அபிவிருத்தி மையம், பாதுக்கை.
8. Marsh, C.J. (1997) The hidden curriculum. Retrieved June 7, 2009 From http//w2. edu. hku.hk/lspace/pcedft.
9. Wren, D.(1999). School culture : Explori ng the hidden Curriculum. Retrieved June 7, 2009, From BNet database: http:// www.find artiles.com/plarticleslmi m2248/18 135 34/ai 60302524.
10. JASON MEHNER, yahoo Contributor Network. The use of Hidden Curriculum in Today's Schools Social class and the Hidden Curriculum of work JEAN ANYON
(Form: Journal of Educahon, Vol. 162, no.1, Fall 1980.)

# The steering wheel of a school is the principal

Miss. Yasothei.N
Teacher Navatkuli M.V

## Introduction

Principals play a key role in the day-to-day operations of being not only leader of the school but also to the society. They must guide their schools through the challenges, curriculum standards, achievement benchmarks, programmatic requirements generate complicated and unpredictable requirements for schools. They must manage with social agencies to serve children. Principals respond to increase diversity in student characteristics, including cultural background, income, physical and mental disabilities and variation in learning capacities. The purpose of this article is to give a message about the qualities of a principal to the society.

A principal should possess the following qualities to uplift an overall success of a school.

## 1. A clear vision

A principal is the leader of the school. They have the responsibility for every thing that goes in the school. Their attitude and vision needs to be loud and clear. They might find it useful to create their own vision statement which they post for all to see. They need to consistently enforce their own educational philosophy into the school setting.

## 2. Dedication

A good administrator must be dedicated to the school and all the decisions must be made in terms of the best interests of the students. A principal needs to embody "school sprit". It needs obvious to students that the principal loves the school and has their best interests at heart. Principals should normally be the first to arrive and the last to leave the school. This type of dedication pays enormous dividends with staff, students and society at large.

Good principals understand service leadership. They bring out the best in students, because they think independently. They give opportunities to enhance personality development and leadership qualities. The best principals read and learn about technology, teaching, research and society. The successful principals treat all the students like their own children. They advocate and own the responsibility for help the kids to succeed.

## 3. Problem solver

Problem solving is the core of the principal's job. In some cases the principals face difficulties in schools to solve the problems, because they have lack of leadership qualities. There are high number of disciplinary and financial issues in

schools. Principals face quite a number of difficult and challenging situations each day. Therefore they need to sharpen their problem solving skills by learning to prioritize and provide concrete steps to solve the issues at hand.

### 4. Provides support

Good teachers need to feel supported when teachers presented with a clear path to advancement by making professional development accessible, affordable and rewarding. Principals demonstrate their commitment to helping staff members grow professionally. Good Principals build on their teachers' strengths encouraging them to share knowledge, experience and skills with each other.

### 5. Listens and communicates effectively

Great organization of all types require great leadership. In today's evolving educational landscape listening and good communication are important components of successful principal for teachers satisfaction. A good principal has to listen to others such as assistant principals, teachers, students. parents and other non academic staff. They need to learn and practice active listening skills every single day. They also need to hear what is being said them with their own response. The best principals will routinely examine their communication skills. Then apply a variety of styles through the school day.

### 6. Fair and consistent

An effective principal must be fair and consistent. They need to have the same rules and procedures for all the teachers. She/He should not show favourism to a particular teacher or a group of teachers. They cannot allow their personal feelings or loyalties to cloud their judgement. They work to avoid teacher isolation, negativity and resistance. They encourage an upbeat, respectful and supportive professional environment. Positive solutions and growth are the norm not exceptions.

### 7. Advocates School to community

Teacher, parents, students and non academic staff work as a team for a successful administration. Principals must work with the staff to make school a welcoming place for all students and their families.

Nearly every educational framework policy depends on strong community involvement. School principals identify community engagement as a core element of leadership development agenda. A lack of resource is one of the leading catalysts for teacher attrition. Principals need to be powerful advocaters to their school's stakeholders in order to gain greater access to necessary resources. Schools understand that there is a direct connection between community, parent involvement and improved academic performance.

### 8. Highly visible

Being visible is the most frequently identified quality of a strong school leader. Dee Anna Manitzas, principal at the Accelerated Learning Middle School in San Antanio expresses that getting out of the office and seeing what's going on in the school is very important to the

welfare of every body- the students, the parents and the staff. By getting out of the office , a principal is able to take the "pulse" of what is actually happening inside and outside the class room.

A good principal must be seen. He or she must be out in the hall ways, interacting with students participating in pep rallies and attending sports matches. There presents must be important. So that students know who they are and also feel comfortable approaching and interacting with them.

**9. Good laugh cannot hurt**

A school principal definitely needs a sense of humour to be successful. They need to laugh at themselves, with their teachers and at the wonderful things the students do each day.

Marguerite McNeely principal at Oak hill high school said that so many traits were important for leadership qualities, but a good sense of humour is one she felt to keep good leadership from tiring and she expresses that if a principal took things too seriously he/she becomes quite dull and ineffective. A strong stern look lets a person know something is unacceptable. A grin and twinkle in the eye helps to perform the best of their abilities.

**Conclussion**

The principal is the person who is the captain of the ship. The ship of course is the educational system and the principal decides the direction of it. If a principal doesn't know where he/she going to head, how can all be there in the most efficient successful manner? Every trip needs to have a plan. Otherwise all will get lost and the purpose of education will be an unproductive trip. So in the journey of the education a principal of the school is the most important person.

If a principal possess the qualities mentioned in this article obviously we can taste the fruity development path. It is sure, that if the leadership does play a role in the success of the school, it can achieve in studies as well as in extra curricular activities.

P - <u>P</u>lans school activities and provide guidelines

R - <u>R</u>espects the wishes of the school population replies the requirements and listens.

I - <u>I</u>ndicates and commands school population and never dictates orders

N - <u>N</u>etworks to the school population and makes timely contacts.

C - <u>C</u>onsults with school population and conducts constructive changes.

I - <u>I</u>nstructs school population and accepts new ideas.

P - <u>P</u>articipates in school activities and encourages team work.

A - <u>A</u>ttracts school population and motivates them to learn and teach hard.

L - <u>L</u>eads school population to the right direction and learns from them.

**Bibiliography**

1. Coleman, Marianne, Glover and Derek (2010) educational Leader


வத்தளை புனித அன்னம்மாள் அதிபர், மாதிரி நூலக தரிசிப்பில்


146வது ஆண்டு விழாவில் இந்தியத் துணைத்தூதர் நூல்கள் அன்பளிப்பு செய்தபோது


தேசியமட்ட சிறுகதையாக்க முதலாமிடம் பெற்ற "நேர்கோடுகள் என்றும் வளைவதில்லை" சிறுகதைதொகுதி வெளியீட்டில்


அயற்பாடசாலை அதிபருக்கு சிறுகதைத்தொகுதி வழங்கி மகிழ்கையில்

ship and management : Developing Insights and skills, Open university press.

2. International Journal of advan cements in research and technolo gy volumes 2, Issue 10, October 2013.

3. Michael Fullan (2001) The Role Of The Principal In School Reform, Ontario Institute For Studies In Education University Of Toronto.

4. Shelly Habegger (2008) The Principal's Role in successful schools; creating and positive school culture.

# நக்கீரரும் திருமுருகாற்றுப்படையும்

க.ஈஸ்வரன்
தொழில்வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி
ஆசிரியர் மத்திய நிலையம் - வரணி,
தென்மராட்சிக் கல்வி வலயம்.

திருமுருகாற்றுப்படை கடைச்சங்க காலத்தில் தோன்றிய பதினெண் மேற்கணக்கு நூல்களில் பத்துப் பாட்டில் முதலாவதாக வைத்து எண்ணப்படுவதாகும்.

"முருகு பொருநாரு பாணிரண்டு, முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி" மருவினிய
கோல நெடுநல்வாடை, கோல்குறிஞ்சிப்பட்டினப்
பாலை கடாத் தொடும் பத்து"

என்னும் பத்துப்பாட்டு நூல்களுள் "முருகு" எனச் சிறப்பிக்கப்படுவது திரு முருகாற்றுப் படையாகும்.

முருகனது ஆறுபடைவீடுகளையும் போற்றிப்பாடும் திருமுருகாற்றுப்படை நக்கீரர் என்ற முத்தமிழ்ப்புலவனால் பாடப்பட்டதாகும். இந்நூல் திருமுறைகளுள் பதினோராம் திருமுறையில் நக்கீரதேவ நாயனார் இயற்றியதாகக் குறிக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். சுமார் 317 அடிகளைக் கொண்டதாக ஆசிரியப்பாவால் அமைந்திருக்கும் இந்நூலைப் பாடியருளிய நக்கீரர் யார்?

மதுரையைத் தலைநகராகக் கொண்ட கடைச்சங்கத்தின் தலைமைப்புலவன். செண்பகப்பாண்டிய மன்னனின் அவைக்களப் புலவன். மதுரைக்கணக்காயனார் என்னும் பெரும் புலவரும், ஆசிரியருமானவரின் புதல்வர். இவரது பிள்ளைத் திருநாமம் "பலாப்பன்" என்பதாகும். "கீரன்" என்ற இயற்பெயரும் கொண்டவர். சங்கரும் பரதகுலத்தைச் சேர்ந்தவர் என்பதைப் பற்றிப் பின்வரும் பாடல் புலப்படுத்துகின்றது.

"அங்கங்குலுங்க அரிவாளில் நெய்தடவிப்
பங்கம் படவிரண்டு கால்பரப்பிச் - சங்கதனைக்
கீர் கீர் என்றறுக்கும் கீரனோ என்கவியைப்
பாரிற் பழுதென்பவன்"

என்பது அப்பாடல் அகத்தியரிடம் இலக்கணம் பயின்றதால் முத்தமிழ் வல்ல புலமைத்துவம் மிக்க புலவனாய்த் திகழ்ந்தார். சங்க இலக்கியங்கள் பதினெட்டினுள்ளும் பல பாடல்கள் நக்கீரர் பாடியதாக விளங்குகின்றது. அவற்றுள்ளும் திருமுருகாற்றுப்படை இவரது சிறப்பான பக்திப்பாமாலையாகத் திகழ்கின்றது.

திருமுருகாற்றுப்படை எவ்வாறு பிறந்தது என்பதற்கு ஒரு கதையுண்டு. இறைவனின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. ஒரு முறை செண்பகப் பாண்டியனின் பட்டத்து மகாராணி நீராடிவிட்டுத் தன் கூந்தலை ஆற்றிக் கொண்டிருந்தாள். அப்போது வீசிய நறுமணம் மன்னனுக்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தியது. புலவர்களிடம் தன் சந்தேகத்தை வெளியிட்டு அதைத் தீர்த்து வைக்கும் படியாக கவிபாட வேண்டுகிறான். புலவர்கள் பாடினார்கள். ஆனால், மன்னனின் ஐயம் தீர்ந்ததாக இல்லை. எனவே, மன்னன் அரண்மனை வாயிலில் ஒரு வெள்ளிக் கம்பம் நாட்டி அதில் ஆயிரம் பொற்காசுகளடங்கிய பொற்கிழி வைத்து ஊரெங்கும் முரசறைந்தான். "மன்னரின் சந்தேகத்தைத் தீர்த்து வைக்கும் கவிபாடும் புலவனுக்கு பொற்கிழிப் பரிசு" என முரசறைபட்பட்டது.

அவ்வேளை "தருமி" என்னும் ஏழைப் புலவன் தன் திருமணத்திற்குச் செல்வமின்றித் திருமணம் செய்யாது காலம் கழித்து வருந்தி வந்தான். மதுரை சொக்கநாதப் பெருமான் மீது பக்தி பூண்ட தருமிக்கு அருள் செய்யத் திரு

வுளங் கொண்ட இறைவன் புலவனாக வந்து பாட்டைக்கொடுத்து மன்னனிடம் அனுப்பினார். தருமி பாட்டுடன் சென்றான். மன்னன் முன் பாடினான். இது தான் அந்தப்பாடல்

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழியுமோ!
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறியெயிற்று அரிவைக் கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே"

பாடலைக் கேட்ட மன்னன் மகிழ்ந்தான். சந்தேகம் தீர்ந்தது. பொற்கிழியை பெற்றுச் செல்லுமாறு புலவனுக்குக் கட்டளையிட்டான். புலவன் பொற்கிழியை அறுக்கச் சென்ற போது "நில்" என்று தடுத்தது ஒரு சிம்மக்குரல் அந்தக் குரலுக்குரியவர்தான் நக்கீரர். பாட்டில் பிழையுண்டு. பாட்டை எழுதியவரை அழைத்து வா எனக் கூற இறைவன் தருமிக்காக வாதாடினான். தருமிக்குப் பரிசும் பெற்றுக் கொடுக்கப்பட்டது.

பாடலின் மையக்கருத்து இயற்கையாகவே பெண்களின் கூந்தலுக்கு மணமுண்டு என்பதாகக் கூற. நக்கீரர் மறுத்து, வாசனைத் திரவியங்களைப் பூசுவதாலும், மலர்களைச் சூடுவதாலுமே மணம் உண்டாகும். இயற்கையாக மணம் இருக்க முடியாது என வாதாடினார். உயர்சாதிப்பெண்கள், கற்புக்கரசிகள், தேவலோக மகளிர், சரஸ்வதி, பார்வதி அனைவருக்கும் இதே நிலை தான் என்று ஆணவம் மேலிடப் பேசிய நக்கீரன் சக்தியை இழிவு செய்துவிட்டான் என்றதனால் தண்டனை வழங்கப்பட்டது. இறைவன் நெற்றிக்கண்ணைத் திறந்தார். நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என்று வாதாடினார் நக்கீரர். தீப்பொறி பறந்தது. நக்கீரரைச் சுட்டது. வெப்புநோய் தாங்காது ஓடினார் நக்கீரர். பொற்றாமரைக் குளத்தில் விழுந்தார். ஆணவம் அகன்றது. இறைவனிடம் மன்னிப்புக் கேட்டார். சக்தியை இழிவு செய்ததால் கைலயங்கிரி சென்று சக்தியை வணங்கினால் நோய் நீங்கும் என இறைவன் கூற கைலயங்கிரிக்குப் புறப்பட்டார் நக்கீரர்.

இந்த இடத்தில் சிவன் செய்தது சரியா? என்ற வினா எழுகின்றது. ஆனால், நக்கீரர் மன்னிப்புக் கேட்டதிலிருந்து சரியென்றே ஏற்றுக் கொள்ளப்பட்டது. அது நிற்க நக்கீரர் பேசியது சரியா? என்றொரு வினாவும் எழுவதாகின்றது. நக்கீரர் பேசியது புன்னெறி வாய்மை என்கின்றது. புலமை உலகம் அதாவது தமக்குத் தெரிந்ததைப் பேச வேண்டும். தமக்குத் தெரிந்ததைப் போல் பேசுவது தவறு. அத்தோடு நக்கீரர் தமிழ்ச்சங்கப்புலவர் எல்லாம் தெரிந்திருக்க வேண்டும் என்ற நியாயமும் கற்பிக்கப்படுகின்றது. எனவே தண்டனை நியாயம் தான். இன்னொரு வகையில் தம்மால் இயலாத ஒன்றைப் பிறர் செய்து விட்டார் என்ற பொறாமை காரணமாக எழுந்த ஆணவந்தான் நக்கீரரை இவ்வாறு பேச வைத்தது என்கின்றனர். எது எவ்வாறாயினும் நக்கீரன் இறைவனோடு வாதம் செய்தவன் என்ற பெருமை நிலைநாட்டப்பட்டமை புலமை உலகிற்குக் கிடைத்த பரிசு என்றே கருதலாம்.

கைலயங்கிரி நோக்கிச் சென்ற நக்கீரர் திருப்பரங்குன்றத்தை அடைந்து ஒரு குளக்கரையில் சிவபூசை செய்யத் தலைப்பட்டார். அங்கே கற்கிமுகி (குதிரைமுகம்) என்ற பூதம் சிவபூசை செய்பவர்களைத் திசை திருப்பி ஒரு குகையில் அடைத்து வைத்துள்ளது. ஆயிரம் பேரை உண்ண வேண்டும் என்பது பூதத்தின் விரதம் 999 பேர் குகையில் அடைத்தாயிற்று. ஆயிரமாவது ஆளாக நக்கீரர் வந்து சேர்ந்தார். இப்போது குகையில் இருப்பவர்கள் மரணபயத்தால் நடுங்கினர். துன்பப்பட்டனர். துயரப்பட்டனர். நக்கீரரை தூசிக்கவும் தலைப்பட்டனர். விடயமறிந்த நக்கீரர் முருகனை நினைந்தார். திருமுருகாற்றுப்படை பாடினார். முருகன் அருளால் பூதம் அழிக்கப்பட்டது. சிவனடியார்கள் காப்பாற்றப்பட்டனர்.

நக்கீரர் முருகனை வேண்டிக் கைலயங்கிரியை திருக்காளத்தியிலே தரிசித்து அங்கு பார்வதி தேவியைத் வணங்கி நோய் நீங்கப்

பெற்றார் என்பது கதை. இது சிவபெருமானின் திருவிளையாடல்களில் ஒன்றாக அமைக்கப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

திருமுருகாற்றுப்படை சங்க இலக் கியங்களில் ஒன்றாகத் திகழ்கின்ற போதும் பக்தி மணம் கமழும் சிறந்த இலக்கியம் என்பது குறிப்பிடத்தக்கது. முருகப்பெருமானுடைய அருளைப் பெற்று சீவன்முத்தி நிலையடைந்த புலவன் அந்தப் பெருமானிடம் ஆறாக்காதல் கொண்டு அவனையடையத் துடிக்கும் ஆர்வலனான புலவனுக்கு வழிகாட்டுகிறான். அதனால் புலவராற்றுப்படை என்றும் இது சிறப்பிக்கப் பெறுகின்றது. எனினும் மறுமைப்பேற்றை நல்கும் பெருமானுக்கு ஆற்றுப்படுத்துவதால் அப் பெருமானின் பெயரிலேயே அமைந்து விளங்குகின்றது.

திருமுருகாற்றுப்படையில் முதலில் சிறப்பிக்கப்படும் படைவீடு திருப்பரங்குன்றம்.

"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிர் ஒளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை
மறுஇல் கற்பின் வாள்நுதல் கணவன்"

எனத் தொடங்குகின்றது திருமுருகாற்றுப்படை. "உலகம்" என்ற மங்கலச் சொல்லால் துவங்குகின்ற நக்கீரர், கம்பர், சேக்கிழார் போன்றோருக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றார். வள்ளுவனும் தனது முதற்குறளில் உலகை முதன்மைப்படுத்துகின்றான்.

"திருப்பரங்குன்றம்" மதுரை மாநகரின் அருகிலுள்ளது. மதுரைக் கோட்டை வாயிலைக் கடந்து உள்ளே நுழைந்தால் செல்வச் சிறப்பு மிக்க மாட மாளிகைகள் , வயல்கள், தாமரைத் தடாகங்கள், தேனீக்களின் ரீங்காரம் என்பவற்றின் மத்தியில் எழுந்தருளியிருந்து அருள் புரிகின்றான் முருகப் பெருமான். இயற்கை நலம் கொழிக்கப் பாடிய நக்கீரர் இன்னும் தலங்கள் உள்ளன என்று சொல்ல வருகிறார்.

"திருச்சீரலைவாய்" ஆறு திருமுகங்களுடன், தொண்டருக்குக் காட்சி தரும் ஆறுமுகனின் மாட்சியை இப்படை வீட்டில் விளக்க முறுகின்றது.

"புறஅக இருள் நீங்க ஒளி தருவது ஒரு முகம்
பக்தர்களுக்கு அருளுவது ஒரு முகம்
ஞானத்தை பக்குவமடைந்த தொண்டருக்கு அறிவுறுத்துவது வீரத்திருமுகம்
வேத மந்திரங்களை நன்றாக நிறை வேற்றத் துணை செய்வது ஒருமுகம்
ஆறாவது முகம் மகிழும் முகம் உலகை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கும் முகம்"

ஒவ்வொரு திருமுகத்திற்கும் இரண்டு திருக்கரங்கள் அம்முகங்கள் கருதும் செயல்களைச் செய்து முடிக்கின்றன என நக்கீரர் பாடுகின்றார். கடற்கரையிலே அலைகள் அருகே விளங்குவதால் திருச்சீரலைவாய் எனப்பட்டது. இது செந்தி, செந்தில், திருச்செந்தூர் எனவும் வழங்குகின்றது.

"திருவாவினன்குடி" பழனிமலை அடிவாரத்தில் உள்ள தலம் திருவாகிய இலக்குமியும், "ஆ"வாகிய காமதேனுவும் "இனன்" ஆகிய சூரியனும் "கு" எனும் பூதேவியும் "டி" எனும் அக்கினியும் வழிபட்ட இடம் என்பதால் திருவாவினன் குடி எனப்பட்டது. இத்தலத்தில் முற்றுந் துறந்த முனிவர் சிவபெருமான், திருமால், இந்திரன், முப்பத்துமூன்று தேவர், பதினெட்டு கணங்கள், ஆடிப்பாடும் காந்தருவர், எல்லாம் வந்து தெய்வயானையம்மையுடன் கொலுவிருக்கும் முருகப் பெருமானைத் தரிசிக்கின்றனர் என திருவாவினன் குடியின் பெருமையைப் பாடுகின்றார் நக்கீரர்.

"திருவேரகம்" இது சுவாமிமலை எனவும் வழங்கும். இங்கு வேத விற்பன்னர்களாகிய அந்தணர்கள் முறைப்படி ஆசாரத்துடன் முருகப் பெருமானை வழிபடுகின்றார்கள். அவர்கள் வழிபாட்டை உவந்து ஏற்றுக் கொள்ளும் திறத்தையும் இங்கே கூறுகிறார் நக்கீரர்.

"குன்றுதோறாடல்" குன்றங்களுக்குத் தெய்வம் முருகன் குறிஞ்சி நிலத் தலைவனாக விளங்குகிறான். குன்றுதோறாடலில் குன்றக் குறவர் களின் வழிபாடு பற்றிப் பேசப்படுகின்றது. அக் குறவர்களுக்கு முருகன் அருள்பாலிக்கும் திறமும் விளக்கப்படுகின்றது. முருகப் பெரு மானுக்குப் பூசைபோடும் பூசாரி தன் கையில் வேலை வைத்துக் கொண்டு ஆவேசம் வந்து ஆடுவான். அதனால் அவன் வேலன் என்று அழைக்கப்பட்டான். குன்றக்குறவை ஆடி முரு கனை வழிபட்ட திறமும் பேசப்படுகிறது.

"பழமுதிர்ச்சோலை" மதுரை மாநகரின் அருகில் உள்ளது. மலை உச்சியில் நூபுரகங்கை என்னும் தீர்த்தம் வற்றாத அருவியாக இருக் கிறது. அதன் அருகே முருகனுக்கு ஒரு திருக் கோவில் உள்ளது. இயற்கை வளம் செறிந்த பசுமையான இம்மலையில் மேலிருந்து ஒரு அருவி கீழ் நோக்கிப் பாய்ந்து வருகின்றது. இப்படை வீட்டின் இறுதிப் பகுதியில் அதைச் சிறப் பாக வர்ணித்துள்ளார் நக்கீரதேவர். முருகனின் தோற்றம், வீரம், குணநலம், வள்ளல்சிறப்பு, பெருங்கருணை இவையெல்லாம் பாடல்களில் மிகுந்து காணப்படுகின்றன.

தமிழரின் கடவுளாகிய முருகனின் பிர பாவத்தை இந்நூலில் மிகச் சிறப்பாகப் போற்று கின்றார் நக்கீரர். அறுபடை வீடுகளிலும் காடு, ஆறு, குளம் முதலான இயற்கைகளிலும் பொதி யில், சந்தி, சதுக்கம், நடுதறி போன்ற செயற்கை இடங்களிலும் வேலன் குறமகள் பூசை செய்யும் வெறியாட்டுக்களத்திலும் முருகன் உள்ளான். அவன் எங்கும் நிறைந்த பரம்பொருள் என்று போற்றுகிறார்.

ஆறு திருமுகங்களும், பன்னிரு திருக் கரங்களின் உதவி கொண்டு, உலகத்துப்புற இருள், அஞ்ஞானமாகிய அக இருள் நீக்கியும், முதிர்ந்த பக்தர்களுக்கு அருள்பாலித்தும் அந் தணர் வேள்வியைக் காத்தும், ஞானியர்க்கு ஞான உபதேசம் செய்தும் பல கொடிய போர்கள் செய்து அசுரர்களை வென்றும், வள்ளி நாயகி யோடு அமைதியாக, இன்பமாக அமர்ந்திருந்து உலகுக்கு அருளியும் உலகைக் காக்கின்றான் எனப் பாடுகிறார் நக்கீரர் பெருமான்.

முருகனை வழிபடுவோர்ருக்கு அரி தான "சீவன்முத்தி" என்னும் பரிசை வழங்கு வான். இளமைத்தெய்வத்தன்மை, மணம், அழகு இவற்றாலான தன் எழில் வடிவத்தைக் காட்டி உய்விப்பான் என்று முடிக்கிறார். படை வீடு களைப் போற்றியது மட்டுமன்றிச் சங்க இலக்கி யங்களில் வரும் முருகனுக்குரிய திருநாமங்கள் நக்கீரதேவரால் விளக்கப்படுகின்றன. முருகனின் இருபத்தாறு திருநாமங்களை உபதேச மந்திர மாகத் தருகின்றார். சூரசங்காரம், சரவணப் பொய்கையில் அவதாரம் ஆகிய புராண வர லாறுகளையும் அழகான காட்சிகளாக நமக்குக் காட்டுகிறார் நக்கீரர். இதன் மூலம் முருகப் பெருமானின் பெருமையை நாம் உய்துணர் கின்றோம்.

"நக்கீரர் தாம் உரைத்த நன்முருகாற்றுப் படையை
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முற்கோல
மா முருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தரும்"

# ஆசிரிய வாண்மையாற்றுகைக்கு வளம் சேர்க்கும் உளவியல் ஒரு பார்வை

திருமதி.கலைவாணி அண்ணாமலை
ஆசிரியர்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
நாவற்குழி.

உளவியலும் கல்வியும் மிகப்பரந்த ஆய்வுத்துறைகளாக விளங்குகின்றன தேடலும் மெய்ப்பொருளை கண்டறியும் தேவையும் தொடர்கின்றன. மிக இளமை நிலையிலுள்ள உளவியல் ஆய்வுகளை அடியொற்றி மிகவும் பாரிய சமூக முடிவுகளை எடுக்க முடியுமா என்ற கேள்விகளும் அவ்வப்போது எழுப்பப்படுகின்றன. வேகமாக பெருக்கெடுக்கும் அறிவு மிகவும் சிக்கலடைந்து செல்லும் சமூகம் என்பவற்றின் மத்தியில் கற்றலையும், கற்பித்தலையும் எளிமைப்படுத்தவும் வினைத்திறன் படுத்தவும் கல்வி உளவியலறிவு இயக்க பூர்வமான துணையாக வருதலை மறுக்க முடியாது.

கல்வி வளர்ச்சி செயல்முறையின் அச்சாணியாகவும் உள்ளார்ந்த தொடர்புடையவராகவும் ஆசிரியர் கருதப்படுகிறார். கல்வி வளர்ச்சிக்கு துணை செய்யும் அனைத்து ஆற்றல்களையும் தொடர்புகளையும் வரன்முறையாக ஆராயும் இயலாக உளவியல் விளங்குகின்றமையால் கல்வி உளவியல் இன்றி ஆசிரியத்துவம் முழுமையடைய மாட்டாது.

ஆசிரியர் மாணவருடன் இடைவினை கொள்கின்றார். இந்நிலையிற் கற்பிக்கும் பாடம் பற்றிய அறிவு, கற்கும் மாணவன் பற்றிய அறிவு, அவன் வாழும் சமூகத்தின் யதார்த்தங்கள் என்பவற்றை ஆசிரியர் அறிந்திருக்க வேண்டுமென்பதைக் கல்வி உளவியல் வற்புறுத்துகின்றது.

குழந்தையின் இயல்பு, உடல், உள்ளம், மனவெழுச்சி, ஆகியவற்றின் விருத்தி, சமூக இசைவாக்கம், உளமொழி இயல், அழகுணர் திறன், கவர்ச்சிகள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்தம் மனநலம் என்பவற்றை ஆசிரியர் அறிந்திருக்கும் பொழுது சிறாரை அறிவுடன் சங்கமிக்கச் செய்யும் பணி வெகு எளிதாகி விடுகின்றது.

"மனவெழுச்சியோடிணைந்த கற்றல்" என்ற கோட்பாடும் உளவியலில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மகிழ்ச்சி அன்பு, வியப்பு என்ற மனவெழுச்சிகளோடு இணைந்த கற்பித்தல் அதிக வினைத்திறன் கொண்டிருக்கும் என்பதை ஆய்வுகள் நிலைநிறுத்தியுள்ளன.

குழு நடவடிக்கைகளை கையாளுவதன் வாயிலாக மாணவரிடத்துச் சமூக விருத்தியை மேம்படுத்தமுடியும். தமது வயது, விருப்பு வெறுப்புக்கள், நோக்கங்கள் என்பவற்றை அடியொற்றிய குழுக்களையே மாணவர் பெரிதும் விரும்புவர். தமது குடும்பத்திலே கிடைக்காத உளவியல் சார்ந்த தேவைகள் குழுநிலைகளில் நிறைவேற்றப்படுவதை மாணவர் நன்கு உணர்வார்.

குழந்தைகளுக்கான கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் உளவியலுக்கும் மொழி இயலுக்குமுரிய தொடர்புகளைப் புரிந்து கொள்ளல் விரும்பத்தக்கது. மொழி வளர்ச்சி கல்வி முன்னேற்றத்துக்கும். சமூகத் தொடர்புகளுக்கும் இன்றியமையாது வேண்டப்படுகின்றது. தேவைகளும் சமூக ஊட்டங்களும் புதிய புதிய அனுபவங்களும் குழந்தைகளின் மொழித்திறனை வளர்க்கின்றன. நிபந்தனைப் படுத்தும் துலங்கல் வளர பேச்சுத்திறனும்

வளரும். புத்தகம் என்ற பொருளைப் "புத்தகம்" என்ற சொல்லுடன் இணைத்தல் நிபந்தனைப் படுத்தலுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

மனித நடத்தையில் முன்னேற்றகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் இடையறாத தொழிற் பாடுகளே கற்றலும் கற்பித்தலுமாகும். கற்றல் என்பது முரணியல் வழியாக இருக்கின்றது. அறி யாமை என்ற நேர்விசை தொழிற்படுகிறது. அறி யாமையும் அறிதலும் இணக்கம் காண முடியாத முரண்பாடுகளாக உள்ளன. கற்றல் பற்றிய அடிப் படைப் பண்புகளை ஆசிரியர் அறிந் திருப்பாராயின், கல்விப் பணிகள் மேலும் முன்னேற்றம் பெற இடமுண்டு.

கற்றல் என்பதற்கு ரூசிய விஞ்ஞானி யாகிய பவ்லோவ் (1849 – 1936) நிபந்தனைப் பாட்டினால் அல்லது ஆக்க நிலையுறுத்தலினாற் கற்றல் நிகழ்கின்றதென கூறியுள்ளார். உணவுக்கு உமிழ்நீர் சுரக்கும் ஒரு நாய் நிபந்தனைப் படுத்தலால் உணவுக்கு முந்திய மணியொலியைக் கேட்டு உமிழ்நீரைச் சுரக் கின்றது. கற்றல் என்பது நிபந்தனைப்படுத்தலுக் குள்ளான தெறிவினைகளின் தொடர்ச்சியென்று பவ்லோவ் கூறுகிறார்.

தோண்டைக் (1878 – 1949) என்னும் உளவியலாளர் கற்றல் பற்றிய சில விதிகளை விளக்கினார். ஆயத்தவிதி, பயிற்சி விதி, விளைவு விதி என விதிகளை விளக்கினார். இணைப்பு மாற்ற விதியையும் ஆசிரியர் தமது கற்பித்தலின் போது பயன்படுத்த முடியும். நீண்டசெய்கை என்ற தூண்டியாலும் ஒரு கணிதப் புதிருக்குரிய துலங்கலாகிய விடையைப்பெற முடியும். குறுகிய ஒரு செய்கை முறையாலும் அதே விடையைப்பெற முடியும். கற்பித்தலின் போது குறிப்பிட்ட சில பகுதிகள் கற்றலுக்குக் கூடுதலாக உதவி செய்யும் என்று கருதும் பட்சத்தில் ஆசிரியர் அப்பகுதிகள் மீது கூடிய அழுத்தங் கொடுத்துக் கற்பித்தல் வேண்டும்.

ஸ்கின்னருடைய ஆய்வுகள் வகுப்பறை யிலே பயனுடையதாகவும் விளங்குகின்றன. நேர்மீள வலியுறுத்தல், எதிர் மீள் வலியுறுத்தல் என்பவற்றால் கற்றலை நெறிப்படுத்தலாம். வெகுமதியும் உற்சாகமளித்தலும் கற்றலை மேம் படுத்தும் வினைத்திறனுடன் மாணவர் கற்க கற்றல் இடமாற்றம் மனவெழுச்சியுடன் இணைந்து மகிழ்ச்சியும் பெருமிதமும் நிறைந்த சூழலும் மாணவர் ஆசிரியர் தொடர்பில் நிகழும் அன்பும், ஆதரவும், மாணவரிடத்து எழுச்சி சார்ந்த பெயர்ச்சியை ஏற்படுத்தும். மனவெழுச்சியின் இயல்புகள் கற்றலையும் கற்றல் இடமாற்றத்தையும் பாதிக்கும். இவற்றை அறிந்து செயற்படுத்தும் திறமையுடையவர் சிறந்த ஆசிரியரா கின்றார்.

கற்றலின் வினைத்திறனுடன் செயற்படு வதற்கு நினைவுப் பயிற்சியை ஆசிரியர் வகுப் பறையில் நேர்ப்பண்புடன் வளர்த்தெடுத்தல் வேண்டும். பாடமுடிவில் அன்றைய பாடத்தின் முக்கிய குறிப்புக்களைத் தொகுத்துக்கூறல் வேண்டும். சம்பவங்களைத் தொடர்புபடுத்திக் கற்பித்தல். கற்றலின் பிரயோக நிலைகளைக் குறிப்பிடல், ஆழ்ந்து ஈடுபட்டுக் கற்றல் முதலிய வற்றால் நினைவுத்திறனை வளர்க்கலாம்.

கவனமின்றி கற்றல் இல்லை கற்பித் தலிற் கவனம் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுதலை ஆசிரியர் மனங்கொள்ளல் வேண்டும். கவனம் என்பது நனவு வாழ்க்கையுடன் இணைந்தது. நமது புலன் உணர் பரப்பில் அமைந்தது கவனப் பரப்பு. உருவம் உணர் பரப்பில் அமைந்ததே. கவனப்பரப்பு உருவம் பின்புலம் என்ற அடிப் படையில் "கெஸ்ரோல்ற்" உளவியலாளர் கவனத்தை விளக்குகின்றனர். கவனம் என்பது இயக்கப் பண்பு கொண்டது.

வகுப்பறையிற் கவனத்தை ஈர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை ஆசிரியர் மேற் கொள்ளலாம். மாணவரின் தேவைகளை பல் வேறு முறையியல்களை பயன்படுத்துதல்

உடனடி இலக்குகளை நிறைவேற்றுதல், பல்வேறு துணைக் கருவிகளைப் பயன்படுத்துதல், புதுமை புகுத்துதல், குரலை உயர்த்தித் தாழ்த்தல், முதலியவற்றால் கவனம் அதிகரிக்கும். பாடத்தை ஆரம்பிக்கும் பொழுதே ஆசிரியர் கவன ஈர்ப் புடன் தொடங்கல் வேண்டும். மாணவரின் கவனச் சிதைவைக் கண்டறிந்து உடனுக்குடன் மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பயனுடையது.

கற்றலின் அடிப்படை நிலை புலக்காட்சி யாகும். அறிவாய்வியல், உளவியல் ஆகியவை புலக்காட்சி பற்றிய ஆய்வுகளை முன்வைக் கின்றன. கற்பித்தலில் ஆசிரியருக்கு உறுதுணை யாயிருக்கும் புலக் காட்சிப்பண்புகள் விளக் கப்பட வேண்டியுள்ளன. புலக்காட்சி பற்றிய முழுமைக் கருத்தை "கெஸ்ரோல்ற்" உளவிய லாளர் தந்துள்ளனர். நாம் ஒரு பொருளைத் தனித்தனிக் கூறுகளாக நோக்காது முழுப் பொருளாகவே நோக்குகின்றோம். புலப்பயிற் சியை கற்பித்தலின் அடிப்படை என்பதை மொன்ரி சோரி, கொமீனியஸ், ரூசோ, பெஸ்டலோஸி போன்ற கல்வியாளர் வற்புறுத்தியுள்ளார்கள் புதிய அறிவைப் பழைய அறிவோடு சங்கமிக்கச் செய்யும் கற்பித்தல் வெற்றி தரும் வெளிக்கள அனுபவம், சுற்றுலாக்கள், நூல் நிலையங்கள், வீடியோ மற்றும் திரைப்படக் காட்சிகள், கருத் தரங்குகள் மூலம் வினைத்திறன் காணப்படும்.

கற்பித்தல் முறையியல் மாணவரிடத்து மகிழ்ச்சி, சுதந்திரம், வெளிப்பாடு, ஈடுபாடு ஆகியவற்றை விருத்தி செய்யும். கற்பித்தல் முறையியலைக் கண்டுபிடிக்க வேண்டியுள்ளது. "கால்ட் வெல்குக்" என்பவர் விளையாட்டு வழியைக் கற்பித்தலில் அறிமுகம் செய்தார் தற்கால கற்பித்தலில் மாணவர்கள் தாமே கண்டறியும் ஆற்றலும் விரும்பத்தகுந்தது. பொறிகளும் கணினிகளும் தாமே கண்டறியும் கற்றலை மேம்படுத்தும்.

ஆசிரியர் தமது பணிகளை வினைத் திறனுடன் மேற்கொள்வதற்கு அளவீடும், மதிப் பீடும் தொடர்பான உபாயங்களை அறிந்திருத் தலும் தவிர்க்கமுடியாது வேண்டப்படுகின்றன. குறிப்பிட்ட இலக்குகளை மாணவர் அடைந்துள் ளனரா என்பதை அறிந்துகொள்வதற்கு அள வீடும் மதிப்பீடும் செய்வதற்குரிய தேர்வுகள் தனியாளை அடிப்படையாகக் கொண்டதாகவோ அல்லது குழுக்களை அடிப்படையாகக் கொண்ட தாகவோ அமையலாம். தேர்வுகளுக்கு மாண வரை உரிய முறையில் நெறிப்படுத்துவதோடு, தேர்வின் வாயிலாக எழும் உளவியல் நெருக் கடிகளில் இருந்து மாணவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கல் வேண்டும்.

மாணவர் எதிர்நோக்கும் பல்வகை யான பிரச்சினைகளுக்கு நண்பனாயும் நல் லாசிரியராயும் நின்று அறிவுரை பகர்தலும் வழிகாட்டலும் இன்றைய தேவைகளாகவுள் ளன. மாணவரது ஆற்றல், விருப்பம், கவர்ச்சி, இசைவாக்கம் என்பவற்றை அறிந்து எதிர்கால வாழ்க்கைக்கு நல்லாற்றுப்படுத்தல், வழிகாட்டல் எனப்படும். கல்வி, தொழில், சமூகப் பண் பினனாவதற்கு வழிகாட்டல் வேண்டும். கற்றலில் மாணவர் எதிர்நோக்கும் இடர்களை எவ்வாறு முறியடிப்பது எத்தகைய பாடங்களை உயர் கல்விக்கு தெரிவுசெய்வது எனக் கூறல் வேண்டும்.

மாணவரது ஆளுமையை முழுநிறை வாக வளர்ப்பதை உறுதி செய்வதில் உளவிய லும் ஆசிரியத்துவமும் பங்குகொள்ள வேண்டி யுள்ளன. ஆளுமை என்பது அறிவுசார் நடத்தை கள், மனோபாவங்கள், அனுபவங்கள், பழக்க வழக்கங்கள், பற்றுக்கள், அழகுணர்திறன் என்ற பல்வேறு பண்புகளில் காணப்படும் ஒருங் கிணைக்கப்பட்ட பண்புக் கூறுகளை கொண்டது. இதனை வளர்ப்பதையே நவீன கல்வி தனக்குரிய தலைமைப் பணியாக கொள் கின்றது.

இவ்வாறாக மாணவர்களிடத்தில் விளை திறன் மிக்கவர்களை தாள விடாதும் சோர்வடைய விடாதும் ஒப்படைகளை கொடுத்து, வாசிப்பில் ஈடுபடுத்தியும், வெகுமதிகள் வழங்கியும் கற்றலை ஆசிரியர் வினைத்திறனும் விளை திறனுடனும் விளங்கும் போது ஆசிரியர் சார் உளவியலின் அறிவினை அறியலாம்.

**உசாத்துணை**


1. ஆசிரியர் வாண்மையில் – சபா ஜெயராசா
2. இலங்கையின் கல்வியின் நவீன போக்கு – ஆ.நித்திலவர்ணன்
3. அறிகை சார் ஆசிரியர் உளவியல் – S.சின்னத்தம்பி
4. கல்வி உளவியல் அடிப்படைகள் – யோ. பெனடிக்பாலன்

# கற்றல் - கற்பித்தல் அபிவிருத்தியில் அதிபரின் வகிபாகம்

திருமதி. லவநிசா டேகீஸ்வரராசன்
யா/நாவற்குழி மகாவித்தியாலய
ஆசிரியர் பழைய மாணவி
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.

கல்வி என்பது எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு தயாராகவேண்டியதொன்றாகும். சமூகத்தில் அபிவிருத்தியைத் தோற்றுவிப்பதற்காகக் கல்வியானது தலைமை தாங்கிச் செயற்பட வேண்டும். இளந்தலைமுறையினரின் எதிர்கால வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு அவர்கள் முகங்கொடுக்கக்கூடிய வல்லமையினை அவர்களுக்கு அளிக்கத்தக்க விதத்தில் கல்வி வழங்கப் படவேண்டும். கல்வி அபிவிருத்தியில் பாடசாலையும் சமூகமும் பங்குகொள்கின்றன. கல்வியூடாக சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி அதனூடாக சமூகவளர்ச்சியையும் அடைவதே கல்வி அபிவிருத்தியின் குறிக் கோளாகும்.

கல்வி நிர்வாகத்தின் அடிப்படை நோக்கம் கற்றல் கற்பித்தலை அபிவிருத்தி செய்த லாகும். அதற்கு நிர்வாகம் அதிபரை ஒரு ஊடகமாக அல்லது கருவியாக பயன்படுத்துகின்றது. பாடசாலைகளில் சிறந்த கற்றல் கற்பித்தல் செயற்பாடு இடம்பெற அதிபர் ஓர் ஏற்பாட்டாளராகச் செயற்படவேண்டும். அத்துடன் கோளமய மற்றும் அறிவுசார் பொருளாதாரத்திற்குள் இடம்பெறக்கூடிய நிலைமைகளை எதிர்கொண்டு எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் உயர்ந்த பட்ச பங்களிப்புக்களை வழங்கக்கூடியவாறு பாடசாலை முறைமையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்த வேண்டும்.

இன்றையசமூகம் அறிவியல், தொழில்நுட்பம் ஆகியவற்றைக் கொண்டு இயங்குவதால் இச்சமூகம் தொடர்ந்து இயங்க புதிய கண்டுபிடிப்புக்கள். ஆய்வுகள், சிந்தனைகள் செயல்முறைகள் ஆக்கத்திறன்கள் என்பன அவசியமாகின்றன இவற்றை அபிவிருத்தி செய்வதனூடாக விளைதிறனுள்ள ஓர் அறிவுசார் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பமுடியும். இதற்கு அதிபரின் வினைத்திறனான முகாமைத்துவ மற்றும் நிர்வாகத் திறமை முக்கியபங்கு வகிக்கின்றது.

முகாமைத்துவம் என்பது ஒரு நிறுவனத்தையும் அதன் ஆளனியினரையும் நிர்வகிப்பது அல்லது மேற்பார்வை செய்வது மாத்திரமன்று அந்நிறுவனங்களுக்குத் தேவையான பொருத்தமான ஆளணியினையும் பௌதீக உள்ளடக்கக் கட்டமைப்பையும் பேணுவதன் மூலம் ஒழுங்கான மேற்பார்வை கண்காணிப்பு என்பனவற்றுடன் ஊழியர்களின் தனிப்பட்ட நலன்களைப் பாதுகாத்து அவர்களைத் திருப்திப் படுத்துவதன் மூலம் அந்த நிறுவனத்தின் உச்ச வெளியீட்டை அதிகரிப்பதனைக் குறிக்கும். முறையாக வழங்கப்பட்ட பயிற்சியினூடாக நல்ல முகாமையாளர்களை உருவாக்கலாம் என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். தமது நடிபங்கை நன்கு புரிந்து கொண்ட அதிபர்கள் தமது பாத்திரத்தை பிரயோக, வெளியீட்டு நிருவாக, கல்வி ரீதியாக கடமையாற்றும் விதத்தை நன்கு பகுப்பாய்வு செய்து செயற்படுவதனை காணமுடியும். அதிபர்கள் தமது பாடசாலையிலே கடமையாற்றும் விதத்தைச் சுட்டிக் காட்டும் கண்ணாடியைப் போல இருத்தல் வேண்டும் அதிபர் அறிவாளியாகவும், முகாமைத்தத்துவ வளங்கள் பொருந்தியவராகவும், கல்விக்கோட்பாடுகள் மற்றும் அவற்றை அமுலாக்கல் தொடர்பான அறிவுடையவராகவும், சிறந்த ஒரு நிருவாகியாகவும் ஒழுங்கமைப்பாளராகவும் விளங்க வேண்டும்.

இதனடிப்படையில் கற்றல் – கற்பித்தல் அபிவிருத்தி என்றவகையில் நோக்கும் போது மனிதவள முகாமையாளர் என்ற வகிபாகம் முக்கியமானதொன்றாகும். இதன்பொருட்டு ஆசிரிய வாண்மைவிருத்தியில் அதிபரின் வகிபாகத்தினை நோக்கும் போது ஒரு பாடசாலையின் முக்கியமான மனிதவளமாகிய ஆசிரியர்களை சிறந்த முறையில் வழிநடத்தும் மனிதவள முகாமையாளராக அதிபர் இருக்கவேண்டும்.

வேகமாக மாறிவரும் இன்றைய உலகில் கல்வி தொடர்பான பலமாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. கற்பித்தல் முறைகளில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கல்வி, அறிவு தொடர்பான எண்ணக்கருக்கள் மாற்றமுறுகின்றன. இவ்வாறான சூழலில் ஆசிரியர்களது அறிவையும் திறமைகளையும், மனப்பாங்கையும் விருத்தி செய்யும் வகையிலான ஆசிரியர் வாண்மை விருத்திச் செயற்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களுக்கு வலுவூட்டும் பணியை மேற்கொள்வது அதிபரின் கடமையும் பொறுப்புமாகும். இவற்றினை மேற்கொள்வதன் மூலம் ஆசிரியர்களின் பூரணதிருப்தியை உச்சமட்டத்திற்கு கொண்டு வருவருடன் அவர்களிடமிருந்து உயர்மட்ட சேவையினைப் பெற்றுக்கொள்ள முடிகின்றது.

எனவே ஆசிரியர்களை வாண்மை மிக்கவர்களாக மாற்றும் பொருட்டு சிறந்ததலைவராக முகாமையாளராக, பயிற்றுவிப்பாளராக அதிபர்கள் தமது வகிபாகத்தை மாற்றிக்கொள்வது சிறந்ததாகும்.

மேலும் மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு பாடசாலை வேலைத்திட்டங்கள் மூலம் பாரிய தூண்டுதல்கள் ஏற்படினும் ஆலோசனைச் செயற்பாடுகள் உண்மையாக ஏற்படுவது வகுப்பறையினுள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான அன்னியோன்னியமான தொடர்பின் மூலமாகும். இதன் பொருட்டு ஆசிரியர்களின் மனநிலை, விருப்பு ஆகிய தனிப்பட்ட காரணங்களின் தூண்டுதலால் அந்த விடயங்களை முகாமைத்துவப்படுத்துவது, மாணவர்களை விரும்பி கற்பதற்கு முயற்சி எடுப்பது போன்றன முகாமைத்துவத்திற்கான சவாலான காரியமாகும். அதனால் முகாமைத்துவ அமைப்பின் நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக ஒரு நிலையான மாறுதலை உண்டாக்க கூடியதாக இருக்கவேண்டும். இதன் பொருட்டு பாடசாலை விசேட தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக்கூடியதாக பாடசாலை அபிவிருத்தி திட்டத்தை தயாரித்துகொள்வது, கல்வி அமைச்சின் வேலைத்திட்டமான பாடசாலை மேம்பாட்டு திட்டத்தினை சிறப்பான வகையில் ஒழுங்குபடுத்தி செயற்படுத்துவது போன்றன பாடசாலையினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினையும் சமூகப் பங்குபற்றுதலின் ஊக்குவிப்பினையும் அதிகரிக்க முடியும்.

இவ்வகையில் நோக்கும்போது, இப் பாடசாலையின் அதிபர் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் கற்றல் கற்பித்தல் அபிவிருத்தியில் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளமை அனைவரும் அறிந்ததொன்றாகும். மேலும் மனிதவளமுகாமையாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கும் முன்மாதிரியாக திகழக்கூடியவராகவும், நெருக்கடிகளை எதிர்கொள்ளக்கூடியவராகவும் அறிவுத்திறன் கூடியவராகவும் தீர்மானங்களை நிறைவேற்றக் கூடியவராகவும் ஆசிரியர்கள், மாணவர்களிடையே சிறந்த நல்லுறவினை பேணும் தேர்ச்சியுடையவராகவும் காணப்படுகிறார். மேலும் வளங்களை கேட்டுப் பெற்றுக்கொண்டு, இருக்கின்ற வளங்களை செவ்வனே பயன்படுத்தியும், ஆசிரியர்களின் திறன், கற்பித்தலில் அவர்களது ஈடுபாடு, மாணவர்களது வரவும் அவர்களது கல்வி நடவடிக்கைகளில் ஈடுபாடும்... என பல்வேறு விடயங்களையும் கருத்தில் கொண்டு செயற்படும் ஆளுமையுடையவர். இவரது செயற்பாடுகளும் வெளிப்பாடுகளும் பயனுறுதி வாய்ந்தவையாக உள்ளமையை இப் பாடசாலையின் செயற்பாடுகள் புடம்போட்டுக் காட்டுகின்றன.

# "மழலைகளை வளப்படுத்தும் முன்பள்ளிகளில் வளப்படுத்த வேண்டிய பகுதிகள் - ஒரு பார்வை"

க.மயில்வாகனம்

அளவற்ற ஆற்றல்களுடனும், அதி விவேக புத்திக்கூர்மையுடனும் தான் ஒவ்வொரு குழந்தையும் உலகில் பிறக்கின்றது. பெற்றவர்களை விடவும் மிகுந்த ஆற்றல் உள்ளவர்களாகவே குழந்தைகள் உருவாகும் என்பது இனவிருத்திக்கோட்பாடாகும். படைப்பிலும் வளங்கள் வழங்குவதிலும் இறைவன் எல்லோரையும் சமமாகவே கவனிக்கிறான். தம்மை வளர்த்துக் கொள்வதும் அழித்துக் கொள்வதும் அவரவர் வசிக்கும், பழகும் சமூதாய அமைப்பிலும், விருப்பு வெறுப்பிலுமே தங்கியுள்ளது. ஏழைகளாகவும் சீரழிந்த சமுதாயக் குழுமத்திலும் பிறந்தது அவனது குற்றமல்ல, அவற்றிலிருந்து விடுபடமுயலாமை அவனது குற்றமே தான். சீரழிந்த சமுதாயத்திலிருந்தும், ஏழைக் குடும்பங்களிலிருந்தும் அநேக சான்றோர்கள் முகிழ்த்தெழுந்து வந்து உலகிற்கு அளப்பரும் நன்மைகள் செய்து இருக்கின்றனர். நான் ஏன் கஸ்டப்படுகின்றேன்? என்னால் ஏன் முன்னேற முடியவில்லை? என்ற கேள்வி கேட்கத் தொடங்கியதுமே அறிவுச்சுடர் அவனுள் எரியத் தொடங்கி விடுகின்றது. காரணங்களை அறிந்து அவற்றிலிருந்து விடுபட முயல, முயல அவனது வாழ்வு பிரகாசிக்கின்றது. இந்தக் கேள்வியும் அதற்கான விடைதேடலும், முயற்சியும், வேட்கையும் அவாவுடன் கூடிய விருப்புத்தன்மையையும் அவன் வளர்த்துக்கொள்ள, அவை அவனை வளர்த்து விடுகின்றன. கல்வி தரும் ஒழுக்கமும், ஒழுக்கத்துடன்கூடிய தேடலும், அன்பு சகிப்புத்தன்மை பொய் பேசாமை, நேரம் தவறாமை பிறர்கருத்தைக் கேட்டல், ஆராய்ந்து இணங்குதல் போன்ற உயர் விழுமியங்களை வளர்த்து விடுகின்றன. இவ்வாறான உயர் பண்புகளை வளர்த்துவிடும் இடமாகப் பாடசாலைகளே அமைகின்றன. உடல் உள்ளம் ஆன்மா போன்றனவற்றிலிருந்து நல் எண்ணங்களே வெளிவரவேண்டும் என்றும் இப்பண்புகள் குடும்பம் சமூகம், நாடு உலகம் என்ற நிலைக்கு விரிவடையவும் கல்வி மிக மிக அவசியமாகின்றது. கல்வி இல்லாமல் வாழ்க்கை இல்லை.

### கற்றலில் கல்லூரிகளின் செல்வாக்கு

இவ்வாறான உயர் பண்புகளைத் தம் பிள்ளைகள் கற்றுயர்ந்து சான்றோர்களாகி விடவேண்டும் என்ற பெருநோக்கில் தமது பிள்ளைகளைச் சிறந்த பாடசாலைகளில் சேர்த்துவிடப் பெற்றோர் பெரிதும் முயற்சிக்கின்றனர். சிறந்த பாடசாலைகள் கற்றலுடன், மாணவர்களிடையே நல்லொழுக்கம், கட்டுப்பாடு, தலைமைதாங்கும் இயல்பு, தன்னை அறிந்து கொள்ளும் தெளிவு, சீரிய முடிவெடுக்கும் திறன், இணக்கம் அறிந்து இணங்கிப்போகும் இயல்பு, ஆகியவற்றை வளர்த்து விடுகின்றன. கல்லூரிகளும், பல்கலைக் கழகங்களும் அவன் பாடசாலையில் கற்றுள்ளதை விரிவாக்கியும் தெளிவுண்டாக்கியும், மெருகேற்றியும் விரிந்து பரந்துபட்ட உலகில் மக்கள் குழுமத்தில் எவ்வாறு செயற்படுவது வழிகாட்டுவது என்பவற்றையும் கற்றுத் தருவதுடன் உடனடி முடிவெடுக்கும் திறனையும் தலைமைதாங்கும் இயல்பையும் வளர்த்து விடுகின்றன. உலகின் தலைவர்களாகவும், சமூக குடும்பத்தலைவர்களாகவும் செயற்படவுள்ள இவர்களைத் தயார்ப்படுத்தி அனுப்புகின்றன. அறிவெனும் பெருவிளக்கை இவர்கள் கைகளில் வழங்கி அறியாமை இருளைப் போக்கும் வழி அமைத்துக்கொடுக்கின்றன.

## அரும்பு நிலையில் முன்பள்ளிகள்

இவ்வாறான உயர் அடைவுமட்டங்களை அடைய இன்றய நாட்களில் அவன் முன்பள்ளிக்குச் சென்று பயிற்சிபெற வேண்டியது அவசியமாகின்றது. கிட்டத்தட்ட கி.பி.1900 ஆண்டு வரையும் முன்பள்ளிகள் இருந்ததாக அறிய முடியவில்லை. அக் காலப்பகுதியில், குருகுலக் கல்வி முறையும் திண்ணைப் பள்ளிக் கூடங்களும் இப்பணியை ஆற்றிவந்துள்ளன. குருகுலக் கல்விமுறை அரசர்களுக்காகிவிட, திண்ணைப் பள்ளிகளும், ஓதுவார்களும் சமய அறிவுடன் நன்னெறிகளையும் மாணவர்களுக்குப் புகட்டி வந்தனர். எமது தலைமுறைவரை வீட்டிலுள்ள மூத்தவர்கள் அநேகமாக அக்கா மார்தான் பாடசாலைக்குத் தயார்ப்படுத்தும் ஆசிரியர்களாக இருந்தனர். தங்களுக்குத் தெரிந்தவற்றை, மனப்பாடம் செய்து ஒப்புவிக்கப் பண்ணியும், வாய்பாடுகளை மனனப்படுத்தியும், கண்டிமையுடன் கற்றுத் தர முயன்றனர். போதிய பயிற்சியின்றியும், தான் கற்றுக்கொண்டவற்றை (அவை பிழை சரி தெரியாத நிலையிலும்) தனது சகோதரர்களுக்குக் கண்டிப்புடன் கூறித்தர முயன்றதால், ஆற்றலுள்ள பிள்ளைகள் கூட, கற்றலில் வெறுப்படைந்து, கற்றலைப் புறக் கணித்துத் தொழில் பழக நாட்டங்கொண்டமைக் கும் காரணமாயமைந்தார்கள். ஆனால், பாடசாலை அச்சத்தைப் போக்கவும், பாடசாலை நேரம்வரை வீட்டை பிரிந்திருக்க வேண்டிய அவசியத்தையும், சுத்தம் சுகமாய் இருக்கவும் பயிற்றுவித்திருந்தனர் என்பது நிதர்சனம்.

## முன்பிள்ளைகளின் தோற்றப்பாடு

மேரியா மொன்ரசூரி அம்மையார், 1900 ஆண்டளவில் றோம் நகரில் முன்பள்ளிகள் ஆரம்பித்துப் பயிற்றப்பட்ட தொண்டர்களின் உதவியுடன் பிள்ளைகளைப் பராமரித்தும் நல்வழிப்படுத்தும் வரையும் விட்டு அக்காமார் தான் ஆசிரியர்களாக இருந்தனர். அதனால்தான் அவன் பாடசாலையில் கண்ட, கற்றுப் பெரிய உடல்வாகு கொண்ட ஆசிரியரைப் "பெரியக்கா" எனவும் சற்று மெலிந்திருந்த ஆசிரியரைச் "சின்னக்கா" எனவும் அழைத்தான். மொன்ரசூரி அம்மையார், ஒரே வயதொத்த பிள்ளைகளை இணைத்து, குடும்ப சூழலில் வைத்துப் பணிவிடைகள் செய்து உணவூட்டி, கதைகள் கூறி, கற்க வழி வகுத்தார். கருவிகள் (பேனா, பென்சில், வண்ணக்கட்டிகள், போன்றன) கொடுத்து படைப் பாற்றலைத் தூண்டினார். தனது தேவைகளைத் தானே செய்து கொள்ளவும், ஏனைய மாணவர்களும் இணைந்தும் விட்டுக்கொடுத்தும் பகிர்ந்துண்ணவும் பழக்கினார்.

## முன்பள்ளிகளின் முக்கியத்துவம்

இவ்வாறான நற்சிந்தனைகளுடன் றோம் நகரில் ஆரம்பிக்கப்பட்ட முன்பள்ளிகள் இன்று உலகம் பூராகவும் பரவி விரிந்து 110நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன் கிட்டத்தட்ட 22000 முன்பள்ளிகளில் சிறுவர்கள் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் அறிய முடிகின்றது. மேற்கத்தேச நாடுகளிலும், வளர்ந்துவரும் நாடுகளிலும் தத்தம் வாழ்க்கைச் செலவைச் சமப் படுத்துவதற்காக அம்மா அப்பா இருவருமே வேலைக்குச்செல்ல வேண்டியிருப்பதாலும், அந்த நாட்டு மக்கள் எம்மைப்போல கூட்டுக் குடும்ப வாழ்வு முறை பின்பற்றாமையாலும் பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையங்கள் அவ்வகை நாடுகளுக்கு அவசியமாயிருந்தன. பெற்றார் இருவருமே வேலைக்குச் செல்வதால் பிள்ளைகள் பராமரிக்கும் நிலையங்களும், உணவுத் தேவைகளுக் காக உணவு விடுதிகளும் பல்கிப் பெருகின. பிள்ளைப்பருவத்தில் எல்லாக் குழந்தைகளுமே, குறும்புடனும், துடியாட்ட மாகவும், மென்மை உணர்ச்சி மிக்கவர்களாகவும் தன்னைக் கவனிக்க வேண்டும் என்ற விருப் புடையவர்களாகவும் இருப்பதால் வீடுகளில் அவர் களை வைத்துப் பராமரிக்க வசதிகள் இருந் தாலும் அவரவர் வீடுகளில் தனித்திருந்து தனிமைச் சுமையில் மனவளர்ச்சி குன்றிப் போகாமலிருக்கவும் முன் பள்ளிகள் அவசியமாகின்றன.

இனி இவை முன்பள்ளிகள் அல்ல, முன் ஆரம்ப பாடசாலைகள். இடைநிலைக் கல்விக்

கும், கல்லூரிகளுக்குச் செல்லும் மாணவர் களைத் தயார்ப்படுத்தும் பாடசாலைகள் ஆரம் பப் பாடசாலைகள் என அழைக்கப்படுவது போல, ஆரம்பப் பாடசாலைகளுக்காக மாணவர் களைத் தயார்ப்படுத்தும் நிலையங்கள் முன் ஆரம்பப் பாடசாலைகள் என அழைக்கப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்படும். இடைநிலைக்கல்விக் கூடங்களில் உறுப் பெழுத்து, உச்சரிப்பு ஆற்றல் வெளிப்பாடு போன்ற முக்கிய செயற்பாடுகளுடன், கணித வாய்பாடு, வசன மைத்தல், மனனஞ்செய்தல் போன்ற வற்றையும் வளர்த்துவிடுகின்றனர். முன் ஆரம்பப்பாட சாலைகளில் கற்றுக்கொண்ட ஆடல், பாடல், குழுவாக இயங்குதல் போன்றன வுடன் எண் ணும் எழுத்தும் இங்கு விருத்தி செய்யப்படுகின்றது முன் ஆரம்பப்பாடசாலை களில் நல்ல அடித்தளம் இட்டு அடிப்படை அறிவுடனும் அறியும் ஆர்வத்துடனும் ஆரம்ப பாடசாலைகளுக்கு அனுப்பப்படும் மாணவர்கள் சேணம் கட்டிவிட்ட குதிரைகள்போல 5ம் ஆண்டு புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுத் தேர்வடைய வேண்டும் என்ற ஓட்டப் போட்டியில் இலக்குவைத்த பெற்றோர்கள் பின்னாலிருந்து விரட்டிவருது வேதனைதரும் விடயமாகும். சுய தேடலையும் சுய ஆற்றலை யும், விருப்பையும், வளர்த்துவிடவேண்டிய பெற்றோர்கள், வகுப்பறையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் பிரத்தியேக வகுப்பறை யிலும் ஆசிரியர் கற்றுத் தரும்விடயங்களை விளங்கிக்கொள்ளாமல் விழுங்கிவிட்டுத் தேர்வின் போது விடைத்தாள்களில் வாந்தி எடுக்கவைக் கின்ற கல்விமுறை இந்த இடத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது. இது ஒருவகை யென்றால் 5ம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் ஒவ்வொரு வரும் புலமைப்பரிசில் தேர்வுக்குத் தோன்றத் தகுதியுடையவர்களாக விருந்த போதிலும், தமது பாடசாலையின் பெறுபேற்றின் விகிதாசாரத்தை உயர்த்திகாட்ட பாடசாலை மட்டத்தில் தகுதி கண்டு, சில மாணவர்களைப் பரீட்சை எழுத அனுமதிக்காத கொடுமைகளும் நிகழ்கின்றன. புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடைந்தால் எல்லாத் தேர்வு களிலும் சித்தியடைந்துவிட்டது போன்ற மயக் கத்தை ஏற்படுத்துவதன் மூலம் சித்தியடையாத மாணவர்களின் மன நிலையைப் பெரிதும் பாதிப்படையவும் செய்கின்றனர். இன்று உயர் பதவிவகிப்போர்கள் சான்றாண்மையாளர்கள், பேராசிரியர்கள், கலாநிதிப்பட்டம் பெற்றவர் களில் அநேகர் 5ம் ஆண்டுப் புலமைப்பரிசில் தேர்வில் சித்தியடையத் தவறியவர்கள் என்ற நிதர்சனம் உணரப்பட வேண்டும்.

## ஈழத்தில் முன் ஆரம்பபாடசாலைகளின் பாதச்சுவடு

இன்று முன் ஆரம்ப பாடசாலைகளாக மிளிர்ந்து நிற்கும் கல்விச் சாலைகள் ஆரம்ப காலத்தில் பிள்ளைகள் பராமரிக்கும் நிலையங் களாகவே தோன்றின. ஆரம்பத்தில் குறிப்பிட்ட வாறு இவ்வாறான பிள்ளைகள் பராமரிப்பு நிலையங்கள் (பாலர் பகல்விடுதிகள்) மேற்கத் தேய நாடுகளுக்கு அவசிய தேவைகளாக இருந்தன. ஆயினும் முற்றுமுழுவதும் விவசாயி களும், தொழிலாளிகளும் செறிந்து காணப்படும் நீர்வேலிப்பகுதியில் இவர்களுள் தோன்றிய கல்விச் சிந்தனையாளர்களால் 1955ம் ஆண்டில் ஆரம்பப்பள்ளி ஒன்று அமைக்கப்பட்டது அக் காலத்தில் வியந்து நோக்கப்பட்டது.

வடபுலத்தில் நீர்வேலியிலும், தெற்கே கொழும்பிலுமென இரண்டேயிரண்டு பிள்ளை கள் பராமரிப்பு நிலையங்கள் மட்டும் ஆரம்பிக் கப்பட்டுச் செயற்பட்டுவந்தன. பின்னர் காலத்தின் தேவையையும் பயனையும் கருதி பல்கிப் பெருகியுள்ளமை கண்கூடு. அக்காலத்தில் கிராம அபிவிருத்தி மேற்பார்வையாளராகப் பணி புரிந்து வந்த திரு.க.ச.முத்துவேற்பிள்ளை அவர் களது சீரிய சிந்தனையில் இவ் அரிய எண்ணம் தோன்ற கொழும்பில் தமிழ் கல்விப் பணிப்பாள ராகக் கடமையாற்றிய திரு.இ.க.சண்முகநாதன் நீர்வேலி கந்தசாமி கோயில் பிரதமகுரு திரு.சு.இராசேந்திரக் குருக்கள், மாதர்சங்கத் தலைவி திருமதி வேதவல்லி கந்தையா போன்

றோரின் வழிகாட்டலுடன் நீர்வேலிக் கந்தசாமி கோவில் ஆதனக்காணியில் ஆரம்பிக்கப்பட்ட தாக அறிய முடிகின்றது. (மேலதிக தகவல் அறிந்துள்ளவர்கள் தயவு செய்து ஆவணப்படுத்த உதவுங்கள்). அப்போதைய கைத்தொழில் சமூக சேவை வீடமைப்பு அமைச்சர் திரு.சேர் கந்தையா வைத்தியநாதன் அவர்களால் 4.12.1955அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. மிகவும் குறுகிய காலத்துள் (7 மாதங்கள்) கட்டி முடிக்கப்பெற்று அப்போதய யாழ் அரச அதிபர் திரு.ஸ்ரீகாந்தா அவர்களால் திறந்து வைக்கப்பட்டமையும் குறிப் பிடத்தக்கது. அன்றிலிருந்து இன்றுவரையும் கிராம மக்கள் அரச உதவி, அரசுசாரா நிறு வனங்கள், தானியங்கிச் செயற்படும் பொதுநல அமைப்புக்களின் உதவியுடன் இயங்கிவரு கின்றது. ஒருவயது நிரம்பிய குழந்தைகள் இணைக்கப்பட்டு, பாடசாலை செல்லும் பருவம் வரை, சத்துணவு, உடை, சுத்தம் சுகாதாரம் பேணப்பட்டு, ஆடல், பாடல் கற்றல் நட வடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ் விடுதியில் பராமரிக்கப்பட்டு நன்கு வளர்த் தெடுக்கப்பட்ட சிறுவர்களில் பலர் உயர் பதவி களிலும், உலகெங்கும் சென்று வாழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்றைய காலத்தில் சமூக முன்னோடி கள் விழிப்புற்று அமைத்துவைத்த இப் பாலர் பகல் விடுதியில் இன்று 80 பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றனர். நன்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களுடன் "ஆறுதல்" நிறுவனம் வழங்கும் டிப்ளோமா பயிற்சிநெறிபெற்ற மாணவ ஆசிரி யர்களும், மேலதிகாரியும் கடமை புரிகின்றார்கள். இவர்களுக்குப் போதிய ஊதியம் வழங்கப்படாத போதிலும் சமூக விழிப்புணர்வு கருதி, தொண்டு நிறுவனங்கள் தரும் வேனதம் பெற்றுச் சிறப்புறச்செயல்படுகின்றனர். இவர்களைப் போன்று, யாழ்ப்பாணம், தீவுப்பகுதிகள், வடமராட்சி, தென்மராட்சிப்பகுதிகள் அடங்கலாக கிட்டத்தட்ட 700முன் ஆரம்ப பாடசாலைகள் அமையப் பெற்றுள்ளன. ஆரம்ப காலங்களில் இவ்வாறான கல்வி நிலையங்கள் கிராம அபிவிருத்தியில் பெரும் பங்குவகிக்கும் கிராமத்து வாசிகசாலைகளை மையமாகக் கொண்டு இயங்கிவந்த போதிலும் இவ்வமைப் புக்களில் பொதுவாக நிலவிவரும் நிர்வாகச் சீர் கேடுகள் ஏதேச்சதிகாரம் காரணமாய் வீட்டு விறாந்தைகளிலும் கோவில் மண்டபங்களிலும் பொது மண்டபங்களிலும் நடைபெற்று வரு கின்ற போதிலும் ஒருசில நிலையங்கள், அரச அரச சார்பற்ற நிறுவனங்கள் தனியார் உதவி யுடன் சொந்தக் கட்டிடங்களிலும் இயங்கு கின்றன. இங்கே பிள்ளைகளுக்குச் சுதந்திரம், அவதானிக்கும் ஆற்றல், சுய தயார்ப்படுதல் (உடை, சப்பாத்து அணிந்து தயாராதல்) அவர் களைத் திருத்திவிடல், விளங்கிக் கொண்டவற்றை வெளிக்கொணரும் ஆற்றல்மேம்பாடு, என்பன வற்றுடன் சுத்தம் சுகாதாரம், போன்றன பேணப் படுகின்றன. சத்துணவுகள், சீருடைகள் வழங்கப் பட்டு, பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு இருக்க வேண்டிய எல்லா குண இயல்புகளும் போதிக்கப்படுகின்றன.

## முன் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களும் ஆற்றுகையாற்றல்களும்

முன் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் செயல்படுகின்றனர். அநேகமாக, ஏன் அனைவருமே பெண்கள் தான் முன் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்களாகச் சேவையாற்றுகின்றனர். தாங்கள் கற்றுப்பெற்ற தகைமைகளுக்கேற்ற வேலை கிடைக்கப் பெறாதவர்களும், வீணே வீட்டில் அடைந்து கிடக்க விரும்பாதவர்களும், சமூக விழிப்புணர் வுடன் கூடிய தொண்டுள்ளம் கொண்ட புதுமைப் பெண்களான இவர்கள், தாங்கள் கற்றுப் பெற்ற வற்றை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள் ளும் களமாகவே இக்கற்றல் நிலையங்களைக் கருதுகின்றனர். இவர்களோடொத்தவர்களில் அரச பணிகளில் இணைந்தவர்கள் மாதாந்தம் பெற்றுக்கொள்ளும் ஊதியத்திலும் மிகக் குறைந்த ஊதியம் அல்லது ஊக்குவிப்புத் தொகையை வேதனமாகப் பெற்றுக்கொண்டு சமூக விழிப்புணர்வுப்பற்றுடன் மாணவர்களை

வளர்த்தெடுத்து வருகின்றனர் வீட்டில் இக்குழந்தைகள் இருந்தால் அம்மாக்களுக்குத் தொல்லையாக இருக்கின்றதெனக் கருதி 2-3வயதுக் குழந்தைகளைக்கூட இங்கு இணைந்துவிடுவதால் பெரும் பொறுப்புக்களைச் சுமக்கின்றனர். பிள்ளைகளை உண்ணப் பழக்குதல், சுத்தமாக வைத்திருத்தல், குழந்தைகள் இயல்பாகவே தவறுவிடும் மலசலகூடப் பணிகள், ஆடல் பாடல் மூலம் கற்றுத்தருதல், மொழி எழுத்துக்களை விளங்கவைத்தல், சரியாக உச்சரிக்கப்பழக்குதல் ஒன்றிணைந்து செயற்பட வைத்தல் விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என்பனவற்றை அறியப் பண்ணல் அவற்றின் ஓசை ஒலிகளைச் சொல்லித்தருதல் எனப் பலதரப்பட்ட பணிகளைச் செய்வதுடன், பாடசாலை நேரம் முடிந்த பின்னரும் கூடப் பெற்றார் வந்து கூட்டிச் செல்லும்வரை பாதுகாப்பளித்தும் வருகின்றனர்.

**வேதனமும் வேதனையும்**

இவ்வாறான பெரும் சுமையை விரும்பி ஏற்றுத் தொண்டாற்றிவரும் இவர்களது ஊதியம் அதிகரிக்கப்படவேண்டும். அரசு, தனியார் நிறுவனங்கள் மாகாண அரசுகள் பிள்ளைகளின் பெற்றோர் என அனைவரும் ஒன்றிணைந்து வினைத்திறன் மிக்க திட்டங்கள் தீட்டி இவர்களது ஊதியத்தை அதிகரிப்புச் செய்வதில் கவனமெடுக்கவேண்டும். ஆகக் குறைந்த தொகையாக 12,000/= பெறும் வகைலாவது ஒழுங்குகள் செய்தல் வேண்டும்.

இவர்கள் ஏதோ ஒருவகையில் வஞ்சிக்கப்பட்டவர்களாகவே கருதவேண்டியுள்ளது. படித்த படிப்புக்கான வேலை இல்லாமல் இருப்பவர்கள், வருமானம் ஈட்டக்கூடியவகையில் தொழில்புரிய முதலீடு இல்லாதிருப்பவர்கள், பெற்ற கல்வியும் இளமைக்காலமும் வீணாகின்றதே என்ற ஆதங்கத்தில், சமூகத்துக் காவது உதவட்டும் என்ற உத்தம எண்ணம் கொண்டவர்கள். சிறுவர் பராமரிப்புக் கற்கை நெறியை இவர்களுக்குப் போதித்து பரீட்சித்து உள்வாங்க வேண்டும். யாழ் பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்பு அலகில் முன்பள்ளிக் கற்கைநெறி கற்பிக்கப்படுகின்ற போதிலும் அவ்வளவாகப் பயன் தரவில்லை. ஆறுதல் நிறுவனம் வழங்கும் பயிற்சி நெறிகள் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், சான்றிதழ்கள், பெரிதும் உதவினாலும் கூட இவர்களது வேதனம் அதிகரிக்கப்படவில்லை. இப் பயிற்சி நெறிகள் விரிவாக்கப்பட்டு, தனியார் நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள், உள்ளூராட்சித் திணைக்களம், கல்வித் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து இவர்களுக்கான பூரண பயிற்சி நெறியை வழங்கி தகைமையானவர்களை உள் வாங்கி நிரந்தர சேவையாளர்களாக இணைத்து நிரந்தர வருமானம் வழங்கமுன் வரவேண்டும்.

போரின் அழிவுக்குப்பின்னர் பல தொண்டு நிறுவனங்கள், தனியார் அமைப்புக்கள் ஐக்கிய நாடுகள் சிறுவர் நலம் காக்கும் அமைப்பு என்பன இச்சிறுவர்களின் கல்வியில் ஓரளவு கவனமெடுத்து வருகின்ற போதிலும், பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள் பற்றிக் கூடிய கவனமெடுக்கவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. நகரத்துப் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக பல தனியார் முன் ஆரம்ப பாடசாலைகளுக்குப் பெருந்தொகை பணத்தை வாரி இறைத்துத் தத்தமது பிள்ளைகளை இணைத்துக் கற்பிக்கின்றனர். கொழுத்த வருமானம்பெறும் இந்நிறுவனங்கள் போக்குவரத்து வசதி, தங்கிட வசதி, ஆசிரியர்களுக்கு உயர் ஊதியம், சீருடைகள் என வழங்கி குளிரூட்டிய அறைகளில் இருந்து நிர்வகித்து வருகின்ற போதிலும் அங்கும் போதிய பயிற்சி இல்லாத ஆசிரியர்களும் உள்ளனர். தனியார் பிரத்தியேக கல்வி நிலையங்கள் எவ்வாறு கல்வி வியாபாரச்சிந்தனையுடன் இயங்குகின்றனவோ அதே வியாபார சிந்தனையுடன்தான் இவ்வகை முன் ஆரம்பபாடசாலைகளும் இயங்குகின்றன. இவற்றுக்கும் மேலாக, போட்டிகள் கலை நிகழ்வுகள், ஒன்றுகூடல்கள் விழாக்கள் எனப் பற்பல காரணங்களுக்காக பெற்றோரிடம் பணம் அறவிடுகின்றனர். பெற்

றோர்கள் தான் பாவம் தம்பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்காக, தமது சக்திக்கும் மீறி இவ்வாறான நிலையங்களுக்கு விரும்பியோ விரும்பாமலோ பணம் செலுத்தி வருகின்றனர்.

இவ்வாறாக ஒரே தொழில்புரியும் ஒரு பகுதி முன் ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் வசதி வாய்ப்புகளுடன் தொழில்புரிய அதே பணிகளை விரும்பிச் செய்யும் இன்னொரு பெரும்பகுதியினர் குறைகளுடன் பணி செய்கின்றனர். இவ்வாறில்லாமல் அனைவரும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, பொதுப் பயிற்சிகள் சம அறிவூட்டல்கள் கருத்தரங்குகள் பயிற்சிப்பட்டறைகள் வழங்கி அனைவரையும் சம வேதனத்துடன் உள்வாங்கி, தன் நலம் கருதாது சேவை புரியும் இத்தொண்டர்கள் நிரந்தரமாக்கப்படல் வேண் டும். கல்விச் சமூகத்திலுள்ளோர்கள் மதிநுட்ப மிகு திட்டமிடலாளர்கள், இணைப்பாளர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து புதிய பொறிமுறை ஒன்றை உருவாக்கி பிள்ளைப்பருவத்திலிருந்தே மாணவர்களுக்கு வீரியம் மிகு கல்வி வழங்குவதற்காக ஒன்றிணைவோம்.

நல்லன எண்ணுவோம்! நல்லவையே நிகழும்!!

# வழிகாட்டி

**செல்வி.சோபனா ஜெயச்சந்திரன்**
**(பழைய மாணவி)**

நீண்ட யாழ்/சங்குப்பிட்டி மன்னார் சாலையிலே பரந்து விரிந்து காட்சியளித்துக் கொண்டிருந்தது அந்த மகா வித்தியாலயம். அது வெறுமனே கல், மண் கொண்டு கட்டப்பட்ட ஒரு கட்டடமல்ல, உயிர்த்துடிப்புப் பெற்று விளங்கும் புனிதத்தின் சுவாசம். அந்தக் கிராமத்தின் வளர்ச்சியின் மகுடமாய், மாணவர்களின் மனதின் அன்னையாய், நீங்காத இடம் பெற்று இயற்கையின் மடியில் கிடக்கிறது.

மாணவர்கள் வருகிறார்கள்... கற்றல் நடவடிக்கைகள் தொடர்கின்றன. வழமைபோல காலம் நகர்ந்து கொண்டிருக்கிறது அந்தப் பாடசாலைக்கு முன்னேற்றம் என்பது எட்டாக்கனியாக எட்டிவிடாமலே நிற்கிறது.

சில ஆண்டுகளாக அந்தப் பாடசாலையில் கடமையாற்றிய அதிபர் இடமாற்றம் காரணமாக வேறு பாடசாலை செல்ல வேண்டிய தேவை ஏற்பட்டதும், புதிதாக ஓர் அதிபர் அந்தப் பாடசாலைக்கு அனுப்பப்பட்டார்.

"பிள்ளைகள் இன்று எங்கள் பாடசாலைக்குப் புதிய அதிபர் வந்திருக்கிறார் எல்லோரும் அமைதியாக, ஒழுங்காக இருக்க வேண்டும் சரியா?"

ஓர் ஆசிரியர் மாணவர்களிடம் கூறினார்.

"சரிசேர்..." மாணவர்கள் அவர் கருத்திற்குத் தலைசாய்த்தார்கள்.

வழமைபோல் காலைப் பிரார்த்தனை முடிந்ததும் அதிபர் தனது உரையில் கல்வி முன்னேற்றம் பற்றியும் நல்லொழுக்கம் பற்றியும் அழுத்திக்கூறினார்.

மாணவர்கள் ஒழுங்கின்றி பிரார்த்தனைக்காக ஒன்று கூடியமை கண்டதும் புதிய அதிபர் மீனாட்சிக்கு அந்தப் பாடசாலையின் தற்போதைய நிலை புரிந்துவிட்டது. இறைவணக்கத்துடன் ஆரம்பமாகிய பிரார்த்தனை அதிபரை அறிமுகப்படுத்தும் நிகழ்வுடன் நிறைவடைந்ததும், மாணவர்கள் ஒருவகைச் சஞ்சலத்துடன் வகுப்பறைகளுக்குச் சென்றார்கள்.

முதல்வர் அலுவலகத்திற்குள் நுழைந்த மீனாட்சியைக் கண்டதும் ஏற்கனவே அங்கு வந்துவிட்ட பிரதியதிபரான பார்வதி எழுந்து நின்று வணக்கம் கூறியவாறே தன்னை அறிமுகம் செய்தார்.

"வணக்கம்" பதிலுக்கு மீனாட்சியும் கூறிவிட்டு, சாந்தமான புன்னகையுடன் பார்வதியை நோக்கி

"பார்வதி பாடசாலை சம்மந்தப்பட்ட கோப்புகளை ஒருக்கா நான் பார்க்கவேண்டும்" என்றார்.

"சரி அம்மா, நான் எடுத்துத் தருகிறேன்" பார்வதி கூறிக்கொண்டே மேசைமேல் அவற்றை எடுத்துவைத்தார்.

மூக்குக் கண்ணாடியைப் போட்டவாறே பார்வதியால் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு கோப்பையும் கவனமாக நோக்கினார் மீனாட்சி.

பாடசாலையின் நிலையை அவதானித்த மீனாட்சிக்கு அதிர்ச்சியாக இருந்தது. இப்

பாடசாலைக்கு மாற்றமாகி வரும் வேளையில் அறிந்திருந்த விடயங்கள் உண்மையாக இருந் தன. மிகவும் கஷ்டப்பட வேண்டியிருக்கும் போலத் தோன்றுகிறது என எண்ணிக் கொண்டார்.

இந்த மாணவர்களின் அடைவுமட்டம் ஏன் இப்படிக் குறைவாக இருக்கிறது? பாடசாலை வளர்ச்சியில் முன்னேற்றமோ முயற்சியோ ஏற்படாமல் இருக்கக் காரணம் என்னவாக இருக்கும்? பிள்ளைகளுக்குப் பாடம் கற்பிக்கக் கூட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருக் கிறது. இதையெல்லாம் ஏன் கவனிக்காமல் விட்டார்கள் மீனாட்சியின் மனதிலே பல கேள்விகள் தோன்றி மறைந்தன.

"பார்வதி இன்று பாடசாலை முடிந்ததும் நான் ஒரு தடவை ஆசிரியர்களைச் சந்திக்க வேண்டும். ஏற்பாடு செய்யுங்கோ" என்றார்.

"சரி அம்மா நான் ஏற்பாடு செய்கிறேன்

"ஆ... மற்றது, போன ஆண்டுப் பரீட்சை எடுத்த மாணவர்களின் அடைவுமட்ட விபரத்தை யும் கூட்டத்திற்கு வரும்போது எடுத்து வாருங்கோ"

"சரி"

"நான் ஒருதடவை எல்லா வகுப்பறை யும் பார்த்திட்டு" வருகிறேன்.

மூக்குக் கண்ணாடியை மீண்டும் மேசை மேல் வைத்துவிட்டு முதல்வர் அலுவலகத்தை விட்டு வெளியேறிய மீனாட்சி ஒவ்வொரு வகுப் பறையாகப் பார்வையிட்டவாறே வந்தார்.

சில வகுப்புகளில் ஆசிரியர் இல்லாது மாணவர்கள் விளையாடிக் கொண்டிருந்தார்கள் மாணவர்கள் கத்தும் சத்தம் கேட்டு அந்த வகுப் பறையினுள்ளே நுழைந்தார் மீனாட்சி. அதிபர் வகுப்பறைக்குள் நுழைவதைக் கண்ட மாணவர் கள் அமைதியாக தமது இடங்களில் அமர்ந்து கொண்டார்கள்.

"வணக்கம் அம்மா"

வணக்கம் எல்லோரும் அமைதியாக இருங்கோ"

"சரி அம்மா"

"ஏன் எல்லோரும் இப்படிச் சத்தம் போடு றீர்கள் உங்களுக்கு என்ன பாடம்" இப்போது? பாடம் எடுக்க ஆசிரியர் வரவில்லையா?

ஆசிரியர் இல்லை" ஒரு மாணவன் எழுந்துநின்று கூறினார்.

"சரி நீங்கள் உயர்தரத்தில் என்ன பிரிவில் கற்கிறீர்கள்"

"கலைப்பிரிவு"

ஒவ்வொரு மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகளையும் வாங்கிப் பார்வையிட்டார் மீனாட்சி. ஒரு மாணவன் மட்டும் ஒரே பயிற்சிக் கொப்பியில் எல்லாப் பாடங்களிற்குமான குறிப்பு களையும் எழுதியிருந்ததைக் கண்டார்.

"தம்பி உன்ரை பெயர் என்ன"

"ரவி... தயங்கியவாறே கூறினான்

"என்னை இன்று ஒருதடவை அலுவல கத்தில் வந்து சந்தியும்"

"சரி" அம்மா

"சரி பிள்ளைகள் எல்லோரும் அமைதி யாக இருந்து பாடங்களை எடுத்துப் படியுங்கள்."

உயர்தர மாணவர்களின் பரீட்சைப்

புள்ளிகளின் விபரக்கொப்பியை எடுத்தவாறு அலுவலகத்திற்குள் நுழைந்தார்.

ஒவ்வொரு மாணவர்களினதும் புள்ளி களை அவதானித்த போது ஏனைய மாணவர் களின் புள்ளிகளைவிட ரவியின் புள்ளிகள் கூடுதலாக இருந்ததைக்கண்ட மீனாட்சிக்கு ஆச்சரியமாக இருந்தது.

“அம்மா உள்ள வரலாமா” ரவி பணி வோடு கேட்டபடி அலுவலக வாசலில் நின்றான்.

“உள்ளேவாங்கோ”

“வரச்சொன்னீர்கள்” அம்மா

“ஓ... ரவியா! உங்களோடு கதைக்க வேண்டும். பாடங்களுக்கான புள்ளிகளெல்லாம் உமக்குத்தான் கூட வந்திருக்கிறது. பிறகு ஏன் ஒரே கொப்பியிலை எல்லாப் பாடக் குறிப்புகளை யும் எழுதியிருந்தனீங்கள் உம்முடைய பெற் றோரை நான் சந்திக்கவேண்டும் கூட்டிவாரும்.

“எனக்கு அம்மா, அப்பா இல்லை. படிக் கிறதுக்கான வசதியும் இல்லை. அதுதான் இப்படி ஒரு கொப்பியில் எழுதுகிறேன்”

“அப்போ யாரோடு இருக்கிறீங்கள்”

“நான் பாட்டியோடுதான் இருக்கிறான்”

அம்மா அப்பா இல்லையென்றால், அவர்களுக்கு என்ன நடந்தது?

2009ஆண்டு மாத்தளன் பகுதியில் குண்டுவெடிப்பில் இறந்து விட்டார்கள்.

“சரி ரவி உன்ரை படிப்புச் செலவுக்கு நான் உதவி செய்யிறன் நீர் நல்லாப் படிப்பீரா?

“மேடம்! உண்மையாகவா சொல்றீங் கள்” ரவி ஆச்சரியத்துடன் கேட்டான்.

“ஆம்” அதற்கான ஒழுங்குகள் நான் செய்துதருவேன் நீர் நல்லாப் படிக்கவேண்டும் சரியா?

“நிச்சயமாக நான் நல்லாப் படிப்பன்” மீனாட்சியின் காலில் விழுந்து வணங்கியவாறே ரவி கூறினான்.

பாடசாலை இறுதி மணி ஒலிக்கவே பாடசாலைக்கீதம் இசைக்கப்பட்டது. மாணவர் கள் வீடு செல்லத் தயாரானார்கள். ஆசிரியர்கள் கூட்டத்திற்காகப் பிரதான மண்டபத்திற்குள் நுழைந்தார்கள். அதிபர் மீனாட்சி மண்டபத்திற் குள் நுழைந்ததும் எழுந்து நின்ற ஆசிரியர்களை அமருமாறு கூறிவிட்டு மீனாட்சியும் அமர்ந்து கொண்டார்.

“மாணவர்களின் கடந்த ஆண்டு அடைவு மட்டத்தைப் பார்த்தீர்களா?”

எல்லோரும் மௌனமாக இருந்தார் கள்.

“ஏன் யாருமே பேசாமல் இருக்கிறீங் கள் போனவருடம் மட்டுமல்ல ஒவ்வொரு வருட மும் பிள்ளைகளின் அடைவு மட்டம் மிகவும் குறைவாகவே இருக்குது. இதற்கு என்ன காரண மென்று நினைக்கிறீங்கள்” அதிபர் மீனாட்சி தெளிவாகவும், கம்பீரமாகவும் பேசினார்.

“மேடம் இந்தப் பிள்ளைகளுக்கு எப் படிப் படிப்பிச்சாலும் மண்டையிலை ஏறாது” ஓர் ஆசிரியர் கூறினார்.

“ஓர் ஆசிரியராக இருந்துகொண்டு நீங் கள் இப்படிக் கதைக்கலாமா? முதலில் பிள்ளை களுக்குப் புரியக்கூடியவாறு பாடங்களைச் சொல்லிக் கொடுங்கோ. ஆசிரியர் பற்றாக்குறை பற்றி நான் மேலிடத்தில் கதைக்கிறன்” மீனாட்சி யின் முகத்தில் சீற்றம் தெரிந்தது.

"மேடம் இந்தப் பாடசாலையிலை பிள்ளைகளுக்குப் படிப்பிக்கிறதுக்கான பௌதீக, பொருளாதார வளப்பற்றாக்குறை இருக்குது"

"விஞ்ஞான பாடத்திற்கென்று பொது வாக ஓர் ஆய்வுகூடம் இல்லை. இது வகுப் பறையிலைதான் இயங்கிவருகுது"

பல ஆசிரியர்கள் தமது கருத்துக்களை அதிபரிடம் கூறினார்கள்.

"சரி நீங்கள் சொல்பவற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன். முதலில் பிள்ளைகளின் அடைவு மட்டத்தை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவர வேண்டும். அவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை எடுங்கோ" என்னால் ஆன வரையில் வளங்களை ஆக்கித் தருகிறேன். ஏழைப்பிள்ளைகளின் கல்வியும் நேரமும் வீணாகக்கூடாது. எல்லோரும் இணைந்து இப் பாடசாலையின் தரத்தை உயரவைப்போம். ஆசிரியர்கள் அதிபரின் கருத்துக்களை ஏற்று அவருடன் சேர்ந்து செயற்பட்டு ஒத்துழைத்தார்கள்.

அப்பிரதேசத்தில் மாணவர் கல்விச் செயற்பாடுகளில் தீவிர ஈடுபாடு காட்டிச் செயற்பட்டுவரும் அமைப்பொன்றின் உதவியை ராமுக்குப் பெற்றுக் கொடுத்தார் மீனாட்சி.

அன்று வழமைக்கு மாறாக வகுப்பறை களில் ஆசிரியர்களின் கற்பிக்கும் ஓசையைத் தவிர வேறு எந்தவொரு சத்தமோ, சஞ்சலமோ ஏற்படவில்லை. பாடசாலையே அமைதிக் கோலம் பூண்டிருந்தது.

அதிபர் மீனாட்சிக்கு எடுத்தகாரியம் நிறைவேறிய பூரிப்பு.

சில மாதங்கள் கடந்தது...

அதிபரின் ஆலோசனையின்படி ஆசிரி யர்களால் மாணவர்களின் ஆற்றல்களையும் ஆக்கங்களையும் வெளிக்கொணரும் வகையில் கண்காட்சி நிகழ்வொன்று நடாத்து வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

"எல்லாருக்கும் தகவலைத் தெரிவிச்சிட் டீர்களா பார்வதி" அதிபர் மீனாட்சி பிரதியதி பரிடம் கேட்டதும்,

"ஓம்... மேடம் எல்லா ஆசிரியர் களிடமும் சொல்லிவிட்டேன்." எல்லோரும் ஆர்வத்துடன் தயாராகுகின்றனர்.

"கண்காட்சிக்கு என்ன தலைப்பு வைக்கப்போகிறார்களாம்"

"ஆக்கி மகிழ்வோம்" என்று தலைப்பு வைக்க உள்ளார்களாம்.

"நல்ல தலைப்பு"

மீனாட்சி கூறிக்கொண்டே தனது வேலைகளைத் தொடர்ந்தார்.

சில வாரங்கள் கடந்து கண்காட்சி நடை பெற்று முடிந்தது. அனைவராலும் பாராட்டப் பட்டு பாடசாலையின் புகழ் சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைந்தது.

விளையாட்டுத்துறை, கலைத்துறை களில் ஆர்வமுள்ள மாணவர்களுக்குச் சந்தர்ப் பங்கள் வழங்கப்பட்டன. போட்டிகளில் பங்கு பற்றிய மாணவர்கள் பலர் வெற்றிபெற்றார்கள். வலய, மாகாண தேசிய மட்டங்களில் பரிசில் பெற்று பெருமை சேர்த்தனர்.

உயர்தர மாணவர்கள் நன்றாகக் கற்று பரீட்சை எழுதினார்கள். ஆசிரியர்களால் முன் வைக்கப்பட்ட குறைகளுக்குப் பல வழிகளில் முயன்று அதற்கான தீர்வை மீனாட்சி கண்டறிந் தார். மைதானத்தின் ஒரு பகுதியிலே விஞ்ஞான

ஆய்வுகூடம், நூலகம் என்பன புதிதாகக் அமைக் கப்பட்டுத் திறக்கப்பட்டன.

சில மாதங்கள் கடந்து உயர்தர மாணவர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாகி யது. ராம் உட்படப் பல மாணவர்கள் பல்கலைக் கழகத்திற்கு தகுதி பெற்றிருந்தார்கள். என்றுமே இல்லாத வகையில் அந்த ஆண்டில் பல பாடங் களுக்கு நூறுவீதம் சித்தி கிடைத்தது. மீனாட்சி யால் வழிகாட்டப்பட்ட மாணவன் ராம் முதல் மாணவனாகத் தெரிவுசெய்யப்பட்டு பல்கலைக் கழகத்திற்கு அனுமதி பெற்றான்.

அன்று ராமிற்கான கௌரவிப்பு விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. ராம் உட்படப் பலர் தமது வெற்றிக்கு காரணம் அதிபர் மீனாட்சியே எனக் கூறினார்கள் அனைவரும் அதிபரைப் பாராட்டினார்கள்.

அன்று மீனாட்சி, அதிபர் என்ற நிலை யையும் தாண்டி வழிகாட்டியாக அனைவருக் கும் முன் உதாரணமாகக் கூறப்பட்டார்.

ராம், தனது ஏற்புரையில், ஆசிரியர்கள் அனைவருக்கும் நன்றிகூறிபடி அம்மா அப்பா இல்லாது, எழுதிப்படிக்கக் கொப்பி புத்தகம் இல்லாதிருந்த நிலையில், அதிபர் அவர்களின் முயற்சியால் இவை அனைத்தும் எனக்குக் கிடைத்தன. வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண டேன், ஆர்வத்துடன் கற்றேன். இன்று உங்கள் பாராட்டுகளுக்கும் வாழ்த்துக்களுக்கும் உரிய வனாகி நிற்கின்றேன். அன்று அதிபர் அம்மா எனக்கு உதவிகள் செய்யாதிருந்தால் நான் தெருவழியே அநாதையாகத் திரிந்திருப்பேன். ஆதலால் நீங்கள் அனைவரும் என்னைப்போல முயன்றால் உதவி செய்யவும் உயர்த்தி விடவும் யாராவது வருவார்கள். அதிபர் அம்மா இப் பாடசாலைக்கு மாற்றலாகி வந்த நாள் பாட சாலைக்கு நல்லநாள். எனக்கும் நல்லநாள். அன்னை தந்தை இல்லாத எனக்கு, எனக்கு மட்டு மல்ல எல்லோருக்கும் தாயாகி இருந்து நெறிப் படுத்தி வருகின்றார் என்று கூறிக்கொண்டு போன ராம் உணர்ச்சிவசப்பட்டு விம்மி, விம்மி அழத்தொடங்கிவிட்டான். அவதானித்துக் கொண்டிருந்த அதிபர் எழுந்து வந்து அர வணைத்து ஆறுதலளித்தார். மக்கள் கூட்டம் இவரைப்போல எல்லா அதிபர்களும் ஆசிரியர் களும் பொறுப்புணர்வுடன் நடந்தால் எமது மாணவர்கள் இழந்த கல்வியை மீண்டும் பெற வாய்ப்பாகும் எனக் கூறியவாறு அதிபரைப் பாராட்டிக்கொண்டு கலைந்து சென்றனர்.




அதிபர்கள் கல்விச்சுற்றுலாவில் சப்பிரகமுவ மாகாணத்தில்



கல்விச்சுற்றுலாவில்



சிறுவர் பாராளுமன்ற மாணவர்களுடன்

# ஒழுக்காற்றுக் குழுவும் அதிபரின் வகிபங்கும்.

**திரு.தி.மதிபரன்**
**ஆசிரியர்**
**நாவற்குழி மகாவித்தியாலயம்**

ஒரு நிறுவனத்தைச் சிறப்பாக இயக்குவதற்கு இன்றியமையாத செயற்பாடுகளில் ஒன்றாகச் சிறப்பான முகாமைத்துவம் விளங்குகின்றது. அந்தவகையில் முகாமைத்துவத்தின் ஒரு நுட்பமாகத் தொழிற் பிரிப்பும் முகாமையாளரின் மதிநுட்பமும் மேலோங்கி நிற்கின்றது. பொதுவாக நிறுவனங்களின் முகாமையிலிருந்து பாடசாலையின் முகாமை வேறுபட்டிருக்கும் என்பதை எவராலும் மறுக்க முடியாது. ஏனெனில் ஏனைய நிறுவனங்கள் கோப்புக்கள், பொருட்கள், இயந்திரங்கள்– போன்ற சடப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தித் திறனை விருத்தி செய்கின்றன. ஆனால் பாடசாலையைப் பொறுத்தவரையில் சமூகப் பொருத்தப்பாடுடைய பிரஜையைகளை உருவாக்குவது பிரதான நோக்கமாக அமைந்திருக்கிறது பாடசாலைகளில் உற்பத்தி செய்யப்படும் வெளியீடானது மாறுபட்டு தர்க்கிக் கும்சிந்திக்கும் பேசும் மனிதவள விருத்தியைச் சிறந்த முறையில் உற்பத்தி செய்வதனால் ஏனைய நிறுவனங்களின் முகாமையை விடப் பாடசாலை முகாமை வேறுபட்டிருப்பதனை அவதானிக்க முடியும்.

அந்த வகையில் யா/நாவற்குழி மகாவித்தியாலயம் பற்றி நாம் சிந்திப்போமானால் நாவற்குழிப் பிரதேசம் பல் கலாசார, பல் சமூகப் பிரஜைகள் வாழும் ஒரு பிரதேசமாகும். இப்பிரதேச மக்களின் பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டு விடயங்கள் மிகவும் சிக்கல் தன்மை வாய்ந்தன. இங்கு வாழும் மக்களை நிரந்தரக்குடிகள் மற்றும் குடியேற்றவாசிகள் என இரு கோணத்தில் நோக்கமுடியும். இப்பிரதேசத்திலுள்ள வறுமைக்கோட்டின் கீழ் வாழும் அதிகளவான குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 750 மாணவர்கள் இப்பாடசாலையில் கல்வி கற்று வருகின்றனர்.

இம்மாணவர்களின் குடும்பங்கள் பெரும்பாலும் குடும்பக் கட்டுமானங்கள் சீர் குலைந்தும், வறுமையின் காரணமாகச் சமூகப் பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுவதனையும் அவதானிக்க முடிகின்றது. இத்தகைய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு வீடுகளில் உரிய முறையில் அன்பு, காப்பு, கணிப்பு போன்ற தேவைகளைப் பெற்றோரால் பூர்த்தியாக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இதற்கு அவர்களின் வறுமை பிரதான காரணமாக அமைகின்றது.

இம்மாணவர்கள் சமூகத்திலும், பல்வேறுபட்ட இன்னல்களுக்கு முகம்கொடுத்து இலங்கை அரசாங்கத்தின் கட்டாயக் கல்விச் சட்டத்திற் கமைவாகவும் எமது பாடசாலையை நோக்கி வரும் நிலை காணப்படுகின்றது.

இம்மாணவர்கள் எமது பாடசாலைக்குள் நுழைகின்றபோது “ஒழுக்கமும் கல்வியும் உயிரெனப்படும்” என்ற எமது பாடசாலையின் மகுடவாக்கியம் அவர்களை அன்புடன் வரவேற்கின்றது. ஆனால் அம்மாணவர்களின் மனநிலையோ மேற்கூறப்பட்ட காரணங்களால் மகுடவாக்கியத்தைப் பின்பற்ற மறுக்கின்றது. இந்த சூழ்நிலையிலுள்ள மாணவர்களை எமது பாடசாலையின் முகாமையாளரான அதிபர் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்கள் நல்வழிப்படுத்தும் நோக்கில் பாடசாலைகளின் பொதுவான கொள்கைகளுக்கேற்ப பல்வேறு

குழுக்களை நியமித்து அக்குழுக்களினூடாக சமூகப்பொருத்தப்பாடுடைய பிரஜைகளை உரு வாக்கும் பணியைத் திறம்பட ஆற்றி வருகின் றார். அந்தவகையில் ஒழுக்காற்றுக்குழுவினூடாக மாணவர்களை நல்வழிப்படுத்தும் போது பல்வேறு சவால்களை எதிர்கொள்ளவேண்டிய நிலை ஏற் பட்டிருக்கின்றது. இச்சவால்களைப் பின்வரும் வகையில் நோக்க முடியும்.

1. அதிபர் ஆசிரியர் முரண்பாடு.
2. ஆசிரியர் ஆசிரியர் முரண்பாடு.
3. ஆசிரியர் மாணவர் முரண்பாடு.
4. மாணவர் மாணவர் முரண்பாடு.

அதிபர் ஆசிரியர் முரண்பாட்டைத் தீர்ப் பதற்கு எமது அதிபர் பல தந்திரோபாயங்களைக் கையாண்டு வெற்றியும் கண்டுள்ளார்.

ஆசிரியர் ஆசிரியர் முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு ஆசிரியர்களுடனான கல்விச் சுற் றுலா, ஆசிரியர்களின் குடும்ப நிகழ்வுகளிலான பிரசன்னம், ஆசிரியர்களின் திறமைகளைப் பாராட்டுதல், ஆசிரியர்களின் நல்லாக்கத்திற்கு ஊக்கமளித்தல், ஆசிரியர்கள் சேர்ந்தியங்கக் கூடிய வகையில் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித் தலும் அதனைக் கண்காணித்தலும் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றார்.

ஆசிரியர் மாணவர் முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கு மாணவத் தலைவர்களைத் தெரிவு செய்கின்றபோது வகுப்பாசிரியர்களின் தெரிவினூடா கவும், ஏனைய ஆசிரியர்களின் மதிப்பீட்டி னூடாகவும் மாணவத் தலைவர்கள் தெரிவு செய்யப்படுகின்றபோது ஒவ்வொரு மாணவனும் மாணவத் தலைவன் என்ற இலக்கை அடைந்து கொள்வதற்கு ஆசிரியர்களின் நன்மதிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ஆசிரியர்களுடனான முரண்பாட்டைத் தவிர்த்துக்கொள்ளும் வகையில் அதிபர் திட்டமிட்டுள்ளார்.

மாணவர் மாணவர்முரண்பாட்டினைத் தீர்த்துக் கொள்வதற்கு அதிபர், ஒழுக்காற்றுக் குழு ஆசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்கள் இணைந்த வகையில் பாடசாலை மாணவர் ஒழுக்கக் கோவை தயாரிக்கப்பட்டு அதனை ஒவ்வொரு வகுப்பறைகளிலும் காட்சிப் படுத்தி அதனைப் பின்பற்றும்படியும், அதன்படி பின்பற்றும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பு மளித்து செயற்படுத்தப்படுகின்றது.

எமது பாடசாலையின் ஒழுக்காற்றுக் குழு பல்வேறு சவால்களை முகம்கொடுத்திருந் தமையும், இன்றும் முகம் கொடுத்து வருவதும் எவராலும் மறுக்கப்படமுடியாததாகும்.

மாணவத்தலைவர் ஆசிரியர்கள் முரண் பாடு ஏற்பட்ட வேளையில் அதிபர் அவர்கள் கையாண்ட ஒரு உத்தியின் விளைவே தென்ம ராட்சி வலயத்தின் பாடசாலைகளில் எமது பாடசாலையிலேயே முதல் தடவையாக மாணவ முதல்வர் தினம் கொண்டாடப்பட்டமையாகும். இங்கு மாணவத் தலைவர்களுக்கான மதிப்பீட்டு நடவடிக்கை வருடாவருடம் இடம்பெற்று 75 வீத புள்ளி பெறும் மாணவதலைவர்கள் அனைவருக் கும் மாணவ முதல்வர் மேலங்கி (Coat) அணிவித்துக் கௌரவிக்கப்படுவதுடன் ஏனைய மாணவ முதல்வர்களுக்கு அவர்களின் தராதரத் திற்கேற்ற சான்றிதழும் வழங்கிக் கௌரவிப் பதன் வாயிலாக மேற்படி முரண்பாட்டினைத் தீர்த்தமையினைக் குறிப்பிடலாம்.

மேற்படி சவால்களையெல்லாம் வெற்றி கொள்வதற்கு எமது பாடசாலையின் அதிபர் அவர்கள் எமது பாடசாலையில் மாணவியாக, மாணவத்தலைவியாக, ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக, அதிபராக 44 வருட காலத்திற்கு மேலாக பாடசாலை, பாடசாலை சமூகம்சார் அனுபவமே காரணமாகும்.

ஒரு மனிதனின் கல்வி என்பதும் அவனது வாழ்க்கை அனுபவமே என்ற கல்வி யியலாளர்களின் கூற்றுக்கமையப் பாடசாலை யின் சவால்களையும், பாடசாலையின் வளர்ச் சியையும் உரிய நேரத்தில் உரிய தீர்மானத்தை

எடுத்து வெற்றி பெற்றுள்ளமையை இவரது செயற்பாடுகளிலிருந்து அறியமுடிகின்றது.

எமது பாடசாலையின் ஒழுக்காற்றுக் குழு சிறப்பாக இயங்குகின்றது என்பதற்கு எமது பாடசாலையில்நிகழ்ந்த பல்வேறு நிகழ்வுகளில் கலந்துகொண்டு சிறப்பித்த முதன்மை விருந்தினர்கள், சிறப்பு விருந்தினர்கள், கௌரவ விருந்தினர்கள் மற்றும் பாடசாலைக்குத் தரிசித்தோர், கல்வி அதிகாரிகள் போன்றோர் எமது பாடசாலையின் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் குறிப்பிட்டிருப்பதனைச் சான்றுபடுத்திக் கொள்ள முடியும்.

மேற்படி சிக்கல் நிறைந்த சமூகத்திலுள்ள பாடசாலையை மிகவும் சிறப்பாக வழிப்படுத்திச் சிறந்த வழிகாட்டியாக வாழ்ந்து காட்டி எம்மையெல்லாம் வழிப்படுத்தி நாவற்குழி சமூகத்தின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டு முழுமையாகச் செயற்பட்ட எமது அதிபரின் சேவையை எமது பாடசாலைச் சமூகம் என்றும் மறவாது.

# அதிபர் நடிபங்கும் நடைமுறைச் செல்நெறியும் ஒரு யதார்த்த நோக்கு

திரு.சு.சுதர்சன்
ஆசிரியர்
நாவற்குழி மகாவித்தியாலயம்

## அறிமுகம்

உலகின் வேகமான மாற்றத்தோடு சேர்ந்து இயங்கக்கூடிய நாளைய தலைவர்களை உருவாக்கும் செயற்பாட்டை செய்வதில் பாட சாலைகள் முக்கிய இடம்வகிக்கின்றன. பாட சாலைகள் சீராக செயற்படுவது அப்பாடசாலை யின் அதிபரின் கைகளிலேயே தங்கியுள்ளது. பொதுவாக காணப்படும் தலைமைத்துவத்தில் பாடசாலைக்குரிய தலைமைத்துவம் நியமனத் தலைமைத்துவமாகும். இது இலங்கையிலுள்ள பாடசாலை வகைகள் அனைத்திற்கும் பொது வானதாகும். அவ்வகையில் 1C வகையைச் சேர்ந்த நாவற்குழி மகாவித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி ஓய்வுபெறும் திருமதி.வசந்தாதேவி மேகலிங்கம் அவர்களின் பணியாற்றுகைகளை அதிபர் நடிபங்குகளுடன் ஒப்புநோக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## பணிநிலையும் விரிபார்வையும்

அதிபர்களின் பணியில் மிக முக்கிய மான சவால் வேறுபட்ட உணர்வுகளையுடைய வேறுபட்டதரத்திலான மனிதர்களை முகாமை செய்வதுடன் பௌதீக வளங்களையும் முகாமை செய்ய வேண்டியுள்ளமையாகும். இதனடிப்படை யில் அதிபர் அவர்கள் தனிப்பட்ட பல்வேறு தேவைகளையுடைய ஆசிரியர்களையும் அவர் களது வேறுபட்ட குணாதிசயங்களையும் பல் வேறுபட்ட குடும்பப்பின்னணி கொண்ட மாண வர்களையும் இருக்கின்ற வளங்களைப் பாதுகாப்பதோடு அவற்றை மேம்படுத்தவும் பணி யாற்றி முகாமை செய்யவேண்டிய தேவையுள்ளது. இத்தேவையினை செவ்வனே யாற்றியுள்ளதனால் தான் சமூகம் இணைந்து சீராக பள்ளி இயங்க ஆதரவும் நல்கி இன்று பாராட்டி விழாவெடுப்பதும் ஆதாரமாக கொள்ள முடியும். இவற்றிலும் பெண்ணாயிருந்து தனிநபர் வாழ்வியற் சவால்களையும் சமூகக்கட்டமைப்பு சவால்களையும் வெற்றிகண்டு பணியினை தன் சொந்த ஊரிலேயே ஆற்றி ஓய்வு பெறுகின்றமை சமூக அங்கீகாரமாகவே கணிக்கத்தக்கது.

## நேரந்தவறாத நேரமுகாமை

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற பழமொழி கற்றுத்தந்த கருத்து வழி நேரத்தை திட்டமிட்டு செயலாற்றும் ஆற்றுகை களே வெற்றி பெறுகின்றன.

காலையில் பாடசாலை வாயிலில் உந்துருளியில் அதிபர் அவர்கள் வந்திறங்கும் போது மணிக்கூடு ஓடாதிருந்தாலும் நேரம் 7.35 ஆகவேயிருக்கும்.

இதனைவிட வாயிலின் உள் நுழைவில் வரவேற்கும் வாசகத்தை மட்டுமல்ல மணிக் கூட்டையும் தொங்க விட்டுள்ளமை நேரத்தின் நேர்மையை எடுத்தியம்புகின்றது.

பரீட்சை மண்டபங்களில் ஆங்கிலம் போன்ற பாடங்களை விரைவாக மாணவர்கள் பதிலெழுதி முடித்தாலும் விடைப்பத்திரங்களை முழுமை நேரத்தின் பின்பே பெறுவதற்கு அனுமதிப்பார்.

விளையாட்டு போட்டி நிகழ்வு நிறை வுற்று இருள் நிறைந்தாலும் பாடசாலையில் மீள் ஒழுங்கமைப்புவரை நிற்பதும், கல்விச்சுற்றுலா

காலங்களில் குறிப்பிட்ட நேரத்தில் பயணங்களைத் தொடர்வதும், விருந்தினர்கள் வருகை பிந்தினும் நிகழ்வாரம்பித்த பதிவுகளும் நேரமுகாமைக்காய் ஆதாரம் கூறும்.

தனிமனித, அலுவலக தேவைகள் கருதி பாடசாலைக்கு வரமுடியாதவிடத்தோ அல்லது பிந்திவர நேர்ப்படும் போதோ பதிலாள் ஒழுங்கும், பதிவும் மேற்கொள்ளப்பட்டிருக்கும். பாடசாலை இயக்கம் சீராக இயங்கும்.

புறகிருத்திய வேலைத்திட்டங்கள் மேற் கொள்ளவேண்டியேற்படின் தொடர்புடைய ஆசிரிய ஒதுக்கீடு மட்டுமன்றி குறித்த நேரத்தில் தொலைபேசியழைப்பு உறுதிப்படுத்தலையும் அனுபவித்த ஆசிரியர்கள் அறிவர்.

இவை போலச்செய்யும் மாணவர் உள்ளத்தில் ஆழப்பதிவது திண்ணம்.

## மானிட இடைவினையுறவும் மாண்புறு சேவையும்

சமூகத்தின் பிரதிபலிப்பான பாடசாலை சீராக இயங்குவதற்கு அதிபர் மனிதர்களுள் கொண்ட தொடர்புத்திறனே அடித்தளமாக காணப் படுகின்றது. இது கீழ்வருமாறு வகுக்கப்பட்டிருக் கின்றது.

1. அதிபர் + ஆசிரியர் உறவு
2. அதிபர்+ மாணவர் உறவு
3. அதிபர்+ கல்வியதிகாரிகள் உறவு
4. அதிபர் + ஏனைய நிறுவனங்களுடனான உறவு
5. அதிபர்+ சமூகத்துடனான உறவு
6. அதிபர் +கல்வியலாளருக்குமிடையிலானஉறவு

ஆசிரியர்களுடன் சகசமாக அதிபர் அவர்கள் பழகும் போதும் கருணையும் கண்டன மும் இணைந்தேயிருக்கும். ஆசிரியர்களின் நிகழ்வுகளில் தவறாது பங்குபற்றும் இயல்பினர் இவர். விடுகை விண்ணப்பித்தால் கடுகடுப்பாக விருப்பார். ஆனால் அவசியமென தானுணரின் புன்முறுவலுடன் அமைதியாக இருப்பார்.

மாணவர்களின் தேவையறிந்து மாணவர், உதவும் உள்ளங்கள், சமூக நிறு வனங்களை நாடி உதவிபெற்றுக் கொடுப்பவர். ஏழ்மையை நன்குணர்ந்தவர். எப்பொழுதும் “எங்கள் பிள்ளைகள் பாவம் சேர்” என உரைப் பார். உயர்தரம் கற்க கணித பாடமில்லாதே தற்துணிவுடன் மாணவர்களைச் சேர்த்து நம்பிக்கையூட்டி தேறவைத்து பல மாணவர் களின் வாழ்வில் ஒளியேற்றியவர்.

கல்வியதிகாரிகளுடனான சீரான உறவே வளப்பெருக்கமும் வனப்புமிகு பாடசாலையாக வும் இன்று காணப்பட காரணம் எனலாம். சமூக நிறுவனங்களுடனான அங்கீகாரம் சான்றிதழ் களாக மட்டுமல்ல சமூக ஊடாட்டத்தாலும் பெறும் உதவிகளாலும் மலிந்தே கிடக்கின்றன.

சமூகப்பிணைப்பு மிக நேர்த்தியானது. பாடசாலைத் திருத்தவேலைகள் யாவும் இப்பிர தேச வல்லுணர்களாலேயே குறித்த நேரத்திற் குள் செய்விக்கும் வல்லமையை கண் கூடாக கண்டிருக்கின்றோம். கல்வியியலாளர்களுக்கும் தனக்குமிடையிலான தொடர்பின் காரணமாக அதிபர் அவர்கள் பல்கலைக்கழகங் களிலிருந்தே விழாவிற்கான விருந்தினர்களை அழைத்து அறிமுகப்படுத்தியிருக்கின்றார்.

## பாடசாலை கலாசாரமும் கவிவு நிலைவும்

பாடசாலைச் சூழலை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கேற்றவாறு வடிவமைத்துக் கொள்ளுதல் ஓர் அதிபரின் ஆளுமையிலேயே தங்கியுள்ளது. பிள்ளைகள் பாடசாலைக்குள் தமக்கு பாதுகாப்பு உண்டு என உணரக்கூடிய சூழ் நிலையை சமூகத்துடன் இணைந்து எடுக்கக் கூடியவராக அதிபரிருக்க வேண்டும். அதே வேளை ஆசிரியர்களும் உளத்திருப்தியோடு பணியாற்றக்கூடிய சூழலை பேணவேண்டிய பொறுப்பு அதிபரைச் சார்ந்ததேயாகும்.

இந்நிலையையேற்படுத்துவதற்காக கவனங்கொள்ளவேண்டிய கருத்துக்கள்

பலவுண்டு. அதற்காகத் தான் பரிசில் நாள் நிகழ்வுகள் இப்பிரதேசம் சார் பெரியவர்களின் துணையுடன் மேற்கொள்ளப்படுகின்றது. வருடந்தோறும் அதிபர் அவர்கள் விரும்பாவிட்டாலும் விளையாட்டுப் போட்டிக்கான குறிப்பிட்ட நிதியொதுக்கீடு பாடசாலைக்கணக்கில் பதிவாகியிருக்கும். பாடசாலைச்சின்ன தத்துவம் யாவரும் அறியவேண்டும் எனும் நோக்கில் "நாதக்குடம்" எனும் 146ம் ஆண்டு நிறைவுவிழா சஞ்சிகையில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றமை நானறிந்தவரை இதுவே சின்னத் தத்துவம் பதிவாகியுள்ள முதற் தடவையாகும்.

அதேபோல ஆசிரியர், மாணவர் கூட்டங்கள், இணைப்பாடவிதான ஆற்றல் வல்ல மாணவர்களின் பெற்றோர் சந்திப்புக்கள், முதலானவை பாடசாலையின் தூரநோக்கு, அது நோக்கிய நகர்வு, இணைந்தாற்றும் பண்பு ஆகிய வற்றினால் பாடசாலைச் சூழல் கற்றலுக்கு சாதகமாக அதிபர் அவர்களினால் ஏற்படுத்தப்பட்டிருக் கின்றது.

இவை யாவற்றுக்கும் மேலாக திறமை சார் மாணவர்களை ஊக்குவிக்கும் பாங்கும் மனங்கொள்ளத்தக்கது. அவ்வகையிலேயே செல்வி சோபனா ஜெயச்சந்திரனின் "நேர்கோடுகள் என்றும் வளைவதில்லை" எனும் சிறுகதைத் தொகுதி கற்றல் வளநிலைய வெளியீடாக மலர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவை யாவற்றையும் கண்நோக்கும் மாணவர்கள் தாமும் இவ்வாறு உயரவேண்டும், உயர்ந்தால் பாடசாலைச் சமூகம் பாராட்டும் எனும் மனவுணர்வு தோன்ற வழிசமைக்கும். மாணவராக்குகைகள், அதிபரவர்களின் பதவிக் காலத்தில் அகமலர், "மனச்சிற்பங்கள்", "நேர் கோடுகள்" என்றும் வளைவதில்லை. என்னும் வெளியீடுகளாக வெளி வந்துள்ளமை தகுந்த சான்றாதாரங்களேயாகும்.

## தீர்மான திறனும் தீர்க்க முடிவும்

"எண்ணித் துணிக கருமம்..." என தொடரும் குறள் செயலுக்கு முன்பான தீர்மானத்தின் அவசியத்தை வலியுறுத்துகிறது. அதிபரும் ஆசிரியர்களும் பாடசாலைச் செயற்பாட்டில் எடுக்கும் தீர்மானங்களே பெறுபேறுகளில் செல்வாக்கு செலுத்துகின்றன. இதற்காக ஓர் அதிபர் குழு தீர்மானங்கள், தனித் தீர்மானங்களை எடுக்க வேண்டியவராக காணப்படுகின்றார்.

இவ்வகிபாகத்தில் எமது அதிபர் சனநாயகத்துடன் கூடிய சர்வதிகாரம் உடையவராக செயற்படுவதை நான் நோக்கியதுண்டு. அதிகமான செயற்பாடுகள் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படினும் சில தீர்மானங்கள் தனித்து எடுத்து நடைமுறைப்படுத்தும் பாங்கும் காணப்படுகின்றது.

## நடுநிலைத் தன்மை

பாடசாலைகளை முகாமை செய்யும் பொழுது சார்பான மற்றும் எதிரான கருத்துக் கொண்டவர்களை சந்திக்கும் சூழ்நிலை சாதாரணமானது. இதனை சமமாக ஏற்று செயற்பட்டாலேயே பாடசாலைச் செல்நெறி சுமுகமாக செல்லும்.

இதனை நேரடியாக எமது பாடசாலையில் தரிசித்திருக்கின்றோம். ஒரு நிகழ்வில் பின்நிற்பவர்களை/விமர்சனம் செய்வோரை அடுத்துவரும் நிகழ்வில் பங்கேற்பாளராக்கி தலைமையின் தாங்கு திறனை உணரவைத்திருக்கின்றார்.

நிகழ்வுகளுக்கான வேலைப்பகிர்வுகளை சுற்றோட்டத்தில் திட்டமிட்டு வழங்கி பொறுப்பெடுத்தலுக்காக களம் அமைப்பவர். இதனால் யாரும் யாரையும் விமர்சிக்கவோ யாராலும் பாதிக்கப்படவோ மாட்டாத சூழ்நிலையையேற்படுத்துபவர் அது மட்டுமன்றி தன்னால் திட்டமிட்டு பாதிக்கப்படுகிறேன் எனும் உணர்வும் ஏற்பட வாய்ப்பற்று போகும் சூழலைப் பேணும் திறனுள்ளவர்.

## ஊக்கிவிப்பும் உதவிடும் மனப்பாங்கும்

மாஸ்லோ எனும் அறிஞர் கூறும் ஐந்து தேவைகளினுள் கௌரவத்தேவையும்

ஒன்றாகும். பாடசாலையில் பணியாற்றும் ஆசிரியர், கல்விசாரா ஊழியராயினும், கற்கும் மாணவர்களாயினும் தாம் ஒரு கனதியான வராக கணிக்கப்படல் வேண்டும் எனும் மனப் பதிவுள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். இது மனித இயல்பு. இதனை பாடசாலை அதிபர் அவர்கள் முகாமை செய்ய வேண்டியது அவசிய மாகும்.

இதனைக் கருத்தில் கொண்டே மாண வர் சார்பாக பரிசளிப்பு விழா, மாணவர் முதல் வர்தினம், உயர்தரமாணவர் ஒன்றுகூடல் சிறுவர் தினம் என்பன கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆசிரியர்கள் சார்பாக ஆசிரிய தினம் பழைய மாணவர்கள் உதவியுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இவற்றினைவிட வாண்மை விருத்திக் காக ஆக்கமும் ஊக்கமுமளித்து தானே முன் நின்று விண்ணப்பம் அனுப்பிய சந்தர்ப்பமும் உண்டு.

அதேபோல வெற்றிகள் கிடைக்கப் பெறும் சந்தர்ப்பத்தில் காலை ஒன்றுகூடலில், பெரிய நிகழ்வுகளில் பாராட்டி ஊக்கம் கொடுக்க தவறுவதில்லை. அண்மையில் சாதனையாளர் களின் படங்கள் ஆற்றுகைகளுடன் பாடசாலை முன்றலில் பதாதைகளில் காட்சிப்படுத்தப்பட் டுள்ளமை உச்சமான ஊக்குவிப்பாகும்.

இவற்றைப்போல தானாக முன்வந்து உள ஆற்றுப்படுத்தல்களும், பொருளுதவிகளும் வழங்க எமது அதிபர் அவர்கள் பின் நிற்பதில்லை.

**இணைந்து போதலும் இயைந்து வாழ்தலும்**

அதிபர் ஒருவர் ஆசிரியர்களுடன் நேர்க்கணிய சிந்தையோடு இயைந்து முகாமை செய்தல் வேண்டுமென நவீன கோட்பாடுகள் குறிப்பிடுகின்றன. இதனை எமது அதிபரின் நிர் வாகத்தில் கண்டு கொள்ளலாம் ஒவ்வொரு வரும் வேறுபட்ட சிந்தனையுடையவர்கள் என் பதனையுணர்ந்தவராய் அவரவர் இயல்புக்கேற்ப வேலைகளை வழங்கி இயையும் இயல்பினர்.

கண்டிப்பாக பிரமாணங்கள் விதிகளை கடைப்பிடிப்பவராக காணப்படினும் காலநேரம் கருதாது செயற்படுபவர்களை தற்றுணிவில் சில சந்தர்ப்பங்களில் விதிகளை மீறி செயற்பட அனுமதித்ததுமுண்டு. ஆக்கத்திறனுள்ள சிந்தை யுடையவர்களின் வேண்டுதல்களை நிறை வேற்ற எவ்வகையுதவியை தானும் தேடிக் கண்டு உடன் சேர்க்கும்பாங்கு வியப்பிற்குரியது.

**முதிர்ச்சியும் முயற்சியும்**

தலைமையின் முதிர்ச்சியால் அதிபர் அவர்கள் பல்வேறு பணிநிலை மாற்றங்களை நிர்வாகத்திலேற்படுத்துவார். "மாற்றம் ஒன்றே மாறாதது" எனும் கோட்பாடோடு ஆசிரியர் களின் அனுபவத்திற்கேற்ற பதவிகளை வழங்கி மகிழும் அதேவேளை வேலைப்பகிர்வால் சிறந்த பெறுபேற்றுக்காகவும் முயற்சிப்பார்.

மாணவர் ஒழுக்க நலனுக்காக மாண வர்களையே தலைவராக்கி பதவியும் பாராட்டும் கொடுத்து வேலைப்பகிர்வையும் வழங்கி பாடசாலை செல்நெறியை இலகு படுத்துவார். யாரால் எவ்வேலை இலகுவாக முடியுமோ அவரை இனங்கண்டு அதனை ஒப்படைத்து பெறுபேற்றுக்காய் ஆவலோடு காத்தும் இருப்பார்.

**உத்திகளும் யுக்திகளும்**

தலைவர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனிப்பாணி காணப்படுதல் தவிர்க்க முடியாதது. எமது அதிபரிடம் பல சந்தர்ப்பத்தில் வேறுபட்ட பல கோணத்தில் உத்திகளை உணரக் கூடியதாக உள்ளது.

அமைதியாய் இருத்தல், முகமன் கூறல், காரியமாற்றுவிப்பதற்காக கோப உணர்வை முகத்தில் காட்டல், வேலைப்பகிர்வு, சுற்றி முகாமைசெய்தல், நேரத்தில் தான் முன்மாதிரி

யாக நடத்தல், இரகசியம் பேணல், செய்திகளை உடனுக்குடன் அறிதல், பிரச்சினைக்கான சிக்கல் களை பின்போடுதல், மீள்வலியுறுத்தல், தான் பங்கேற்றல், பாராட்டுதல், தனிநபர்களுடன் உரையாடல், சமூக இணக்கம், மாணவர் நலனில் அக்கறை என உத்திப்பண்புகள் நீண்டே செல்லும்.

## முடிவுரை

பாடசாலை அதிபரின் வழிப்படுத்தலில் தங்கியுள்ளமை மேற்போந்த ஆதாரங்களினால் பெறப்படுகின்றது. இது யதார்த்த நிலையில் எமது பாடசாலை அதிபரினாலும் பின்பற்றப் பட்டு வந்திருக்கின்றது. யுத்த சூழலின் பின் பல பாடசாலைகள் மூடப்படும் நிலையேற் படுகின்றமையை யாராலும் மறுக்கமுடியாது. ஆனாலும் பின்தங்கிய நாவற்குழிப்பிரதேச பாடசாலைகளில் இன்றுவரை இப்பாடசாலை நல்ல நிலையிலுள்ளமைக்கு அதிபரின் வகிபங்கும் நடிபங்கும் செல்வாக்கு செலுத்தி வருகின்றமை மறுக்கமுடியாத தொன்றாகும்.

## உசாத்துணைகள்

1. கமலநாதன் – தி.(2007) அதிபரின் வகிபாகம் பூபாலசிங்கம் புத்தகசாலை, கொழும்பு – 11
2. சின்னத்தம்பி–மா (2006) பாடசாலை முகாமைத்துவம் விஸ்டம் பப்ளிக்கேசன்ஸ், இலங்கை.
3. சந்திரசேகரன்–சோ.(2004) கல்வி ஒரு பண்முகப்பார்வை உமாபதிப்பகம் கொழும்பு.
4. தேவராஜா – க.(2015) பாடசாலைத் தலைமைத் துவம் கட்டுரை பேராசிரியர்–க.சின்னத்தம்பி கல்விச்சேவை பொன்விழா மலர்.

# நிறைபணி நிறைவிழா

## அழைப்பிதழ்

மேனாள் அதிபர்
யா/நாவற்குழி மகாவித்தியாலயம்
உயர்திருவாட்டி வசந்தாதேவி மேகலிங்கம்



இடம் பாடசாலை மண்டபம்
காலம் 22.11.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் மு.ப. 09.00 மணி
தலைமை திரு.கோ.ஜீவபாலன் (பழையமாணவன்)

உளம்கனிந்து உவந்து அழைக்கின்றோம்

ஒன்றித்த நாவற்குழியூர் சமூகம்

## நிகழ்வு ஆரம்

விழா நாயகியை அழைத்துவரல்
கொடியேற்றல்
மங்கல விளக்கேற்றல்
இறைவணக்கம்
வரவேற்பு நடனம்
வரவேற்புரை
ஆசியுரை :- பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா
(அதிபர், ஆச்சாரியார், சின்மயா மிஷன், யாழ்ப்பாணம்)
அருட்தந்தை ஞா.சு.வு பிரான்சிஸ் அடிகளார்
(பங்குத்தந்தை, புனித அந்தோனியார் ஆலயம், சாவகச்சேரி)
தலைமையுரை
வாழ்த்துரைகள் :- ➤ கல்விப்புலம்சார் அறிஞர்கள்
➤ சக பதவிநிலை உறவுகள்
➤ பாடசாலை பிரதிநிதிகள்
➤ பொதுநிறுவனம்சார் பிரதிநிதிகள்
மலர் வெளியீடு
நூலாசிரியர் கருத்துரை :- திரு.க.மயில்வாகனம் அவர்கள்
மலர் நயந்தாய்வும்
நாயகி சேவை சிறப்புரையும் :- கலாபூஷணம் கே.ஆர்.டேவிற் அவர்கள்
மேனாள் உதவிக்கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி கல்வி வலயம்
விழாநாயகி கௌரவிப்பு
நிகழ்ச்சிகள் :- ➤ குழுப்பாடல்
➤ குழுநடனம்
➤ இசைநாடகம்
ஏற்புரை
நன்றியுரை

# அதிபரின் சமூகசேவை அங்கீகார சான்றிதழ்கள்

**2012**

**NAVATKULY MAHA VIDYALAYA OLD STUDENTS-CANADA**

**7TH**
**GET- TO-GATHER**

***Venue: Morningside Park, Scarborough***

***Time: Saturday the September 1, 2012***
***9.00 A.M***
***Chief Guest : Mrs.Vasanthadevi Mehalingam***
***(Principal Navatkuli M.V)***

***Special Guests: Former Teachers NMV - Canada***

NAVATKULY MAHA VIDYALAYA OLD STUDENTS
CANADA

**GET- TO-GATHER-2012**

*Venue: Morningside Park-Area #5, Scarborough*

*Time: Saturday the September 1st, 2012*

*9.00 A.M*

*Chief Guest : Mrs.Vasanthadevi Mehalingam*

*(Principal J/Navatkuli M.V)*

*Special Guests : Former teachers NMV -Canada*

*All students, teachers and well wishers are welcomed from Canada and foreign countries. Please be on time.*

*Thank you*

Organizing committee

*NMVOS - Canada*



**பாரதி சனசமூக நிலையம்**
**BARATHY COMMUNITY CENTRE**

| | | |
|---|---|---|
| Navatkuly<br>Kaithady. | ஸ்தாபிதம் 15-07-1945<br>பதிவு இலக்கம் J/VCC/30CC/140 | நாவற்குழி,<br>கைதடி 15-06-2006 |

திருமதி மேகலிங்கம் வசந்தாதேவி அவர்கள் எமது நிலையத்திற்கு பல பல சேவைகளை ஆற்றியுள்ளார். நிலையத்தின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். தமது படித்த காலம் தொட்டு ஆசிரியராக இருந்து அதிபராக தரம் உயர்ந்தும் எமது நிலயத்தில் பல பதவிகளை வகித்து அங்கத்தவர்களை நல் வழிப்படுத்தி எமது கிராமத்தை முன்னேற்றியுள்ளார். அவரின் நற்சேவைகளைப் பாராட்டி எமது நிலையத்தின் 60வது ஆண்டுவிழாவில் 15-07-2005 ல் அன்று பொன்னாடை போர்த்தி கௌரவித்ததை சுட்டிக்காட்டத்தக்கது. எனவே அவரின் சேவை மேலும் எமது நாட்டிற்கும் தேவை என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.

நன்றி.

செயலாளர்

தலைவர்

செயலாளர்

பொருளாளர்

சீடா - பிற் நிறுவனங்களின் அனுசரணையுடன்
அறவழிப் போராட்டக்குழு நடாத்தும்

## சிறுவர் கலாச்சார விழா -2007

காலம் : 04-08-2007 சனிக்கிழமை
நேரம் : முற்பகல் 10.00 மணி
இடம் : அறவழி செயலகம்

**தலைவர்**
**திருமிகு வி. ஸ்ரீசக்திவேல். ஜே.பி அவர்கள்**
*(தலைவர் அறவழிப் போராட்டக்குழு)*

**பிரதம விருந்தினர்**
**திருமிகு ரீ. ரீ. மயூரன் அவர்கள்**
*(மாவட்ட இணைப்பாளர் பிற் நிறுவனம்)*

**சிறப்பு விருந்தினர்கள்**
**திருமதி வசந்தா மேகலிங்கம். ஜே.பி அவர்கள்**
*(அதிபர் யா/நாவற்குழி மகாவித்தியாலயம்)*
**லயன் இ. ஜெயபாலன் அவர்கள்**
*(தலைவர் லயன்ஸ் கழகம், சாவகச்சேரி)*

இக்கலாச்சார விழாவில் அறவழி சிறுவர் கழகங்களின் சிறுவர்களின் கவர்ச்சிமிகு கலாச்சார நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

இவ்விழாவில் தங்களையும் பங்குகொண்டு சிறுவர்களின் கலாச்சார நிகழ்வுகளைக் கண்டுகளிக்க வரும்படி அன்புடன் அழைக்கின்றோம்

அறவழிப் போராட்டக்குழு

*Ramyan Printers. Hospital Rd. Madduvil.*

# UNITED NATIONS DAY
## ORATORICAL CONTEST

*Sponsored by the Lions Club of Jaffna*

This is to certify that Miss. Vasantha Devi Ramalingam

of Canagaratnam Madhya Maha Vidyalayam, Jaffna.

was A finalist in the Tamil / ~~English~~

Oratorical Contest held on 24th October, 1975.

[signature] President, Lions Club of Jaffna

[signature] Chairman, Lions Committee for International Understanding

அறவழிப் போராட்டக்குழு

**NONVIOLENT DIRECT ACTION GROUP**

Secretariat:
29, Kandy Road,
Kaithady Nunavil,
Chavakachcheri.
Sri Lanka.

Telphone: 077-3151558
077-3144730
e-mail: nvdag@rediffmail . com

Mailing Address:
P.O.Box: 2,
Chavakachcheri.
Sri Lanka.

(Established in 1979)

07.06.2006

**TO MHOM IT MAY CONCERN**

This is to certify that Mrs.Mehalingam Vasanthathevi, the Principal of J/Navatkuly Maha Vidyalayam is well – known to me, for the last several years.

Mrs.Mehalingam has been playing major roles in the development of education and community development at Navatkuly.

Her active involvement in the educational field helped in many ways to promote the lives of poor and under-privileged students and families.

Mrs.Mehalingam has been extendnating her fullest support and co-operation in the implementation part of our Child Rights Programme at Navatkuly.

She has good enough experience and knowledge in Social Service, education and poverty alleviation. She has developed strong relationship with people in the area, thus relationship good name and fame among the people.

I have great pleasure in recommending Mrs.Mehalingam Vasanthathevi as a fit and proper dignitary to be appointed as a Justice of Peace.

M.K.Jeyavaghthas
Secretary.

NONVIOLENT DIRECT ACTION GROUP P.O. BOX 2 CHAVAKACHCHERI SRI LANKA

NVDAG Sri Lanka Section of WRI and affiliates of IFOR, IPB & IOGT
**TOWARDS THIRD DECADE**

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

**THE REFUGEES REHABILITATION ORGANIZATION**

TRRO LIMITED

Regn.PBO 49-JA/GA/P/CA/-02

*National Secretariat for the NGOs : L - 68806*

106, 4th Cross Street, Jaffna, Sri Lanka.
Telephone 021 - 222 - 2416
E.Mail - trro@sltnet.lk.

2006-06-12

**To Whom It May Concern:**

This is to certify that Mrs.Mehalingam Vasanthathevi, the Principal of J/Navatkuly Maha Vidyalayam is very helpfull to our TRRO Sub office which is functioning at Kaithady in various manner to carry out our Project Work successfully

She was functioning as one of the Resource Person in Commonwealth Education Programme carried out at Kaithady by our Organization. Further she was Supervising and Training Teachers in this programme.

She was also actively participated in the Women Leadership Capacity Training Programme Organized by TRRO and helped in all possible ways. In Kaithady village she gave her fullest co-orperation to the villagers to co-ordinate with our Organization and to bring all our project and activities successes

Therefore we are in great pleasure in recommending Mrs.Mehalingam Vasanthathevi to be appointed as a Justice of Peace.

Thanking you.

Yours faithfully

Prof.V.P.Sivanathan
Vice Chairman.

A.Nallathamby, Chairman; Prof.V.P.Sivanathan, Vice - Chairman; M.Thiyagarajah, Secretary; R.Nadarajah, Treasurer; S.Thurairajah, Company Secretary

Governors.

Prof.K.Sivathampy, Mrs.Darshini Mahendran, S.Mahendran, T.Kugathasan, T.Sithamparanadarasa

*Jaffna District Branch*

ශ්‍රී ලංකා රතු කුරුස සමාජය
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
SRI LANKA RED CROSS SOCIETY

No.73, Kandy Road,
Jaffna,
Sri Lanka.
Tel. : 94(021) 222 2561
Fax : 94(021) 222 2561

09.06.2006

**Letter of Appreciation**

To Whom It May Concern:

I hereby certify that Mrs.V.Mehalingam, the Principal of J/Navatkuly Mahavidyalayam is well known to me. She was supported for the School-based Psychosocial and Health programme for children, Jaffna project supported by Danish Red Cross and implemented by our Sri Lanka Red Cross society with great devotion and dedication.

Mrs.V.Mehalingam has done her best and valuable support to achieve the target of our project. She was a clever, absolutely honest and reliable principal and managed the relationship with the Sri Lanka Red Cross society with confidence and kindness.

Mrs.V.Mehalingam is hard working and perseverance and she has exerted her good influence in the school, thus contributing to the successful completion of the programme as well as the improvement of the children affected by war.

I wish her every success in her future endeavors.

Thanking you

Hony.Chairman
Professor V.K. Ganesalingam, J.P.
B.sc.(Hons Cey), M.Sc. (Hawaii),
Ph.D. (Lond), Hon.D.Sc. (S.L)
Hony. President.
Sri Lanka Red Cross Society,
73, Kandy Road, Jaffna.

The Sri Lanka Red Cross Society (SLRCS) is a member of the International Red Cross and Crescent Societies made up of National Societies in 176 Countries making the largest humanitarian organization in the world. SLRCS works in close Cooperation with International Federation and International Committee of the Red Cross


MATHI
COLOURS
Nallur 021 2229285